
# பாரதக் கதை




வரதர்

# பாரதக் கதை

வரதர்

பாரதக் கதை

ஆசிரியர்: வரதர்.

முதற் பதிவு:- ஒக்டோபர், 1994.

வெளியீட்டு உரிமையாளர்:- வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிவு:- அனந்தா அச்சகம்,
226, காங்கேசன் துறைச் சாலை, யாழ்ப்பாணம்.

மேலட்டை:- ஞானம் ஆர்ட்ஸ், சங்கானை.

விலை:- ரூபா 80/=

**நன்றி** இவர்களுக்கு:

முகவுரை வழங்கிய, மூதறிஞர்
○ வித்துவான், க. சொக்கலிங்கம், எம். ஏ. (சொக்கன்);

அணிந்துரை வழங்கிய, பலாலி ஆசிரியகலாசாலை உப அதிபர்
○ கவிஞர், சோ. பத்மநாதன்;

நேர்த்தியாக அச்சமைப்புச் செய்த எமது
○ அனந்தா அச்சகத்தினர்;

மேலட்டையை அழகுற அமைத்த
○ ஞானம் ஆர்ட்ஸ்

இந்நூலை எழுதவும் வெளியிடவும் ஊக்கமளித்த,
யாழ் மக்கள் வங்கி அதிகாரி,
○ திரு. ச. பாலசுந்தரம், பீ. ஏ. (சிறப்பு).

# ஆசிரியர் உரை

''பாரதக்கதைதானே? தெரியும், தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகிய பஞ்ச பாண்டவர்கள் ஒருபக்கம். மறு பக்கத்தில் துரியோதனன், துச்சாதனன், முதலியோர் மற்றும் பாண் டவரின் மனைவி திரௌபதி, திருதராட்டிரன், துரோணர், பீஷ்மர், கர்ணன், சகுனி இவர்களைப்பற்றிய கதைதானே?'' என்று பலரும் பொதுவாகச் சொல்வார்கள். ஆனால் தொடர்ச்சியாக, விபரமாக பாரதக்கதையைச் சொல்லக் கூடியவர்கள் மிக அரிது.

பாரதக்கதை மிக அருமையான கதை. கதை படிப்பவர்கள் மட் டுமல்ல, கதை படைப்பவர்களும் படிக்க வேண்டிய கதை. எத்தனை தரம் படித்தாலும் சலிக்காத கதை. எத்தனையோ பரம்பரை பரம் பரையாக இந்துக்களின் இரத்தத்தோடு ஊறிவிட்ட கதை.

துஷ்யந்தனுக்கும் சகுந்தலைக்கும் பிறந்தவன் பரதன். இவனு டைய வழிவந்தோர் 'பாரதர்கள்' என்று அழைக்கப்பட்டார்கள். பாரதர்கள் மிகுந்த போர்க்குணம் உள்ளவர்களாக இருந்தார்கள். ஒரு முறை இவர்கள் தங்களுக்குள்ளேயே நடத்திய போர்தான் 'பாரதப் போர்' என்று சொல்லப்படுகிறது.

இந்தப் பாரதப்போரை நடத்தியவர்களைக் குறித்துச் சொல்லப் பட்டுவந்த நாடோடிக் கதைகளைத் தொகுத்து வியாச முனிவர் பாரதக்கதையை எழுதினார். காலத்திற்குக் காலம் இக்கதையில் புதிய நிகழ்ச்சிகள் பலவும் சேர்க்கப்படவே, இது மிகப் பெரிய நூலாக அமைந்து, 'மகா (பெரிய) பாரதம்' எனப் புகழ் பெற்றது.

பாரதக்கதையை எழுதிய வியாச முனிவரே பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் குல குருவாகவும் இருக்கிறார். கதையின்படி இந்த வியாசமுனிவரே கௌரவ பாண்டவர்களின் மூதாதையராகவும் இருந்திருக்கிறார்.

பாரதப்போர் நடந்த காலம் கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முன் என்பது வரலாற்று ஆசிரியர்களின் கருத்து. அதாவது சுமார் ஐயாயி ரம் ஆண்டுகளுக்கு முன்பு இது நடந்திருக்கிறது.

யுகக்கணக்கில் சொல்லும் போது கலியுகத்துக்கு முந்திய துவாபரயுகத்தின் கடைசிக்காலம் என்று சொல்லப்படுகிறது.

பாரதக்கதை தமிழர்களின் கதையோ அல்லது திராவிடர்களின் கதையோ அல்ல. இராமாயணக் கதையும் அத்தகையதே. இரண்டும் ஆரியர்களுடைய கதைகள்தான். திராவிட நாகரிகத்தை இக்கதைகளில் காணமுடியாது.

நாங்கள் அறிந்த கம்பராமாயணம், வான்மீகி வடமொழியில் எழுதிய கதையைத், தமிழ் நாட்டுக்கு ஏற்றதாக பல மாற்றங்களைச் செய்து கம்பர் எழுதிவைத்தது.

ஆனால், பாரதக்கதை தமிழர் நாகரிகத்திற்கு ஏற்றதாக மாற்றி எழுதப்படவில்லை.

ஆனால், இராமாயணமும் பாரதமும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தமிழ் மக்களால் படிக்கப்பட்டு வருகின்றன. தமிழ் மக்களின் மதக் கொள்கையினால் இது ஏற்பட்டிருக்கிறது.

பாரதக்கதை பல அறிஞர்களினால் தமிழில் எழுதப்பட்டிருக்கிறது. சமீப காலத்தில் மறைந்த அறிஞர் ராஜாஜி, வியாசர் எழுதிய கதையை அப்படியே தமிழில் தந்திருக்கிறார். 'வியாசர் விருந்து' என்ற ராஜாஜியின் நூலை முக்கிய ஆதாரமாகக் கொண்டே நான் இந்தப் பாரதக்கதையை எழுதியிருக்கிறேன்.

வியாசர் எழுதிய கதையை ராஜாஜி அப்படியே தந்திருப்பதால் நான் எழுதியிருக்கும் இந்தப் பாரதக்கதையும் வியாசருடைய கதைக்கு எவ்விதத்திலும் மாறுபட்டதாக இருக்க முடியாது. கதைத்தொடர்புக்கு அவசியமில்லாத சில கிளைக் கதைகளையும், நிகழ்ச்சிகளையும் நீக்கியிருக்கிறேன். அவ்வப்போது சில இடங்களில் என்னுடைய மன எண்ணங்களை வெளிப்படுத்தியிருக்கிறேன். அப்படியில்லாமல் ஒரு ஆக்க இலக்கியகாரனால் எதையும் எழுத முடியாது.

புகழ்பெற்ற இதிகாசங்களில் ஒன்றான இந்தக்கதையை எல்லோரும் தெரிந்திருக்க வேண்டுமென்று விரும்பினேன். எழுதினேன்.

— வரதர்

வித்துவான் க. சொக்கலிங்கம், எம். ஏ. (சொக்கன்)
அவர்கள் வழங்கிய

# முகவுரை

இராமாயணம், மகாபாரதம், சிவரகசியம், என்ற மூன்றும் இதிகாசம் என்ற வகையைச் சேர்ந்தவை. இதிகாசம் என்ற வடமொழிச் சொற்றொடருக்கு 'இது இவ்வாறு நடந்தது' என்ற பொருள் கொள்ளப்படும். எனவே உண்மையாக நடந்த சம்பவங்களைச் சுவைபட விரித்துரைப்பனவே இதிகாசங்கள் எனக் கொள்வதும், இவற்றை இந்திய வரலாற்றுக்கு ஆதாரங்களாகக் கையாள்வதும் வரலாற்றறிஞர்கள் சிலரின் வழக்கமாய் இருந்து வருகின்றன.

இராமாயணத்தின் தலைவன் இராமன்; மகாபாரதத்தின் கதாநாயகன் அருச்சுனனா, கர்ணனா, தருமனா என்ற சர்ச்சைகள் அவ்வப்பொழுது இடம்பெற்று வந்துள்ளன. ஆனால் பாரதக்கதையின் சூத்திரதாரியாய்க் கண்ணன் (ஸ்ரீகிருஷ்ணன்) விவாதத்திற்கிடமின்றி ஏற்கப்பட்டே வருகிறான். 'சிவரகசியம்' நான் படித்ததில்லை. ஆனால் அதன் பெயர் கொண்டு சிவபெருமானே அதன் தலைவர் என்பது ஐயத்திற்கிடமின்றி வெளியாகிறது. பாரதம் போலவோ, இராமாயணம் போலவோ, சிவரகசியம் பிரசித்தி அடையவில்லை. எனவே பெரும்பாலான இந்துக்களுக்கு நன்கு தெரிந்த பிரசித்தமான இதிகாசங்கள் இராமாயணமும், பாரதமுமே.

'பாரதக்கதை' என்ற இந்த நூலின் ஆசிரியரான முதுபெரும் எழுத்தாளர் வரதர், தமது ஆசிரியர் உரையிலேயே குறித்துள்ளது போல ''பாரதப் போரை நடத்தியவர்களைக் குறித்துச் சொல்லப்பட்டுவந்த நாடோடிக் கதைகளைத் தொகுத்து வியாசமுனிவர் பாரதக்கதையை எழுதினார். காலத்திற்குக் காலம் இக்கதையில் புதிய நிகழ்ச்சிகள் சேர்க்கப்படவே, அது மிகப் பெரிய நூலாக அமைந்து மகா (பெரிய) பாரதம் எனப் புகழ் பெற்றது'' என்ற கருத்தும் பலரிடையே நிலவி வருகின்றது.

பன்மொழி அறிஞரும், சிறந்த விமர்சகருமாய் விளங்கிய உ. வே. சு. ஐயர் **A Study of Kamban** என்ற தமது நூலிலே மேனாட்டு

விமர்சகர்களின் வழி நின்று இதிகாசம் (Epic) என்பதை இருவகைக ளாய்ப் பிரித்து விளக்கந்தந்துள்ளார். சீரடையாப் பழங்கால இதி காசம் (Primitive Epic) என்பது ஒருவகை. 'வரதர் கூறுவதுபோல ஒருவரால் தொகுக்கப்பட்டாலும் காலத்துக்குக் காலம் பலரால் வளர்க்கப்பட்டுப் புதிய கிளைக்கதைகளும், மூலத்தினின்று முரண்படும் சம்பவங்களும் அமைந்து விளங்குவது தான் சீ. ப. கா. இதிகாசம். பாரதம் இதற்கு நல்லதோர் உதாரணம். மற்றது கலைசார் இதிகாசம் (Ep c' of Art), ஒருவராலேயே ஆக்கப்பட்டுப் பிறர் கைப்படாநாண் மலராய் அமைவதுதான் கலைசார் இதிகாசம். இராமாயணம் இந்த வகையுள் அடங்கலாம்.

Primitive Epic இற்குரிய சகல அம்சங்களும் அமைந்து இன்றும் வனப்புடன் விளங்கிவரும் இதிகாசமே மகாபாரதம் என்று கொள் வதில் தவறில்லை.

இராமாயண மகாபாரதங்கள் இந்துமக்களை எவ்வளவு தூரம் கவர்ந்து அவர்களின் வாழ்வோடு சுவறி விட்டன என்பதற்கு, அவற் றில் நடமாடும் முக்கிய பாத்திரங்கள் சிறப்பாக இராமனும், கிருஷ் ணனும் தெய்வங்களாகி வழிபாட்டுக்குரியோராய் மாறிவிட்டமையே சிறந்த சான்று. இது என் கருத்தல்ல, தமிழ் பேராசிரியரும் பேரறிஞரு மான எஸ். வையாபுரிப்பிள்ளை கொண்ட முடிபு, (இலக்கியச் சிந்த னைகள், காவியகாலம் நூல்களில் காண்க.)

பாரதக்கதையை தத்துவ உருவகமாகக் கொண்டு வியாக்கியானம் செய்கின்ற சமய வாதிகளும் உள்ளனர் என்பதையும் நாம் மறந்து விடலாகாது, இந்த நோக்கிலே சுவாமி சித்பவானந்தரைச் (பகவத் கீதை விளக்கம்) சிறப்பாகக் குறிப்பிடலாம்.

இராமாயணம், பாரதத்திலும் அளவாற் சிறியதாயினும் அதன் கதை இராஜபாட்டை போன்றது. சிக்கல்கள், முரண்பாடுகள், சூழ்ச் சிகள், ஏற்ற இறக்கங்கள் அதில் குறைவு. சீராக ஒரே தடத்தில் செல் லும் சிறப்பு அதற்குண்டு. வாலிவதத்தையும், சீதாப்பிராட்டி தீக்கு ளித்தலையும் வேண்டுமானால் விதிவிலக்காகக் கொள்ளலாம்.

ஆனால், பாரதமோ முடுக்குகள், முட்பாதைகள், பள்ளங்கள், மேடுகள், ஒற்றையடித் தடங்கள் கொண்ட யாழ்ப்பாணத்துத் தெருக் களைப் போன்றது. 'தருமம் இறுதியில் வெல்லும்' என்ற பேருண்மை இறுதியில் வெளிப்படுத்தப்பட்டாலும் தருமன், கண்ணன், கர்ணன் உட்பட எந்தப் பாத்திரமும் பூரணமானதாயன்றிக் குறை நிறை

களாலே உருவாக்கப் பட்டுள்ளமையே அதன் பலமும், ஓரளவு பலவீனமும் என்று கூடச் சொல்லலாம்.

''பாரதக்கதையை எழுதிய வியாசராலேயே கண்ணனுடைய வஞ்சனையைப் பொறுக்க முடியவில்லை. அதனால்தான் நேரடியாகக் கண்ணனை நிந்திக்காமல் துரியோதனன் வாக்காகக் கண்ணனை இகழ்ந்திருக்கிறார்'' என்று 'வியாசர் விருந்து' என்ற பெயரில் எழுதிய ராஜாஜி குறிப்பிட்டிருக்கிறார், ( பாரதக்கதை பக்கம் 162 ) என்று வரதர் மேற்கோள் காட்டியுள்ளமை பொருத்தமாகவே தோற்றுகின்றது.

ஆனால் இங்குக் குறை பெரிது படுத்தப்பட வேண்டியதில்லை என்றே கருதுகிறேன். பெருங்காயத்தைத் தனியாக முகர்ந்து பார்க்கும் போது அதன் மணம் மூக்கைச் சுழிக்கவே வைக்கும். ஆனால் அதைச் சுட்டுச் சாம்பார் முதலான உணவுப் பதார்த்தத்துடன் சேர்க்கு[illegible]ண் கையிலே சுகந்த மணமும், அஜீரணத்தைப் போக்கும் மருந்தியல்பும் அதன் உயர்வைப் புலப்படுத்தவே செய்கின்றன. பலதரப்பட்ட மக்கள் வாழும் சமுதாயம் என்ற சாம்பாரிலே முதலில் அதர்மம் போல — பெருங்காயம் போல — முகத்தையும் மனத்தையும் சுழிக்க வைக்கும் கபடச் செயல்கள், பெரியதொரு நன்மைக்கு வழி சமைத்து விடுகின்றன.

'நீ பாரதவமரில் யாவரையும் நீறாக்கிப் பூபாரம் தீர்க்கப் புரிந்தாய் புயல் வண்ணா' என்று சகாதேவன் கண்ணனை விளித்துரைக்கும் கூற்று இங்கு நினைவு கூரத்தக்கது. (இது வியாச பாரதத்தில் எப்படி அமைந்திருக்குமோ?)

ஆனால் இவையாவிலும் மேலாகப் பாரதக்கதையானது வரதர் கூறுவதுபோல ''மிக அருமையான கதை. கதை படைப்பவர்களும் படிக்கவேண்டிய கதை. எத்தனை தரம் படித்தாலும் சலிக்காத கதை. எத்தனையோ பரம்பரை பரம்பரையாக இந்துக்களின் இரத்தத்தோடு ஊறிவிட்ட கதை'' இது உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை.

வித்துவ சிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளை தொடங்கி அவரின் கால்வழியினரான பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை வரை மரபுவழித்தமிழ்ப் பேரறிஞர்கள், விபுலானந்த அடிகள் முதலாம் இலக்கிய ஒப்பியல் வல்லார் யாவருமே மகாபாரதக்கதையில் அதன் சுவையில் அனைத்தையும் அடக்கிக் கொண்டெழும் அதன் தர்மாவேசக் குரலில் தம்மை இழந்து போனவர்கள் தாம். ஆரியக்கதை என்று எளி

தில் புறந்தள்ளிவிட முடியாதது பாரதக்கதை என்று அடித்துச் சொல்லலாம்.

நாட்டுக்கூத்துக்களாகவும் பாரதத்தின் கதைகள் எம் ஈழத்தமிழ் மக்களிடையே உலாப்போந்தன. இந்த நூற்றாண்டின் நடுப்பகுதி வரை சுருட்டுக்கொட்டில்கள் பலவற்றிலும் நல்லாப் பிள்ளை பாரத வசனம் படிக்கப்பட்டு வந்ததை நான் அறிவேன். மகாராஷ்டிரசிங்கம் சிவாஜி தன் தாயின் மடியிலிருந்து கேட்ட பாரதக்கதையே அவனை மாவீரனாய் மாற்றியது என்பது வரலாறு. எமது தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் தமது பிள்ளைப் பருவத்தில் பாரதக் கதை படித்து வீமனைப்போல, அருச்சுனன் போல வரக் கனவு கண்டவர்தாம்.

வில்லிபாரதத்திலிருந்து, புட்பயாத்திரைச் சருக்கம், கிருட்டினன் தூதுச்சருக்கம் என்பன ஒரு காலத்தில் உயர்தர வகுப்பு இலக்கியப் பாட நூல்களாயிருந்தன. பின்னர் எட்டு ஆண்டுகளுக்கு முன் வரை ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையின் 'பாரதச்சுருக்கம்' க. பொ. த. (சா / த) பரீட்சைக்கு தமிழிலக்கிய பாடநூலாய் விளங்கியது. அமரர் வை. ஏரம்பமூர்த்தி (ஈழத்துறைவன்) எழுதிய 'பாரதச் செல்வம்' என்ற நூல் ஒரு காலத்தில் எட்டாம் வகுப்பு மாணவருக்கு உபபாட நூலாய் இருந்தமையும் நினைவு கூரத்தக்கதே.

இவ்வாறு அறிஞர்கள், இலக்கிய ஆர்வலர், மாணவர் என்ற பலரையும் கவர்ந்து ஏதோ ஒரு வகையில் அறிந்த கதையாகவே பாரதக் கதை நம் நாட்டில் நிலவி வந்தது. ஆனால் அண்மைக் காலத்தில் பாரதக்கதையை அறியும் தூண்டுதலோ வாய்ப்புக்களோ எமது இளைஞர்களுக்குக் கிடைக்கவில்லை. இந்தக் குறையைப் போக்கும் வகையிலே 'வரதர்' அவர்கள் எமது இளம் பரம்பரையினருக்கு வழங்கும் இனிய கதை விருந்தே பாரதக்கதை.

இரண்டு மணித்தியால இடை வெளியில் உலகை மறந்து பாரதக் கதைக் காலத்துக்கு எம்மை அழைத்துச் சென்று அதன் பாத்திரங்களோடும் நிகழ்வுகளோடும் உறவாட வைக்கும் வரதரின் பணி பெரிதும் பாராட்டத் தக்கதாகும். நெளிவு, சுளிவு இல்லாத நேரான எளிய நடை வரதருக்குக் கைவந்தது. வியாக்கியானகாரராகவோ கதாப்பிரசங்கியாகவோ ஆய்வு விற்பன்னராகவோ தலை காட்டாது, ஓர் ஆக்க இலக்கியகாரரின் கைவண்ணமாகப் 'பாரதக்கதை' அமைந்

துள்ளமையே அதன் தனிச் சிறப்பெனலாம்.

கதையின் ஓட்டத்தினை எவ்வகையிலும் தடைசெய்யாது, இடையிடையே தமது கருத்துக்களையும் விமர்சனங்களையும் நாசுக்காகச் சொல்லும் பாணி நயம் மிக்கது.

''அந்தக்காலத்தில் அம்புகள் யாவும் மந்திர சக்தியினாலே தொழிற்பட்டன என்று புராணங்கள் கூறும்.'' (பா. க. பக்கம். 34)

('' . ஆனால் கோபமும் வெறுப்பும் பழிக்குப் பழிவாங்குவதனால் ஒருபோதும் தீர்ந்து விடுவதில்லை. மாறாக அது வளரவே செய்யும் என்பதைத் துரோணர் மறந்து போனார்.'' (பா. க. பக்கம் 39)

(தாம் தங்கியிருந்த பிராமணரின் குடும்பத்தைச் சாவினின்றும் காப்பாற்றக் குந்தி வீமனை அரக்கனிடம் அனுப்பத்தீர்மானித்ததை அறிந்த தருமனுக்கும், குந்திக்குமிடையே நடந்த உரையாடல்)

''... இனிமேலும் என்ன துன்பம் வந்தாலும் வீமன் இருக்கிறான் என்ற மனநிம்மதியோடு இருக்கிறோம். அத்தகைய வீமனை இப்படி ஓர் ஆபத்தான செயலில் இறக்கிவிட்டிருக்கிறாயே! எதிர்பாராமல் வீமனுக்கு ஏதும் நேர்ந்தால் எங்கள் எல்லாருடைய கதியும் என்னவாகும்?'' என்றான் (தருமன்.)

வீமனுடைய பலத்தை நான் நன்றாக அறிவேன். அன்றியும் எங்களுக்கு இருக்க இடமளித்து இவ்வளவு காலமும் ஆதரித்த இந்தப் பிராமணர் தமது குடும்பத்தோடு எவ்வித ஆதரவுமில்லாமற் பெரிய ஆபத்திற் சிக்கியிருக்கும் போது நாங்கள் அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?...... (பா. க. பக்-49)

ஆசிரியர் கூற்று;

''இந்த இடத்தில் தருமத்தின் இருப்பிடம் என்று புகழப்படும் தருமனை விடக் குந்தி மிகவும் உயர்ந்து நின்றாள்.'' (பக்கம் 49)

ஓர் இலக்கியத்தின் வெற்றி அது முன்வைக்கும் பிரச்சினைகளிலும் அந்தப் பிரச்சினைகளை அது அணுகும் முறையிலும்தான் சிறப்பாகத் தங்கியிருக்கிறது. பாரதக்கதை பல பிரச்சினைகள் மலிந்ததோர் இதிகாசம். அந்தப் பிரச்சினைகளைத் தனது காலத்தின் சமூக

நிலைகளுக்கேற்ப அணுகி எதார்த்தமாக அவற்றைக் காட்டுவதில் அது வெற்றி பெற்றுள்ளது.

பாரதக் கதையைத் தமது காலத்தளத்தில் நின்று, அதன் அக் காலப் பிரச்சினைகளை ஆங்காங்கே ராஜாஜி பாணியில் வரதர் அணுகித் தம் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். அவை வாசகர்களின் சிந்தனையைத் தூண்ட வல்லன என்பதற்கு ஐயம் இல்லை. தமது சிறு கதைகளிலே சமூகப் பிரச்சினைகளை முன்வைக்கும் அதே துணிவினைப் பாரதக்கதைப் பிரச்சினைகளிலும் முன்வைப்பதிலும் வெளிப்படுத்தியுள்ள வரதர் பாராட்டுக்குரியவர். அவர் உள்ளத்திலே 'உண்மை ஒளி' உண்டு என்பதற்கு இவை நல்ல எடுத்துக் காட்டுக்கள்.

மகாபாரதம் பெருங்கடல். அதிற் படும் திரவியங்கள் மிகப் பல. அவற்றில் தமக்குப் பிடித்த, தம்மைக் கவர்ந்த சில திரவியங்களை மூழ்கி எடுத்து, ஆக்க இலக்கியச் சுவையுடன் தந்திருக்கும் பாரதக்கதை காலத்தின் தேவையை உணர்ந்த வரதரின் நன்கொடை. அந்த நன்கொடையின் பெறுமதியினை உணர்ந்து பயன் செய்தல் எம்மவர் கடன்.

நாயன்மார்கட்டு, — க. சொக்கலிங்கம்.
26 - 09 - 1994. (சொக்கன்)

பலாலி ஆசிரிய கலாசாலை உப அதிபர்
கவிஞர், சோ. பத்மநாதன்
அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

பாரதக்கதை தெரியாதவர்கள் என்று யாருமே இல்லை. ஆனாலும் அதைத் திரும்பத்திரும்பச் சொல்லுகிறோம், கேட்கிறோம், எழுதுகிறோம், படிக்கிறோம்.

காலங்காலமாக மக்கள் அதைக் கொண்டாடி வருகிறார்கள். நாடகமாக, திரைப்படமாக, கதாகாலட்சேபமாக, தொலைக் காட்சியாக அது பிரபலம் அடைந்து வந்துள்ளது.

இந்தச் செல்வாக்குக்குக் காரணம் என்ன? அன்பு, தயை, பொறை, நீதி, தருமம் முதலியவை பற்றி, இக்கதையைப் படிக்கும் நாம் நிறைய - நீள சிந்திக்கின்றோம். பாரத பாத்திரங்கள் என்ற அளவுகோல் கொண்டு நம்மை அளந்து கொள்கிறோம்.

மனிதர்களில் முற்றிலும் நல்லவர்கள் என்றோ, முற்றிலும் தீயவர்கள் என்றோ யாரும் இல்லை என்பதைப் பாரதம் புலப்படுத்துகிறது. கொடியவனாகிய துரியோதனனிடம் உள்ள நல்ல பண்பு தன்னை அண்டியவர்களைக் கடைசிவரை கைவிடாமை, அதுபோலவே நன்றி மறவாமை கர்ணனிடம் காணப்படும் அரும் பண்பு.

சத்திய சந்தனான தருமன், சொந்த நன்மைக்காகப் பொய் சொல்ல நேரிடுகிறது. வீராதி வீரனாகிய விஜயன், வேறொருவனுடன் போர் செய்து கொண்டிருந்த பூரிசிரவசுவின் கையை வெட்டுகிறான். பல பேரோடு போராடிக் களைத்துப் போய்த் தனியனாய் நின்ற அபிமன்யுவை ஆறு மகாரதர்கள் சூழ்ந்து தாக்குகிறார்கள். ஆம், உலகில் நல்லதும் கெட்டதும் கலந்தே இருக்கின்றன என்று தெளிகிறோம்.

பாரதம், தமிழில் செய்யுளாகவும் வசனமாகவும் பலரால் எழுதப் பட்டுள்ளது. ''கேளாய் ஜெனமேஜெய மகாராசனே, என்று வைசம் பாயனர் சொல்லத் தொடங்கினார்'' என்ற 'பெரிய எழுத்து' பாரதம் ஒரு வகை; இது பாமர மக்களிடையே பிரபலம் ஆனது. கிங்ஸ்பெரி எழுதிய 'பாண்டவர் இளமைப் பருவ'மும் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை எழுதிய 'பாரதச் சுருக்க'மும் வை. ஏரம்பமூர்த்தி எழுதிய 'பாரதச் செல்வ'மும் மாணவர்க்குப் பயன்படுவன. மூதறிஞர் ராஜாஜி எழுதிய 'வியாசர் விருந்து' பல லட்சம் தமிழர்களால் படிக்கப் பட்டு வருகிறது. தம் வாழ் நாளில் செய்த மிகப்பயனுள்ள பணி இது வென்றே ராஜாஜி கருதினார்.

ஆயினும், இளைய தலை முறையினர் இதிகாசங்களைப் படிப்ப தில்லை என்பதைக் கவலையுடன் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. இப்போதைய கல்வி முறை இதை ஊக்கப்படுத்துவதாயில்லை. மாண வர்கள் யந்திரங்களாகி விட்டார்கள். நம் இதிகாசங்களைப் படித் துக் கிளர்ச்சியும் எழுச்சியும் பெறும் வாய்ப்பை அவர்கள் நழுவ விடுகிறார்கள்.

இந்நிலையில் ஈழத்தின் மூத்த எழுத்தாளர் 'வரதர்' பாரதக் கதையை எளிய நடையில் தருகிறார்.

வரதருக்கென ஒரு கதை சொல்லும் பாணி இருக்கிறதென்பதை அவருடைய ''தீ வாத்தியார்'' படித்தவர்கள் உணர்ந்திருப்பார்கள்.

அலுப்புச்சலிப்பில்லாமல் வாசிக்கக் கூடியது 'பாரதக்கதை'. நல்ல தெளிவான அச்சுப் பதிவு. வரதருக்கு இளைய தலைமுறை பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

திருநெல்வேலி, — சோ. பத்மநாதன்.
1994 - 10 - 05.

# உள்ளே

பக்கம்

| | | |
|---|---|---|
| 1. | வசிட்டரின் சாபம் | 1 |
| 2. | சந்தனுவும் கங்கையும் | 2 |
| 3. | பீஷ்மர் | 5 |
| 4. | அம்பை | 11 |
| 5. | குருகுல விருத்தி | 15 |
| 6. | கர்ணன் | 19 |
| 7. | பாண்டவர் | 22 |
| 8. | துரோணர் | 28 |
| 9. | அங்கநாட்டரசன் | 32 |
| 10. | அரக்கு மாளிகை | 37 |
| 11. | இடும்பி | 43 |
| 12. | பகாசுரன் | 46 |
| 13. | திரௌபதி சுயம்வரம் | 51 |
| 14. | இந்திரப் பிரஸ்தம் | 56 |
| 15. | இராச சூயம் | 60 |
| 16. | சூழ்ச்சி | 67 |
| 17. | சூதாட்டம் தொடங்கிற்று | 72 |
| 18. | பாஞ்சாலி சபதம் | 76 |

19. பாசுபதம் ... .. 81

20. துரியோதனன் அடைந்த அவமானம்... 88

21. நச்சு நீர்க் குளம் ... ... 95

22. கீசகன் மறைவு ... ... 99

23. போருக்குப் புறப்பட்ட இளவரசன் ... 103

24. அருச்சுனன் வெளிப்படல் ... 107

25. தேவகுமாரன் ... ... 112

26. முதல் தூதன் ... ... 115

27. ஊசி முனையளவு நிலமும் இல்லை ... 119

28. கண்ணன் தூது ... ... 123

29. கர்ணனின் கண்ணியம் ... ... 129

30. போர் வந்துவிட்டது ... ... 130

31. பீஷ்மர் வீழ்ந்தார் ... ... 135

32. பகதத்தனின் யானை ... ... 139

33. அபிமன்யு மரணம் ... ... 144

34. ஒரு கொடிய நிகழ்ச்சி ... .. 149

35. தருமனும் பொய் சொன்னான் ... 155

36. வஞ்சனைகளினால் வென்ற போர் ... 158 - 164

# 1. வசிட்டரின் சாபம்

வசிட்டமுனிவர் ஒரு நாள் ஏதோ அலுவலாக தமது ஆச்சிரமத்தை விட்டு வெளியே போயிருந்தார். அந்தச் சமயத்தில் தேவர்களான எட்டு வசுக்கள், தமது மனைவிமார்களுடன் அந்த மலைப் பகுதிக்கு வந்து உல்லாசமாக விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

வசிட்டருக்குச் சொந்தமான ஒரு அழகிய பசுவும் அதன் கன்றும் அவருடைய குடிசையின் பக்கத்தே நின்று கொண்டிருந்தன,

விளையாடித்திரிந்த வசுக்களில் ஒருவன் அந்தப் பசுவைக் கண்டு விட்டான். அதன் அழகிய தோற்றத்தால் கவரப்பட்ட வசு, தனது மனைவியை அழைத்து அந்தப் பசுவைக் காட்டினான். அவள் அந்தப் பசுவின் தோற்றத்தில் மனத்தைப் பறிகொடுத்தவளாய் தன் கணவனைப் பார்த்து ''அந்தப் பசு எனக்கு வேண்டும். பிடித்து வாருங்கள்!'' என்றாள்.

வசு சொன்னான். 'இந்தப் பசு வசிட்டமுனிவருக்குச் சொந்தமானது. மனிதர்களுக்குப் பசுவின் பால் மிகத் தேவையானது, தேவர்களாகிய எங்களுக்கு அதனால் எவ்வித பயனும் இல்லை. அன்றியும், இந்தப் பசுவை நாங்கள் பிடித்துச் சென்றதை வசிட்டர் அறிந்தால் எம்மைச் சபித்து விடுவார். உனக்கு அது வேண்டாம். வா.'

ஆனால் அந்தப் பெண்ணோ, அந்தப் பசுவை எப்படியும் தனக்குப் பிடித்துத் தரவேண்டும் என்று பிடிவாதம் செய்தாள். கடைசியில் அவனும் சம்மதித்து மற்ற வசுக்களையும் கூப்பிட்டு எல்லாருமாகச் சேர்ந்து அப்பசுவையும் கன்றையும் பிடித்துத் தம்முடன் கொண்டுபோய் விட்டார்கள்.

வெளியே போயிருந்த வசிட்டர் தமது ஆசிரமத்துக்குத் திரும்பி வந்தார்.

அவர் மிக அன்புடன் வளர்த்து வந்த பசுவையும் கன்றையும் காணவில்லை.

தமது தவவலிமையினால் நடந்தவற்றை அறிந்து கொண்டார் வசிட்டர். அவருக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று.

''தவறான செயல் புரிந்த வசுக்களே, நீங்கள் மனிதர்களாகப் பிறக்கக் கடவீர்கள்!'' என்று வசிட்டர் சாபமிட்டார்.

உடனே அது வசுக்களுக்குத் தெரிந்தது. அவர்கள் வசிட்டரிடம் ஓடிவந்து அவரின் காலில் விழுந்து, தங்களை மன்னிக்கும்படி வேண்டினார்கள்.

'நான் கொடுத்த சாபத்தை இனி மாற்ற இயலாது. பசுவைக் கொண்டு சென்றவனாகிய பிரமாசன், மனிதனாகப் பிறந்து நீண்ட காலம் வாழ்வான். ஆனாலும் மிகச் சிறந்த மனிதனாகப் புகழுடன் வாழ்வான். மற்றவர்கள் பூமியில் பிறந்தவுடனேயே சாபம் நீங்கி மீண்டும் தேவர்களாவார்கள். இவ்வளவுதான் நான் செய்ய முடியும்' என்று வசிட்டர் சொன்னார்.

அவர்கள் அவ்வளவில் திருப்தியடைந்து, கங்காதேவியிடம் போய் ''நீதான் பூவுலகில் ஒரு நல்ல மனிதனைக் கணவனாக அடைந்து எங்களை உனது பிள்ளைகளாகப் பெறவேண்டும். பெற்றவுடனேயே எங்களை நீரில் தூக்கிப் போட்டு சாபத்தை நீக்க வேண்டும்'' என்று வேண்டினார்கள்.

கங்கையும் சம்மதித்தாள்.

## 2. சந்தனுவும் கங்கையும்

இனிமையான மாலை நேரம்.

பேரரசனாகிய சந்தனு கங்கை ஆற்றின் கரையிலே உலவிக் கொண்டிருந்தான். குதிரைகள் பூட்டப்பெற்ற அவனுடைய தேர் சற்றுத் தள்ளி நின்றது.

'சல சல' என்று ஓடிக் கொண்டிருந்த கங்கைஆறும், அதன் பக்கத்தே ஓங்கி வளர்ந்து நின்ற மரங்களும், செடிகளும், ஆங்காங்கே பல வண்ணங்களில் சிரித்துக் கொண்டிருந்த மலர்களுமாகத் தோன்றிய அழகிய இயற்கைக் காட்சியில் மன்னன் மனம் நிறைந்து எதையோ சிந்தித்தவனாக உலாவிக் கொண்டிருந்தான்.

திடீரென்று அவன் பார்வையில் ஒரு பெண் தோன்றினாள். வெறும் பெண்ணா? — அவன் தனது வாழ்நாளில் இதுவரை கண்டிராத பேரழகியாக அவள் காணப்பட்டாள்.

அவள் யார்? எங்கிருந்து வந்தாள்? ஏன் வந்தாள்? — என்பன போன்ற ஐயங்கள் சந்தனுவுக்கு எழவில்லை.

அந்தப் பேரழகியின் கவர்ச்சியிலே மன்னன் தன்னையே மறந்து நின்றான். தான் காண்பது கனவோ என்று ஒரு கணம் மயங்கினான்.

சந்தனு அந்தப் பெண்ணை நெருங்கி வந்து விட்டான். 'இல்லை' கனவில்லை, இதோ என் கண் முன்னே தேவதை போல நிற்கிறாளே! என்னைப் பார்க்கிறாளே! அவள் உதடுகள் மெல்ல மலர்கின்றனவே!.

சந்தனு அந்தப் பெண்ணின் அழகிய தோற்றம் ஒன்றையே மனத்தில் கொண்டவனாக தன்னை மறந்து, சூழலை மறந்து, எதிர் காலத்தை மறந்து, அவள் பக்கத்தே போய், ''பெண்ணே, நீ எங்கிருந்து வந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, என்னை மணந்து கொள். நான் இந்த நாட்டின் மன்னன். நீ இந்த நாட்டின் ராணியாவாய்!'' என்றான்.

அந்தப் பெண், சந்தனுவையும், அவனுடைய இந்தத் திருமண வேண்டுகோளையும் எதிர்பார்த்தே நின்றவள் போலத் தோன்றினாள்.

சந்தனுவின் திடீர் வேண்டுகோளைக் கேட்டு அவள் அதிர்ச்சி அடையவில்லை. முகத்தைச் சற்றே சரித்து, அழகிய கண்களின் ஓரத்தால் சந்தனுவைப் பார்த்து மயக்கும் குறுநகை ஒன்று செய்தாள். பிறகு சொன்னாள். ''மன்னரே, உங்கள் வேண்டுகோளை நான் ஏற்றுக் கொள்வேன். ஆனால் ஒரு நிபந்தனை...''

''எதை வேண்டுமானாலும் கேள் பெண்ணே!''

''நான் உங்கள் மனைவியான பிறகு நான் யாரென்றோ, எங்கிருந்து வந்தேனென்றோ, என்ன குலத்தவள் என்றோ — எதையுமே அறிவதற்கு நீங்கள் முயலக்கூடாது. நான் செய்யும் செயல்கள் நல்லனவாயினும் சரி, கெட்டனவாயினும் சரி, அவைகளைத் தடுக்கக் கூடாது. என்மனம் நோகும்படி எதையுமே செய்யக்கூடாது. — இந்த நிபந்தனைகளை நீங்கள் ஏற்றுக் கொண்டால் நான் உங்கள் மனைவியாவதற்குச் சம்மதிக்கிறேன்''

சந்தனு பெருமகிழ்ச்சியுடன் 'சம்மதம்! சம்மதம்!' என்று கூறி அவள் கைகளைப் பற்றிக் கொண்டான்.

✶

சந்தனுவும் கங்காதேவியும் பல ஆண்டுகள் மிக மகிழ்ச்சியாக

இல்லறம் நடத்தினார்கள். கங்காதேவிக்கு பல குழந்தைகள் பிறந்தன.

ஒவ்வொரு குழந்தையும் பிறந்தவுடன் கங்காதேவி அந்தக் குழந்தையைக் கொண்டு போய்க் கங்கை ஆற்றில் போட்டுவிட்டு வந்தாள்.

மிக அழகான குழந்தைகள்!

அந்தக் குழந்தைகளை ஆற்றில் வீசிய நிகழ்வுகள் சந்தனுவின் இதயத்தை மிகவும் வேதனைப்படுத்தின. ஆனாலும் அவன் வாய் திறந்து எதையும் பேசாமல் இருந்தான். அவளைத் திருமணம் செய்த போது, அவள் அழகு மயக்கத்தில், அவளுக்குக் கொடுத்த வாக்குறுதி அவனை ஊமையாக்கி விட்டிருந்தது.

வாயை மூடிக் கொண்டிருந்தாலும், மனத்துக்குள் அவன் மிகுந்த வெறுப்பும் கோபமும் கொண்டவனாக இருந்தான்.

இப்படி ஏழு குழந்தைகள் ஆற்றில் போடப்பட்டன.

எட்டாவது குழந்தையும் பிறந்தது. கங்காதேவி அந்தக் குழந்தையையும் எடுத்துக் கொண்டு ஆற்றை நோக்கிப் புறப்பட்டாள்.

இதற்கு மேலும் சந்தனுவால் பொறுக்க முடியவில்லை. அவன் தன்னுடைய வாக்குறுதியையும் மறந்தான். 'நில்!' என்றான். கங்கா தேவி நின்று திரும்பிப் பார்த்தாள்.

''இந்த இழிவான செயலைச் செய்ய உனக்கு எப்படி மனம் வருகிறது? கொஞ்சம் கூட உனக்கு இரக்கமோ தாய்மையோ இடையாதா? ... போகாதே! இந்தக் குழந்தையை விட்டு விடு!'' என்றான் சந்தனு.

கங்கை சொன்னாள்; ''மன்னனே, உங்கள் வாக்குறுதியை மறந்து விட்டீர்கள்! உங்களுக்குப் பிள்ளை ஆசை வந்துவிட்டது. இனி என்னைத் தேவையில்லை. உங்கள் விருப்பப்படி இந்தக் குழந்தையை உங்களிடமே ஒப்படைப்பேன்.''

''நான் இந்தப் பெண்ணுருவம் கொண்ட நோக்கமும் நிறைவேறிவிட்டது. இனி நான் யாரென்பதையும் தெரிந்து கொள். மக்களாலும், முனிவர்களாலும் போற்றி வணங்கப்படுகின்ற கங்கை ஆற்றின் தேவதை நான். வசிட்ட முனிவரின் சாபம் பெற்ற வசுக்களின் வேண்டுகோளை ஏற்று இந்த மனிதப் பெண்ணுருவம் கொண்டு உன்னுடன் வாழ்ந்து குழந்தைகளைப் பெற்று அவர்களின் சாபம் நீங்க உதவினேன். இந்த எட்டாவது குழந்தை மிக நீண்டகாலம் இவ்வுல

இல் வாழ்வான். இந்தக் குழந்தையைச் சிறிது காலம் என்னுடன் வைத்திருந்து இவன் வளர்ந்ததும் உன்னிடம் ஒப்படைப்பேன்!'' இவ்வாறு கூறிவிட்டுக் கங்காதேவி அந்தக் குழந்தையுடன் மறைந்து விட்டாள்.

# 3. பீஷ்மர்

கங்காதேவி போன பிறகு, மன்னர்களுடைய வழக்கத்திற்கு மாறாக, சந்தனு வேறு பெண்ணைத் திருமணம் செய்யாமலே வாழ்ந்தான். திருமணம் செய்யாதது மட்டுமல்ல, அவன் பெண்களிடமிருந்து பெறுஞ் சுகத்தையே தன் மனத்திலிருந்து நீக்கி விட்டு, மன உறுதியுடன் மன்னனுக்குரிய கடமைகளைத் தனது நாட்டுக்கு ஆற்றி வந்தான்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு —

ஒரு நாள் சந்தனு கங்கை நதியின் கரையில் உலாவிக் கொண்டிருந்த போது, ஒரு அற்புதமான காட்சியைக் கண்டான்.

நல்ல கட்டமைப்பு வாய்ந்த உடம்பும், மிக அழகிய தோற்றமும் கொண்ட ஓர் இளைஞன், தன் கையிலிருந்த வில்லிலே அம்புகளைத் தொடுத்துப் பாய்ச்சிக் கங்கை நதியின் ஓட்டத்தைத் தடுத்துக் கொண்டிருந்தான்.

அந்தக் காட்சியைக் கண்ட சந்தனு, மெய்மறந்தவனாக, அந்த இளைஞனின் அருகே போனான்.

அதே சமயம், அவனுக்கு மனைவியாக இருந்த கங்காதேவி அங்கே தோன்றினாள்.

''மன்னனே, இவன் உன்னுடைய எட்டாவது மகன். இவன் பெயர் தேவவிரதன். இவனை நல்லமுறையில் வளர்த்துத் தந்திருக்கிறேன். சிறந்த அறநூல்களையெல்லாம் இவன் கற்றிருக்கிறான். சுக்கிராச்சாரியார் தமக்குத் தெரிந்த அனைத்தையும் இவனுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார். வில்வித்தையிலும் இவன் சிறந்த தேர்ச்சி பெற்றிருக்கிறான். இனி இப்பொழுதே நீ இவனை அழைத்துப் போகலாம்'' என்று சொல்லி மகனைத் தந்தையிடம் ஒப்படைத்து விட்டுக் கங்காதேவி மறைந்துவிட்டாள்.

சந்தனு மிகுந்த மகிழ்ச்சியோடு தனது மகனை — தேவவிரதனைக்

கூட்டிக் கொண்டு அரண்மனைக்குத் திரும்பினான்.

சில நாட்களின் பின் தேவவிரதன் அந்த நாட்டின் இளவரசனாக முறைப்படி அறிவிக்கப்பட்டான்.

நான்கு ஆண்டுகள் கழிந்தன.

சந்தனு ஒரு நாள் யமுனை ஆற்றங்கரைப்பக்கமாகச் சென்றிருந்த போது, அங்கே ஒரு சிறப்பான மணம் வீசுவதை உணர்ந்தான். அந்த மணம் அவன் மூக்கில் புகுந்து, நெஞ்சைத் தொட்டது. அவனுடைய உடம்பு முழுவதும் ஏதோ ஒருவித கிளர்ச்சி உண்டாயிற்று.

இந்த அருமையான மணம் எங்கிருந்து வருகிறதென்று அறியும் ஆவலுடன், சந்தனு அதைத்தேடிப் போனான்.

ஒரு அழகான இளம் பெண்ணை அவன் கண்டான். அவளிடமிருந்துதான் அந்த அற்புதமான மணம் தோன்றி அந்தச் சுற்று வட்டாரம் முழுவதையும் நிரப்பிக் கொண்டிருந்தது. முனிவர் ஒருவர் கொடுத்த வரத்தின் காரணமாக அவளிடம் இந்த நறுமணம் தோன்றிற்று.

கங்காதேவி போன பிறகு, பெண்ணின் பற்றை நீக்கி மன உறுதியுடன் வாழ்ந்து வந்த சந்தனு, இந்தப் பெண்ணைக் கண்டதும் கரைந்து போனான். அவனுடைய உறுதி உடைந்து போயிற்று.

சந்தனு அந்தப் பெண்ணை நெருங்கிப் ''பெண்ணே நீ யார்? நான் இந்த நாட்டின் மன்னன், சந்தனு. உன்னை நான் காதலிக்கிறேன். உன்னைத் திருமணம் செய்து என்னுடைய மனைவியாக்க விரும்புகிறேன்'' என்றான்.

அந்தப் பெண் வெட்கத்துடன் மெல்லச் சிரித்து விட்டு, ''மன்னவரே, நான் ஒரு செம்படவப் பெண். உங்களை மணக்க எனக்குச் சம்மதம். ஆனால் அதற்கு எனது தந்தையின் அநுமதி வேண்டும். அவர் எங்கள் கூட்டத்தின் தலைவர். அவரிடம் போய்க் கேளுங்கள்'' என்றாள்.

சந்தனு உடனே விரைந்து போய், தனது விருப்பத்தைத் தெரிவித்தான். அந்தத் தலைவன் மிகுந்த புத்திக் கூர்மையுள்ளவன். அவன் சொன்னான்;

''மாமன்னரே, பெண்ணாகப் பிறந்த இவளை நான் யாரோ ஒருவருக்குத் திருமணம் செய்து கொடுக்கத்தான் வேண்டும். நீங்கள்

இவளுக்குத் தகுந்த கணவனாக இருப்பீர்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால் ஒரு நிபந்தனை!'' என்றான்.

''என்ன நிபந்தனை? சொல். என்னால் முடியுமானால் அதை நிறைவேற்றுகிறேன்'' என்றான் சந்தனு.

''இவளிடத்தில் உங்களுக்குப் பிறக்கும் மகனை உங்களுக்குப் பின் மன்னனாக முடிசூட்ட வேண்டும்''

இந்த நிபந்தனையைக் கேட்ட சந்தனு நிலைகுலைந்தான்.

செம்படவப் பெண்ணின் பேரழகில் மிகவும் மயங்கிவிட்ட போதிலும், இந்த நிபந்தனையை ஏற்க அவன் மனம் ஒப்பவில்லை. எல்லா விதத்திலும் தகுதி வாய்ந்த அவனுடைய மூத்த குமாரன் தேவவிரதனை விட்டு, வேறு யாருக்கும் அரசபட்டம் சூட்ட முடியுமா?

சந்தனு எதுவும் பேசாமல், நெஞ்சு நிறைந்த கவலையுடன் அரண்மனைக்குத் திரும்பி விட்டான். அன்று தொட்டு உற்சாகமும், மகிழ்ச்சியும் அற்றவனாக ஒரு நோயாளி போல, நடைப்பிணமாக இருந்தான் சந்தனு.

தந்தையின் நிலையைத் தேவவிரதன் கண்டான்.

''அப்பா இந்த அரண்மனையில் உங்களுக்கு எல்லாவித சுகங்களும் காத்திருக்கவும், எதற்காக எந்நேரமும் துயரத்தில் மூழ்கியிருக்கிறீர்கள்?'' என்று தேவவிரதன் விசாரித்தான்.

சந்தனுவால் உண்மையைச் சொல்ல முடியவில்லை. அவன் சுற்றி வளைத்தான்.

''மகனே! எல்லாச்சிறப்புகளும் வாய்ந்த அருமையான புதல்வனாக நீ எனக்குக் கிடைத்திருக்கிறாய். ஆனாலும், நூல்களைக் கற்றவர்கள் 'நிலையில்லாத இவ்வுலகில் ஒரே ஒரு புத்திரன் இருப்பதும் இல்லாமலிருப்பதும் ஒன்றுதான்' என்று சொல்லுகிறார்கள். மன்னனாகிய நீ பல யுத்தங்களைச் சந்திக்க நேரிடும். உன்னுடைய உயிருக்கு ஏதும் தீங்கு நேர்ந்தால் எமது பரம்பரையே அழிந்து விடுமே! — இதை நினைத்தாலேதான் கவலையாக இருக்கிறது' என்று சந்தனு சொன்னான்.

புத்திசாலியான தேவவிரதன், தந்தையின் மனநிலையை ஒருவாறு ஊகித்துக் கொண்டான். பிறகு தந்தையின் தேரோட்டுபவனை

அழைத்து அவனிடம் விசாரித்தான். யமுனை நதிக்கரையில் சில நாட்களுக்கு முன் நடந்த நிகழ்வுகளை அந்தத் தேரோட்டி தேவவிரதனுக்குச் சொன்னான்.

தேவவிரதன் தகப்பனுக்குச் சொல்லாமல், தேரை எடுத்துக் கொண்டு அந்தச் செம்படவன் இருக்குமிடம் சென்றான்.

செம்படவத் தலைவன் தன்னுடைய கருத்தில் மிக உறுதியாக இருந்தான். ''அரசகுமாரனே! என் மகள் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்குப் பட்டஞ் சூட்டச் சம்மதமானால், எனது மகள் உங்கள் தந்தைக்கு மனைவியாவாள். இல்லையேல் அது பற்றிப் பேசவேண்டாம்!'' என்று உறுதியாகச் சொன்னான் அவன்.

''நல்லது, உனது மகளின் வயிற்றுக் குமாரனே, அடுத்த மன்னனாகப் பட்டஞ் சூடுவான். அதை நானே நடத்தி வைப்பேன், இது சத்தியம்'' என்று தேவவிரதன் சத்தியம் செய்தான்.

''அரசகுமாரரே! இனி எனக்குச் சம்மதமே. நீங்கள் சத்தியம் தவற மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். நீங்கள் இப்பொழுதே எனது மகளை அழைத்துப் போய் உங்கள் தந்தைக்கு மணமுடித்து வைக்கலாம். ஆனால் இன்னொரு கருத்தையும் சொல்ல விரும்புகின்றேன்''

''தயங்காதே சொல்!'' என்றான் தேவவிரதன்.

''நீங்களோ மகாவீரர். உங்களுக்குப் பிறக்கும் மகனும் மகாவீரனாகவே இருப்பான் என்பதில் ஐயமில்லை. என் மகள் வயிற்றில் பிறக்கப் போகும் குமாரனுக்குப் பட்டம் சூட்டியதும், உங்கள் மகன் அரசுரிமைக்காக அவனோடு சண்டையிடமாட்டானென்பது என்ன நிச்சயம்? அந்தப் போரிலே என் மகள் வழிப் பேரன், தனது அரசுரிமையை இழப்பது மன்றி இறந்து போகவும் கூடுமல்லவா? இதைப் பற்றியும் இப்பொழுது நினைத்துப் பார்ப்பதே நல்லது''.

தேவவிரதன் ஒரு கணம் சிந்தித்தான். செம்படவத் தலைவன் சொல்வது உண்மையே என்று உணர்ந்தான். தனது தந்தையின் மனக்கவலையைப் போக்குவதே மகனாகிய தனது பெரும் கடமை என்று தீர்மானித்தான். பிறகு சொன்னான்; ''நல்லது, நான் திருமணம் முடித்துப் பிள்ளைகளைப் பெற்றால்தானே அந்தப் பிரச்சினை எல்லாம் உருவாகும்? நான் எனது ஆயுள் முழுவதும் பிரமச்சாரியாக விரதம் பூண்டிருப்பேன். எந்தப் பெண்ணையும் திருமணம்

செய்ய மாட்டேன். எனக்குப் புத்திரர்களையும் உற்பத்தி செய்ய மாட்டேன். இது சத்தியம்!''

இந்தத் தியாகத்தை — தந்தைக்காக ஒரு மகன் செய்த இந்த மிகப் பெரிய தியாகத்தைக் கண்டு, தேவர்கள் தேவவிரதனைப் போற்றிப் புகழ்ந்து பூமாரி பொழிந்தார்கள்.

'பீஷ்மன்! பீஷ்மன்!' என்று வாழ்த்தினார்கள். 'பீஷ்மர்' என்றால் மிக அற்புதமான செயலைச் செய்தவன் என்று பொருள்.

அதன் பிறகு தேவவிரதன் சத்தியவதியை அழைத்துச் சென்று தந்தையிடம் ஒப்படைத்தான்.

சந்தனுவுக்கும் சத்தியவதிக்கும் திருமணம் நடைபெற்றது.

சத்தியவதி சித்திராங்கதன், விசித்திரவீரியன் என்று இரண்டு புதல்வர்களைப் பெற்றாள். இவர்கள் வளர்ந்து இளைஞர்களான போது ஒரு கந்தர்வனுடன் ஏற்பட்ட சண்டையில் மூத்தவனான சித்திராங்கதன் இறந்து போனான்.

விசித்திரவீரியன் மிக இளவயதினனாக இருந்தபடியால், பீஷ்மரே அவனை நல்ல முறையில் வளர்த்து அரசாட்சியையும் கவனித்து வந்தார்.

அவனுக்குத் திருமண வயதும் வந்தது. தகுதியான பெண்ணைப் பீஷ்மர் அவனுக்காகத் தேடத் தொடங்கினார்.

அச்சமயம் காசி நாட்டரசனுடைய மூன்று புத்திரிகளுக்கும் சுயம்வரம் நடக்கப் போவதாக அறிவித்தல் வந்தது.

அந்தக் காலத்தில் அரச குமாரிகள் தமக்கு ஏற்ற கணவரைத் தெரிவு செய்வதற்காகச் சுயம்வரம் நடத்துவது வழக்கம். குறித்த அரச குமாரிக்கு இன்ன நாளில் சுயம்வரம் நடக்கவிருப்பதாக எல்லா நாட்டு மன்னர்களுக்கும் அறிவிப்பார்கள். விருப்பமுள்ள அரசகுமாரர்கள் சுயம்வர மண்டபத்துக்கு வருவார்கள். குறித்த நேரம் வந்ததும் அரச குமாரி கையில் மலர்மாலையுடன் சபைக்கு வருவாள். அவளுக்கு வேண்டிய ஒரு தோழிப் பெண்ணோ அல்லது வேறு உறவினரோ, அவளை ஒவ்வொரு அரசகுமாரனுக்கும் முன்பாக அழைத்துச் சென்று அந்த அரச குமாரனைப் பற்றிய விபரங்களைக் கூறுவார். அரச குமாரி தன் முன்பாக உள்ள குமாரனின் வடிவழகையும் நேரிலேயே கவனித்து, விரும்பினால் அவனுக்கு மாலையிடுவாள். விருப்பமில்லையானால் அடுத்த அரசகுமாரரிடம் போவாள்.

அவள் தனக்குப் பிடித்த அரசகுமாரனுக்கு மாலையிட்டதும் அவனுக்கும் அவளுக்கும் திருமணம் நடக்கும்.

சில வேளைகளில் வலிமையுள்ள அரச குமாரர்கள் தெரிவு செய்யப் பெற்ற அரச குமாரனுடன் சண்டையிட்டு அவனைத் தோற்கடித்து மணப் பெண்ணைக் கவர்ந்து செல்வதுமுண்டு.

இப்படியான சுயம்வரங்களில் சில வேளைகளில் ஏதாவது ஒரு போட்டி வைத்து அந்தப் போட்டியில் வென்றவனுக்கே பெண்ணைக் கொடுப்பதுமுண்டு. இந்தப் போட்டி அநேகமாக வில்வித்தையோடு தொடர்புள்ளதாக இருக்கும்.

காசி மன்னனின் மகளுடைய சுயம் வரத்துக்குப் பல நாட்டு அரச குமாரர்கள் வந்திருந்தார்கள். பீஷ்மரும் வந்திருந்தார்.

பீஷ்மருக்கு வயதாகி விட்டதாலும், தான் திருமணம் செய்யப் போவதில்லை என்று அவர் கூறிய சபதம் எல்லா நாட்டினருக்கும் தெரிந்திருந்தாலும், அவர் சும்மா மரியாதைக்காகச் சுயம்வரம் காண வந்திருப்பதாகவே எல்லாரும் நினைத்தார்கள்.

காசி மன்னனுடைய புத்திரிகளான அம்பை, அம்பிகை, அம்பாலிகை ஆகிய மூவரும் திருமணப் பருவம் அடைந்திருந்த படியால் மூவரும் கையில் மாலையுடன் சுயம்வர மண்டபத்துக்கு வந்தார்கள்.

அந்தக் காலத்தில் மூன்று பெண்களையும் ஒருவரே மணப்பது மிகுந்த வழக்கத்திலிருந்தது.

அரசகுமாரிகள் மூவரும் சுயம்வர மண்டபத்திலிருந்த அரச குமாரர்களின் விபரங்களைத் தோழி சொல்லக் கேட்டுக்கொண்டு, மேலே மேலே போனார்கள். பீஷ்மருடைய முறை வந்தது. அவரையும் விலக்கிவிட்டு அவர்கள் அடுத்தவரிடம் சென்றார்கள்.

பீஷ்மருக்குப் பெரிய கோபம் ஏற்பட்டது. ''மகாவீரனாகிய என்னையும் ஒதுக்கி விட்டு, இவர்கள் வேறு யாரையோ தெரிவு செய்யப் போகிறார்களா!'' என்று நினைத்துக் கடும் கோபம் கொண்டார். உடனே எழுந்து, ''இந்தப் பெண்களை அழைத்துச் செல்லக் கூடிய வலிமையுள்ளவர்கள் யாராவது இருந்தால் வாருங்கள் சண்டைக்கு!'' என்று உரத்த குரலில் கூறினார்.

பீஷ்மருடைய திறமையைத் தெரிந்திருந்த பல அரச குமாரர்கள் ஒதுங்கிக் கொண்டார்கள். ஆயினும் சிலர் அரச குமாரர்களுக்குரிய வீரத்தோடு பீஷ்மருடன் சண்டைக்கு எழுந்தார்கள். அவர்களை

யெல்லாம் மிகச் சுலபமாகத் தோற்கடித்து விட்டு, மூன்று அரச குமாரிகளையும் தேரில் ஏற்றிக்கொண்டு, தமது நகராகிய அஸ்தனாபுரம் நோக்கிப் புறப்பட்டார் பீஷ்மர்.

பீஷ்மருடன் கடுமையாகச் சண்டையிட்டுத் தோற்றுப் போனவன் சால்வன் என்ற மன்னன். சுயம்வரத்துக்கு வந்த பெண்களில் மூத்தவளான அம்பையை ஏற்கனவே காதலித்திருந்தவன். அம்பையும் அவனையே விரும்பியிருந்தாள்.

சால்வன் மனம் பொறுக்காமல், பீஷ்மர் சென்ற தேரைத் தொடர்ந்து சென்று சண்டையிட்டான். ஆனால் பெரிய வீரனாகிய பீஷ்மரை அவனால் வெற்றி கொள்ள முடியவில்லை. ஒரு சமயத்தில் அவனைக் கொல்வதற்குப் பீஷ்மர் தயாரானார். ஆனால் தேரில் இருந்த மூன்று பெண்களும், முக்கியமாக அம்பையும் மிக இரந்து கேட்டதனால் பீஷ்மர் சால்வனைக் கொல்லாமல் விட்டு விட்டார்.

மூன்று பெண்களோடும் அஸ்தனாபுரம் வந்து சேர்ந்த பீஷ்மர் அவர்களை விசித்திர வீரியனுக்குத் திருமணம் செய்து வைக்க ஏற்பாடுகள் செய்தார்.

இதை அறிந்த மூத்தவளான அம்பை துணிச்சலுடன் பீஷ்மரிடம் சென்று ''கங்கா புத்திரரே! நான் சௌபல நாட்டு மன்னரான சால்வனையே எனது மணாளனாக நெடுநாளாய் என் மனதில் கருதியிருக்கிறேன். நீங்களோ பலாத்காரமாக என்னை இங்கே கொண்டு வந்து விட்டீர்கள். எல்லா அறங்களையும் அறிந்தவராகிய உங்களுக்கு இது தகுமா?'' என்று நியாயம் கேட்டாள்.

அம்பையின் நியாயத்தைக் கேட்ட பீஷ்மர் அவள் விருப்பத்தை ஏற்று, அவளைச் சால்வனிடமே தக்க துணையுடன் அனுப்பி வைத்து விட்டார்.

அம்பையின் தங்கைகளான அம்பிகை, அம்பாலிகை இருவருக்கும் விசித்திர வீரியன் மாலை சூட்டி அவர்களைத் தனது மனைவியராக்கிக் கொண்டான்.

## 4. அம்பை

அம்பை சால்வ மன்னனிடம் சென்று ''உங்களையே நான் எனது கணவராக மனதில் கருதியிருந்தேன். பீஷ்மர் பலாத்காரமாக

என்னைக் கொண்டு சென்றார். ஆனாலும் அறிவு நூல்களைக் கற்றவராகிய பீஷ்மரிடம் நான் எனது நிலையை எடுத்துக் கூறி நியாயம் கேட்டதும் அவர் என்னை உங்களிடமே போகும்படி அனுப்பி விட்டார். என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்றாள்.

சால்வனோ ''பல மன்னர்கள் முன்னிலையில் பீஷ்மர் என்னைத் தோற்கடித்து உன்னைக் கொண்டு சென்றார். உன்னை நான் திரும்பப் பெறுவது மானக் கேடாகும். உன்னைப் பீஷ்மரே வென்றெடுத்தவர், அதனால் நீ அவருக்கே உரியவள். நீ அவரிடம் சென்று அவர் சொற்படி நட. நீ என்னுடன் சேருவது இந்தப் பிறவியில் நடவாது!'' என்று கூறி அம்பையைப் பீஷ்மரிடமே திருப்பி அனுப்பி விட்டான்.

அம்பை மனம் உடைந்து போய் மீண்டும் பீஷ்மரிடமே வந்து சால்வனின் முடிவைக் கூறினாள்.

பீஷ்மரின் மனம் பெரிய சங்கடப் பட்டது. அம்பை சொன்னதும் நியாயம், சால்வன் சொன்னதும் நியாயமாகப்பட்டது.

அவர் விசித்திர வீரியனை அழைத்து ''சால்வன் அம்பையை ஏற்கவில்லை, எனவே நீ இப்போது இவளைத் திருமணம் செய்வதில் தடையொன்றுமில்லையே?'' என்று கேட்டார்.

விசித்திர வீரியனோ, ''வேறு ஒருவன் மீது தனது மனத்தைப் பறிகொடுத்த பெண்ணைத் திருமணம் செய்வது அரசகுல வீரனுக்கு அழகல்ல!'' என்று கூறி மறுத்து விட்டான்.

பாவம் அம்பை! அவளது நிலை மிகவும் இரங்கத்தக்கதாக இருந்தது. ''கங்கா புத்திரரே, எனக்கு இனி வேறு கதியில்லை. நீங்களே என்னைத் திருமணம் செய்து கொள்ளுங்கள். என்னுடைய தந்தையின் பாதுகாப்பிலிருந்து நீங்களேதான் என்னை எடுத்து வந்தீர்கள். என்னுடைய வாழ்க்கைக்கு நீங்கள் தான் வழி செய்ய வேண்டும்!'' என்று அம்பை பீஷ்மரிடம் இரந்தாள்.

பீஷ்மர் சரியான தர்ம சங்கடத்தில் மாட்டிக் கொண்டார். அம்பை கேட்பது நியாயமே ஆனாலும், உலகம் முழுவதும் அறிய, செம்படவத்தலைவனுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீற முடியுமா? அந்த வாக்குறுதியை அவர் அம்பைக்கு நினைவுபடுத்தி, அவளுடைய வேண்டுகோளை ஏற்க மறுத்துவிட்டார்.

அம்பையும் சரியான பிடிவாதக்காரி. ''எனக்கு ஒரு வழி காட்டாவிட்டால் நான் இங்கிருந்து போகமாட்டேன்'' என்று பீஷ்மரின் அரண்மனையிலேயே பழி கிடந்தாள்.

பீஷ்மர் அவளுக்குப் புத்தி சொல்லி மறுபடியும் சால்வனிடம் அனுப்பி வைத்தார். சுவரில் எறிந்த பந்து போல் அவள் மீண்டும் பீஷ்மரிடமே வந்து சேர்ந்தாள்.

இப்படி ஆறு மாதங்களாக அம்பை பீஷ்மரின் மாளிகையில் குமுறிக் கொதிக்கும் இதயத்துடன் காத்திருந்தாள்.

எவ்வித பயனும் கிடைக்கவில்லை. அவள் பொறுமை இழந்தாள். தன்னை இந்த நிலைக்கு ஆளாக்கியவர் பீஷ்மரே என்று நினைத்துப் பொருமினாள். அவரைக் கொன்றால்தான் தனது மனதுக்கு ஆறுதல் கிடைக்குமென்று அவளுக்குத் தோன்றிற்று.

அம்பை பல மன்னர்களிடம் சென்று தனக்கு நேர்ந்த கதியை எடுத்துக் கூறி பீஷ்மரிடம் போரிட்டு அவரைக் கொன்று நீதியை நிலைநாட்டும்படி கேட்டாள்.

நியாயம் அவள் பக்கம் இருப்பதை எல்லா மன்னர்களும் ஒத்துக் கொண்டாலும், பீஷ்மருடன் பகை கொள்ள அஞ்சி அவளுடைய வேண்டுகோளை அவர்கள் மறுத்து விட்டனர்.

அடங்காத மனக் கொதிப்புடன் அம்பை முருகனை நோக்கித் தவமிருந்தாள். முருகன் அவள் முன் தோன்றி, அவள் கையில் ஒரு மாலையைக் கொடுத்து ''இந்த மாலையை எவன் தரித்துக் கொள்கிறானோ அவன் பீஷ்மரின் எதிரியாவான்'' என்று ஒரு வரத்தைக் கொடுத்து மறைந்தார்.

அம்பை அந்த மாலையை எடுத்துக் கொண்டு மீண்டும் பல மன்னர்களிடம் சென்று, அந்த மாலையை அணிந்து சென்று பீஷ்மரைக் கொல்லும்படி வேண்டினாள். அப்போதும் எந்த மன்னனும் பீஷ்மரை எதிர்க்கத் துணியவில்லை. கடைசியாகத் துருபத நாட்டு மன்னனிடம் போய்க் கேட்க, அவனும் மறுத்து விடவே அம்பை மனமுடைந்து போனாள். அந்த மாலையைத் துருபதனின் அரண்மனை வாயலிலேயே ஓர் இடத்தில் தொங்கப்போட்டுவிட்டு அவள் காட்டுக்குச் சென்றாள்.

அவள் விடாக்கண்டி. அங்கேயும் அவள் சும்மாயிருக்க வில்லை. காட்டிலுள்ள முனிவர்களிடமெல்லாம் சென்று பீஷ்மரால் தனக்குச் செய்யப்பட்ட கொடுமைகளைச் சொல்லி முறையிட்டாள்.

முனிவர்கள் ''பெண்ணே, உனக்கு உதவக் கூடியவர் பரசுராமர்

ஒருவர்தான். அவரிடம் போய் முறையிடு'' என்று புத்தி சொன்னார்கள்.

அம்பை பரசுராமரிடம் சென்று முறையிட்டாள். அவளுக்கு நீதி செய்யப்பட வேண்டியதை பரசுராமர் உணர்ந்தார். ''பெண்ணே, நீ சொல்வது நியாயமே. நான் உனக்கு என்ன செய்ய வேண்டுமென்று சொல். சால்வ மன்னன் உன்னைத் திருமணம் செய்யும்படி ஒழுங்கு செய்யட்டுமா? சொல். அது என்னால் முடியும்'' என்றார்.

பரசுராமர் வில்வித்தையில் பெரியவீரர். அரச குலத்திற்கே எதிரி. முன் கோபி. ஆனால் நியாயம் தவறாதவர்.

பரசுராமரின் வார்த்தைகளால் சற்றே மனம் ஆறிய அம்பை ''வணங்கத்தக்கவரே, நீங்கள் ஒருவரே நீதிக்காக எவரையும் எதிர் கொள்ளத் துணிந்து நிற்கக் கூடிய பெரியவீரர்! எனக்கு இனித் திருமணம் வேண்டாம். அந்த ஆசையெல்லாம் இப்போது போய் விட்டது! எனக்குத் தீங்கு செய்த பீஷ்மர் தண்டிக்கப்பட வேண்டும். அதையே நீங்கள் செய்து இந்த உலகில் நீதியை நிலை நாட்ட வேண்டும்!'' என்று கேட்டாள்.

எவருக்கும் அஞ்சாத பரசுராமர், பீஷ்மருடன் சண்டை செய்தார். பல நாட்களாகச் சண்டை நடந்தது. இருவரும் சிறந்த வீரர்கள். ஆயினும் பரசுராமர் கடைசியில் தோற்றுப் போனார்.

''பெண்ணே, என்னால் முடிந்ததை நான் செய்து விட்டேன். பயனில்லை. நீ இனிப் பீஷ்மரைச் சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை'' என்று பரசுராமர் அம்பையிடம் சொன்னார்.

சரணடையக் கூடிய பெண்ணல்ல அம்பை! இதற்குமேல் என்ன வழி என்று அவள் சிந்தித்தாள். எப்படியும் பீஷ்மரைப் பழிவாங்காமல் அவள் ஓயமாட்டாள்!

அம்பை இமயமலைக்குச் சென்று சிவபிரானைக் குறித்துக் கடுந் தவம் இயற்றினாள்.

சிவனார் அவள் முன்னே தோன்றி ''அம்பையே, நீ உனது அடுத்த பிறப்பில் பீஷ்மரைக் கொல்வாய்!'' என்று வரமளித்தார்.

''அடுத்த பிறப்பா!'' என்று அம்பை மனத்துக்குள் பொருமினாள். ''அந்த அடுத்த பிறப்பை உடனேயே அடைவேன்'' என்று

துணிந்து, தீ மூட்டி அதில் விழுந்து அந்தப் பிறவியை உடனேயே முடித்துக் கொண்டாள்.

விடாமுயற்சிக்கு அம்பை ஓர் உதாரணம்.

அம்பை துருபத நாட்டு மன்னனின் மகளாக அடுத்த பிறவி எடுத்தாள். அவள் இளம் வயதான போது ஒரு நாள் அரண்மனையின் வாயிற் பக்கமாக வந்தாள்.

முற்பிறப்பில் அவள் — அம்பை துருபதனின் அரண்மனை வாயிலில் போட்ட மாலை இன்னமும் அந்த இடத்திலேயே கிடந்தது. அந்த மாலையின் வரலாறு தெரிந்திருந்ததால் பீஷ்மருடைய கோபத்துக்குப் பயந்து யாரும் அதைத் தீண்டவில்லை.

இப்போது துருபதனுடைய மகளாகப் பிறந்திருந்த அம்பை; அந்த மாலையைப் பற்றிய விபரம் தெரியாமலே, அதை எடுத்துத் தன் கழுத்தில் அணிந்து கொண்டாள்.

அவளுடைய தந்தை துருபதன் இதை அறிந்ததும் திகைத்தான். பயந்தான். மகாவீரரான பீஷ்மரின் விரோதம் வந்து விட்டதே என்று பெரும் கவலை கொண்டான். என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறிய துருபதன், இனி இவள் இங்கிருந்தால் தனக்கும் நாட்டுக்கும் பீஷ்மரால் கேடு விளையுமென்று உணர்ந்து அவளைக் காட்டுக்கு அனுப்பி விட்டான்.

காட்டில் விடப்பட்ட துருபதன் மகள் அங்குள்ள முனிவர்களின் துணைகொண்டு வாழ்ந்து, கடுந்தவங்கள் இயற்றினாள். அத்தவ வாழ்வின் பயனாக நாளடைவில் அவளிடம் ஆண்மகனுக்குரிய தன்மைகள் தோன்றின. அவளுடைய பெயரும் 'சிகண்டி' என்றாயிற்று.

இந்தச் சிகண்டி என்பவனே பாரதயுத்தம் நடந்த போது அர்ச்சுனனுக்குத் தேர்ப்பாகனாகவிருந்து; தனது முற்பிறப்பின் — அம்பையின் — பரம வைரியான பீஷ்மரை எதிர்த்தான்.

# 5. குருகுல விருத்தி

அம்பையின் தங்கைகளான அம்பிகையும், அம்பாலிகையும் விசித்திர விரியனை மணந்து அஸ்தனாபுரத்து ராணிகளாக வாழ்ந்து வந்தார்கள். அவர்களிருவருக்கும் பிள்ளைகள் பிறக்காத நிலையிலேயே விசித்திர வீரியன் இறந்து போனான்.

புகழ் வாய்ந்த குருவம்சத்துக்குச் சந்ததி இல்லாமற் போகும் நிலை ஏற்பட்டது. அப்போது —

★

பேரறிஞரும், மிகுந்த அறநெறிக் கட்டுப்பாடு கொண்டவருமான மாண்டவியர் என்ற முனிவர், ஊருக்கு வெளியே ஒரு குடிசை அமைத்து அங்கே தவவாழ்க்கை மேற்கொண்டார்.

ஒரு நாள் மாண்டவியர் தமது குடிசைக்கு வெளியேயிருந்த மரத்தடியில் அமர்ந்து யோகநிலையில் மௌனமாகக் கண்மூடியிருந்தார். அப்போது சில திருடர்கள் அந்தப் பக்கம் ஓடி வந்தார்கள். அவர்களை அரசபடையினர் துரத்தி வந்தபடியால், அவர்கள் முனிவருடைய குடிசைக்குள் நுழைந்து, அங்கே ஒரு பக்கத்தில் தாங்கள் திருடிக்கொண்டு வந்த பொருள்களை வைத்து விட்டு, வேறு இடத்தில் போய்ப் பதுங்கிக் கொண்டார்கள்.

திருடர்களைத் தொடர்ந்து வந்த அரசபடையினர், மரத்தடியில் கண்மூடி உட்கார்ந்திருந்த முனிவரைக் கண்டதும் "இந்தப் பக்கமாக ஓடி வந்த திருடர்கள் எங்கே போனார்கள்?" என்று கேட்டார்கள். யோக நிலையிலிருந்த மாண்டவியர் பதிலேதும் சொல்லாமலிருக்கவே, படைத் தலைவன் மீண்டும் அதட்டிக் கேட்டான். மாண்டவியரின் புலன்களில் இந்தப் பேச்சு ஒன்றும் கேட்கவில்லை. அவர் கண் மூடி மௌனியாக இருந்தார்.

படைவீரர்கள் குடிசைக்குள் போய்ப் பார்க்கவே; அங்கே களவு போனபொருள்கள் இருக்கக் கண்டனர். பிறகு திருடர்களும் அகப்பட்டனர்.

படைத்தலைவன் நினைத்தான்: "ஓகோ, வெளியே மரத்தடியில் தியானத்தில் இருந்தவனே இந்தக் கள்வர் கூட்டத்துக்குத் தலைவனாயிருக்க வேண்டும். அவனுடைய குடிசைக்குள்தானே கள்வர்களும் இருந்தார்கள்; களவு போன பொருள்களும் இருந்தன. இவன் பெரிய வேடதாரி. பெரிய கள்வன்" என்று தீர்மானித்த படைத்தலைவன் சில படை வீரர்களை அங்கே காவலுக்கு நிறுத்திவிட்டு, அரசனிடம் போய் நடந்தவற்றைச் சொன்னான்.

அரசன் மேற்கொண்டு ஏதும் விசாரியாமலே "அந்தப் பெரிய திருடனைச் சூலத்தில் ஏற்றுங்கள்!" என்று உத்தரவிட்டான்.

சூலத்தில் ஒரு குற்றவாளி ஏற்றப்பட்டால் அவன் உடனே மரணமாவான்.

ஆனால் சூலத்தில் ஏற்றப்பட்ட மாண்டவியரோ யோகநிலையில் இருந்த காரணத்தினால் வெகு காலம் அப்படியே உயிருடன் இருந்தார்.

அந்தக் காட்டிலிருந்த பல முனிவர்களும் அங்கே வந்து சேர்ந்து, மாண்டவியர் சூலத்தில் ஏற்றப்பட்டிருப்பதைக் கண்டு, ஆச்சரியமும் துயரமும் அடைந்தவர்களாய் ''மாண்டவியரே, உங்களுக்கு இந்த நிலை எப்படி வந்தது?'' என்று கேட்டார்கள்.

''நான் யாரைக் குற்றம் சொல்லுவேன்?. நாட்டைக் காக்கும் மன்னனுடைய படைவீரர்களே எனக்கு இவ்வாறு தண்டனை விதித்திருக்கிறார்கள்'' என்றார் மாண்டவியர்,

சூலத்திலே ஏற்றப்பட்டவர் இன்னும் உயிருடன் இருக்கிறாரென்றும், அவரைச் சுற்றிக் காட்டிலுள்ள முனிவர்களெல்லாம் கூடியிருக்கிறார்களென்றும் கேள்வியுற்ற மன்னன் ஓடோடி அவ்விடத்திற்கு வந்தான். சூலத்தில் ஏற்றப்பட்டது திருடனல்ல என்பதையும், அவர் மதிப்புக்குரிய மாண்டவிய முனிவர் என்பதையும் அறிந்து கொண்ட மன்னன், உடனே அவரை சூலத்திலிருந்தும் இறக்குவித்து, அவர் காலடிகளில் விழுந்து வணங்கி ''எனது அறியாமையால் இச்செயலைச் செய்துவிட்டேன். என்னை மன்னியுங்கள்'' என்று வேண்டினான்.

முனிவர் மன்னனைக் கோபிக்காமல் இதற்கெல்லாம் காரணமான தர்மதேவதையிடம் போனார். போய், ''இந்த துன்பத்தை அனுபவிக்கும்படி நான் செய்த தவறு என்ன?'' என்று நியாயம் கேட்டார்.

''தவமுனிவரே, நீங்கள் பறவைகளையும் பூச்சிகளையும் துன்புறுத்தியிருக்கிறீர்கள். ஒருவர் செய்த தானமும், பாவமும் மிகுந்த அளவில் நற்பலனையும், தீயபலனையும் செய்யுமென்ற நியதி உங்களுக்குத் தெரியாதா?'' என்று தருமதேவதை சொன்னார்.

''பறவைகளையும், பூச்சிகளையும் நான் கொடுமைப்படுத்தினேனா? எப்போது?'' என்று கேட்டார் மாண்டவியர்.

''நீங்கள் சிறுபிள்ளையாக இருந்த பொழுது இப்படியான பாவச் செயல்களைச் செய்தீர்கள். அதன் பலனையே இப்போது அனுபவித்தீர்கள்'' என்றார் தர்மதேவதை.

''அறிவு வளர்ச்சியற்ற சிறு பையன் செய்த அற்ப குற்றத்துக்காக இவ்வளவு பெரிய தண்டனையை நீ விதித்தாய். தவறு செய்தாய். இதற்காக நீ பூவுலகில் மனிதனாகப் பிறப்பாய்!'' என்று மாண்டவியர் தருமதேவதையை சபித்தார்.

★

சந்ததி இல்லாமல் விசித்திரவீரியன் இறந்து போகவே அவனுடைய தாய் சத்தியவதி மிகுந்த கவலை கொண்டாள்.

அந்தக் கால வழக்கத்துக்கேற்ப அவள் சிந்தித்துத் தனது மூத்த குமாரனாகிய வியாச முனிவரை வரவழைத்தாள்.

சத்தியவதி சந்தனுவைத் திருமணம் செய்யு முன்னரே - அவளுடைய தகப்பனான செம்படவத் தலைவனின் பாதுகாப்பில் இருந்த பொழுது, பராசரர் என்ற ஒரு முனிவர் அவள் மீது ஆசை கொண்டார். அவள் செம்படவப் பெண்ணாக இருந்ததால் அவளிடம் தோன்றிய துர்நாற்றத்தைப் போக்கு முகமாக, அவளுடைய உடம்பிலிருந்து இனிமேல் மிகுந்த நறுமணம் வீசுமென்று வரமளித்து, அவளைக் கூடி மகிழ்ந்தார். (அவர் கொடுத்த நறு மணத்தினாற் கவரப்பட்ட சந்தனு அவளைத் தேடி வந்து, அவளைக் கண்டு காதல் கொண்டான்.)

பராசர முனிவரின் கூடலால், கன்னிப் பெண்ணாக இருந்த சத்தியவதி கர்ப்பமுற்று, ஒரு குழந்தையைப் பெற்றாள். அந்தக் குழந்தைதான் வியாசமுனிவர்!

சத்தியவதியைச் சந்தனு மணம் முடித்தபோது அவளுடைய குழந்தை வியாசர் அவளுடன் இருக்கவில்லை. அந்தக் குழந்தை முனிவர்களுடன் சென்று வளர்ந்திருக்க வேண்டும்.

வியாசர் சிறந்த அறிஞராகி, வியாச முனிவர் என்று போற்றப்பட்டு, கௌரவ குல அரசர்களின் குலகுருவாகவும் விளங்கினார்.

தங்கள் குலம் சந்ததியின்றி அழியாமற் காப்பாற்றுவதற்காக வேண்டி, அரண்மனைக் குலகுருவாக அப்போது விளங்கிய தனது மகன் வியாசரின் உதவியைச் சத்தியவதி வேண்டிநின்றாள்.

சந்ததியின்றி அரசன் இறந்து போனால், குலகுரு மூலம் சந்ததியை உண்டாக்கிக் கொள்வது அக்கால அரச குடும்பங்களில் நியாயமாகக் கருதப்பட்டது.

தாயின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட வியாசர் முதலில் அம்பிகையுடன் கூடி அவளிடம் கர்ப்பத்தை உற்பவித்தார். அதன் பின் சத்தியவதி அவரை அம்பாலிகையிடம் அனுப்பினாள். அவருடைய தோற்றத்தை விரும்பாத அம்பாலிகை தனக்குப் பதிலாக தன் தோழிப்பெண் ஒருத்தியைத் தனது படுக்கையில் விட்டு விட்டுத் தான்

தப்பிக் கொண்டாள். வியாசமுனிவர் அந்தத் தோழிப் பெண்ணிடம் கர்ப்பத்தை உற்பவித்தார்.

அம்பாலிகை செய்த மாறாட்டம் சத்தியவதிக்குத் தெரிந்து விட்டது. அவள் அம்பாலிகையைக் கண்டித்துப் புத்திமதி சொல்லி மீண்டும் வியாசரை அவளிடம் அனுப்பினாள். இம்முறை அம்பாலிகையும் வியாசரிடமிருந்து கர்ப்பத்தைப் பெற்றுக் கொண்டாள்.

சத்தியவதியின் இந்த முயற்சியின் பயனாகக் கௌரவகுலம் மீண்டும் முளை கொண்டது. மூத்தவளான அம்பிகையின் வயிற்றில் திருதராட்டிரன் பிறந்தான். அவன் பிறக்கும் போதே கண் பார்வையற்ற குருடனாகப் பிறந்தான். வியாச முனிவர் அம்பிகையைக் கூடிய போது, அவள் அருவருப்பினால் தனது கண்களை மூடிக் கொண்டாள் என்றும், அதனாலேயே அவளுக்குப் பிறந்த குழந்தை பிறவிக் குருடனாகப் பிறந்தது என்றும் சொல்லப்படுகிறது.

அம்பாலிகை பெற்றெடுத்த குழந்தைதான் பாண்டு, பஞ்சபாண்டவர்களின் தந்தை.

அம்பாலிகையின் தோழிப் பெண்ணும் ஒரு குழந்தையைப் பெற்றாள். அந்தக் குழந்தைதான் சிறந்த நீதிமானாகிய விதுரன். மாண்டவிய முனிவரின் சாபம் பெற்ற தருமதேவதையே விதுரனாகப் பிறந்தார்.

## 6. கர்ணன்

**அ**ஸ்தனாபுர அரண்மனையில் அரசகுமாரர்களான திருதராட்டிரனும், பாண்டுவும் மிகவும் கவனமாக வளர்க்கப்பட்டார்கள். விதுரன் தோழிப்பெண் பெற்ற பிள்ளையானாலும், வியாசருக்குப் பிறந்த பிள்ளையாதலால் அவனும் கவனமாக வளர்க்கப்பட்டான்.

அரசகுமாரர்கள் கற்றுக் கொள்ளவேண்டிய பாடங்கள் யாவும் அவர்களுக்குத் தக்க அறிஞர்களால் போதிக்கப்பட்டன. திருதராட்டிரன் பிறவிக் குருடனாக இருந்த போதிலும், மூத்த அரசகுமாரனாக இருந்ததால் அவனுக்கு வாய்மொழி மூலமாகவே எல்லா நீதி நூல்களும் போதிக்கப்பட்டன.

அரச குமாரர்கள் வளர்ந்து இளைஞர்களானார்கள்.

திருதராட்டிரன் பிறவிக் குருடனாக இருந்தபடியால், அவனைப்

பேருக்கு அரசனாக வைத்துக் கொண்டு, பாண்டுவே அரச அலுவல்களை நடத்தி வந்தான். அரசின் முக்கிய அமைச்சராக விதுரன் விளங்கினான்.

காந்தார நாட்டுக்கு மன்னனான கபலன் என்பவனின் மகள் காந்தாரியைத் திருதராட்டிரனுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள்.

தனது கணவன் குருடனாக இருப்பதால், தான் மட்டும் பார்வையுடனிருப்பது கற்புடைமையாகாது என்று கருதிய காந்தாரி ஒரு துணியினால் தன்னுடைய கண்களையும் கட்டிக் கொண்டு வாழ்ந்தாளாம்!

அப்படி வாழ்ந்ததால் அவள் கற்புக்கரசி என்று போற்றப்பட்டாள்! பாரத காலத்திலிருந்தே பெண்கள் இந்த மாதிரியான ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டிருந்திருக்கிறார்கள்.

★

யாதவ குலத்தைச் சேர்ந்த குந்தி போஜன் என்ற மன்னவனுக்குக் குழந்தைகள் இல்லாமற் போகவே அவன் தனது மைத்துனனாகிய சூரனின் முதல் பெண் குழந்தையாகிய பிருதை என்பவளைத் தனது வளர்ப்பு மகளாக எடுத்துக் கொண்டான். பிருதை குந்திபோஜனின் மகளாகிவிட்டதால் அவள் குந்தி என்று அழைக்கப்பட்டாள்.

குந்தி இளம் பெண்ணாக இருந்த போது புகழ் பெற்ற துருவாச முனிவர் குந்தி போஜனின் அரண்மனைக்கு வந்து ஓராண்டு காலம் தங்கியிருந்தார். அப்போது அவருக்கு எவ்வித குறையுமில்லாமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு குந்தியிடம் விடப்பட்டது.

பேரழகியும் இனிய குணங்களையுடையவளுமான குந்தி, துருவாசரின் மனம் கோணாமல் அவருக்கு வேண்டிய பணிவிடைகளையெல்லாம் செய்து அவரை மகிழ்வித்தாள். அதனால் அவர் அரண்மனையை விட்டுப் போகும் போது, அவளுக்குச் சிறப்பு மிக்க ஒரு மந்திரத்தை உபதேசித்தார். ''இனிய பெண்ணே, இந்த மந்திரத்தை நீ எந்தத் தேவனை நினைத்துக் கொண்டு சொன்னாலும், அந்தத் தேவன் உன்னிடம் வந்து தனது சிறப்புக்களையுடைய ஒரு புத்திரனை உனக்குத் தருவான்'' என்று துருவாசர் குந்திக்கு வரமளித்தார். எதிர் காலத்தில் குந்திக்கு ஏற்படவிருக்கும் ஒரு நிலையைத் தமது ஞானக் கண்ணால் அறிந்தே துர்வாச முனிவர் இந்த வரத்தை அவளுக்கு அளித்தார் என்று சொல்லப்படுகிறது.

முனிவர் அரண்மனையை விட்டுப் போனதும், இளம் வயதினளான குந்திக்கு மனம் குறுகுறுத்தது. ''இது என்ன; இப்படி ஒரு புதுமையான மந்திரத்தைச் சொல்லித் தந்திருக்கிறாரே! இதைச் சொல்லி எந்தத் தேவனை நான் அழைத்தாலும் அவன் என்னிடம் வருவானா?''

நல்ல பகல் நேரம். சூரியன் பிரகாசித்துக் கொண்டிருந்தான். குந்தி துருவாசர் சொல்லிக் கொடுத்த மந்திரத்தைச் சொல்லி சூரிய தேவனையே நினைத்தாள்.

என்ன ஆச்சரியம்!

அவள் இருந்த கன்னி மாடத்துக்குள்ளே, ஆண்கள் யாரும் நுழைய முடியாத அந்த இடத்தில், திடீரென்று ஓர் ஆண்மகன் தோன்றினான்.

கண்களைக் கூசச் செய்யும் பிரகாசத்துடன் அவள் இதுவரை கண்டிராத பேரழகும், கவர்ச்சியுமுள்ளவனாகக் காணப் பட்டான்.

அவனைப் பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும் போலக் குந்தியின் மனம் ஆசைப்பட்டது. ஆனால் அதையும் முந்திக் கொண்டு ஒரு பயம்.

''ஐயா, நீங்கள் யார்? ஆண்மகன் யாரும் நுழைய முடியாத இந்தக் கன்னிமாடத்துக்குள்ளே எப்படி வந்தீர்கள்?'' என்று குந்தி பதறிப்போய்க் கேட்டாள்.

''இனியவளே, இந்த உலகத்துக்கு ஒளியைக் கொடுக்கும் பகலவன் நான். நீ உச்சரித்த மந்திரத்தின் சக்தியினால் இழுக்கப்பட்டு இங்கே வந்தேன். பெண்ணே, தாமதியாமல் வா. உன்னைக் கூடி என்னை ஒத்த அழகும் சக்தியும் வாய்ந்த ஒரு புத்திரனை உனக்குத் தருகிறேன்'' என்றான் சூரிய தேவன்.

குந்திக்கு பயத்தினால் உடம்பு நடுங்கிற்று.

''ஐயா சூரியதேவரே! உங்களுக்கு வணக்கம். நான் சிறுபிள்ளைத் தனமாக முனிவர் சொல்லித் தந்த மந்திரத்தைச் சரி பார்க்கும் எண்ணத்துடன் சொல்லி விட்டேன். நானோ கன்னிமாடத்திலிருக்கும் கன்னிப் பெண். எனக்கு ஒரு குழந்தை பிறந்தால் உலகம் என்னைத் தூற்றுமல்லவா! தயவு செய்து எனது தவறைப் பொறுத்து நீங்கள் திரும்பிப் போய் விடுங்கள்'' என்று மிக இரந்து வேண்டினாள்.

ஆனால், துருவாசரின் சக்தி வாய்ந்த மந்திரம் சூரியனைத் திரும்பிப்போகவிடவில்லை. அவன் குந்திக்குப் பல ஆறுதல் மொழிகள் சொன்னான். ''என்னைக் கவர்ந்தவளே, நீ எதற்கும் பயப்பட வேண்டியதில்லை. நீ என்னுடன் கூடி ஒரு குழந்தையைப் பெற்றதும் மீண்டும் கன்னிப் பெண்ணாகி விடுவாய்!''

சூரியதேவனின் ஒப்பற்ற அழகில் மயங்கிப் போன குந்தி அதற்கு மேலும் மறுப்புத் தெரிவிக்கவில்லை. சம்மதித்தாள்.

குந்திக்கு ஒரு குழந்தை பிறந்தது. சூரியனைப் போன்ற பிரகாசமும், அழகும் பொருந்திய; மார்பிலே கவசமும், காதுகளிலே குண்டலமும் இயற்கையாகவே அமையப் பெற்ற அந்தக் குழந்தையைக் கண்டு குந்தி மிகவும் மகிழ்ந்து போனாள். மறுகணமே அவளுடைய மனதில் பயம் தோன்றிற்று. ''கன்னிப் பெண்ணான என்னை இந்தக் குழந்தையுடன் காண்பவர்கள் என்ன சொல்லுவார்கள்! ஐயோ, கெட்டேனே'' என்று பதறியவளாக, அவசரமாக யோசித்து அவள் ஒரு முடிவுக்கு வந்தாள். ஒரு பெட்டியை எடுத்து அதற்குள் அந்தக் குழந்தையைப் பத்திரமாக வைத்துப் பக்கத்திலிருந்த நீரோடையில் அந்தப் பெட்டியை மிதக்க விட்டாள்.

தண்ணீரில் மிதந்து சென்ற அந்தப் பெட்டியைத் தேரோட்டி ஒருவன் கண்டெடுத்தான். பெட்டியுள் அழகான ஆண் குழந்தை இருப்பதைக் கண்ட தேரோட்டி மிக்க மகிழ்ச்சியுடன் அதை வீட்டுக்கு எடுத்துச் சென்று தன் மனைவியிடம் கொடுத்தான்.

அந்தக் குழந்தையே மகாவீரனான கர்ணன்.

## 7. பாண்டவர்

அஸ்தினாபுரத்தின் இளவரசனும் தனது தமையனுக்காக ஆட்சியைக் கவனித்து வந்தவனுமாகிய பாண்டு, குந்திதேவியை முறைப்படி திருமணம் செய்து வாழ்ந்தான்.

பாரத காலத்தில் ஆண்கள் ஒரு மனைவியோடு திருப்தியடைவதில்லை. முக்கியமாக அரசர்கள் பல பெண்களை மனைவிகளாக அரண்மனை அந்தப்புரத்தில் சேர்த்து வைத்திருப்பார்கள்.

பாண்டுவும் குந்திக்குப் பிறகு, மத்திர நாட்டு மன்னனின் சகோதரியான மாதுரி என்பவளையும் திருமணம் செய்து கொண்டான்.

அரசர்கள் அடிக்கடி மிருகங்களை வேட்டையாடுவதற்காக காட்டுக்குப் போவது வழக்கம்.

பாண்டு ஒரு நாள் வேட்டைக்குப் போன போது ஆணும் பெண்ணுமான இரண்டு அழகிய மான்கள் மிகுந்த காதலோடு விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

உண்மையில் அவை மான்களல்ல. முனிவர் ஒருவர், புதிய வழியில் இன்பத்தை அனுபவிக்கக் கருதித் தனது இளம் மனைவியை ஒரு பெண்மானாக்கித் தானும் ஒரு ஆண்மானாக உருவெடுத்து விளையாடிக் கொண்டிருந்தார்.

இந்த உருமாற்றம் பாண்டுவுக்குத் தெரியாது. மான்களென்றே நினைத்தாலும், இப்படி மகிழ்வோடு விளையாடிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இவைகளைக் கொல்வதா என்றும் அவன் சிந்திக்கவில்லை. 'மிருகங்கள்தானே, இவற்றை வேட்டையாடிக் கொல்வதில் தவறொன்றுமில்லை', என்று நினைத்தவனாகப் பாண்டு அந்த மான்களின் மீது அம்பை எய்தான்.

அம்பு தைத்து விழுந்த முனிவர், இறப்பதற்கு முன்பாகப் பாண்டுவைப் பார்த்து "அடபாவி, சிறிதேனும் இரக்கமில்லாத செயல் செய்தாய்! இனிமேல் நீ பெண்ணிடத்தில் இன்பமடைய முயல்வாயானால் அந்தக் கணமே இறந்து போவாய்!" என்று முனிவர் சாபமிட்டார்.

மிகுந்த மனவேதனையுடன் பாண்டு அரண்மனைக்குத் திரும்பினான்.

முனிவர் சாபம் நிச்சயம் பலிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அரண்மனையில் சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டு வாழும்போது பெண்களின் உறவைப் புறக்கணித்து வாழ்வது நடக்கக்கூடிய காரியமல்லவே!

பாண்டு உயிரைக் காப்பாற்ற வேண்டி, அரண்மனை வாழ்வைத் துறந்து காட்டுக்குச் செல்ல விரும்பினான். அந்த விருப்பத்தைத் தனது மனைவியர் இருவரிடமும் சொன்னான்.

குந்தி சொன்னாள்: கணவன் காட்டிலிருக்க மனைவியானவள் அரண்மனையில் சுகபோகங்களுடன் வாழக் கூடாது. நாங்களும் உங்களுடன் காட்டுக்கு வந்து விடுகிறோம். பயப்பட வேண்டாம். உங்

களுக்கேற்பட்ட சாபத்துக்கு நீங்கள் பலியாகி விடாமல் நாங்கள் பார்த்துக் கொள்வோம்.

மாதுரியும் இதையே சொன்னாள். கைபிடித்த மனைவியரைக் கை விட்டுச் செல்வதும் தவறென்று உணர்ந்த பாண்டு, குந்தியையும் மாதுரியையும் அழைத்துக் கொண்டு காட்டுக்குச் சென்றான்.

காட்டில் ஒரு குடிசை அமைத்து, தன்து இரண்டு மனைவியர்களையும் உடன் கொண்டே, பாண்டு பிரமச்சாரியாக வாழ்ந்தான்.

தனது மன உறுதியினால் பெண்களின் உறவைத் தவிர்த்து நடக்க முடியுமென்றும், அதனால் முனிவரின் சாபத்துக்கு ஆளாகாமல் உயிர் வாழ முடியுமென்றும் பாண்டுவுக்கு நம்பிக்கை உண்டாயிற்று.

ஆனால் வேறொரு பெரும் கவலை அவன் உள்ளத்தில் குடி கொள்ளத் தொடங்கியது. எந்நேரமும் அந்தக் கவலையினால் அவன் வாடிக்கொண்டிருந்தான். அதைக் கவனித்த குந்தி அவனிடம் விசாரித்தாள்.

''பெண்ணே, எல்லா இன்பங்களையும் துறந்து, பட்ட மரம்போல நான் வாழ்கிறேன். நான் வாழ்வது மட்டுமன்றி உங்கள் இருவருடைய சுகவாழ்வையும் அழித்து விட்டேன். ...... இதையெல்லாம் தாங்கிக்கொள்ளலாம். என்னுடைய சந்ததி நீடிக்க வழியின்றி நான் சாகப் போவதை நினைத்தால்தான் பெரிய கவலையாக இருக்கிறது!''

குந்தி யோசித்தாள். பாண்டுவின் மன நோயைத் தீர்ப்பதற்குத் தன்னிடம் மருந்து இருப்பதை உணர்ந்தாள். அதை அவனிடம் சொல்லலாமா விடலாமா என்று சற்றே சிந்தித்தாள். பிறகு மனம் துணிந்து, துருவாச முனிவர் தனக்குச் சொல்லித் தந்த மந்திரங்களைப் பற்றிப் பாண்டுவிடம் சொன்னாள்.

''குந்தியே, நீ என்னைக் காப்பாற்றினாய்!'' என்று கூறிப் பாண்டு மிகவும் மகிழ்ந்து போனான். ''எனது மதிப்புக்குரியவளே, அந்த மந்திரத்தை உபயோகித்து, உனக்கு விருப்பமான தேவர்களை அழைத்து நீ சில பிள்ளைகளை எனக்குப் பெற்றுத் தா. பிறகு மாதுரிக்கும் அந்த மந்திரத்தைச் சொல்லிக் கொடு. அவளும் பிள்ளைகளைப் பெறட்டும்'' என்று பாண்டு மிகுந்த ஆவலோடு சொன்னான்.

கணவனின் வேண்டுகோளைக் குந்தி தேவி நிறைவேற்றினாள். நீதி தவறாத அறத்தின் காவலன் என்று போற்றப்படும் இயம

தேவனை அவள் முதலில் அழைத்தாள். அவனுடைய சக்தியின் மூலம் குந்தி பெற்ற பிள்ளையே உதிஷ்டிரன் என்ற தருமன்.

இரண்டாவதாக உலகெங்கும் நிரம்பியிருப்பவனும், உயிர்களையெல்லாம் வாழ்விப்பவனும், அளப்பரிய சக்தி வாய்ந்தவனுமாகிய வாயுதேவனைக் குந்தி அழைத்தாள். அவன் கொடுத்த புத்திரனே அசாதாரண பலம் பொருந்திய வீமன்.

மூன்றாவதாகத் தேவர்களின் அரசனான இந்திரனை அழைத்தாள் குந்தி. இந்திரன் அளித்த புதல்வனே சிறந்த அழகும், வில்வித்தையில் தனக்கு ஒப்பாரில்லாதவனுமாகிய அர்ச்சுனன்.

இந்த மூன்று பிள்ளைகளோடும் திருப்தியுற்றவளான குந்தி, தனக்குத் தெரிந்திருந்த மந்திரத்தை மாதுரிக்குச் சொல்லிக் கொடுத்தாள்.

மாதுரி அசுவினி தேவர்களை நினைத்து மந்திரத்தைச் சொன்னாள். அசுவினி தேவர்கள் மாதுரியிடம் வந்து இரட்டைப் பிள்ளைகளைக் கொடுத்தார்கள். அவர்கள்தான் நகுலனும், சகாதேவனும்.

தன்னுடைய சந்ததி வளர ஐந்து சிறந்த புத்திரர்கள் கிடைத்து விட்ட காரணத்தால் பாண்டு நல்ல மன நிறைவுடன், தனது மனைவியருடனும், பிள்ளைகளுடனும் அந்தக் காட்டிலேயே பல ஆண்டுகள் வாழ்ந்து வந்தான்.

★

ஒரு வசந்த காலம். மரங்களும், செடிகொடிகளும் பூத்துக்குலுங்கி அந்தச் சூழலையே மகிழ்வித்துக் கொண்டிருந்தன. விலங்குகளும், பறவைகளும் ஆடிப்பாடிக் கூடி விளையாடிக் குதூகலித்துக் கொண்டிருந்தன.

குந்தியும், பிள்ளைகளும் எங்கோ வெளியில் போயிருந்தார்கள். பாண்டுவும் மாதுரியும் தனியே இருந்தனர். பொங்கி மகிழ்ந்து கொண்டிருந்த இயற்கையின் சூழல் அவர்களுடைய உள்ளங்களையும் தாக்கிற்று.

பாண்டு மிகுந்த ஆசையோடு மாதுரியைப் பார்த்தான். அவளையும் இன்ப உணர்வு ஆட்கொண்டிருந்தது.

அவர்களுடைய ஆசைத் தீயின் முன்னால் முனிவரின் சாப நினைவு மனத்தின் ஒரு மூலையில் ஒதுங்கிக் கொண்டது.

பாண்டுவும் மாதுரியும் கூடி உறவு கொண்டார்கள்.

முனிவரின் சாபம் தவறவில்லை!

பாண்டு உயிரிழந்தான்!

தனது கணவனின் சாவுக்குத் தானே காரணமாயினள் என்று ணர்ந்த மாதுரி, கணவனை எரித்த தீயிலேயே தானும் விழுந்து தன்னுடைய உயிரைப் போக்கிக் கொண்டாள்.

காட்டிலுள்ள முனிவர்களெல்லாம் வந்து குந்திக்கும் அவளுடைய புதல்வர்களான தருமன், வீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகிய பஞ்ச பாண்டவர்களுக்கும் ஆறுதல் வார்த்தைகள் கூறி, இனியும் அவர்கள் காட்டில் வசிக்க வேண்டியதில்லையென்றும், அவர்களுக்கு உரித்தான அரண்மனையிருக்கும் அஸ்தனா புரத்துக்குச் செல்லலாமென்றும் கூறி, அவர்களை அஸ்தனாபுரத்துக்கு அழைத்துச் சென்று, பீஷ்மரிடமும், திருதராட்டிரனிடமும் ஒப்படைத்து மீண்டார்கள். அப்போது தருமருக்கு வயது பதினாறு.

★

பாண்டு குடும்பத்தினர் காட்டில் வாழ்ந்து கொண்டிருந்தபோது, பிறவிக் குருடனாகிய திருதராட்டிர மன்னனுக்குத் துரியோதனன், துச்சாதனன் முதலான நூறு ஆண்பிள்ளைகளும், ஒரு பெண் பிள்ளையும் பிறந்திருந்தனர்.

## 8. துரோணர்

பரத்துவாசர் என்று ஒரு முனிவர் இருந்தார். அவர் பிராமணர். அவருடைய மகன் துரோணர். துரோணர் வேத நூல்களையெல்லாம் படித்துத் தேறிய பின் வில்வித்தையும் கற்றார். அந்தக் காலத்தில் வில்வித்தையில் தேர்ச்சியுள்ளவர்களுக்கே மிகுந்த செல்வாக்கு இருந்த காரணத்தினால் திறமையுள்ள பல பிராமணர்களும் வில்வித்தையைப் பயின்றார்கள். துரோணரும் அவ்விதமே வில்வித்தையைப் பயின்றார். அவர் பயிலும்போது பாஞ்சால நாட்டு மன்னனின் மகனாகிய பட்டத்திளவரசன் துருபதனும் அவருடன் சேர்ந்து வில்வித்தையைப் பயின்று வந்தான். இருவரும் நல்ல நண்பர்களாக இருந்தனர். இளம் வயது நட்பின் மிகுதியால், துருபதன் தான் பட்டத்துக்கு வந்ததும் தனது நாட்டின் பாதி அரசுரிமையைத் துரோணருக்குத் தருவதாகச் சொல்லியிருந்தான்.

ஆசிரமத்தில் கல்வி, வித்தைகளைக் கற்று முடித்ததும் துருபத அரசகுமாரன் தனது நாட்டுக்குப் போய்விட்டான். துரோணருக்கும் வயது வந்து விட்ட படியால், அவர் கிருபர் என்பவரின் சகோதரியைத் திருமணம் செய்து கொண்டு வாழ்ந்தார்.

துரோணருக்கு அசுவத்தாமன் என்று ஒரு மகன் பிறந்தான். தனது மனைவியிடத்தும் மகனிடத்தும் மிகுந்த பாசம் கொண்டிருந்த துரோணர், அவர்கள் பல வித சுகங்களையும் அனுபவிக்க வேண்டுமென்று கருதி அதற்காகப் பொருள் தேடும் முயற்சியில் இறங்கினார்.

அந்தக் காலத்தில் சத்திரியர் என்று சொல்லப்பட்ட அரச குலத்தவரும், வைசியர் என்று சொல்லப்பட்ட வியாபாரிகளுமே பெரும் பொருள் ஈட்டக் கூடியவர்களாக இருந்தார்கள். ''சூத்திரர்கள்'' என்று குறிப்பிடப்பட்ட சாதாரண குடிமக்களின் உழைப்பு அவர்களுடைய வாழ்க்கைத் தேவைக்குப் போதியதாக இருந்தால் அதுவே பெரிய காரியம்.

கல்விமான்களும், சுகதேகிகளுமாயிருந்த பிராமணர்கள் அரசர்களிடமும், பிற செல்வர்களிடமும் தானம் பெற்று வாழ்பவர்களாகவே இருந்தார்கள். அவர்களின் கல்வி அறிவிற்காகவும், ஒழுக்கத்துக்காகவும் அவர்களைப் போற்றி வணங்கி வந்தவர்களே சில சமயங்களில் அவர்களைப் பிச்சை ஏந்திப் பிழைப்பவர்கள் என்று நிந்திப்பதுமுண்டு.

பரசுராமர் என்ற அரசர் தம்முடைய செல்வங்களையெல்லாம் பிராமணர்களுக்குத் தானம் செய்து விட்டுத் தவ வாழ்வுக்குப் போகப் போகிறார் என்பதை அறிந்த துரோணர், பரசுராமரின் அரண்மனைக்கு விரைந்தார். ஆனால் துரோணர் அங்கு போக முன்னரே, பரசுராமர் தமது செல்வங்களனைத்தையும் தானஞ் செய்து முடித்து விட்டார். ''ஐயா, என்னுடைய சொத்துக்கள் எல்லாவற்றையும் தானம் செய்து விட்டேன். இப்பொழுது என்னுடைய இந்த உடம்பும், நான் கற்ற வில்வித்தையும் மட்டுமே என்னிடமுள்ளன'' என்றார் பரசுராமர்.

ஏமாற்றமடைந்த துரோணர், பரசுராமர் கற்றிருந்த சிறப்பான வில்வித்தையைக் கற்றறிந்து கொண்டு திரும்பினார்.

பாஞ்சால நாட்டு மன்னன் இறந்து போக, அவனுடைய மகனும், தனது சிறு வயது நண்பனுமாகிய துருபதன் அரசனாயிருக்கிறானென்று துரோணர் அறிந்தார். தனக்குப் பாதி அரசுரிமையைத் தருவதாகத் துருபதன் முன்பு கூறிய வார்த்தைகள் அவருடைய மனதில் உறுதியாகப் பதிந்திருந்தன. ''அரசுரிமை இல்லாவிட்டாலும்,

பெரிய செல்வத்தையாயினும் அவன் தருவான்,'' என்ற நம்பிக்கை யோடும், துரோணர் தமது நண்பனிடம் சென்றார்,

வாயிற் காவலனிடம், ''அரசனுடைய நண்பன் வந்திருப்பதாகச் சொல்'' என்று துரோணர் கூறினார்.

துருபதனுக்கு இந்த வார்த்தையே பிடிக்கவில்லை.

''பிராமணரே, அரசனாகிய என்னை உமது நண்பர் என்று கூறிக் கொள்ள உமக்கு என்ன துணிச்சல்? ஏதோ சிறு வயதில் ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட பழக்கத்தை மட்டும் வைத்துக் கொண்டு என்னை உமது நண்பன் என்று உரிமை கொண்டாட எவ்விதம் துணிந்தீர்? பிச்சைக் காரனுக்கும் செல்வந்தனுக்கும்; மூடனுக்கும் அறிஞனுக்கும்; பயந்த கோழைக்கும் பெரிய வீரனுக்கு மிடையில் நட்பு ஏற்பட முடியாது. அரச பதவி இல்லாதவன் இன்னொரு அரச னோடு நண்பனாக இருத்தல் இயலாது'' என்று துருபதன் கோபத் தோடு கூறினான்.

வெட்கமும், கோபமும் கொண்ட துரோணர், துருபதனிடம் இரண் டாம் வார்த்தை பேசாமலே, மனதிலே ஓர் உறுதி செய்து கொண்டு அஸ்தனாபுரம் சென்றார். அஸ்தனாபுரத்தில் தமது *மைத்துனராகிய கிருபருடைய வீட்டில் மறைவாக வாழ்ந்து வந்தார்.

ஒரு நாள் அஸ்தனாபுரத்து அரசகுமாரர்களான கௌரவர்களும் பாண்டவர்களும் அரண்மனைக்கு வெளியே பந்தாடி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

விளையாடிக் கொண்டிருந்த பந்து பக்கத்திலிருந்த கிணற்றுள்போய் விழுந்து விட்டது. எல்லாரும் ஓடிப் போய்க் கிணற்றைச் சுற்றி நின்று பார்த்தார்கள். கிணற்று நீரில் பந்து மிதந்து கொண்டிருந்தது. இப் படிப் பார்க்கையில் மூத்த அரசகுமாரனான தருமனின் கைவிரல் மோதிரமும் தவறிக் கிணற்றுக்குள் விழுந்து விட்டது.

மோதிரத்தை விடப் பந்தின் மீதுதான் சிறுவர்களுக்குக் கவனம். அது நீரின் மேல் மிதந்து கொண்டிருக்கிறது, எப்படி எடுப்பது?

அப்போது துரோணர் அந்தப் பக்கமாக வந்தார். அரசகுமாரர் கள் கிணற்றைச் சுற்றி நிற்பதைப் பார்த்து விட்டுத் தாமும் போய்ப் பார்த்தார்.

''விளையாடிக் கொண்டிருந்த பந்து விழுந்து விட்டதா? ஏன்

எடுக்காமலிருக்கிறீர்கள்?'' என்று துரோணர் கேட்டார்.

''தண்ணீர் மிக ஆழத்தில் இருக்கிறது. எப்படி எடுப்பது?'' என்று சிறுவர்கள் திருப்பிக் கேட்டார்கள்.

''நான் எடுத்துத் தருகிறேன்'' என்று கூறிய துரோணர், பக்கத்திலிருந்த ஒரு புல்லை எடுத்துத் தாம் கற்றிருந்த மந்திரங்களில் ஒன்றைச் சொல்லி அதைப் பந்தை நோக்கி விட்டார். அது நேராகப் போய் பந்தைத் தொட்டுக் கொண்டு நின்றது. அப்படியே மேலும் ஒரு புல்லை எடுத்து விட்டார். அது முந்திய புல்லைத் தொட்டு நின்றது. இப்படியே ஒன்றன் பின் ஒன்றாகப் புற்களை விட்டுக் கடைசியாக விட்ட புல் மேலே கைக்கு எட்டக் கூடிய விதமாக வந்ததும் அதைப் பிடித்து இழுக்கப் பந்து வெளியே வந்தது.

சிறுவர்களுக்குப் பெரிய ஆச்சரியமும் மகிழ்ச்சியும்! ''ஓ, ஓ!'' என்று கூச்சலிட்டார்கள்.

தெளிந்து போயிருந்த கிணற்று நீரினூடே ஓர் அழகிய மோதிரம் மின்னிக் கொண்டிருப்பதைத் துரோணர் கண்டார். ''அது யாருடைய மோதிரம்?'' என்று கேட்ட துரோணர், ஓர் அம்பை எய்து அந்த மோதிரத்தையும் எடுத்துக் கொடுத்தார்.

மிகுந்த வியப்படைந்த அரசகுமாரர்கள் துரோணரை மிகுந்த பயபக்தியுடன் நோக்கி, ''ஐயா, நீங்கள் யார்?'' என்று கேட்டார்கள். துரோணர் புன்முறுவலுடன் ''உங்கள் வீட்டுப் பெரியவர் பீஷ்மரிடம் நான் யாரென்று கேளுங்கள். அவர் சொல்வார்'' என்று கூறி விட்டுப் போய்விட்டார்.

அரசகுமாரர்கள் பீஷ்மரிடம் போய்ச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன குறிப்பிலிருந்து அந்தத் திறமைசாலி துரோணர்தான் என்ற உண்மையை அறிந்து கொண்ட பீஷ்மர், அவரை அரண்மனைக்கு அழைப்பித்தார். அவருக்கு வேண்டிய மரியாதைகளெல்லாம் செய்து ''இந்த அரசகுமாரர்கள் வில்வித்தையும், யுத்தப் பயிற்சியும் பெற வேண்டிய வயதை அடைந்து விட்டார்கள். இவர்களுக்கேற்ற குருவைத் தேடிக்கொண்டிருந்தேன். தக்க சமயத்தில் நீங்கள் வந்திருக்கிறீர்கள். உங்களை விட மேலான ஒருவர் இவர்களுக்குக் குருவாகக் கிடைக்கமாட்டார்கள். ஐயா, எனது வேண்டுகோளை ஏற்று, நீங்களே இவர்களுக்குக் குருவாக இருந்து எல்லா வித்தைகளையும் கற்பிக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

துரோணரும் மகிழ்ச்சியோடு அந்தப் பணியை ஏற்றுக் கொண்டார்.

கௌரவர்களும், பாண்டவர்களும் மிகுந்த ஊக்கத்தோடு துரோணரிடம் வித்தைகளைக் கற்று வந்தார்கள்.

கௌரவர்களில் மூத்தவனான துரியோதனன் சிறந்த வில்லாளியாகவும், கதாயுதம் கொண்டு போர் செய்வது, ஆயுதங்களின்றி மற்போர் புரிவது ஆகியவற்றில் வல்லவனாகவும் இருந்தான்.

ஆனால் பாண்டவர்களில் ஒருவனான வீமன், கதையினால் அடிப்பதிலும், மற்போரிலும் மிகவும் சிறந்தவனாக இருந்தான். வீமனின் தம்பியாகிய அர்ச்சுனன் வில்வித்தையில் மற்றெல்லாரையும் விட மிகச் சிறந்து விளங்கினான்.

வீமன் சிறுவனாக இருந்த காலம் தொட்டே மற்றெல்லாச் சிறுவர்களையும் விடப் பெரிய உடம்பும் அதற்கேற்ப வலிமையும் கொண்டிருந்தான். மற்றவர்கள் உண்பதை விடப் பல மடங்கு உணவும் அவனுக்குத் தேவையாக இருந்தது.

அவனுடைய உடல் வலிமையைக் கண்டு மற்றச் சிறுவர்கள் அஞ்சினார்கள். தனது பெரியப்பா பிள்ளைகளான கௌரவர்களோடு வீமனுக்குப் பெரிதும் ஒத்துப் போவதில்லை. அடிக்கடி அவர்களை அடித்தும் உதைத்தும் தனது வலிமையைக் காட்டுவான்.

தனது சகோதரர்கள் வீமனிடம் அடிபடுவதைக் கண்டு மூத்தவனாகிய துரியோதனனுக்கு ஆத்திரம் பொங்கும். ஆனாலும் அவன் வீமனுடன் மோத முடியாமலிருந்தான். மனதுக்குள்ளே வீமனிடமும், அவனுடைய உடன் பிறப்புகளான பாண்டவர்களிடமும் துரியோதனனுக்கு மிகுந்த எரிச்சல் உண்டாகி வளர்ந்து வந்தது.

அர்ச்சுனன் வில்வித்தையில் மிகுந்த திறமைசாலியாக இருந்தபடியால் அவனிடம் துரோணருக்கு மிகுந்த அன்பு ஏற்பட்டது. வித்தைகளைச் சொல்லிக் கொடுக்கும் போது அர்ச்சுனனைத் தம் பக்கத்தில் வைத்திருந்து மிகுந்த அக்கறையோடு சொல்லிக் கொடுப்பார். திறமைசாலியான மாணவர்கள் மீது ஆசிரியர்கள் அக்கறை செலுத்துவது உலக வழக்கம்.

இதனால் துரியோதனன், அர்ச்சுனன் மீது பொறாமையும், துரோணரின் மீது கோபமும் கொண்டான். அவர் அர்ச்சுனனுக்கே சிறப்பாக எல்லா வித்தைகளையும் சொல்லிக் கொடுப்பதாகவும், தங்களைக் கவனிப்பதில்லையெனவும் பீஷ்மரிடம் முறையிட்டான்.

இதையறிந்த துரோணர் ஒரு நாள் அரச குமாரர்களை அழைத்

துக் கொண்டு ஆற்றங்கரைக்குப் போனார். அங்கே ஒரு பெரிய ஆல மரத்தின் மேற் கொப்பில் ஒரு குருவி உட்கார்ந்திருந்தது.

துரோணர் அரச குமாரர்களில் ஒருவனை அழைத்து அந்தக் குருவியைக் காட்டி, வில்லை வளைத்து அந்தக் குருவியின் மீது அம்பு எய்வதற்காகக் குறி பார்க்கச் சொன்னார். அவனும் அப்ப டியே குறி பார்த்து அம்பை எய்வதற்காகத் துரோணரின் கட்ட ளையை எதிர் பார்த்து நின்றான்.

துரோணர் கேட்டார்: ''உனக்கு என்ன தெரிகிறது?''

அவன் சொன்னான்: ''எல்லாம் நன்றாகத் தெரிகிறது. அம்பை எய்யவா?''

''குருவி தெரிகிறதா?''

''ஓம், தெரிகிறது!''

''அது அமர்ந்திருக்கும் கிளை தெரிகிறதா?''

''ஓம், தெரிகிறது''

''ஆலமரம் தெரிகிறதா?''

''ஓம், நன்றாகத் தெரிகிறது!''

''சரி, போதும். நீ அம்பை எய்யவேண்டாம்!''

துரோணர் பிறகு துரியோதனனைக் கூப்பிட்டு வில்லை வளைத்து இலக்கு வைக்கச் சொன்னார்.

''துரியோதனா, குருவி தெரிகிறதா?''

''தெரிகிறது!''

''அது இருக்கும் கிளை தெரிகிறதா?''

''இல்லை, குருவி மட்டும் தெரிகிறது!''

''சரி, அம்பை எய்யவேண்டாம். இந்தப் பக்கம் வந்து விடு!''

பிறகு துரோணர் அர்ச்சுனனை அழைத்து அந்தக் குருவிக்கு இலக்கு வைக்கச் சொன்னார்.

அர்ச்சுனன் வில்லை வளைத்து அம்பைத் தொடுத்தான்.

''அர்ச்சுனா! குருவியை நன்றாகப் பார்க்கிறாயா?''

''இல்லை!''

''பிறகு என்ன தெரிகிறது?''

''குருவியின் கழுத்துப் பகுதி மட்டுமே தெரிகிறது!''

''வேறு எதுவும் தெரியவில்லையா?''

''இல்லை''

''சரி, அம்பை விடு!''

அர்ச்சுனனுடைய வில்லிலிருந்து அம்பு புறப்பட்டது. அடுத்த கணம் குருவி நிலத்தில் விழுந்தது!

துரோணர் எல்லோருக்கும் பொதுவாகச் சொன்னார்; ''நான் எல்லாருக்கும் ஒரே மாதிரியாகத்தான் வித்தைகளைக் கற்றுத் தருகிறேன். கற்றுக் கொள்பவர்கள் அவற்றை எவ்விதம் கவனித்துக் கற்றுக் கொள்கிறார்களோ, அந்த அளவுக்குத்தான் பயன் கிடைக்கிறது. கற்றுக் கொள்ளும்போது நாங்கள் எதைக் கற்கிறோமோ அதில் மட்டும்தான் புலனைச் செலுத்த வேண்டும். ஒரே நேரத்தில் பல பொருள்களிலும் கவனம் செலுத்துபவன், எதையுமே கூர்மையாக அறிந்து கொள்ளமாட்டான். நான் குருவிக்கு இலக்கு வைக்கச் சொன்ன போது, துரியோதனன் குருவியை முழுமையாகப் பார்த்தான். அர்ச்சுனனோ தன்னுடைய அம்பு எங்கு பட வேண்டுமோ அந்த இடத்தை மட்டுமே கவனித்தான் — இதுதான் கற்பவர்களிடையே உள்ள வேறுபாடு!''

இதைக் கேட்ட துரியோதனன், அவமானத்தினால், அர்ச்சுனன் மீது மேலும் பொறாமை கொண்டான்.

## 9. அங்க நாட்டு அரசன்

அரச குமாரர்கள் தாங்கள் கற்ற வித்தைகளைப் பொது மக்களுக்குக் காட்டுவதற்காக ஒரு நாள் அஸ்தனாபுரத்தில் ஒரு விழா எடுக்கப்பட்டது.

அரண்மனைக்கு வெளியே ஒரு பரந்த வெளியான இடத்தில் நாட்டு மக்கள் பலரும் — ஆண்களும் பெண்களுமாகப் பெருந் திரளாகக் கூடியிருந்தார்கள்.

அரச குமாரர்கள் தாங்கள் அதுவரை கற்ற வித்தைகளை அந்த இடத்தில் செய்து காட்டிப் பொது மக்களின் முன் தங்கள் திறமைகளை நிரூபித்தார்கள்.

மிகத் திறமையாக வித்தைகள் செய்து காட்டியவர்களைப் பொது மக்கள் ஆரவாரம் செய்தும், கைகொட்டியும், வாழ்த்தொலி எழுப்பியும் உற்சாக மூட்டினார்கள்.

அர்ச்சுனன் தனது வில்லை வளைத்து நாண் ஏற்றிப் பல வித

பயிற்சிகளையும் செய்து காட்டிய போது பொது மக்களின் உற்சாகம் கரைபுரண்டோடியது.

அப்போது, பொது மக்களிடைய இருந்து ஒரு இளைஞன் களத்தில் இறங்கி, அர்ச்சுனனை நோக்கி வந்தான்.

ஓர் அரச குமாரனைப் போன்ற அழகும், உடற்கட்டும், கம்பீர மான தோற்றமும் கொண்டு கையில் வில்லேந்தி வந்த அந்த இளை ஞனை எல்லோரும் வியப்போடு பார்த்தார்கள்.

அவன்தான் கர்ணன்!

பாண்டவர்களின் தாயான குந்திதேவி, கன்னிப் பெண்ணாக இருந்த காலத்தில் சூரியனுடைய துணையோடு ஒரு குழந்தையைப் பெற்ற தையும் ஊராரின் பழிச் சொல்லுக்கு அஞ்சி, அந்தக் குழந்தையைப் பெட்டியில் வைத்து நீரோடையில் விட்டதையும், நீரோடையில் மிதந்து வந்த குழந்தையை ஒரு தேரோட்டி கண்டெடுத்து வீட் டுக்குக் கொண்டு போய், மனைவியிடம் கொடுக்க, இருவரும் அந்தக் குழந்தையை மிகவும் பிரியத்தோடு வளர்த்து வந்ததையும் வாச கர்கள் முன்பே அறிவார்கள்.

கர்ணன் தேரோட்டியின் வீட்டில் வளர்ந்தாலும், அவனுடைய பிறவிக் குணம் அவனை விட்டுப் போகவில்லை. அரச குமாரர்களுக் குரிய ஆர்வத்துடன், அவன் கல்வியிலும், வில்வித்தை முதலிய போர்ப் பயிற்சிகளிலும் நாட்டம் கொள்ளலானான்.

வில்வித்தையில் பரசுராமர் மிகுந்த தேர்ச்சி பெற்றவரென்று அறிந்து அவரிடம் பயில விருப்பம் கொண்டான். விசாரித்ததில், அரச குலத்தையே வெறுப்பவரான பரசுராமர், பிராமணர்களை மட்டுமே தமது பயிலுநர்களாக ஏற்றுக் கொள்வாரென்று தெரிந்தது.

எப்படியும் அவரிடம் வில்வித்தையைப் பயின்றுவிட வேண்டும் என்ற பேராவலால் அவன் ஒரு பொய் சொல்லவும் துணிந்தான். தான் ஓர் ஏழைப் பிராமண இளைஞன் என்று சொல்லிப் பரசுராமரிடம் மாணவனாகச் சேர்ந்து விட்டான்.

கற்கையில் மிகுந்த ஆர்வமும், ஒழுக்கமும் உடையவனாக இருந் ததால் கர்ணனிடமும் பரசுராமருக்கு மிகுந்த விருப்பம் உண்டா யிற்று. எல்லா வித்தைகளையும் அவர் அவனுக்கு மகிழ்ச்சியோடு சொல்லிக் கொடுத்தார்.

ஒரு நாள் பரசுராமர் தமது மாணவனாகிய கர்ணனின் மடியில் தலையை வைத்து நித்திரை செய்து கொண்டிருந்தார். அப்போது ஒரு பெரிய வண்டு எங்கிருந்தோ பறந்து வந்து, கர்ணனுடைய துடையிலமர்ந்து கடிக்கத் தொடங்கிற்று. தனது ஆசிரியரின் நித்திரை குழம்பிப் போகுமென்று நினைத்த கர்ணன், அந்த வண்டை அகற்ற முடியாமலிருந்தான். வண்டு மிகக் கொடியதாக இருந்தது. அது மரத்தைத் துளைப்பதைப்போலக் கர்ணனின் துடையைத் துளைக்கத் தொடங்கிற்று. கர்ணனுடைய துடையிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்து ஓடிற்று. அந்த நேரத்திலும் கூடக் கர்ணன் தனது கால்களைச் சற்றேனும் அசைக்காமலிருந்தான்!

சற்று நேரம் செல்லப் பரசுராமர் நித்திரை கலைந்து எழுந்தார்.

கர்ணனுடைய மடி முழுவதும் இரத்தம் பெருகிக் கிடப்பதைக் கண்டதும் பதறிப் போனார்.

'பளிச்'சென்று அவருக்கு ஒரு சந்தேகம் வந்தது.

''கர்ணா, என்னுடைய மிகச் சிறந்த மாணவனே! நீ ஒரு பிராமணச் சிறுவன் என்றல்லவா சொன்னாய்? ஒரு பிராமணச் சிறுவன் இப்படி இரத்தத்தைப் பார்த்துக் கொண்டு அமைதியாக இருந்திருக்க மாட்டான். உண்மையைச் சொல். நீ யார்?'' என்று கேட்டார் பரசுராமர்.

கர்ணன் உண்மையை ஒப்புக் கொண்டு, தேரோட்டியின் மகனான தான், வில்வித்தையைக் கற்க வேண்டுமென்ற பெருவிருப்பால் பொய் சொல்லி விட்டதாகவும், தன்னை மன்னிக்கும் படியும் கேட்டுக் கொண்டான்.

இவன் தன்னை ஏமாற்றி விட்டானே என்ற ஆத்திரத்தைப் பரசுராமரால் அடக்க முடியவில்லை.

''பொய் சொன்னவனே, நீ பிராமணன் என்று நினைத்து, எனக்குத் தெரிந்த எல்லாவித்தைகளையும் உனக்குச் சொல்லித் தந்து விட்டேன். நீ குருவை ஏமாற்றிய படியால் நீ என்னிடம் கற்றறிந்த பிரமாஸ்திரத்தின் மந்திரத்தைத் தக்க சமயத்தில் மறந்து போகக் கடவாய்!'' என்று பரசுராமர் சாபமிட்டார்.

'பிரமாஸ்திரம்' என்பது மிகவும் சக்தி வாய்ந்த ஓர் அம்பு.

அந்தக் காலத்தில் அம்புகள் யாவும் மந்திர சக்தியினாலேயே தொழிற்பட்டன என்று புராணங்கள் கூறும்.

★

அரசகுமாரர்கள் பயிற்சி நடத்திக் கொண்டிருந்த களத்திலே புதிதாக ஓர் இளைஞன் வில்லும் கையுமாகத் தோன்றி, அர்ச்சுனனிடம் செல்வதைப் பார்த்து எல்லோரும் மிகுந்த வியப்போடு பார்த்தார்கள்.

அர்ச்சுனனின் அருகே சென்ற கர்ணன், ''அர்ச்சுனா, நீ ஏதோ பெரிய வித்தைகளைச் செய்து காட்டியதாக இந்த மக்கள் நினைக்கிறார்கள். நீ செய்தவற்றைவிட இன்னும் பல சிறப்பான வித்தைகளைச் செய்ய என்னால் முடியும்!'' என்றான்.

மக்கள் கூட்டம் அவனுடைய வீரவசனங்களைக் கேட்டு ஆரவாரஞ் செய்து வரவேற்றது.

அர்ச்சுனனுடைய திறமையையும், அதை மக்கள் பாராட்டுவதையும், கண்டு நெஞ்சம் புழுங்கிக் கொண்டிருந்த துரியோதனன், கர்ணனின் துணிச்சலான பேச்சைக் கேட்டுப் பெரிய மகிழ்ச்சி கொண்டான். கர்ணனுடைய தோற்றத்தைப் பார்த்தால், உண்மையிலேயே அவன் சொன்னபடி செய்து காட்டக் கூடியவன் என்று ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. துரியோதனன் கர்ணனின் பக்கத்தே சென்று, அவன் கைகளை அன்போடு பற்றி, ''வீரனே, நீ சொன்னபடி செய்வாயானால், இந்த நாட்டில் உனக்கு எதுவேண்டுமோ அதையெல்லாம் தருவேன்'' என்றான்.

கர்ணனுடைய பேச்சு தன்னைச் சண்டைக்கிழுப்பதாகவும், அவமதிப்பதாகவும் இருப்பதை உணர்ந்த அர்ச்சுனன் மிகுந்த சினம் கொண்டான். ''கர்ணா, ஒரு கூட்டம் நடக்கும் போது, அழைக்கப் படாமல் அதன் மத்தியில் போய் நிற்பவனும், பேசுபவனும் இகழப் படுவான்!'' என்றான் அர்ச்சுனன்.

கர்ணன் சிறிதும் தயக்கமின்றித் தலைநிமிர்ந்து சொன்னான்: ''அர்ச்சுனா, இந்தக் கூட்டம் உனக்கு மட்டும் உரியதல்ல; இது எல்லோருக்கும் பொதுவான கூட்டம்! ... ... சரி, சரி வாய்ப்பேச்சினால் என்ன பயன்? உன்னுடைய வில்லை வளைத்து அம்புகளினாற் பேசு. பதில் சொல்ல நானும் தயார்!'' என்று கையில் அம்பை எடுத்தான்.

இரண்டு வீரர்களுக்கிடையே சண்டை மூழுவதைக் கண்ட மக்களின் உற்சாகம் மிகப் பெரிதாயிற்று. 'ஊரில் சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சி' என்பார்கள். அது மட்டுமல்ல; திரண்டிருந்த மக்கள்

கூட்டம் உலக வழக்கப்படி இரண்டாகப் பிரிந்தது, ஒரு பகுதியினர் கர்ணனுக்காகவும், மறுபகுதி அர்ச்சுனனுக்காகவும் நியாயம் கதைக்கவும், ஆரவாரம் செய்யவும் தொடங்கினர்.

சண்டை மூளப் போவதை உணர்ந்த பெரியவரான கிருபர் பதற்றத்துடன் எழுந்து, கர்ணனைப் பார்த்து "அர்ச்சுனனுடன் சண்டையிடத் தயாராகி விட்ட வீரனே! அர்ச்சுனன் அரச குலமாகிய குரு வம்சத்தில் தோன்றியவன். புகழ் பெற்ற பாண்டு மன்னனின் மகன். நீயும் உன்னுடைய குலப் பெருமையையும் உன்னுடைய பெற்றோர்களின் பெருமையையும், எந்த அரச குலத்தை நீ சார்ந்தவன் என்பதையும் இந்தக் கூட்டத்தினருக்குக் கூறிவிட்டுச் சண்டையைத் தொடங்கலாம். ஒருவனுடைய குலத்தையும், பெருமையையும் தெரிந்து கொள்ளாமல், அரச குமாரர்கள் சமயுத்தம் செய்ய மாட்டார்கள்" என்று சொன்னார்.

இதைக் கேட்ட கர்ணன் தலை குனிந்தான். அவமானத்தால் அவன் முகம் வாடிச் சோர்ந்தது.

இதைக் கண்ட துரியோதனன் துள்ளி எழுந்தான்.

"இங்கே கூடியிருக்கும் அனைவரும் அறியச் சொல்லுகிறேன். கர்ணன் ஓர் அரசனல்ல என்று யாரும் அவமதிக்க வேண்டாம். இன்றே, இந்தக் கணமே கர்ணனை அங்க நாட்டின் அரசனாகத் தெரியப்படுத்துகிறேன்!" என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறிய துரியோதனன், உடனடியாகவே, தனது தந்தையாகிய திருதராட்டிரனிடமும், பெரியவரான பீஷ்மரிடமும் அநுமதி பெற்றுச் செய்ய வேண்டிய விதிமுறைப்படி சடங்குகளைச் செய்து கர்ணனை அங்க நாட்டின் அரசனாக முடிசூட்டி வைத்தான்.

கூட்டத்தோடு கூட்டமாக நின்று கர்ணனைத் தன் மகனே எனக் கண்டு, எல்லாவற்றையும் நடுங்கும் மனத்தோடு பார்த்துக் கொண்டு நின்ற குந்தி, ஒருவித மகிழ்ச்சியினாலும், பயத்தினாலும் மூர்ச்சையாகி விழுந்தாள். உடனே கிருபர் சில பெண்களை அனுப்பிக் குந்தியைத் தூக்கிச் செல்லும்படி செய்தார்.

அந்தப் பெரிய கூட்டத்தில் கர்ணனை வளர்த்த தந்தையான தேரோட்டியும் இருந்தான். தனது மகன், அங்க நாட்டின் அரசனாக முடி சூட்டப்பட்டதைக் கண்ட அந்தக் கிழவன், பெருமகிழ்ச்சியினால் கண்களில் நீர் ததும்பக் கர்ணனின் பக்கத்தே வந்தான்.

தனது பக்கத்தே வந்த தனது தந்தையைக் கண்டதும், உடனே மிகுந்த மரியாதையுடன் அந்த வயோதிபரின் காலடியில் வீழ்ந்து வணங்கித் தன்னை வாழ்த்தும்படி பணிவோடு நின்றான் கர்ணன்.

தேரோட்டி, பேச வாயெழாமல், மிகுந்த பெருமிதத்தோடு, கர்ணனை அணைத்துக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான்.

இதைப் பார்த்த வீமன, மிகவும் கேலியாக நகைத்துக் கர்ணனைப் பார்த்து ''தேரோட்டியின் மகனே! உன்னுடைய கையிலுள்ள வில்லைக் கீழே போடு! அது அரசகுலத்தவர்களுக்குரியது. தேரோட்டி மகனான நீ, உன் குலத்துக்கேற்ப குதிரைச் சவுக்கைக் கையிலே எடுத்துக் கொள். அர்ச்சுனனோடு சமமாகச் சண்டை செய்ய நீ தகுதி வாய்ந்தவனல்ல!'' என்று மேலும் பரிகாசம் செய்து நகைத்தான்.

அன்றைய நிகழ்ச்சிகளினால் குருகுலத்தவர்களான பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கு மிடையே மேலும் பகைமை அதிகரித்தது.

துரியோதனனுக்கு மிகச் சிறந்த நண்பன் கிடைத்தான்.

கர்ணனுக்கு உயிரினுமினிய ஒரு தோழன் கிடைத்தான்.

பாரதக் கதையில் கர்ணனுக்கும் துரியோதனனுக்குமிடையே இருந்த நட்பு மிகவும் உயர்வாகப் போற்றிக் கூறப்படுகிறது.

## 10. அரக்கு மாளிகை

அரசகுமாரர்களுக்கு ஆயுதப் பயிற்சி முடிந்ததும் குருவான துரோணருக்குக் குருதட்சணை கொடுக்கும் சந்தர்ப்பம் வந்தது.

துரோணர் துருபதன் தனக்குச் செய்த அவமானத்தை மறந்து விடாமல் மனதிலே பதித்து வைத்திருந்தார்.

தனது அவமானத்தைத் துடைக்க விரும்பிய துரோணர் இதுவே சமயமென்று ''அர்ச்சுனா, எனக்கு நீ குருதட்சணை தர விரும்பினால் என்னுடைய விருப்பத்தை நிறைவேற்று. பாஞ்சால நாட்டு மன்னனான துருபதனை உயிரோடு பிடித்து வந்து என்முன் நிறுத்து!' என்று சொன்னார்.

''இவ்வளவுதானே?'' என்று கூறிய அர்ச்சுனன், பாஞ்சால நாடு சென்று, துருபதனுடன் சண்டையிட்டு வென்று, அவனைக் கொல்லா

மல், உயிருடன் பிடித்துக் கொண்டு வந்து துரோணர் முன்னிலை யில் விட்டான்.

துரோணர் மனம் நிறைந்த மகிழ்வுடன், தலை குனிந்து நின்ற துருபதனைப் பார்த்து ஒரு வெற்றிப் புன்னகை செய்தார். பிறகு, ''துருபதமன்னனே, உனது உயிருக்கு நான் ஏதும் தீங்கு செய்வே னென்று பயப்படாதே. நீ என்னோடு சிறு வயதில் கல்விகற்றபோது உனது அரசாட்சியில் பாதியைத் தருவதாகச் சொன்னாய். பிறகு, நீ அரசனானவுடன் நான் உன்னிடம் 'நண்பன்' என்று நினைத்து வந்தபோது, 'ஓர் அரசன் மட்டுமே இன்னோர் அரசனுடன் நண்ப னாக இருக்க முடியும்' என்று எனக்கு நியாயம் போதித்து என்னை அவமதித்தாய். ஆயினும் மன்னனே, நான் உன்னுடைய நண்பனா கவே இருக்க விரும்புகிறேன். அதனால், இப்போது எனக்குச் சொந் தமாகிவிட்ட பாஞ்சால நாட்டின் அரசுரிமையை உனக்கே தருகி றேன். இப்போது நாங்கள் இருவரும் சமமானவர்கள். அதனால் நண்பர்களாயிருக்கத் தகுதியுடையவர்களல்லவா?... நீ பாஞ்சாலம் சென்று முன்போல் ஆட்சியை நடத்து!'' என்று தன்னுடைய சொற் களால் துருபதனுடைய மனத்தில் அடித்து, அவனை பெருங்காயத் துக்குள்ளாக்கினார்.

துருபதனுடைய கர்வத்தைத் தாம் அடக்கி விட்டதாகத் துரோ ணர் நினைத்தார். ஆனால் கோபமும் வெறுப்பும் பழிக்குப் பழி வாங் குவதனால் ஒருபோதும் தீர்ந்துவிடுவதில்லை. மாறாக அது வளரவே செய்யும் என்பதைத் துரோணர் மறந்து போனார்.

வெட்கத்தினால் மனம் வெந்துபோன துருபதன், கடுமையான தவமிருந்து, தன்னை வெற்றி கொண்ட அர்ச்சுனனுக்கு மாலையிட ஒரு மகளையும், தன்னை அவமதித்த துரோணரைக் கொல்ல ஒரு மகனையும் பெற்றெடுத்தான்.

அந்த மகள்தான் திரௌபதி.

அந்த மகனே திருஷ்டத்துய்மன்.

★

பாண்டவர்களும், கௌரவர்களும் ஒரே மாளிகையில் வாழ்ந்து, உண்டுடுத்துக் கல்வி கற்று வந்தபோதிலும், மனத்துக்குள் பகை கொண்டே வாழ்ந்து வந்தார்கள்.

வீமனுடைய தேகவலுவும், அர்ச்சுனனுடைய வில்லாண்மையும்

துரியோதனனிடம் மிகுந்த பொறாமையை வளர்த்தன.

''திருதராட்டிரன் பிறவிக் குருடனாக இருந்த படியால் முறைப் படி முடி சூடுவதற்கு அவன் தகுதியற்றவன். மிகச் சிறந்த முறையில் ஆட்சி நடத்தி வந்த பாண்டு ஆட்சியைக் கைவிட்டுக் காட்டுக்குப் போனதுமன்றி, இப்போது இறந்தும் போனான். அரசுரிமை முறை யின்படி பாண்டுவின் மூத்த குமாரனாகிய தருமனே முடி சூடவேண் டியவன். பீஷ்மர் சத்தியம் தவறமாட்டார். அவர் மணம் முடிக்கமாட் டார். அவருக்குப் புத்திரனும் பிறக்கமாட்டான். எப்படியும் தருமனே முடிசூடப்படவேண்டியவன். திருதராட்டிரன் முறைகேடாக, நாட்டின் ஆட்சியைத் தன்னிடம் வைத்திருக்கிறான். தருமன் அரசனானால், மிக நல்ல முறையில் ஆட்சியை நடத்துவான். நாடு செழிக்கும்'' என்ற மாதிரியெல்லாம் நாட்டு மக்கள் பேசத் தொடங்கினார்கள்.

துரியோதனன் மனத்தில் ஓர் அச்சமும் குடிகொள்ளத் தொடங் கிற்று. தந்தைக்குப்பிறகு தானே அரசனாவான் என்ற நம்பிக்கைக் கும் கேடு விளையுமோ என்று அவன் அஞ்சினான்.

பாண்டவர்களை இரகசியமாகக் கொன்று விடுவதற்கு அவன் பலமுறையும் முயன்றான். அவனுடைய சதித்திட்டங்கள் விதுரர் வாயிலாகப் பாண்டவர்களுக்குத் தெரிந்து போகவே, அவர்கள் அந் தச் சதித்திட்டங்களுக்கு ஆளாகாமல் தப்பிக் கொண்டார்கள்.

பாண்டவர்களால் தனக்கும் தனது சகோதரர்களுக்கும் மிகுந்த கேடு உண்டாகுமென்றும், தனது அரசுரிமைக்கே பங்கம் ஏற்படக் கூடுமென்றும், அவர்களை எப்படியாவது நாட்டை விட்டுத் துரத்தி விடவேண்டுமென்றும் துரியோதனன் தனது தந்தையாகிய திருதராட் டிரனிடம் சமயம் பார்த்துப் பக்குவமாகச் சொன்னான்.

திருதராட்டிரன் குருடனாக இருந்த போதும் அறநூல்களை யெல்லாம் கற்ற கல்விமான். தனது தம்பியின் பிள்ளைகளான பாண்டவர்களிடம் அன்பும், பிரியமும் கொண்டவன். ஆயினும் தனது சொந்த மகனின் தவறான கருத்துக்களைக் கண்டித்து அடக்கும் மனவலிமையற்றவனாக இருந்தான். மகனின் மனம் புண்பட்டு விடுமோ என அஞ்சினான்.

''தந்தையே, பாண்டவர்களை எப்படியாவது இந்த நகரத்திலி ருந்து தொலை தூரத்துக்கு அனுப்பி விடுங்கள். அவர்கள் மிகுந்த பலசாலிகளாக இருக்கிறார்கள். அவர்களால் நீங்கள் பெற்ற உங்கள்

பிள்ளைகளுக்கு நிச்சயமாக ஆபத்து வந்து சேருமென்பதில் ஐய மில்லை'' என்றான் துரியோதனன்.

மகனுக்காக இரங்கிய திருதராட்டிரன், ''மகனே, நீ சொல்வது சரி என்றே வைத்துக் கொண்டாலும், தருமன் நீதி தவறாதவன். மக்கள் எல்லாரும் அவனிடம் மிகுந்த அன்பு கொண்டிருக்கிறார்கள். மக்கள் மட்டுமல்ல, அமைச்சர்களும், சேனைத்தலைவர்களும் கூட அவன் மீது மிகுந்த மதிப்பு வைத்திருக்கிறார்கள். அவனை நாங்கள் எப்படி எதிர்க்க முடியும்? அப்படி அவர்களுக்கு நாங்கள் ஏதும் தீங்கு செய்ய முனைந்தால் அது எமக்கே ஆபத்தாக முடியலாம். ஆகை யால் நீ அமைதியாக இரு. நீதிமானாகிய தருமன் உனக்குக் கேடு செய்ய மாட்டான்!'' என்று ஆறுதல் கூறினான்.

துரியோதனன் விடவில்லை. ''தந்தையே, நீங்கள் அவ்விதமாக அச்சம் கொள்ளவேண்டியதில்லை. பீஷ்மர் எந்தக் கட்சியிலும் சேர மாட்டார். துரோணரின் மகனாகிய அசுவத்தாமன் எனது நண் பன். அவன் என்பக்கமே இருப்பான். அதனால் துரோணரும் தமது மகனுக்கு மாறாகப் போகமாட்டார். விதுரனுடைய மனம் பாண்ட வர் பக்கமேயிருந்தாலும், அதை அவர் வெளிப்படையாகக் காட்டி எங் களை எதிர்க்கத் துணியார். பெரிய வீரனாகிய கர்ணன் என் உயிர்த் தோழன். மந்திரிகள் பலருக்கும் படையதிகாரிகள் பலருக்கும் நான் தகுந்த வெகுமதிகள் கொடுத்து என் பக்கமாக இருக்கும்படி செய்திருக் கிறேன். ஆகையால் நீங்கள் பாண்டவர்களைக் கண்டு அச்சப்பட வேண்டியதில்லை. ஊரார் பழி சொல்லாமல் பாண்டவர்களை வார ணாவத நகரத்துக்கு ஏதாவது காரணம் சொல்லி அனுப்பிவிடுங்கள். தலைநகரை விட்டு அவர்கள் நீங்கி விட்டால் அவர்களுடைய செல் வாக்கும் மங்கிப் போகும். எங்களுக்கும் அச்சமில்லை. வாரணாவத நகரத்தில் சிவபெருமானுக்குப் பெரிய விழா நடக்கப்போகிறதல்லவா, அதைப் பார்த்து வரும்படி பாண்டவர்களை அங்கே அனுப்பி விட லாம். பிறகு ஏதாவது காரணம் கூறி அவர்கள் அங்கேயே இருப்ப தற்கான ஒழுங்கு செய்து கொள்ளலாம்'' என்று துரியோதனன் தந் தையின் மனத்தைக் கரைத்தான். தனக்கு வேண்டிய வேறு சிலர் மூலமும் சொல்வித்தான்.

கடைசியில் திருதராட்டிரன் மனம் மாறினான். தருமனை அழைத்து, வாரணாவதத்தில் நடைபெறப்போகும் விழாவைப்பற்றிப் பெரிதாக எடுத்துச் சொல்லி, அரச பிரதிநிதிகளாகப் பாண்டவர்கள்

அந்த நகரத்துக்குச் சென்று சில காலம் தங்கியிருந்து விழாவைச் சிறப்பித்து அந்த நகரத்து மக்களையும் மகிழ்வித்து வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டான்.

தருமனும் சம்மதித்தான். பாண்டவர்கள் தமது தாயாகிய குந்தி தேவியுடன் வாரணாவதம் செல்வதாகத் தீர்மானிக்கப்பட்டு அதற் கேற்ற ஒழுங்குகள் நடைபெறலாயின.

துரியோதனனுக்கு அளவற்ற மகிழ்ச்சி.

துரியோதனனும், சகுனியும், கர்ணனும், துச்சாதனனும் தங்களுக்கு ஆதரவான புரோசனன் என்ற அமைச்சனையும் அழைத்து ஒரு சதித்திட்டம் தீட்டினார்கள். பாண்டவர்களை வாரணாவத நகரத்தில் வைத்தே அழித்து விடுவதென்று திட்டம்.

அந்தத் திட்டத்தின் படி புரோசனன் என்ற அமைச்சன், பாண்டவர்கள் அங்கே தங்குவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்யும் காரணத்தோடு உடனடியாக வாரணாவத நகரத்துக்குச் சென்றான்.

அங்கே, இரகசியமாகத் தேர்ந்தெடுத்த ஆட்களைக் கொண்டு ஒரு மாளிகையைப் பாண்டவர்கள் தங்குவதற்கென்று கட்டுவித்தான். சணல், குங்கிலியம், மெழுகு, நெய், எண்ணெய், கொழுப்பு, அரக்கு இவைகளோடு மண்ணைக் கலந்து இலகுவாகத் தீப்பிடிக்கக் கூடிய முறையில் அந்த மாளிகை அமைக்கப்பட்டது. பாரதக் கதையில் அந்த மாளிகை ''அரக்கு மாளிகை'' என்று குறிப்பிடப்படுகிறது.

அரக்கு மாளிகையில் பாண்டவர்கள் தங்கியிருக்கும் காலத்தில் ஒருநாள் இரவு நேரத்தில், பாண்டவர்கள் நித்திரையாயிருக்கும் போது, மாளிகைக்குத் தீ வைத்து விடுவதென்றும், பாண்டவர்கள் அனைவரும் கூண்டோடு கைலாசம் போய் விடுவார்களென்றும், அந்தத் தீச்சம்பவம் தற்செயலாக நடந்து விட்டதென்று மக்கள் நம்புவார்களென்றும் துரியோதனனின் கூட்டம் எதிர்பார்த்தது.

பாண்டவர்களும், குந்திதேவியும் வாரணாவதத்துக்குப் புறப்படு முன், அரண்மனையிலிருந்தவர்களிடம் விடைபெற்றுக் கொண்டார்கள். அவர்கள் விதுரனிடம் விடை பெற்ற போது, அரண்மனைக்குள் நடந்த சதித்திட்டத்தை ஒரு விதமாக அறிந்து கொண்ட விதுரன் தருமரைப் பார்த்து, ''தருமா, வல்லவனான எதிரியின் எண்ணங்களை யூகித்து அறிந்த மன்னனே ஆபத்தைத் தாண்டுவான், ஆயுதங்களிலே

உலோகத்தால் செய்யப்படாத கொடிய ஆயுதங்களும் உண்டு. குளிரைப்போக்குவதும், காடுகளை அழிப்பதுமான ஒரு பொருள், வளைக்குள் பதுங்கியிருக்கும் எலியைத் தீண்டுவதில்லை ... ... எல்லாவற்றையும் உனது புத்திக் கூர்மையால் அறிந்து நடந்து கொள்வாய்!'' என்றான்.

தருமனும் விதுரனுடைய மறைமுகமான எச்சரிக்கையை மனம் கொண்டவனாய் 'அப்படியே நடப்பேன்' என்று விதுரனுக்குக் கூறியதும், பாண்டவர்கள் வாரணாவதம் சென்றார்கள்.

வாரணாவத நகரத்து மக்கள், புகழ்பெற்ற பாண்டவ அரசகுமாரர்கள் தங்கள் நகரத்துக்கு வந்திருப்பதை அறிந்ததும் பெருமகிழ்ச்சி கொண்டு, அவர்களுக்குப் பெரிய வரவேற்பு நடத்தினார்கள்.

பாண்டவர்களுக்காக அமைக்கப்பட்ட மாளிகை எல்லா வசதிகளும் கொண்டதாகவும், மிக அழகாகவும். அமைந்திருந்தது.

பாண்டவர்கள் புதிய மாளிகையில் தங்கிய சில நாட்களிலேயே, அஸ்தனாபுரத்திலிருந்து வந்த ஓர் ஆள், தருமனைத் தனியே சந்தித்துத் தன்னை விதுரர் அனுப்பியதாகவும், சுரங்கம் அமைப்பதில் தான் வல்லவனென்றும் தெரிவித்தான்.

சதித்திட்டத்தைக் கொண்டு நடத்தியவனான புரோசனன் என்ற அமைச்சன், அரக்கு மாளிகையின் முன்பக்கத்திலுள்ள ஓர் அறையில் வசித்து வந்தான். சில நாட்கள் செல்ல, சமயமறிந்து மாளிகைக்குத் தீ மூட்டுவதே அவனுடைய திட்டம்.

புரோசனனுக்குத் தெரியாமலே மாளிகையின் பின் பகுதியிலிருந்து ஒரு சுரங்கம் அமைக்கும் வேலை தொடங்கிற்று.

பகலில் பாண்டவர்கள், பக்கத்திலுள்ள காடுகளில் வேட்டையாடுவது போலச் சென்று சுற்றுப்புறங்களை அவதானித்து வந்தார்கள்.

இரவிரவாகச் சுரங்கம் அமைக்கும் வேலை நடைபெற்றது.

மாளிகையின் மதில்களையும், அகழிகளையும் தாண்டி நகருக்கு வெளியே ஆளரவமற்ற ஓரிடத்தில் அந்தச் சுரங்கப் பாதை மீண்டும் பூமிக்கு வெளியே வந்தது.

அந்த வாயிலைச் செடி கொடிகளால் மறைத்து வைத்தார்கள்.

சுமார் ஓராண்டு காலங்கழிந்து விட்டது. இனி, தான் வந்த காரியத்தை முடிக்கலாம். மக்கள் சந்தேகப்பட மாட்டார்கள் என்று

கருதிய புரோசனன், மாளிகைக்குத் தீ வைக்கச் சமயம் பார்த்திருந்தான்.

பாண்டவர்கள் முந்திக் கொண்டார்கள். ஒருநாளிரவு, தாயையும் சகோதரர்களையும் சுரங்க வழியில் இறக்கி விட்டு, வீமன் மாளிகையின் பல பகுதிகளிலும் தீயை வைத்தான்.

தீ மிக எளிதாகப் பற்றிக் கொண்டது. மாளிகை முழுவதும் நன்றாக எரிந்து சாம்பலாயிற்று. முன்னறையிலிருந்த புரோசனனும் அதற்குள் அகப்பட்டு மாண்டு போனான்.

நகரத்து மக்கள் கூடிக் கவலை கொண்டு அழுதார்கள். பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையே இருந்த பகைமையை அறிந்திருந்த சிலர், 'இது துரியோதனன் செய்வித்த சதியாகத்தானிருக்கும்!' என்று சொல்லிக் கோபம் கொண்டார்கள்.

சில அதிகாரிகள் அஸ்தனாபுரத்துக்குச் செய்தி சொல்லி அனுப்பினார்கள்.

செய்தி அறிந்த திருதராட்டிரனுக்கு ஒரு புறம் மகிழ்ச்சியாக இருந்தது. மறுபுறம் மிகுந்த கவலையும் கொண்டான்.

அந்தத் தீ விபத்திலிருந்து பாண்டவர்கள் நிச்சயம் தப்பியிருப்பார்கள் என்பதை அறிந்தவனாதலால், விதுரன் நிம்மதியாக இருந்தான். பீஷ்மர் கவலைப் படுவதைக் கண்டு பொறாத விதுரன் அவருக்கும் உண்மையைச் சொல்லித் தேற்றினான்.

பிறகு பாண்டவர்களின் உறவினர்கள் அனைவரும், தங்கள் ஆபரணங்களையும் அலங்காரங்களையும் களைந்து, கங்கையில் நீராடித் துக்கம் கொண்டாடினார்கள்.

## 11. இடும்பி

**ந**டுச் சாம நேரத்தில் சுரங்கப் பாதையில் இறங்கிய பாண்டவர்களும் குந்தியும் சுரங்கத்தின் சுவர்களைத் தடவிக் கொண்டே வழி பிடித்துச் சென்றார்கள். வீமன் முன்னுக்குச் சென்று சுரங்க வாயிலின் மேற் போட்டு மறைத்திருந்த செடி கொடிகளை அப்புறப்படுத்தி விட்டான். எல்லாரும் சுரங்கப் பாதைக்கு வெளியே வந்ததும் பெருமூச்சு விட்டவர்களாய்ச் சுற்றும் முற்றும் பார்த்தார்கள். தூரத்தில் அவர்கள் தங்கியிருந்த மாளிகை தீப்பிடித்து எரிவது தெரிந்தது.

பாண்டவர்கள் முன்பே வேட்டையாடும் பாவனையில் அந்தப் பகுதிகளுக்கெல்லாம் வந்து இடங்களை அறிந்து வைத்திருந்த படியால், தாமதியாது, அந்த இருட்டிலும் காட்டுப்பாதை வழியாக, முடிந்தவரை வேகமாக நடந்து சென்றார்கள். சிறிது நேரத்திலேயே எல்லோரும் களைத்துப் போனார்கள். குந்தியால் நடக்கவே முடியவில்லை. வீமன் தாயாரைத் தனது தோளில் தூக்கிச் சுமந்து கொண்டும், இளையவர்களான நகுலனையும், சகாதேவனையும் அணைத்துக் கொண்டும் நடந்தான். களைப்பில்லாமலிருந்த ஒரே ஆள் வீமன் மட்டுமே.

காட்டில் வெகுதூரம் வந்த பிறகு ஒரு மரத்தடியில் களைப்பாறுவதற்காக, எல்லோரும் தங்கினார்கள். குந்திதேவி நிலத்தில் படுத்துக் களைப்பினாற் கண்களை மூடிக் கொண்டாள்.

களைப்புற்றவர்களுக்குத் தண்ணீர் தேடி எடுத்து வருவதற்காக, மற்றவர்களை அந்த மரத்தடியில் விட்டு, விட்டு வீமன் காட்டுக்குள்ளே போனான்.

அதே சமயம் —

அந்தக் காட்டில் வாழ்ந்த 'இடும்பி' என்ற அரக்கி, இரை தேடி அலைந்தவள் வீமனைக் கண்டாள். முதலில் யாரோ ஒரு மனிதன் என்று இனங்கண்டு, அந்த மனிதனையே இன்று உணவாக்கிக் கொள்ளலாமென்ற நினைப்புடன் கிட்ட வந்தாள். வீமனை நன்றாகப் பார்த்தாள்.

வீமனுடைய கட்டான உடலையும் அழகான தோற்றத்தையும் கண்ட இடும்பிக்கு, வயிற்றுப் பசிபோய், இப்போது வேறு 'பசி' வந்து விட்டது! தன்னை மனைவியாக ஏற்றுக் கொள்ளும்படி அவள் வீமனிடம் வேண்டினாள்.

இடும்பிக்கு ஓர் அண்ணன் இருந்தான். அவனுடைய பெயர் இடும்பன். வெளியே போன தங்கையைக் காணவில்லையே என்று தங்கையைத் தேடிக்கொண்டு அங்கே வந்தான்.

அங்கே கண்ட காட்சி இடும்பனுக்குப் பெரிய கோபத்தை உண்டாக்கிற்று.

அந்தக் காட்டின் அதிபதியாகிய தன்னுடைய தங்கை, கேவலம் ஒரு மானிடனிடம் காதல் கொண்டு பணிந்து, கெஞ்சுவதை அவனால் பொறுக்க முடியவில்லை.

மறுபேச்சின்றி, வீமனை அடித்துக் கொன்று தின்று விடும் நோக்குடன் அவன் வீமனுடன் மோதினான்.

வீமன் இதற்கெல்லாம் பயந்தவனல்லன். வலிய வந்த சண்டையை அவன் மகிழ்ச்சியுடன் வரவேற்றான்.

பெரிய சண்டை நடந்தது!

அந்தச் சண்டையால் ஏற்பட்ட சத்தத்தில் சற்றுத் தூரத்தில் படுத்துக் களைப்பாறிக் கொண்டிருந்த பாண்டவர்களும் குந்திதேவியும் எழுந்து, அந்த இடத்துக்கு ஓடி வந்தார்கள்.

அவர்கள் வந்தபோது, வீமன் இடும்பனைக் கொன்று விட்டு வெற்றி வீரனாக நிமிர்ந்தான்!

எல்லோரும் வீமனை வாழ்த்திப் புகழ்ந்து பாராட்டிக் கொண்டிருக்க, இடும்பி, தனது தமையனின் இறப்பையும் பொருட்படுத்தாமல் வீமனிடம் வந்து தனது காதல் வேண்டுகோளைத் தொடர்ந்தாள்.

அவள் மேல் அநுதாபம் கொண்ட குந்தி, அவளை ஏற்றுக் கொள்ளும்படி வீமனிடம் சொல்ல, வீமனும் ஏற்றுக் கொண்டான்.

இடும்பியையும் அழைத்துக் கொண்டு, பாண்டவர்களும் குந்திதேவியும் மேலும் சிறிது தூரம் நடந்த பின், வழியில் ஒரு முனிவரின் குடிசைக்குச் சமீபமாகச் சில காலம் தங்கியிருந்தார்கள்.

அங்கே தங்கியிருந்த காலத்தில் இடும்பிக்கு ஒரு பிள்ளை பிறந்தது.

அந்தப் பிள்ளைதான் கடோற்கசன்! இவன் பின்னால் பாரதப் போர் நடந்தபோது மீண்டும் கதையில் வருகிறான்.

சிறிது காலம் செல்லப் பாண்டவர்களும் குந்திதேவியும் ஏகசக்கர நகரம் செல்வதற்கு புறப்பட்டார்கள்.

இடும்பி, தன்னுடைய இடும்பவனத்தைக் கவனிக்க யாருமில்லாததால், தான் அங்கே போக விரும்பினாள். பாண்டவர்களும் அதுவே நல்லதென்று அவளையும், குழந்தை கடோற்கசனையும் இடும்பவனஞ் செல்ல விட்டுவிட்டுத், தங்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள்,

வழியில் வியாசமுனிவர் அவர்களைச் சந்தித்தார். அவர் சொல்லிய புத்திமதியின்படி, அவர்கள் பிராமணவேடம் பூண்டு ஏக சக்கர நகரத்துக்குப் போனார்கள். அங்கே ஒரு பிராமணன் வீட்டில் தங்குவதற்கு இடங்கேட்டுப் பெற்றுக் கொண்டு தங்கினார்கள்.

அந்தக் காலத்தில், பிராமணப் பிரமச்சாரிகள் செய்வது போலப் பாண்டவர்கள் வீடு வீடாகச் சென்று பிச்சை எடுத்து வந்து தாயாரிடம் கொடுப்பார்கள். குந்திதேவி கிடைத்த உணவை ஒன்று சேர்த்து அதை இரண்டாகப் பகிர்ந்து ஒரு பாதியை வீமனிடம் கொடுப்பாள். மறுபாதியை மற்ற ஐவருமாக உண்பார்கள். வீமனுக்குப் பெருந்தீனி தேவையாக இருந்தது.

## 12. பகாசுரன்

ஏகசக்கர நகரத்துப் பிராமணனது வீட்டில் ஒரு சிறு பகுதியிற் பாண்டவர்களும் குந்தியும் வசித்து வந்தார்கள். வீட்டின் பெரும் பகுதியில், வீட்டுக்குச் சொந்தக் காரனாகிய பிராமணனும் அவன் மனைவியும், அவர்களுடைய சிறு பிள்ளைகளான ஒரு மகனும், மகளும் வசித்து வந்தார்கள்.

ஒருநாள் வீட்டுக்காரப் பிராமணன் வாழ்ந்த பகுதியிலிருந்து பெரும் அழுகுரல் கேட்டது. அதைக் கேட்ட குந்திதேவி உடனே அந்தப் பக்கம் விரைந்து சென்றாள். அவள் வீட்டு வாயிலை அண்மிய போது உள்ளிருந்து பேச்சுக் குரல் கேட்டது. வீட்டுக்காரப் பிராமணன் சொல்லுகிறான்: பெண்ணே, நீ எவ்வளவுதான் சொன்னாலும் உன்னை அந்த அரக்கனிடம் பலியாக அனுப்பச் சம்மதியேன். வாழ்நாள் முழுவதும் உன்னைக் காப்பேன் என்று வாக்குப் பண்ணி, உன்னைத் திருமணம் செய்து கொண்டேன். இப்போது நானே அரக்கனுக்குப் பலியாக உன்னை அனுப்ப முடியுமா? எங்கள் பிள்ளைகளை அனுப்பி விட்டும் நாங்கள் உயிர் வாழ்வதிற் பயனில்லை. உங்களையெல்லாம் விட்டு விட்டு நான் போனால், நீயும் இந்தப் பிள்ளைகளும் காப்பாற்றுவாரில்லாமல் மாண்டு போவீர்கள். என்ன செய்வேன்? நாங்கள் எல்லோருமே அந்த அரக்கனுக்குப் பலியாகி மாண்டு போவோம்!''

பிராமணனுடைய மனைவி சொன்னாள்; ''நீங்கள் சொல்வது நியாயமல்ல. என்னுடைய முக்கியமான கடமை முடிந்து விட்டது. முக்கியமாகச் சந்ததி விருத்தி வேண்டி என்னைத் திருமணம் செய்தீர்கள். ஒரு மகனையும், மகளையும் பெற்றுத் தந்து எனது கடமையை முடித்து விட்டேன். என்னை அந்த அரக்கனுக்குப் பலியாக அனுப்புவதில் எவ்வித தவறுமில்லை. நீங்கள் உயிருடனிருந்து எங்கள் பிள்ளைகளை வளர்த்துச் சந்ததியைக் காப்பாற்றுங்கள்!''

இதைக் கேட்ட பிராமணன் 'ஐயோ!' என்று குரலெடுத்து அழுதான். அவன் மனைவியும் அழுதாள்.

அப்போது ஒரு சிறு பெண் பேசுவது கேட்டது. ''என் அருமைப் பெற்றோரே, நீங்கள் வீணாகக் கலங்க வேண்டாம். இந்தக் குலத்தில் நான் ஒருத்திதான் அரக்கனுக்குப் பலியாவதற்குத் தகுதியானவள். உங்களில் யார் இறந்தாலும் எங்கள் சந்ததியைக் காப்பாற்ற வல்ல என் தம்பி பாதிக்கப்படுவான். அவன்தான் முக்கியமானவன். என்னை இழப்பதால் இந்தக் குடும்பத்துக்குப் பெரிய நட்டம் எதுவும் ஏற்படாது. என்னை அனுப்புங்கள். இந்தக் குடும்பத்தைக் காப்பாற்றுகின்றேன் என்ற மன நிறைவோடு நான் போவேன்!''

மகளின் பேச்சைக் கேட்ட தாயும் தந்தையும், இன்னும் பெரிதாக அழுதார்கள்.

அப்போது ஒரு சிறுவனின் மழலைக் குரல் கேட்டது: ''நீங்கள் எல்லாரும் ஏன் அழுகிறீர்கள்? நான் போய் இந்தத் தடியினால் அடித்து அந்த அரக்கனைக் கொன்றுவிட்டு வருவேன்!''

சிறுபையனின் பேச்சைக் கேட்டு, அந்தத் துயரமான நிலையிலும். பெற்றோருக்கு மகிழ்ச்சியும் சிரிப்பும் ஏற்பட்டது.

இச் சமயத்தில் குந்திதேவி உள்ளே நுழைந்து ''உங்கள் துயரத்தின் காரணத்தை நான் அறியலாமா? சொல்லுங்கள். என்னால் உங்களுக்கு ஏதும் உதவ முடியுமானால் நிச்சயமாகச் செய்வேன்'' என்றாள்.

வீட்டுக்காரப் பிராமணன் துயரத்தில் தோய்ந்தவனாகக் குந்தியைப் பார்த்து ''அம்மா, இதில் உங்களால் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக இந்த ஊரை ஓர் அரக்கன் கொடுமைப் படுத்தி வருகிறான். அவனுடைய பெயர் பகாசுரன். ஊருக்கு வெளியே உள்ள ஒரு குகையில் இருக்கிறான். அவன் இங்கே வந்த புதிதில் அவ்வப்போது தன்மனம் போனபடி ஆண் பெண் பிள்ளைகள் என்ற வேறுபாடில்லாமல் அடித்துக் கொன்று தின்று வந்தான். அவன் மிகுந்த பலவான். அவனை யாராலும் எதிர்க்க முடியவில்லை. இந்த ஊரின் அரசனே வேத்திரகீய நகரத்தில் இருக்கிறான். அவனும் இந்த அரக்கனை அடக்க முடியாமல் ஒதுங்கிப் போய் விட்டான். அம்மா தகுந்த அரசன் இல்லாத நாட்டில் வாழக்கூடாது. என் செய்வது? இந்த அரக்கனிடம் அகப்பட்டுக் கொண்டோம். அவனைக் கொல்வதற்குச் சில ஆண் பிள்ளைகள்

முயற்சி செய்தார்கள். அதை அறிந்தவுடனேயே பகாசுரன் அப்படி முயற்சித்தவர்களையும் அவர்களின் குடும்பத்தாரையும் கொன்று தின்று விட்டான்!

பிறகு ஊரவரெல்லாம் கூடி அவனோடு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டோம். ''நீ கண்டபடி ஆட்களை கொல்லாதே. வாரம் ஒரு முறை இரண்டு பெரிய காளைகள் பூட்டிய வண்டியில் உனக்கு வேண்டிய உணவுப் பொருள்களும் குடிவகைகளும் வைத்து அனுப்புகிறோம். நீ அவற்றையும், வண்டியில் பூட்டிய மாடுகளையும் கொண்டுவந்த ஆளையும் உண்டு கொள்வாய். ஊருக்குள் நுழையாதே'' என்று ஊரார் கேட்டுக் கொண்டபடி அவனும் சம்மதித்துக் கொண்டான்.

அன்று முதல் ஊரிலுள்ள குடும்பத்தவர்கள் வாரம் ஒருவராக முறைவைத்து அவனுக்கு உணவையும் மாடுகளையும், ஒரு ஆளையும் அனுப்பி வருகிறார்கள். இந்த வாரம் எங்கள் குடும்பத்துக்குரிய முறை. எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. யாரைவிட்டு யார் வாழ்வது? எல்லாரும் ஒன்றாக மாண்டுபோவோம் என்று நினைக்கிறேன்'' என்றான்.

குந்திதேவி சிறிது நேரம் யோசித்து விட்டு ''ஐயா, நீங்கள் கவலைப்பட வேண்டாம். எனக்கு ஐந்து குமாரர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவன் அந்த அரக்கனுக்கான உணவு வண்டியைக் கொண்டு போவான். நீங்கள் எல்லாரும் நிம்மதியாக இருங்கள்'' என்றாள்.

பிராமணன் பதறி எழுந்தான். ''அம்மா, என்ன வார்த்தை சொன்னீர்கள்! என்னுடைய வீட்டில் விருந்தாளிகளாக இருக்கும் உங்களுடைய மகனை எனக்காகப் பலியிடுவதா? அது பெரிய பாவம். நான் ஒப்புக் கொள்ளமாட்டேன்.''

குந்தி பலவாறாக ஆறுதல் வார்த்தைகள் சொல்லிப் பிராமணனைத் தேற்றினாள். ''ஐயா, என்னுடைய இரண்டாவது மகன் வீமன் மிகுந்த பலசாலி. அவனிடம் மந்திர சக்தியுண்டு. அவன் நிச்சயமாக அந்த அரக்கனைக் கொன்று விடுவான். ஆனால் இந்தச் செய்தி மிகவும் இரகசியமாக இருக்க வேண்டும். வெளியில் தெரிந்தால் மந்திர சக்தி பலிக்காமற் போய்விடும்!'' என்று ஒரு பொய்யும் சொல்லி வைத்தாள். வெளியே தெரிந்தால், துரியோதனனுக்கு இவர்கள் பாண்

டவர்கள் என்ற சந்தேகம் உண்டாகுமென்றும், அதனால் தங்களுக்குக் கெடுதி வருமென்றும் கருதியே குந்தி இவ்விதம் ஒரு பொய்யைச் சொன்னாள்.

குந்தியின் வார்த்தைகளால் ஓரளவு திருப்தி கொண்ட பிராமணனும் கடைசியில் குந்தியினுடைய யோசனைக்கு ஒத்துக் கொண்டான்.

குந்தி வீமனிடம் விடயத்தைச் சொன்னாள். வீமனுக்குப் பெரிய மகிழ்ச்சி.

வெளியிலிருந்து வந்த தருமன், வீமன் மிகுந்த முக மலர்ச்சியோடு இருப்பதைக் கண்டு ''அம்மா, என்ன நடந்தது? வீமன் மிகவும் மலர்ந்து போயிருக்கிறானே?'' என்று கேட்டான்.

நடந்தவற்றைக் குந்தி சொன்னதும் ''அதிகம் யோசிக்காமல் அந்தப் பிராமணருக்கு வாக்குக் கொடுத்து விட்டாயே அம்மா! எல்லாத் துன்பங்களிலிருந்தும் எங்களைக் காப்பாற்றியவன் வீமன். இனி மேலும் என்ன துன்பம் வந்தாலும் வீமன் இருக்கிறான் என்ற மன நிம்மதியோடு இருக்கிறோம். அத்தகைய வீமனை இப்படி ஓர் ஆபத்தான செயலில் இறக்கி விட்டிருக்கிறாயே! எதிர்பாராமல் வீமனுக்கு ஏதும் நேர்ந்தால், எங்கள் எல்லாருடைய கதியும் என்னவாகும்?' என்றான்.

''தருமா, வீமனுடைய பலத்தை நான் நன்றாக அறிவேன். அன்றியும் எங்களுக்கு இருக்க இடமளித்து இவ்வளவு காலமும் ஆதரித்த இந்தப் பிராமணர் தமது குடும்பத்தோடு எவ்வித ஆதரவுமில்லாமற் பெரிய ஆபத்திற் சிக்கியிருக்கும் போது நாங்கள் அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியுமா? வீமனுக்கு ஒன்றும் நேராது. நீ கவலைப்படாமலிரு'' என்றாள் குந்தி.

இந்த இடத்தில், தருமத்தின் இருப்பிடம் என்று புகழப்படும் தருமனைவிடக் குந்தி மிக உயர்ந்து நின்றாள்!

பெரிய இரண்டு காளைகள் பூட்டிய வண்டியிற் பல பாத்திரங்களில் உணவு வகைகளும், குடிபானங்களும் வைக்கப்பட்டன. ஊர்ச் சனங்கள் எல்லாரும் வந்து கூடிவிட்டார்கள். வழக்கமாக அழுது புலம்பிக் கொண்டே வண்டியை ஓட்டிச் செல்பவர்களைக் கண்டிருந்த ஊர்மக்கள், மிகுந்த உற்சாகத்தோடும், மகிழ்ச்சியோடுமிருந்த வீமனைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். தங்களுக்கு உதவி செய்த பிரா

மணனுக்காகத் தனது சொந்த மகனையே பலி கொடுக்க முன்வந்த குந்திதேவியை எல்லோரும் புகழ்ந்து பாராட்டினார்கள்.

வீமன் வண்டியைச் செலுத்திக் கொண்டு காட்டை நோக்கிப் புறப்பட்டான். ஊர்மக்களும் ஊர் எல்லை வரையும் வண்டியைத் தொடர்ந்து போய், எல்லையில் நின்று கொண்டார்கள்.

வீமன் மலையடிவாரத்தை நோக்கி வண்டியைச் செலுத்திக் கொண்டு போனான்.

குகை வாசலை நெருங்கியபோது, அங்கே கெட்ட நாற்றம் வீசியது. மனிதர்களுடையவும் மிருகங்களுடையவும் எலும்புகள் அந்த இடமெல்லாம் பரவிக்கிடந்தன.

வீமன் அங்கே வண்டியை நிறுத்தி விட்டு, மாடுகளை அவிழ்த்து ஊரை நோக்கித் துரத்தி விட்டான். பிறகு வண்டியிலிருந்த உணவுப் பாத்திரங்களையெல்லாம் இறக்கி வைத்தவன், இப்பொழுதே நான் அவனைக் கொல்வேன். கொல்வதனால் எனக்குத் துடக்கு ஏற்படும். உணவு உண்ண முடியாமல் போகும், என்று சிந்தித்துப் பாத்திரங்களிலிருந்த உணவுகளை உண்ணத் தொடங்கினான்.

உணவு வண்டிவரும் வருமென்று நெடுநேரமாக குகைக்குள் காத்திருந்த பகாசுரன், வண்டியைக் காணாமற், குகையை விட்டு வெளியே வந்து பார்த்தான்.

அவன் கண்ட காட்சி அவனைக் கொதிப்படையச் செய்தது. வீமன் ஒவ்வொரு பாத்திரமாக எடுத்து உணவு வகைகளை விழுங்கிக் கொண்டிருந்தான்.

பகாசுரன் மிகுந்த கோபத்துடன் ஓடி வந்து வீமனுடைய முதுகிலே தனது இரும்புக் கரங்களாற் குத்தினான்.

வீமன் அதைக் கொஞ்சமும் பொருட் படுத்ாதவனாய், திரும்பியும் பாராமல், கருமமே கண்ணாக உணவை உண்டு கொண்டிருந்தான்,

உணவு முழுவதையும் உண்ட பிறகே வீமன் திரும்பிப் பகாசுரனைப் பார்த்தான்.

இதன் பிறகு இருவருக்குமிடையே பெரிய சண்டை நடந்தது. வீமன் பகாசுரனை அடித்துக் கீழே தள்ளி மிதித்தான். பகாசுரனால் உடனே எழுந்திருக்க முடியவில்லை. ''பகாசுரா, நன்றாய்க் களைப்

பாறிவிட்டு வா'' என்று வீமன் அவனை விட்டுச் சற்றே விலகி நின்றான்.

பகாசுரன் மீண்டும் எழுந்து மூர்க்கத் தனமாகத் தாக்கினான். வீமன் அவனை அடித்து விழுத்தினான். இப்படி நாலைந்து முறை நடந்தது.

கடைசியில் வீமன், கீழே விழுந்த பகாசுரனின் முதுகில் தனது முழங்காலை ஊன்றி, அவனுடைய எலும்புகளை முறித்தான். பகாசுரன் வாயினால் இரத்தம் கக்கினான். அவனுடைய உடல் செயலற்றது. உயிர் பிரிந்தது.

பகாசுரனின் பெரிய உடலைத் தூக்கி வண்டியிற் போட்டு, அதைத் தள்ளிக் கொண்டு வீமன் ஊருக்கு வந்தான்.

ஊர் மக்கள் அனைவரும் திரண்டு வந்து வீமனுக்குப் பெரிய வரவேற்பு நடத்தினர்.

அன்று ஊர் முழுவதும் ஒரே கொண்டாட்டம். பதின்மூன்று ஆண்டுகளாக ஊரைப்பிடித்திருந்த கேடு நீங்கிற்று.

## 13. திரௌபதி சுயம்வரம்

பாஞ்சால நாட்டிலிருந்து ஒருமுக்கியமான செய்தி வெளியாயிற்று.

அந்த நாட்டு அரசனின் மகள் திரௌபதி வளர்ந்து பருவப் பெண்ணாகி விட்டாள். அரச குல வழக்கப்படி சுயம்வரம் நடத்தப் போகிறார்கள்.

திரௌபதியின் அழகும், அறிவும் நல்லகுணங்களும் எல்லா நாடுகளிலும் பரவியிருந்த படியால், பல நாட்டு அரச குமாரர்களும் பாஞ்சால நாட்டுக்குப் போனார்கள்.

கொண்டாட்டங்களைப் பார்ப்பதற்காகப் பெருந் தொகையான மக்களும் அங்கே போனார்கள். இப்படியான திருமண நிகழ்ச்சிகளிற் கொடுக்கப்படும் தானங்களை வாங்குவதற்காகப் பல நாடுகளிலிருந்து பிராமணர்களும் அங்கே போனார்கள்.

ஏக சக்கர நகரத்துப் பிராமணர்களும் இந்தச் சுயம்வரத்துக்குப் போவதற்காகப் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தார்கள்.

அந்தப் பிராமணர்கள் மூலமாகப் பாண்டவர்க்கும் இந்தச் செய்தி

தெரிய வந்தது. அவர்களும் பாஞ்சாலத்துக்குப் போக விரும்பினார்கள். "அம்மா, இந்த ஊரில் நீண்ட காலம் இருந்து விட்டோம். ஒரே இடத்திலிருந்து மனம் சலித்து விட்டது. பாஞ்சால நாடு மிகச் செழிப்பானதென்று எல்லாரும் சொல்லுகிறார்கள். இந்தப் பிராமணர்களோடு சேர்ந்து நாங்களும் அங்கே போய்விடலாம்!" என்று தருமன் தாயிடம் சொன்னான்.

எதையோ மனதில் நினைத்தவளாகக் குந்திதேவியும் உடனே சம்மதித்தாள்.

அந்த ஊர்ப் பிராமணர்களோடு, பிராமணவேடந்தரித்திருந்தவர்களான பாண்டவர்களும் சேர்ந்து பாஞ்சால நாடு சென்றார்கள்.

பாஞ்சாலநாடு மிகச் சிறப்பாக விழாக்கோலம் பூண்டிருந்தது. பாண்டவர்களும், குந்தியும் ஒரு குயவனுடைய வீட்டில் தங்குவதற்கு இடங்கேட்டுத் தங்கியிருந்து, நகரத்தைச் சுற்றிப் பார்த்தார்கள்.

நகரம் முழுவதும் மிக அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. பல இடங்களில் கலை நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்தன.

பல நாட்டு மக்களும் தங்களை அலங்கரித்துக் கொண்டு நகர வீதிகளில் உலாவித் திரிந்தார்கள்.

சுயம்வரம் நடக்கவிருந்த மண்டபம் மிகப் பெரிதாகவும், மிக அழகாகவும் இருந்தது. அரச குமாரர்கள் இருப்பதற்கு அழகான இருக்கைகள் போடப்பட்டிருந்தன.

மண்டபத்தின் நடுவே ஒரு பெரிய வில் வைக்கப்பட்டிருந்தது. மிக உயரத்திற் பொன்னாற் செய்யப்பட்ட ஒரு உருவம் தொங்கிக் கொண்டிருந்தது.

அந்தப் பெரிய வில்லைத் தூக்கி வளைத்து நாணேற்றி, உயரத்திலிருந்த அந்தப் பொன் மீன் உருவை அம்பினால் அடித்து விழுத்த வேண்டும். இடையிலே சுழன்று கொண்டிருந்த எந்திரப் பொறியிற் படாமல் அதனூடே அம்பு செல்ல வேண்டும்,

அப்படி அந்த இலக்கை அடித்து விழுத்தியவனுக்கே திரௌபதி மாலையிடுவாள்.

துரோணரால் ஏவப்பட்டுத் தன்னுடன் சண்டையிட்டுத் தன்னைத் தோற்கடித்த வீரனாகிய அர்ச்சுனனுக்கு மாலையிடுவதற்காகவே துருபத மன்னன் தவமிருந்து திரௌபதியைப் பெற்றான்.

வாரணாவத நகரில் பாண்டவர்கள் மாளிகையோடு எரிந்து மாண்டு போனார்கள் என்பதை அறிந்து அவன் மிகுந்த கவலை கொண்டிருந்தான். பிறகு ''அவர்கள் சாகவில்லை, தப்பிவிட்டார்கள்'' என்ற செய்தியுமறிந்து ஒருவேளை அவர்கள் தப்பியிருந்தால் இந்தச் சுயம் வரத்துக்கு வரக்கூடுமென்றும் மனத்துக்குள் ஆசை கொண்டிருந்தான்.

திருஷ்டத்துய்மன் தனது தங்கையாகிய திரௌபதியை அழைத்துக்கொண்டு அந்தச் சுயம் வரமண்டபத்துக்கு வந்தான்.

பெரிய கூந்தலையுடைய திரௌபதி, அழகிய பட்டாடை உடுத்தி பொற்சிலை போலத் தோன்றினாள். மண்டபத்திலுள்ள அரச குமாரர்கள் எல்லாரும் வைத்த கண் வாங்காமல் அவளைப் பார்த்தார்கள்.

திருஷ்டத்துய்மன் அவளை மண்டபத்தின் நடுவேயுள்ள மேடைக்கு அழைத்துச் சென்று அங்கே நிறுத்தினான்.

மண்டபத்தில் அமைதி நிலவிற்று.

திருஷ்டத்துய்மன் பெரிய குரலில் சொன்னான்: ''இந்த அவையிலுள்ள எல்லோரும் கேளுங்கள். இதோ இவள்தான் என் உடன் பிறப்பு, திரௌபதி. இதோ, இங்கே பெரிய வில் ஒன்று இருக்கிறது. அதோ, உயரத்தில் மீன் குறி தொங்கிக் கொண்டிருக்கிறது. இங்கே ஐந்து அம்புகளும் இருக்கின்றன. எந்த வீரன் வில்லை வளைத்து, அம்பு தொடுத்து, நடுவே சுழன்று கொண்டிருக்கும் பொறியினூடாக அம்பைச் செலுத்தி மேலேயுள்ள குறியை அடிக்கிறானோ, அவனுக்குத் திரௌபதி தன் கைகளிலே வைத்திருக்கும் மாலையை அணிவாள். அவனுக்கே அவள் உரியவளாவாள்!''

அரச குமாரர்கள் ஒவ்வொருவராக எழுந்தார்கள். வில்லை வளைத்து நாணேற்ற முடியாமலே பலர் வெட்கத்துடன் திரும்பி விட்டார்கள்.

சில வீரர்கள் வில்லை வளைத்து, அம்பைத் தொடுத்து எய்த போதிலும், அவை நடுவே சுழன்று கொண்டிருந்த பொறியின் நடுவே செல்லாமல் வீணாயின.

இப்படித் தோற்றுப் போனவர்களில் சிசுபாலன், சராசந்தன், சல்லியன், துரியோதனன் முதலான சிறந்த வீரர்களும் இருந்தார்கள்.

கர்ணன் எழுந்து வந்தான். அவனுடைய தோற்றத்தைக் கண்டே பலர், இவன் நிச்சயமாக வெற்றியடைவான் என்று நினைத்தார்கள்.

ஆனால் கர்ணனும் தோற்றுப் போனான்.

''இனிவேறு யார் இந்தச் சாதனையைச் செய்யப்போகிறார்கள்? திரௌபதி கையிலிருக்கும் மாலை வீணாக வாடி அழியப்போகிறது!'' என்று அந்த அவையிலுள்ளோர் நினைத்த வேளையில், —

அந்த அவையிற் கூடியிருந்த பிராமணர்களின் மத்தியிலிருந்து ஓர் இளைஞன் எழுந்தான்.

''பெரிய பெரிய வீரர்கள் எல்லாம் தோற்றுப் போய்விட்ட இந்தச் செயலில், இந்த இளைஞன் வீணான ஆசையால் தலைப்படுகிறானே! இவனால் பிராமண குலத்துக்கே இழிவு ஏற்படப் போகிறதே!'' என்று அங்கிருந்த சில பிராமணர்கள் மனம் நொந்தார்கள்.

வேறு சிலரோ ''இவனைப் பார்த்தால் தான் நினைத்த செயலை செய்து முடிப்பான் போலவே தெரிகிறது. யார் கண்டது, அரச குமாரர்கள் செய்ய முடியாத செயலை இந்தப் பிராமண இளைஞன் செய்து எங்கள் குலத்துக்குப் புகழைச் சேர்க்கக் கூடும். தேக பலம் குறைவாக இருந்தாலும், பிராமணருக்கு அறிவுப்பலமும் மனபலமும் அதிகமாகவே இருக்கிறது'' என்று நினைத்தார்கள்.

வளைக்க வேண்டிய வில்லின் பக்கத்தே போய் நின்ற அர்ச்சுனன் திருஷ்டத்துய்மனைப் பார்த்து ''இந்த வில்லை எடுத்துப் பிராமணர்களும் குறியை அடிக்கலாமோ?'' என்று கேட்டான்.

''குலத்தைப் பற்றி இங்கு பேச்சில்லை. இங்கே குறிக்கப்பட்ட பந்தயத்தில் யார் வெற்றியடைகிறார்களோ அவர் திரௌபதியை அடையலாம். பிராமண இளைஞனே, உன்னால் இயலுமானால் வில்லைக் கையில் எடு!'' என்றான் திருஷ்டத்துய்மன்.

மறு பேச்சின்றி அர்ச்சுனன் வில்லைக் கையில் எடுத்தான். நாணை ஏற்றி வளைத்தான்.

அர்ச்சுனன் எய்த அம்பு, நடுவே சுழன்று கொண்டிருந்த பொறியினூடாகச் சென்று மேலே தொங்கிக் கொண்டிருந்த மீன் குறியை அடித்து விழுத்தியது.

அந்த மண்டபம் முழுவதும் ஒரே ஆரவாரம்! அவையிலிருந்த பிராமணர்கள் எல்லாரும் தத்தமக்கே வெற்றி கிடைத்தது போல, வெற்றி முழக்கம் செய்தார்கள்.

மகிழ்ச்சியினாற் பூரித்துப் போன திரௌபதி கையில் மாலையுடன்

அர்ச்சுனன் அருகே வந்து அவன் கழுத்தில் மாலையைப் போட்டாள்.

மக்களின் கைதட்டல் ஓசையும், மங்கள வாத்தியங்களின் ஒலியும் மண்டபத்தை நிறைத்தன.

தருமனும், நகுலனும், சகாதேவனும் மண்டபத்துக்கு வெளியே வந்து குயவனுடைய வீட்டிலிருந்த தமது தாயிடம் விடயத்தைச் சொல்லுவதற்காக விரைந்து போனார்கள்.

வீமன் மாத்திரம் மண்டபத்திலேயே இருந்தான். பொறாமை கொண்ட அரசர்களால் அர்ச்சுனனுக்கு ஏதும் ஆபத்து வரக்கூடுமென்று நினைத்து, அவனுக்குத் துணையாக வீமனை அங்கே தங்கியிருக்கும்படி தருமனே சொல்லி விட்டுப் போனான்.

தருமன் நினைத்தது சரிதான்.

அரச குமாரர்கள் பலரும் குழப்பம் செய்யத் தொடங்கினார்கள். ''பிராமணர்களுக்குச் சுயம்வர முறை கிடையாது. அது அரச குலத்தவருக்கு மட்டுமே உரியது. இந்தப் பெண் தனக்கு அரச குமாரர்கள் யாரையும் வேண்டாமென்றால், நெருப்பில் விழுந்து மாண்டு போகட்டும். அரசர்களின் சுயம்வர முறைக்கு இழுக்கு நேரவிடக் கூடாது!'' என்று கூறிக்கொண்டு, அவர்கள் சண்டையிடுவதற்குத் தயாரானார்கள்.

வீமன் மண்டபத்துக்கு வெளியே நின்ற ஒரு மரத்தை வேருடன் பிடுங்கி எடுத்துக் கொண்டு வந்து அர்ச்சுனனின் பக்கத்தில் நின்று கொண்டான்.

கிருஷ்ணனும் பலராமனும் குழப்பம் செய்த அரசர்களுக்குச் சமாதானம் சொல்லி, சண்டை நடவாமல் செய்தார்கள்.

அர்ச்சுனன் திரௌபதியை அழைத்துக் கொண்டு தாயார் இருந்த இடத்துக்குப் போனான். வீமனும் உடன் சென்றான். திருஷ்டத்துய்மன் அவர்களைத் தொடர்ந்து சென்று குயவன் வீட்டில் குந்திதேவி இருப்பதைக் கண்டு, வியப்பும், மகிழ்ச்சியும் கொண்டவனாக, தந்தையாகிய துருபதனிடம் ஓடி வந்தான்.

''தந்தையே, திரௌபதி அர்ச்சுனனுக்கே மாலையிட்டாள்! அந்தக் குயவனுடைய வீட்டில் பாண்டவர்களும் குந்திதேவியும் இருப்பதை என் கண்களாற் கண்டேன்!'' என்று திருஷ்டத்துய்மன் மிகுந்த மகிழ்ச்சியுடன் கூறினான்.

துருபதனும் மிகுந்த மகிழ்வுற்றவனாகத் தகுந்த மரியாதையுடன் பாண்டவர்களையும், குந்திதேவியையும், திரௌபதியையும் தனது அரண்மனைக்கு அழைத்து வந்தான்.

துருபதனிடம் பாண்டவர்கள் உண்மையை ஒத்துக் கொண்டு தங்கள் மாறு வேடத்தைக் களைத்து கொண்டார்கள்.

தருமன் சொன்னான்; "அரசனே, எங்களுக்குள் ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தப்படி திரௌபதியை நாங்கள் ஐவரும் மணந்து கொள்கிறோம். எங்கள் தாயாரின் விருப்பமும் அதுவே"

'தன்னுடைய வஞ்சத்தைத் தீர்க்க அர்ச்சுனன் தனக்கு மருகனாக வந்து விட்டானே' என்று துருபதன் மகிழ்ந்த போதிலும், அவளை ஐவரும் மணப்பதாகத் தருமன் சொன்னதைக் கேட்டுத் திகைப்பும் வெறுப்புங் கொண்டான்.

"இது என்ன முறைகேடு! உலகம் ஏற்றுக் கொள்ளாத இந்த முடிவுக்கு எப்படி வந்தீர்கள்?" என்று துருபதன் தன் வெறுப்பை வெளிக்காட்டினான்.

"அரசனே, மன்னிக்க வேண்டும். எங்கள் ஐவரில் எவர் ஒருவருக்கு எந்தச் செல்வம் கிடைத்தாலும் அதை ஐவரும் பகிர்ந்து கொள்வோமென்பதே எங்களுடைய உறுதி மொழி. எங்களுக்குள் பிளவு ஏற்படாமலிக்கவே இந்த உறுதியைச் செய்து கொண்டோம். இந்த உறுதியை நாங்கள் கைவிட முடியாது. உங்கள் மகளை வெற்றி கொண்டவன் அர்ச்சுனனேயானாலும், அவள் ஐவருக்குமே சொந்தமாவாள்" என்று தருமன் நியாயம் கூறினான்.

அந்தக் காலத்தில் மனிதர்களுடைய — ஆண்களுடைய செல்வங்களில் ஒன்றாகவே பெண்களும் கருதப்பட்டனரென்பது இதிலிருந்து தெரிகிறது.

இந்த ஏற்பாடு துருபதனுக்குச் சற்றும் பிடிக்காமலிருந்த போதும் "நீங்கள் எல்லாரும் இந்தப் புதினமான ஏற்பாட்டுக்குச் சம்மதித்துக் கொண்டீர்களாயிருந்தால், நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை. அப்படியே நடக்கட்டும்!" என்று விட்டு விட்டான்.

## 14. இந்திரப் பிரஸ்தம்

அஸ்தனாபுரத்தில் விதுரன், திருதராஷ்டிரனிடம் சொன்னான்:

''அண்ணா, துருபதன் மகள் திரௌபதி எங்கள் மருமகளாகி விட்டாள்.''

திருதராஷ்டிரன் தனது மகன் துரியோதனனே, பாஞ்சால நாட்டுச் சுயம்வரத்தில் திரௌபதியை வென்று விட்டான் என்று நினைத்தான். மிக்க மகிழ்ச்சியுடன் ''அப்படியா! மிகவும் மகிழ்ச்சி. பலம் வாய்ந்த துருபதனும் இனி எமக்குத் துணைவனானான்!'' என்றான்,

திருதராஷ்ட்டிரன் தவறாக விளங்கிக் கொண்டதை உடனே அறிந்து கொண்ட விதுரன், ''எல்லாரும் நினைத்திருந்தது போல, பாண்டவர்கள் வாரணாவதத்தில் இறந்து போகவில்லை. அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள். பாஞ்சால நாட்டுச் சுயம்வரத்துக்குப் போய் திரௌபதையை அடைந்தவன் அர்ச்சுனனே!'' என்றான்.

திருதராட்டிரன் ஏமாற்றத்தால் மனம் சோர்ந்து போனாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் ''அப்படியா! பாண்டுவின் குமாரர்கள் உயிருடன் இருக்கிறார்களா! இதை விட மகிழ்ச்சி எனக்கு வேறில்லை'' என்றான்.

துரியோதனனுடைய போதனையால் திருதராட்டிரன், பாண்டவர்களுக்கு மாறான செயல்களைச் செய்த போதிலும், தனது தம்பியின் புதல்வர்களிடம் அவனுக்கு அன்பும் இருந்தது. அன்றியும் அவன் நீதிக்குப் பயப்பட்டான். பாண்டவர்கள் உயிர் தப்பிவிட்டார்கள் என்று அறிந்த போது உண்மையிலேயே அவன் மனம் ஆறுதலடைந்தது.

*

துரியோதனனும், கர்ணனும், சகுனியும் ஒன்று கூடி நிலைமையை விவாதித்தார்கள்.

''பாண்டவர்கள் உயிரோடிருப்பதை நிச்சயமாக அறிந்த பின் எனக்கு மன நிம்மதியில்லாமலிருக்கிறது. அவர்களால் எனக்கும் இந்த நாட்டுக்கும் ஆபத்து வருமென்று தோன்றுகிறது'' என்றான் துரியோதனன்.

''நண்பனே, வீண் பயம் கொள்ள வேண்டாம். அவர்களைச் சண்டையில் நான் தோற்கடிப்பேன்! துருபதன் அவர்களுக்கு உதவியாக இருக்கட்டும். யாதவருடைய பெரிய சேனை உதவிக்கு வந்து சேரு முன் திடீரென்று சண்டையிட்டு, அவர்களைச் சுலபமாக அழித்து விடலாம்!'' என்றான் கர்ணன்.

துரியோதனனும், சகுனியும் ஏதாவது சூழ்ச்சி செய்து பாண்டவர்களை அழித்து விடவேண்டும். அல்லது பழையபடி காட்டுக்குத் துரத்திவிட வேண்டுமென்று பலவித உபாயங்களையும் சொன்னார்கள்.

கர்ணன் அவையெல்லாம் நடக்கக் கூடியனவல்லவென்று மறுத்துரைத்துப் போர் செய்வதே சரியான வழி என்றான். அதன் பின் மூவரும் திருதராட்டிரனிடம் போனார்கள்.

அங்கே திருதராட்டிரனுடன் பீஷ்மரும், துரோணரும், விதுரனும் இருந்தார்கள்.

''பாண்டவர்கள் உயிருடன் இருப்பதை அறிய மகிழ்ச்சியாக இருக்கிறது. அரக்குமாளிகை எரிந்தது பற்றி நாட்டு மக்கள் பலவாறாகப் பேசிக் கொள்கிறார்கள். என்னையும் சேர்த்தே குற்றம் சொல்கிறார்கள். பாண்டவர்கள் சிறந்த வீரர்கள். இனியாவது அவர்களை அழைத்து நாட்டைப் பகிர்ந்து அவர்களிடம் பாதியைக் கொடுத்துச் சமாதானமாக வாழ்வதே புத்தி. மக்கள் மனதில் எங்களைப் பற்றித் தோன்றியுள்ள கெட்ட பெயரும் நீங்கும்'' என்றார் பீஷ்மர்,

துரோணரும் அதையே சொன்னார். ''அதுதான் நியாயம், ஒரு தூதனை அனுப்பிப் பாண்டவர்களை இங்கே வரவழைத்து, இந்த நாட்டின் பாதிப் பகுதிக்குத் தருமனை அரசனாக்கி முடிசூட்டி வைக்கவேண்டும் ...'' என்றார்.

இவர்கள் இப்படிச் சொன்னது கர்ணனுக்கு மிகுந்த கோபத்தை உண்டாக்கிற்று.

''துரியோதனனுடையவும், அவனது தந்தையுடையவும் தயவில் வாழ்கின்ற துரோணரே இப்படிப் பேசுவது அழகாக இருக்கிறது! துரியோதனனை அழித்து விடுவதென்றே நீங்கள் முடிவு செய்து விட்டீர்களா ... ...? கருத்துச் சொல்பவர்கள் எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும், அரசன் சரியான நியாயத்தை அறிந்துதான் தீர்ப்பு வழங்க வேண்டும்!'' என்றான் கர்ணன்.

தம்மை இழித்துச் சொன்னது துரோணருக்கு மிகுந்த சினத்தை உண்டாக்கிற்று.

''மூடனே, நீ மரியாதை தவறிப் பேசுகிறாய். நானும் பீஷ்மரும் சொல்வதை அரசன் கேட்காமற் போனால், கௌரவ குலமே அழிந்து நாசமாகி விடும்!'' என்றார் துரோணர்.

பீஷ்மரும் துரோணரும் சொன்னதையே விதுரனும், மேலும் பல நியாயங்களை எடுத்துச் சொல்லி ஆதரித்தான்.

கடைசியில் திருதராட்டிரனும் அதுவே சரியென்று உணர்ந்து பாண்டவர்களை அழைத்து வரும்படி விதுரனையே பாஞ்சால நாட்டுக்கு அனுப்பிவைத்தான்.

விதுரனும் மகிழ்ச்சியோடு பாஞ்சால நாட்டுக்குச் சென்று பாண்டவர்களையும், திரௌபதியையும், குந்திதேவியையும் அஸ்தனாபுரத்துக்கு அழைத்து வந்தான்.

அஸ்தனாபுரத்து மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி. பாண்டவர்கள் வந்த வழியெல்லாம் அவர்கள் அலங்காரம் செய்து அவர்களை அன்போடு வரவேற்றார்கள்.

நல்ல மனிதர்களுக்கும், அறிஞர்களுக்கும், சிறந்த வீரர்களுக்கும் மக்களிடையே எக்காலத்தும் நல்ல வரவேற்பிருக்கும்.

திருதராட்டிரனும் பாண்டவர்களை அரண்மனையில் வரவேற்று நாட்டின் அரைவாசிப் பகுதிக்குத் தருமனே அரசனாக முறைப்படி முடி சூட்டி வைத்தான்.

''தருமனே, உனது தந்தையும், எனது தம்பியுமான பாண்டு, எனக்குத் துணையாக இருந்து மிக நல்ல முறையில் இந்த நாட்டை வளப்படுத்தினான். நீயும் அவ்விதமே செய்வாயாக. என்னுடைய பிள்ளைகளிடம் கெட்ட குணங்கள் இருப்பதை நான் அறிவேன். அவைகளை நீ பெரிது படுத்தாமல் அவர்களையும் ஆதரித்து என்னோடும் அன்பாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். காண்டவப் பிரஸ்தத்தை உன்னுடைய தலைநகராக அமைத்து அங்கிருந்து ஆட்சி செய்வாயாக!'' என்று நல்ல மனத்தோடு திருதராட்டிரன் சொன்னான்: தங்கள் குலத்துக்குள் ஏற்பட்ட பகைமை நீங்கி இனிச் சமாதானம் நிலவுமென்று அவன் நம்பினான்.

காடாகிக் கிடந்த காண்டவப் பிரஸ்தத்தைப் பாண்டவர்கள் திருத்தித் தக்க வல்லுநர்களைக் கொண்டு அங்கே அழகான சிறந்த நகரமொன்றை அமைத்தார்கள். அழகிய அந்த நகரத்துக்கு 'இந்திரப் பிரஸ்தம்' என்று பெயர் சூட்டி அங்கே போய் நல்லாட்சி செய்தார்கள்.

திருதராட்டிரன் நம்பியது போல இருபத்து மூன்று ஆண்டுகள் அமைதியாகக் கழிந்தன.

# 15. இராச சூய யாகம்

அந்தக் காலதிதில் வலுவுள்ள அரசர்கள் 'இராச சூயம்' என்று ஒரு யாகம் செய்வது வழக்கம். இராச சூய யாகம் செய்யத் துணிந்த அரசன் மற்றைய நாட்டு அரசர்களெல்லாம் தன்னை 'மேலானவன்' என்று போற்றும்படி செய்ய வேண்டும். நட்பு முறையில் அப்படி ஏற்றுக் கொள்ளாதவர்களுடன் சண்டையிட்டு அவர்களைப் பணிய வைக்க வேண்டும்.

இராசசூய யாகம் செய்த அரசன் 'அரசர்க்கரசன்' என்றும், 'மன்னாதி மன்னன்' என்றும் போற்றப்படுவான்.

இந்திரப்பிரஸ்த நகரில் தருமனுடைய அரசு மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்ததால் அவனுடைய நண்பர்களும், தம்பியரும் அவனை இராச சூய யாகம் செய்யும்படி தூண்டினார்கள்.

எல்லாரும் தூண்டவே, தருமனுடைய மனத்திலும் இராசசூய யாகம் செய்தாலென்ன என்ற எண்ணம் உருவாகி விட்டது. 'இதனால் யாராவது அரசனின் பகை ஏற்படக் கூடுமோ?' என்ற தயக்கமும் தருமனின் மனத்தில் எழுந்தது.

இதைப் பற்றிக் கண்ணனுடன் கலந்துரையாடித் தெளிவு பெறத் தருமன் விரும்பி, அதைக் கண்ணனுக்கு அறிவித்தான்.

துவாரகையிலிருந்த கண்ணனும் உடனே இந்திரப் பிரஸ்தத்துக்கு வந்தான்.

''கண்ணபிரானே, இராசசூய யாகம் செய்யும்படி என்னை எல்லோரும் வற்புறுத்துகிறார்கள். எவன் ஒருவன் எல்லா அரசர்களாலும் வணங்கி மதிக்கப்படுகிறானோ, அவன்தான் இராசசூயம் செய்வதற்குத் தகுதியானவன், நான் தகுதியுள்ளவனா என்பது குறித்து என்னாற் சரியாகத் தீர்மானிக்க முடியவில்லை. நீங்கள் ஒருவரே இவ்விடயத்தில் எனக்குச் சரியான வழி காட்டக் கூடியவர். அதனாலே தான் உங்களை அழைத்தேன். எனக்குச் சரியான வழியைக் காட்டுங்கள்!'' என்று தருமன் கேட்டான்.

''தருமரே, இராசசூய யாகஞ் செய்வதற்கு நீங்கள் முற்றிலும் தகுதி வாய்ந்தவரே, ஆனால் ஒரே ஒரு இடையூறு இருக்கிறது.

அதை நீக்கி விட்டீர்களானால், நீங்கள் நிச்சயமாக இராசசூயத்தை நடத்தி விடலாம்!'' என்றான் கண்ணன்

''சொல்லுங்கள். என் தம்பிமாரின் திறனும் உங்களுடைய உதவியுமிருக்கும் போது, நான் எந்த இடையூறையும் நீக்கிக் கொள்வேன்!'' என்றான் தருமன்.

கண்ணன் சொன்னான்: ''மகத நாட்டு மன்னன் ஜராசந்தனைப் பற்றி அறிந்திருப்பீர்கள். அவன் பல அரசர்களையெல்லாம் வென்று மிகுந்த இறுமாப்போடு இருக்கிறான். நானும் என் குலத்தவரும் மூன்று ஆண்டுகளாக அவனோடு போரிட்டும் வெற்றி கொள்ள முடியாமல், வட மதுரையைவிட்டு நீங்கி மேற்கே போய்த் துவாரகையிற் கோட்டை கட்டி வாழ்கின்றோம். நீங்கள் இராசசூயயாகம் செய்து மன்னாதி மன்னனாக வருவதைத் துரியோதனனும், கர்ணனும் கூட ஒருவேளை எதிர்க்காமலிருக்கலாம். ஆனால் ஜராசந்தன் நிச்சயமாக எதிர்ப்பான். அவன் மிகவும் கொடியவன். அவனை வென்று அடக்கினாலொழிய நீங்கள் இராசசூயயாகம் செய்வதை நினைக்கவும் கூடாது!''

''நீங்கள் சொல்லுவது சரிதான். 'அரசர்க்கரசன்' ஆக வேண்டும் என்ற ஆசை எனக்குத் தேவையற்றது. ஒவ்வொரு அரசனும் தனது நாட்டை ஒழுங்காக ஆண்டு கொண்டிருக்கிறான். என்னுடைய அதிகார ஆசையினால், மற்றவர்களின் வெறுப்பையும் கோபத்தையும் ஏற்படுத்தி ஏன் சண்டைகளைத் தோற்றுவிக்க வேண்டும்? நான் இப்போது நிறைவாகத்தானே இருக்கிறேன்? இதுபோதும்!'' என்றான் தருமன்.

வீமனுக்கும், அர்ச்சுனனுக்கும் தருமனுடைய இந்தப் பேச்சுப் பிடிக்கவில்லை. முயற்சியே அரசர்களுடைய சிறப்பான குணமென்றும், போருக்குப் பயந்து முயற்சியைக் கைவிடுதல் அரசனுக்கு இழுக்காகுமென்றும், தாங்கள் இருக்கும்போது தருமன் எதைக்குறித்தும் அஞ்ச வேண்டியதில்லையென்றும் அவர்கள் தங்கள் மனக் கருத்தை வெளியிட்டார்கள். இராசசூயயாகம் நடத்தி, மற்ற மன்னர்களைக் காட்டிலும் தாங்கள் மேலானவர்கள் என்பதை நிலைநிறுத்த வேண்டுமென்பதே வீமனுக்கும் அர்ச்சுனனுக்கும் பெரு விருப்பாக இருந்தது'

''தருமரே, கொடியவர்களை அழித்து நீதியை நிலை நாட்டவேண்டியது அரசர்களுடைய கடமை. ஜராசந்தன் மிகக் கொடியவன்.

எண்பத்தாறு அரசர்களைப் பிடித்து அவன் சிறையிலடைத்து வைத்திருக்கிறான். இன்னும் பதினான்கு அரசர்களைப் பிடித்தவுடன் மொத்தமாக நூறு பேரையும் யாகப் பசுக்களாக பலியிட்டுப் பெரு வேள்வியொன்று நடத்துவதற்குத் திட்டமிட்டிருக்கிறான். இந்தக் கொடுமை நடக்காமற் செய்ய வேண்டியது உங்களைப் போன்ற அரசரின் கடமையாகும் நீங்கள் அனுமதி கொடுத்தால், வீமனும், அர்ச்சுனனும் நானும் சேர்ந்து ஜராசந்தனைக் கொன்று அந்த அரசர்களை விடுவிப்போம்'' என்று கண்ணன் சொன்னான்.

ஜராச்சந்தனை அழித்துச் சிறைபட்டிருக்கும் அரசர்களை விடுவிப்பது தனது கடமை என்று கருதியவனாய்த் தருமனும் கடைசியில் உடன் பட்டான்.

தன்னுடைய பெரிய விரோதியை அழிப்பதற்கு ஏற்ற சந்தர்ப்பம் வாய்த்தது பற்றிக் கண்ணனுக்கு பெரு மகிழ்ச்சி உண்டாயிற்று.

★

மிகுந்த படைபலமுள்ளவனாக பிருகத்ரதன் என்ற மன்னன் மகத நாட்டை ஆண்டு வந்தான். அவன் காசி மன்னனின் இரு புதல்வியரைத் திருமணம் செய்து பல ஆண்டுகளாயும் பிள்ளைப்பேறு கிடைக்காத காரணத்தால், மிகுந்த துயரம் கொண்டவனாய், அரசாட்சியைத் தனது அமைச்சர்களிடம் ஒப்படைத்துவிட்டு, இருமனைவியர்களுடனும் காட்டுக்குச் சென்று தவமிருந்தான். ஒருநாள் கண்டகௌசிகர் என்ற முனிவரைச் சந்தித்து, மன்னன் தனது குறையைச் சொல்ல, அவர் அவனிடம் ஒரு மாம்பழத்தைக் கொடுத்து ''இதை உனது மனைவியிடம் உண்ணும்படி கொடு. குழந்தை பிறக்கும்''! என்று அருள்வாக்குச் சொன்னார்.

மன்னன் அந்தப்பழத்தை இரு கூறாக்கி, இரண்டு மனைவியரிடமும் சரிசமமாகக் கொடுத்தான்.

சில நாட்கள் செல்ல இரு மனைவியரும் கர்ப்பம் தரித்து உரிய காலத்தில் பிள்ளைகளைப் பெற்றார்கள்.

ஐயோ, பரிதாபம்! இப்படிப் பிள்ளைகள் பிறப்பதிலும் பிள்ளை இல்லையென்று இருந்திருக்கலாம் என்று அவர்கள் மனம்வேகும்படியாயிற்று!

ஒவ்வொரு பிள்ளையும் ஒருகண், ஒருகை, ஒருகாலுடன் சரி பாதிப்பிள்ளையாக இருந்தது!

இந்தச் சதைத் துண்டங்களைக் கண்ட அரசன், மிகுந்த அருவருப்புக் கொண்டவனாக, அவற்றைக் கொண்டு போய்த் தூர வீசிவிடுமாறு வேலைக்காரர்களுக்கு உத்தரவிட்டான். அவர்களும் உத்தரவை நிறைவேற்றினார்கள்.

ஊன் உண்ணும் அரக்கி ஒருத்தி அந்தச் சதைத் துண்டங்களைக் கண்டு அன்றறை உண்ணும் நோக்குடன் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து எடுத்தாள்.

என்ன ஆச்சரியம்!

அந்த இரண்டு சதைத் துண்டுகளும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டவுடனே அது முழுக் குழந்தையாகி விட்டது! அரக்கி இந்த அதிசயத்தைக் கண்டதும், அனத உண்ணும் எண்ணத்தைக் கைவிட்டு, ஒரு மானிடப் பெண்ணுருக் கொண்டு, அரசனிடம் போய் அந்தக் குழந்தையைக் கொடுத்தாள்.

குழந்தையைப் பெற்றுக் கொண்ட அரசன், மிகுந்த மகிழ்ச்சியுடன் அதைக் கண்ணும் கருத்துமாய் வளர்த்து வந்தான்.

அந்தக் குழந்தையே ஜராசந்தன்!

முனிவரின் அருளினால் பிறந்தவனாதலால், அவன் மிகுந்த வலிமை பொருந்தியவனாக வளர்ந்தான். அன்றியும், அவனது உடலை இரண்டாகப் பிளந்து போட்டாலும் மீண்டும் ஒட்டிக் கொண்டு உயிர்பெறக் கூடியவனாகவும் இருந்தான்.

படையுடன் சென்று ஜராசந்தனுடன் போரிடுவதிலும் பார்க்க, வீமனுடன் அவனைத் தனிச் சண்டைக்கிழுத்து வெற்றி கொள்வதே சிறந்த வழி என்று கண்ணன் கருதினான்.

அந்தக் காலத்தில், ஒரு அரசனை இன்னொரு அரசன் போருக்கு அழைத்தால் போருக்குச் சென்றேயாக வேண்டும். அதுவும் எதிரி என்ன மாதிரி ஆயுதம் எடுத்துப் போர் புரிகிறானோ, தானும் அதே ஆயுதம் கொண்டு போரிட வேண்டும். ஆயுதங்கள் எதுவுமின்றி எதிரி மற்போருக்கு வந்தானானால் தானும் அப்படியே போரிட வேண்டும். இந்த ஒழுங்கில் நடக்கிறவர்கள்தான் சுத்த வீரர்களாகக் கருதப்பட்டார்கள்.

கண்ணனும், வீமனும், அர்ச்சுனனும் மகத நாட்டுக்குப் போய், ஜராசந்தனின் அரண்மனைக்குச் சென்றார்கள். அங்கே அவனைச் சந்தித்துத் தாங்கள் அவனுடன் தனிப்போருக்கு வந்திருப்பதை அறிவித்தார்கள்.

ஜராசந்தன் அவர்களைப் பார்த்து, ''கண்ணா, நீ அரச குமாரனல்லன். இடையர் குலத்தில் பிறந்தவன். அர்ச்சுனனோ சிறுவனாக இருக்கிறான். வீமனே எனக்குச் சமமானவன். அவனுடன் தனிப் போரை நடத்த விரும்புகிறேன்'' என்றான்.

தன்னுடன் சமநிலை இல்லாதவர்களுடன் சண்டையிடுவது வீரர்களுக்கு இழுக்கு என்று கருதப்பட்டது.

வீமனுக்கும் ஜராசந்தனுக்குமிடையில் பயங்கரமான சண்டை நடந்தது.

கடைசியில் வீமன் ஜராசந்தனைக் கீழே விழுத்தி, ஒரு காலால் அவனுடைய உடலை மிதித்துக் கொண்டு, அவனுடைய ஒரு காலைப் பிடித்து இழுத்து இரு கூறாகக் கிழித்துப் போட்டான்.

இரு கூறாகக் கிழித்துப் போடப்பட்ட ஜராசந்தனின் உடம்பு மறுபடியும் ஒன்று சேர்ந்து கொண்டது! அவன் மீண்டும் எழுந்து அடும் சண்டையிட்டான்.

இப்படிப் பலமுறை வீமன் ஜராசந்தனைக் கிழித்துப் போட்ட போதும், அவனுடைய உடல் ஒன்று சேர்ந்து உயிர் பெற்றது.

வீமனுக்குப் பெருந்திகில் ஏற்பட்டது. 'இரண்டாகப் பிரித்துப் போட்ட பிறகும் உயிர் பெற்று வந்து சண்டையிடுகிறானே, இவனை எப்படி வெல்வது?' என்று திகைத்தவனாய் கண்ணனைப் பார்த்தான்.

கண்ணன் உடனே பக்கத்திலிருந்த ஒரு புல்லை எடுத்து அதை இரண்டாகக் கிழித்துக் கால் தலைமாறிப் போட்டுக் காட்டினான்.

அந்தக் குறிப்பை உணர்ந்து கொண்ட வீமன், மறுபடியும் ஜராசந்தனின் உடலைக் கிழித்துக் கால் தலைமாறிப் போட்டான்.

ஜராசந்தன் மாண்டு போனான்!

தருமன் இராசசூய யாகம் செய்வதற்கு இனித் தடையேதும் இல்லை. யாகம் செய்வதற்கு வேண்டிய பெரிய ஆயத்தங்கள் தொடங்கின.

யாகத்துக்கு வந்திருந்து, தங்களைப் பெருமைப் படுத்தவேண்டு மென்று எல்லா நாட்டு மன்னர்களுக்கும் பாண்டவர்கள் அழைப்பு அனுப்பினார்கள். அழைப்பை ஏற்றுக் கொண்டு எல்லா மன்னர்களுமே வந்திருந்தார்கள்.

வந்திருந்த மன்னர்களை வரவேற்று மரியாதை செய்யும் நேரம் வந்தது.

'முதல் மரியாதை' என்பது ஒரு முக்கியமான விடயம். வந்திருப்பவர்களில் பல வகையிலும் சிறந்த ஒருவருக்கே முதல் மரியாதை செய்ய வேண்டியது முறை.

யாரைத் தெரிவு செய்வதென்பது குறித்துத் தரும புத்திரன் பெரிதும் கலங்கினான்.

தங்கள் குடும்பத்துப் பெரியவரான பீஷ்மரைக் கேட்டான். பீஷ்மர் ''கண்ணனே முதல் மரியாதை செய்யத் தகுந்தவன். அவனுக்கே செய்'' என்றார். தருமன் அவருடைய வாக்கை ஏற்றுக் கொண்டு கண்ணனுக்கே முதல் மரியாதையை வழங்கினான்.

உடனே சேதி நாட்டரசனும், கண்ணனுடைய விரோதியுமான சிசுபாலன் சீறியெழுந்தான்.

''இது என்ன வெட்கக்கேடு! இந்த மண்டபத்திலே பெரிய மன்னர்கள் எல்லாம் இருக்கவும், வயதிலும் அறிவிலும் மிகுந்த பெரியவர்கள் இருக்கவும், அவர்களெல்லாரையும் ஒதுக்கிவிட்டு, இடைக் குலத்தில் வளர்ந்தவனுக்கா முதல் மரியாதை செய்கிறாய்! தருமனே நீ இதைச் செய்வதில் வியப்பேதுமில்லை. ஏனெனில் நீயும் உன் தம்பியரும் ஒழுங்காக ஒரு தந்தைக்குப் பிறந்தவர்களல்லர். உனக்கு ஆலோசனை கூறிய பீஷ்மரோ எப்போதும் தாழ்ந்த பூமியை நோக்கி ஓடுகிற பெண் பெற்ற பிள்ளை! அவருக்கும் தாழ்வான புத்தியே இருக்கும்.

''தகுதியான ஒருவனுக்குச் செய்ய வேண்டிய மரியாதையைச் செய்யாமலிருப்பதும், தகுதியில்லாத ஒருவனுக்கு மரியாதை செய்வதும் குற்றங்களல்லவா? அரசர்க்கரசனாக வர விரும்பிய நீ இந்த நீதியைத் தெரியாமலிருக்கிறாயே? கண்ணன் இடைச் சாதியில் வளர்ந்தவன் மட்டுமல்ல, அவன் தந்தையும் அரச குலத்தவனல்லன். அவனுடைய தந்தை உக்கிரசேன மன்னனின் செயலாளனாக இருந்தவன்.

குலச்சிறப்பு வாய்ந்த இத்தனை மன்னர்களும் கூடியிருக்கும் இந்த அவையிலே குலப்பெருமையற்ற கண்ணனுக்கு முதல் மரியாதை செய்து எல்லோரையும் நீ இழிவு படுத்தி விட்டாய்! உன்னுடைய குல முதல்வர் பீஷ்மருக்கோ, அல்லது அறிவிற் சிறந்த மூத்த பிராமணரான கிருபாச்சாரியாருக்கோ நீ முதல் மரியாதையைச் செய்திருந்தால் கூட நாங்கள் ஏற்றுக் கொள்ளலாம். இப்படிக் கேவலமான செயலைச் செய்து விட்டாயே!'' என்று மிகுந்த சினத்தோடு நியாயம் கேட்ட சிசுபாலன், பிறகு கண்ணனை நோக்கி, ''கிருஷ்ணா! இந்தத் தருமன் தான் இப்படி முறை கேடாக நடந்து கொண்டானென்றால், நீயாவது விலகியிருக்க வேண்டாமோ? தெய்வத்துக்குப் படைத்த உணவை, யாரும் கவனிக்காத வேளையில் ஒரு நாய் தின்றுவிட்டது போலல்லவா உன் செய்கை இருக்கிறது! இதனால் உனக்கு மதிப்பு அல்ல; உண்மையில் அவமதிப்புத்தான் ஏற்பட்டிருக்கிறது!'' என்று மிகவும் கேவலமாகப் பேசினான்.

பிறகு மற்ற அரசர்களைப் பார்த்து ''எங்களையெல்லாம் அவமதித்துவிட்ட இந்தத் தருமனுடைய அரண்மனையில் இனி ஒரு கணமும் தரித்திருக்கக் கூடாது! வாருங்கள்!'' என்று கூவி அழைத்துக் கொண்டு அவையை விட்டு வெளியேறினான். பல மன்னர்களும் குழப்பமடைந்தவர்களாய் அவனுடன் வெளியேறினார்கள்.

இதைக் கண்டு பதறித் துடித்துப் போன தருமன் ஓடிப்போய், வெளியேறிய அரசர்களுக்குச் சமாதான வார்த்தைகள் சொல்லித் திருப்பி அழைத்து வர முயற்சித்தான். ஆனால் அவனுடைய சமாதான முயற்சி கைகூடவில்லை.

சிசுபாலன் மேலும் மேலும் கண்ணனையும் பாண்டவர்களையும் தகாத வார்த்தைகளினால் பேசிக்கொண்டிருந்தான்.

சிசுபாலனின் இந்த மூர்க்கத் தனத்தைப் பொறுக்க முடியாத கண்ணன் கடைசியில் அவனுடன் போர் செய்தான்.

அந்தப் போரிலே சிசுபாலன் கொல்லப்பட்டான்.

அதன் பின் இராசசூய யாகம் சிறப்பாக நடைபெற்றது.

தருமன் 'மன்னாதி மன்னன்' என்ற புகழைப் பெற்றுக் கொண்டான்.

# 16. சூழ்ச்சி

இராசசூய யாகம் முடிந்து, வந்திருந்தவர்களெல்லாம் தருமனிடம் விடைபெற்றுக் கொண்டு தத்தம் இடங்களுக்குச் சென்றார்கள்.

வியாச முனிவரும் புறப்பட்டார். ''குந்தி புத்திரனே, மிக அரிய தான 'அரசர்க்கரசன்' என்ற பெருமைக் குரியவனானாய். உன்னால் கௌரவ குலமே பெருமை பெற்றது. சிறப்பான ஆட்சியை நடத்தி மேலும் பெருமை பெறுவாயாக!'' என்று வியாசர் வாழ்த்தினார்.

தருமன், ''மேலானவரே, நீங்கள் எமது குல முதல்வரும், குல குருவும் ஆவீர்கள். நீங்கள் தான் எனக்குப் புத்தி சொல்ல வேண்டும். சில நாட்களாகக் கூடாத கெட்ட சகுனங்களைக் கண்டு கொண்டிருக்கிறேன். அவற்றின் பலன் சிசுபாலனுடைய மரணத்துடன் முடிந்துவிட்டதா அல்லது இன்னும் ஏதாவது கொடுமைகள் நடக்குமா?'' என்று பணிவுடன் கேட்டான். கௌரவ பாண்டவர்களின் பாட்டனாராகிய விசித்திர வீரியன் இறந்த பிறகு வியாசரின் தயவினாலேயே திருதராட்டிரனும், பாண்டுவும், விதுரனும் பிறந்தார்கள். அதனாலேயே வியாசர் அவர்களின் குல முதல்வராகிறார். அவர்களுடைய குல குருவாகவும் அவரே விளங்கினார்.

''தருமா, நீ கண்ட சகுனங்களுக்குப் பலன்கள் நடந்தே தீரும். சிசுபாலனுடைய மரணத்துடன் அவை தீர்ந்து விடமாட்டா. இன்னும் பதின் மூன்று ஆண்டுகளுக்குப் பெருந்துன்பங்கள் நேரும். அரச குலமே அழிந்து விடும் போன்ற பெரிய போர் நடக்கும். அந்தப் போருக்கு நீயே காரணமாக இருப்பாய். உன் பங்காளிகளே உனக்கு விரோதிகளாக இருப்பர். அரசனே, காலத்தின் வழியே வரும் நிகழ்வுகளை யாருமே தடுத்து நிறுத்த முடியாது. நான் சொன்னவைகளைக் கேட்டு நீ மனங்கலங்காமல், விருப்பு வெறுப்பின்றி அரசனுக்குரிய கடமைகளைச் செய்வாயாக. எல்லாம் நன்மையாக முடியும். நான் போய் வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு வியாசர் போய்விட்டார்.

தருமன் மனஞ் சோர்ந்து போனான். பெருங்கவலை அவனைப் பற்றிக் கொண்டது. அவன் தனது தம்பிமாரை அழைத்து, வியாசர் சொன்னவைகளை அவர்களிடம் சொன்னான். பிறகு ''அரச குலத்தின் அழிவிற்கும் பெரிய போருக்கும் நானே காரணமாவேன் என்று

பெரியார் சொன்னதைக் கேட்ட பின் எனக்கு இந்த வாழ்வே வெறுத்து விட்டது!'' என்றான்.

அர்ச்சுனன், ''அண்ணா, நீங்கள் அரசர்க்கரசனாக இருக்கிறீர்கள். உங்கள் நிலையில் உள்ளவர்கள் எதிர்காலத்தில் நடக்கப் போவதை நினைத்துக் கலங்கக் கூடாது. அரசனுக்குக் கடமையே முக்கியமானது. நீங்கள் செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்து வாருங்கள். எது நடந்தாலும் அதை எதிர் கொள்ளத் தயாராக இருங்கள்.'' என்று ஆறுதல் சொன்னான்.

''அர்ச்சுனா நீ சொல்வது சரிதான். இன்று முதல் பதின்மூன்று ஆண்டுகளுக்கு நான் மிகவும் கவனமாக இருப்பேன். யாருடனும் — முக்கியமாக நமது உறவினர்களுடன் எவ்வித கருத்து மாறுபாடும் ஏற்படாமல் நடந்து கொள்வேன். கருத்து வேறுபாடு வந்தால்தானே, கலகமும் போரும் ஏற்படும்? நான் அவற்றைத் தவிர்த்து நடப்பேன். இது உறுதி. அதற்குமேல் நடப்பதைக் கண்டு கொள்வோம்'' என்று தருமனும் கிறிது மனம் ஆறினான்.

★

இராசசூயயாகத்துக்காக இந்திரப்பிரஸ்த நகருக்கு வந்து போன துரியோதனன் பொறாமையினால் மிகுந்த மனவேதனை யடைந்தான்.

பாண்டவர்கள் பெற்றிருந்த அளப்பரிய செல்வச் சிறப்பையும், அவர்களுடைய அரண்மனையின் அழகு கண்ணையும் மனத்தையும் கவர்ந்து, தான் நினைத்துப் பார்க்காத அளவுக்கு அலங்காரங்களைக் கொண்டிருந்ததையும், எல்லா நாட்டு மன்னர்களும் அங்கே வந்திருந்து பாண்டவர்களைப் பெருமைப் படுத்தியதையும் கண்டு துரியோதனன் நெஞ்சு கொதிக்கத் தொடங்கியது. அவன் தன்னுடைய மனக் கொதிப்பை உள்ளே அடக்க முடியாமல் தனது மாமனாகிய சகுனியிடம் சொன்னான்.

சகுனி சொன்னான்: ''துரியோதனா, நீ ஏன் கவலைப்படுகிறாய்? உனக்குள்ள துணையும் பலமும் பாண்டவர்களுக்கு இல்லையே? ஆசிரியர் துரோணரும், சிறந்த வீரனாகிய அவர் மகன் அசுவத்தாமனும், கர்ணனும், பீஷ்மரும், கிருபாச்சாரியாரும், உன்பக்கத்தில்தானே இருக்கிறார்கள்? இவர்களை விட ஜயத்ரதன், சோமதத்தன் முதலான பல வீரர்களும் உன் பக்கத்தில் இருக்கிறார்கள். நானும் இருக்கிறேன். கவலையை விடு!''

''மாமா, இவ்வளவு பலம் வாய்ந்த துணைவர்கள் இருப்பாரா யின், பாண்டவர்களுடன் போர் செய்து, அவர்களை அழித்து இந்தி ரப் பிரஸ்த நகரை நான் கைப்பற்ற முடியுமா? அப்படிச் செய்தால் தான் என் மனம் ஆறுதலடையும்'' என்றான் துரியோதனன்.

''போரா? அது ஆபத்தான செயல். போரில் எமக்கு வெற்றி கிடைத்தாலும், எவ்வளவோ அழிவுகள் ஏற்படும். அந்த அழிவுகளின் பின் வெற்றி பெற்றவனுக்குப் பெரிதாக என்ன பலன் கிடைக்கப் போகிறது? போர் செய்யாமலே பாண்டவர்களை வென்று, அவர்க ளுடைய செல்வங்களையெல்லாம் நீ அடைவதற்கு வேறு வழி இருக் கிறது!'' என்றான் சகுனி.

துரியோதனன் மிகுந்த ஆவலுடன் ''அப்படியும் ஒரு வழி இருக் கிறதா? சொல்லுங்கள் மாமா! எப்படியும் பாண்டவர்களுடைய செல் வங்கள் அனைத்தையும் நான் அடைய வேண்டும், சொல்லுங்கள்!'' என்றான்.

''துரியோதனா, தருமனைப்பற்றி உனக்குத் தெரியாதா? அவன் பந்தயம் வைத்துச் சூதாடுவதில் மிகுந்த விருப்புடையவன். அல்லாம லும் ஓர் அரசனை இன்னோர் அரசன் ஏதாவது பந்தயத்துக்கு அழைத்தால் மறுக்கக் கூடாதென்பதே அரசநீதி. உனது தந்தை பாண் டவர்களை ஏதாவது காரணம் கூறி இங்கே அழைத்து, விளையாட் டாகச் சூது போருக்கு அழைத்தால் தருமன் மறுக்கமாட்டான். உங் கள் சார்பில் தருமனுடன் விளையாட என்னை அநுமதித்தால் போதும். என்னுடைய திறமையைப் பற்றி உனக்குத் தெரியும் தானே? எவ்வித அழிவுகளுமில்லாமல் ஒரு நாளிலேயே தருமனுடைய செல் வங்கள் எல்லாவற்றையும் நான் உனக்குப் பெற்றுத் தருவேன்!'' என்று பயங்கரமான ஒரு விதையைத் துரியோதனனின் மனத்தில் விதைத்தான் சகுனி.

துரியோதனனின் மனத்திலே விழுந்த அந்த விதை ஒரு கணத்தி லேயே செழித்து வளர்ந்து பெரிய மரமாகி விட்டது!

★

''எது விதத்திலும், தருமனை அழைத்துச் சூதாட்டத்தை நடத்த வேண்டும். சகுனியின் திறமையினால் அந்தக் கபடத்தின் மூலம் பாண்டவர்களுடைய செல்வத்தையெல்லாம் பறித்துக் கொண்டு அவர்களை அநாதைகளாகக் காட்டுக்குத் துரத்தி விட வேண்டும்'' என்று துரியோதனன் இரவு பகலாகச் சிந்தித்தான்.

கடைசியில் சகுனியையும் துணைக்கு அழைத்துக் கொண்டு தகப்பனிடம் போய்த் தன்னுடைய விருப்பத்தை மெல்ல மெல்ல வெளியிட்டான்.

திருதராட்டிரன் முதலில் மறுத்தான். பாண்டவர்கள் உனது சகோதரர்கள் தானே என்றான். சூதாட்டம் கொடியது என்றான். உலகம் நம்மைப் பழிக்கும் என்றான்.

துரியோதனன் தந்தையின் சமாதானம் எதையும் கேட்கும் மன நிலையில் இல்லை. சொன்னவற்றுக்கெல்லாம் அவன் பதில் சொன்னான். சாதாரண மக்களுக்குச் சொல்லும் நீதிகள் எல்லாம் அரச குலத்தாருக்கு ஏற்காது என்று பிரகஸ்பதியே சொல்லியிருக்கிறார் என்றான். எவன் ஒருவன் அரசனுடைய துன்பத்துக்குக் காரணமாக இருக்கிறானோ, அவன் யாராயிருந்தாலும் — உடன் பிறப்பாக இருந்தாலும் அவன் பகைவனே என்றான். சூதாட்டம் என்பதும் ஒரு வகைப் போர்தானே? அரசர்கள் காலநேரத்துக்குத் தக்கதாக எந்த வழியிலும் தங்கள் போரை நடத்தலாம் என்றான். தோற்றவனைத் தான் உலகம் பழிப்பது வழக்கம். வென்றவனை உலகம் போற்றிப் பாராட்டும் என்றான்.

திருதராட்டிரன் பிறகும் ஏதோ சொல்லிப்பார்த்தான். துரியோதனன் விடுவதாயில்லை. கடைசியில் திருதராட்டிரனும் மகனுடைய விருப்பப்படி நடக்கச் சம்மதித்தான்.

நீதி நியாயத்துக்கும் பிள்ளைப் பாசத்துக்குமிடையே ஊசலாடுவது திருதராட்டிரனுக்கு வழக்கம். கடைசியில் பிள்ளைப் பாசத்தினாலேயே அவன் ஆட்கொள்ளப்படுவதும் வழக்கம்.

திருதராட்டிரன், விதுரனை அழைத்துத் துரியோதனனுடைய விருப்பத்தைச் சொன்னான்.

விதுரன் பல நியாயங்களை எடுத்துச்சொல்லி, ''இது எங்கள் குலத்துக்கே அழிவை ஏற்படுத்தி விடும். அரசனாகிய நீங்கள் சரி எது பிழை எது என்பதை ஆராய்ந்து அறிந்து சரியான வழியில் நடக்க வேண்டும். பிழையான இந்த வழி நமக்கு வேண்டாம்'' என்றான்.

திருதராட்டிரனோ தனது மகனின் பிடிவாதத்தை எடுத்துக் கூறி 'நாம் எவ்வளவு புத்திசாலித்தனமாக நடந்தாலும் விதி எதுவோ,

அதன்படிதான் எல்லாம் நடக்கும். நமது கையில் ஒன்றும் இல்லை. துரியோதனன் துன்பப்படுவதை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. நீ இந்திரப்பிரஸ்தம் சென்று தருமனை நான் ஆட்டத்துக்கு அழைத்ததாகச் சொல். அவன் வந்தால் அழைத்து வா!'' என்றான்.

இப்போதும்கூட, பலர் தங்கள் தவறுகளை 'விதி'யின் மேல் பாரத்தைப் போட்டு மறைப்பதைப் பார்க்கிறோம்.

திருதராட்டிரனுடைய அழைப்பை விதுரன் தருமனிடம் சொன்னதும், தருமனும் அந்த அழைப்பை ஏற்றுத் தம்பிமார்களையும், திரௌபதியையும் துணையாட்களையும் கூட்டிக் கொண்டு அஸ்தனாபுரம் போனான்.

தருமனுக்கு இயல்பாகவே சூதாடுவதில் விருப்புண்டு. ஆனால் அதனால் கெடுதி வருமென்று அஞ்சி, பொதுவாக அதைத் தவிர்த்து வந்தான்.

திருதராட்டிரனுக்காக விதுரன் வந்து அழைத்த போது தருமருடைய அறிவு அவனைப் போகாதே என்றது. ஆனால் அவனுடைய உள்ளாசை பல காரணங்களைச் சொல்லி அவனைச் சம்மதிக்க வைத்தது.

'பெரியவரும் அரசனுமான திருதராட்டிரன் ஆட்டத்துக்கு அழைக்கும் போது மறுப்பது முறையாகாது' என்றும்,

'சாதாரண ஆட்டம்தானே? இதிலென்ன பெரிய கேடு வந்து விடப்போகிறது?' என்றும்.

இவற்றுக்கு மேலாக, 'பங்காளிகளுடன் பெரும் போர் மூளும்' என்று வியாசர் சொன்னாரே, திருதராட்டிரனுடைய அழைப்பைத் தட்டிக் கழித்தால் அதன் மூலம் அஸ்தனாபுரத்தாருடைய பகை வந்து விடக் கூடுமோ' என்றும் தருமனுடைய உள் மனது சமாதானம் சொல்லி ஆட்டத்துக்குச் சம்மதிக்க வைத்தது.

சூதாட்டம் ஆடுவதற்காக ஒரு புதிய மண்டபமே அமைத்திருந்தார்கள். வழக்கம் போல நடுவே துணி விரிக்கப்பட்டிருந்தது.

''துரியோதனா, உன்னுடைய தந்தையால் ஆட்டம் ஆட முடியாது. ஆகவே நீதான் என்னுடன் ஆடவேண்டும். இனித்தாமதமேன்? வா, ஆட்டத்தைத் தொடங்கலாம்'' என்றான் தருமன்.

துரியோதனன் ''நான் இந்த ஆட்டத்தில் உமக்குச் சமமானவ

னல்ல. எனக்காக எனது மாமா ஆடுவார். பந்தயப் பொருட்களை நான் கொடுப்பேன்'' என்றான்.

''ஒருவருக்காக இன்னொருவர் ஆடுவது முறையல்லவே?'' என்றான் தருமன்.

''ஏன் முறையில்லை? போர்களில் கூட, அரசனுக்காக வல்லமையுள்ள இன்னொருவன் போரிடுவது வழக்கம்தானே? என்னோடு ஆடுவதற்கு அஞ்சுகிறாயா? அப்படியானால் இயலாது என்று கூறிவிட்டுத் திரும்பிப்போ!'' என்று சகுனி தருமனைக் குத்தினான்.

''அச்சமா? எனக்கா? வழக்கத்தைச் சொன்னேன் சரி, நான் தயார். ஆடலாம்!'' என்று தருமன் சூதாட்டப் பலகையின் ஒரு பக்கத்தே உட்கார்ந்தான்.

## 17. சூதாட்டம் தொடங்கிற்று

மண்டபம் நிறைய அஸ்தனாபுரத்துப் பெரியவர்களும் அரசகுமாரர்களும் நிறைந்திருந்தார்கள்.

துரியோதனன் மிகுந்த மகிழ்ச்சியோடு காணப்பட்டான்.

தருமன் முதலில் மிக உயர்ந்த இரத்தினக் கற்களைப் பந்தயப் பொருளாக வைத்தான்.

தோற்றான்.

பிறகு, விலைமதிப்பற்ற பொன்னாபரணங்களை வைத்தான்.

தோற்றான்.

அதன் பிறகு, தனது அடிமைகளையும், வேலையாட்களையும் வைத்தான்.

தோற்றான்.

பேரரசனிடமா பொருட்களுக்குப் பஞ்சம்?

தருமன் தனது நால்வகைப் படைகளையும் பந்தயமாக வைத்தான்.

தோற்றான்.

செழிப்பு மிக்க தன்னுடைய நாட்டையே வைத்து ஆடினான் தருமன்.

தோற்றான்!

''இவ்வளவுதானே! இனி உன்னிடம் ஒன்றுமில்லையே?'' என்று சகுனி ஏளனமாகக் கேட்டான்.

தருமனின் ஆணவமும் ஆசையும் விடவில்லை. சூதிலே எத்தனை முறைதோற்ற பிறகும் 'அடுத்த முறை வென்று விடுவோம்' என்று ஒரு ஆசை ஏற்படுவதுண்டு. கெட்ட வழியான சூதாட்டத்தில் இறங்கிய பிறகு, பேரறிஞனும் தன்னுடைய புத்தியை இழந்து விடுகிறான். அதற்குத் தருமன் உதாரணம்.

'இவ்வளவுதானே?' என்று சகுனி கேட்டதும், தருமன், ''ஏன் சிறந்த வீரனாகிய என்னுடைய அருமைத் தம்பி நகுலன் இருக்கிறான். அவனும் என்னுடைய சொத்துத்தான். அவனை வைத்து ஆடுகிறேன்!'' என்றான்.

சகுனி காய்களை உருட்டினான்; 'வென்றேன்' என்றான்.

மண்டபத்திலிருந்த பெரியவர்களெல்லாம் நெஞ்சு பதைத்தனர். அந்தக் காலத்தில், ஒரு குடும்பத்திலிருந்த அனைவரும் குடும்பத் தலைவனுடைய சொத்துக்களாகவே கருதப்பட்டனர். அரிச்சந்திரன் தன்னுடைய மனைவியையும் பிள்ளையையும் விலை கூறி விற்பதற்கு உரிமை கொண்டிருந்தான்.

நியாயம் எப்படியிருந்தாலும்,

தருமனா! தன்னுடைய சொந்தத் தம்பியைச் சூதிலே தோற்று அவனை எதிரிகளின் அடிமையாக்கியிருக்கிறானா! என்று மண்டபத்திலிருந்த பெரியவர்கள் பதறினார்கள். ஆனால் யாரும் வாய்திறக்கவில்லை. 'மண்டபத்தில் நடப்பதோ ஒழுங்கு விதிக்குட்பட்ட ஒரு போர். அதில் தலையிட மற்றவர்களுக்கு உரிமையில்லை!' என்பது அன்றைய நீதி.

நகுலனைத் தோற்ற உடனே, சகாதேவனைப் பணயம் வைத்தான் தருமன்.

அவனையும் இழந்தான்.

தருமன் ஒரு கணம் சிந்தித்தான். ஒரு கணந்தான், அதற்கு மேல் சிந்திக்க விடவில்லை சகுனி.

''நகுலனும், சகாதேவனும் உன்னுடைய சொந்தத் தாயான குந்தி பெற்ற பிள்ளைகளல்லவே? அதனால் அவர்களைச் சுலபமாகப் பணயம் வைத்து ஆடிவிட்டாய். அர்ச்சுனனும், வீமனும் குந்தி பெற்ற

உனது உடன் பிறப்புகளல்லவா! அதுதான் யோசிக்கிறாயா?'' என்று சகுனி தருமனின் நெஞ்சில் அடித்தான்.

தருமன் இப்படி ஒரு கெட்ட பெயரைத் தாங்க விருப்பமில்லாமலோ அல்லது அடுத்த ஆட்டத்தில் வெற்றியை அடையலாமென்று நினைத்தோ அல்லது இயல்பான சூதாட்ட ஆசையாலோ, அர்ச்சுனனைப் பணயமாக வைத்தான்.

அவனைத் தோற்றதும் வீமனையும் வைத்து இழந்தான்!

பிறகு, தன்னையே பணயமாக வைத்து ஆடித் தன்னையும் இழந்தான்!

மன்னாதி மன்னர்களாகவும், வீராதி வீரர்களாகவும் விளங்கிய பாண்டவர்கள் ஒரே நாளில் எல்லாச் செல்வங்களையும் இழந்து அடிமைகளாகி விட்டனர்!

நிலை கலங்கிப் போயிருந்த தருமன் புத்தி செத்துப் போயிருந்தான்.

அப்போது சகுனி சொன்னான்:

''தருமா, கவலைப்படாதே! நீ இழக்காத பொருள் ஒன்று உன்னிடம் இன்னமும் இருக்கிறது. அதை வைத்து ஆடினால், — யார் கண்டது, ஒருவேளை நீ இழந்த அனைத்தையும் மீட்டுக் கொள்ளக் கூடும்!'' என்றான்.

குனிந்த தலையை நிமிர்த்தித் தருமன் சகுனியை நோக்கினான்.

''உங்களுடைய பத்தினி பாஞ்சாலி இருக்கிறாளே, அவளும் உன்னுடைய பொருள்தானே?'' என்றான் சகுனி.

அறிவு கெட்டுப்போன தருமன், ''அவளையும் வைக்கிறேன். ஆடு!'' என்று விம்மல் பொருமல்களுக்கிடையே கூறினான்.

சகுனி காய்களை உருட்டினான்.

மண்டபத்தில் ஒரு கணம் மரண அமைதி நிலவிற்று.

''வென்றேன்'' என்று குதூகலத்துடன் சகுனி கத்தினான்.

மண்டபத்திலிருந்த பெரியோர்களைத் துயரமும், பயமும் பிடித்துக் கொண்டது. வாய்திறக்க முடியாமல் அவர்கள் கலங்கிப் போயிருந்தார்கள்.

துரியோதனனும், தம்பிமார்களும், கர்ணனும் 'ஓ! ஓ!' என்று மகிழ்ச்சி ஆரவாரஞ் செய்தார்கள்.

மகிழ்ச்சியின் உச்சியிலே ஏறிநின்று, தன் நிலையையும், அறிவையும் இழந்த துரியோதனன் தனது தேரோட்டியாகிய பிரதிகாமி என்பவனை அழைத்து ''அந்தப் புரத்தில் திரௌபதி இருப்பாள். அவளுடைய எசமான் துரியோதனன் அவளை உடனே அழைத்து வரச் சொன்னதாகச் சொல்லி இங்கே அழைத்து வா'' என்றான்.

அந்தப்புரம் சென்ற பிரதிகாமி, மிகுந்த ஆவலோடு காத்திருந்த சபைக்குத் திரும்பி வந்தான்.

''எங்கே திரௌபதி?'' என்று துரியோதனன் கேட்கு முன்பே பிரதிகாமி, ''அரசனே, தருமபுத்திர மகாராசா முதலில் தம்மைத் தோற்றாரா? அல்லது மனைவியைத் தோற்றாரா? என்பதை இந்தச் சபையில் கேட்டுப் பதில் கொண்டு வரும்படி அந்த அம்மையார் சொன்னார்கள்'' என்றான்.

ஏதோ அவமானப்படுத்தப்பட்டது போலத் துரியோதனனுக்குப் பெரிய கோபம் ஏற்பட்டது.

'என்னுடைய அடிமை ஒருத்தி, என்னுடைய உத்தரவுக்கு விளக்கம் கேட்டுக்கொண்டிருக்கிறாளா!'' என்று அவன் பொருமினான். பிறகு துச்சாதனனைப் பார்த்து, ''இந்தத் தேரோட்டி பாண்டவர்களைக் கண்டு இன்னமும் பயந்து சாகிறான் போலிருக்கிறது. நீ உடனே அந்தப்புரம் போய் அவளை இங்கே இழுத்துக் கொண்டு வா!'' என்று வாய் கூசாமற் சொன்னான்.

மண்டபத்திலிருந்த பெரியவர்களின் நெஞ்சங்கள் துடியாய்த் துடித்தன.

தமயனின் உத்தரவுக்குக் காத்திருந்தவன் போலத் துச்சாதனன் உடனே எழுந்து அந்தப்புரம் நோக்கிச் சென்றான்.

அந்தப்புரத்தில் திரௌபதியைக் கண்ட துச்சாதனன் மிகுந்த வெற்றிக்களிப்புடன், ''அழகான பெண்ணே, ஏன் வாக்குவாதம் செய்து காலத்தை வீணாக்குகிறாய்? எல்லோரும் அறியும் படியாக உன்னைச் சூதாட்டத்தில் வென்று விட்டோம். பாண்டவர்களுக்குச் சொந்தமாக இனி ஒரு துரும்பும் இல்லை. எல்லாவற்றையும் இழந்து எமக்கு அடிமைகளாகி விட்டார்கள். நீயும் எங்களுக்குரியவளாகி விட்

டாய்! ஒழுங்கு விதிகளை மீறி நடக்க முயலாதே! உன்னுடைய எசமான் உன்னை மண்டபத்துக்கு உடனே வரும்படி அழைக்கிறான். தாமதியாதே புறப்படு!'' என்றான்.

என்ன செய்வதென்று தெரியாமல் நடுங்கிக் கொண்டிருந்த திரௌபதி அந்த இடத்தை விட்டு ஓடி விட முயன்றாள்.

துச்சாதனன் எட்டி அவளைப் பிடித்தான்.

அவள் திமிறினாள்.

அவன் அவளுடைய கூந்தலைப் பிடித்துக் குழறக் குழற இழுத்துக் கொண்டு, எல்லாரும் கூடியிருந்த மண்டபத்துக்குக் கொண்டு வந்தான்.

சபையிலிருந்த பெரியவர்களைப் பார்த்துக் குழறி அழுத திரௌபதி, துயரமும் கோபமும் நிரம்பிய குரலில் தனக்கு நீதி கேட்டாள்.

எல்லோரும் மௌனமாகத் தலை குனிந்திருந்தார்கள். நீதியும் நியாயமும் அங்கே செத்துக் கிடந்தன!

# 18. பாஞ்சாலி சபதம்

திரௌபதியின் நிலையைக் கண்டு, பாண்டவர்கள் கொதித்தார்கள். ஆனாலும் அன்றைய நீதிக்கும் நியாயத்துக்கும் கட்டுப்பட்டுத் தலைகுனிந்து இருந்தார்கள்.

வீமன் தன்னை அடக்க முடியாதவனாய், ''தம்பி சகாதேவா! நெருப்புக் கொண்டுவா, கேடு கெட்ட சூதாட்டம் ஆடி, திரௌபதியைப் பணயம் வைத்திழந்த எங்கள் அண்ணனின் கைகளை நெருப்பிலே எரிக்க வேண்டும்!'' என்று விம்மினான்.

அர்ச்சுனன், வீமனைச் சமாதானப் படுத்தினான். அவன் வீமனைப் பார்த்து மிக உறுதியாகச் சொன்னான். ''வீமா, என் உடன் பிறந்தவனே, என்ன வார்த்தை சொன்னாய்? யாரைப்பற்றிச் சொன்னாய்? யார் முன்னே சொன்னாய்? கோபத்தினால் நீ அறிவையும் இழந்து விட்டாயே! தெய்வம் போன்ற எங்கள் அண்ணனைப்பற்றி, ஆண்மையற்றோர் கூடியிருக்கும் இந்தச் சபையிலே நீ இழித்துக் கூறலாமா?''

வீமன், தனது தமயனைப் பற்றித் தான் தவறாகப் பேசி விட்டதை உணர்ந்தவனாய் மௌனமாக உட்கார்ந்து விட்டான்.

இந்தச் சமயம் கௌரவர் பக்கத்திலிருந்து ஒரு புதிய குரல் எழுந்தது. அந்தக் குரலுக்குரியவன் விகர்ணன் என்ற துரியோதனனின் தம்பி.

''பெரியவர்களே, அரசகுல வீரர்களே, இந்தச் சமயத்திலும் கூட ஏன் பேசாமலிருக்கிறீர்கள்? நீங்கள் பேசாமலிருப்பதால் வயதிற் சிறியவனான நான் பேசவேண்டியிருக்கிறது.

''வஞ்சனையான சூதாட்டத்திலே திரௌபதி பணயம் வைக்கப் பட்டாள். அது செல்லாதது!

''திரௌபதி தருமனுக்கு மட்டும் சொந்தமானவளல்ல. அவளைப் பணயம் வைக்க அவனுக்கு உரிமையில்லை!

''தருமன் முதலில் தன்னை இழந்தான். தன்னையே இழந்த ஒருவன் அதன்பிறகு இவளை வைத்து ஆடுவதற்குத் தகுதியற்றவனாகிறான்!

''எல்லாவற்றுக்கும் மேலாக, திரௌபதியை வைத்து ஆடும்படி சகுனியே முதலிற் கேட்டான். 'இன்னபொருளை வைத்து ஆடு!' என்று கேட்பது அரசகுல வழக்கத்துக்கு மாறானது!

''எனவே, திரௌபதி முறையாக வெல்லப்பட்டவளல்லள்! — இது எனது கருத்து!''

மண்டபத்திலிருந்த பெரியவர்களின் மனத்தில் சிறியவனான விகர்ணன் பெரிய மனிதனாகத் தோன்றினான்!

ஆனால், கர்ணன் சிறிக்கொண்டு எழுந்து, ''விகர்ணா, சிறியவனே! பெரியோர்கள் இருக்கும் இந்தச் சபையிலே அறிவில்லாமல் வாதம் புரியப் புறப்பட்டிருக்கிறாய்! நெருப்பைக் கடையும் கட்டை அந்த நெருப்பாலேயே எரிக்கப்படுவது போல உன்னுடைய குலத்துக்கே நீ கொள்ளி வைக்கிறாய்! முதலிலேயே தருமன் தன்னுடைய எல்லாப் பொருள்களையும் இழந்து விட்டான். அந்தப் பொருள்களுள் திரௌபதியும் அடங்குவாள்.

''இனியும் இதைப்பற்றி என்ன வீண் பேச்சு? துச்சாதனா, அடிமைகள் மேலாடை அணிவதற்கு உரிமையற்றவர்கள். இவர்கள் அணிந்திருக்கும் மேலாடைகளைக் களைந்தெடு!'' என்றான்.

கர்ணனின் இந்தப் பேச்சைக் கேட்ட பாண்டவர்கள், தம்மிடம்

யாரும் வர முன்னரே தமது மேலாடைகளைக் கழற்றி மண்டபத்தில் வீசினார்கள்.

துச்சாதனன் எழுந்தான்!

திரௌபதியின் பக்கத்தே போனான்.

''அடிமைப் பெண்ணே, அந்த அடிமைகள் மறு பேச்சின்றித் தங்கள் மேலாடைகளைக் கழற்றிப் போட்டுவிட்டார்கள். நீ மட்டும் இன்னும் ஆடையைக் கழற்றிப் போடாமலிருக்கிறாயே, கழற்றடீ!'' என்று கொடுஞ் சொல்லை வீசிய துச்சாதனன், திரௌபதியின் சேலையைப் பற்றி இழுத்தான்!

''ஓ, கொடுமை! கொடுமை!'' என்று சபையோர் தலை குனிந்தார்கள்.

'இந்தப் பூமி ஏன் இன்னும் பிளந்து சிதறவில்லை!'

'ஆகாயம் ஏன் இடிந்து விழவில்லை!'

'பெரிய கடல் பொங்கி வந்து ஏன் இந்த நாட்டை அழிக்கவில்லை!'

'கொடிய சூறாவளி வீசி இந்த மண்டபத்தை ஏன் இன்னும் தூக்கி வீசவில்லை!'

'இந்தப் பாவிகளை ஏன் இன்று நெருப்புத்தின்னவில்லை?'

இப்படி, உலகத்தை நிலை பெறச் செய்கிற ஐந்து பூதங்களையும் பெரியோர்கள் மனத்துக்குள்ளே துணைக்கு அழைத்தார்கள்.

'குய்யோ முறையோ' என்று குமுறி அழுத திரௌபதி மனிதர்களையும் தெய்வங்களையும் துணைக்கு அழைத்துப் புலம்பினாள்.

நீதி ஒழுங்குக்குக் கட்டுப்பட்டவர்களாய்ப் பாண்டவர்கள் தலை குனிந்திருந்தார்கள்.

அந்தக் காலத்தில் சூதாடுவதும் ஒரு போர் முறையாகக் கருதப் பட்டது.

போரிலே தோற்றவர் வென்றவருக்கு அடிமை என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அடிமைகளை அவர்களின் ஆண்டான் எதுவும் செய்யலாம். அடிமைகளைச் சித்திரவதை செய்து வேடிக்கை பார்க்கலாம். அடிமைப் பெண்களைப் பாலியல் வன்முறைகளுக்கு ஈடுபடுத்தலாம்; ஆண்டான் அடிமையைக் கொலை செய்தாலும் அது நியாயமானதென்றே கருதப்

பட்டது! அடிமைகளுக்கு ஆண்டான் செய்யும் கொடுமைகளைத் தடுக்க முனைபவனே குற்றம் செய்தவனாகக் கருதப்பட்டான்.

'அறத்தின் வழி நின்றவர்கள்' என்று பாண்டவர்கள் புகழப்பட்டாலும், 'சொந்த மனைவியை மாற்றான் மானபங்கஞ் செய்யப் பார்த்துக் கொண்டிருந்த பதர்கள்' என்று இன்னொரு பக்கத்தில் உலகம் இகழக் கூடியதாக அவர்கள் செய்கை இருந்தது.

திரௌபதிக்குக் கண்ணன் மீது நம்பிக்கை. அவன் அந்தச் சபையில் இல்லாவிட்டாலும், அவள் கடைசியாகக் 'கண்ணா, கண்ணா! என்னைக் காப்பாற்று!' என்று கதறினாள்.

அப்போது ஓர் அதிசயம் நடந்ததாகப் பாரதக் கதை சொல்கிறது.

துச்சாதனன் இழுக்க இழுக்கத் திரௌபதியின் சேலை வளர்கிறது.

அவன் இழுக்கிறான்.

சேலை வளர்கிறது!

அவன் இழுக்கிறான்,

சேலை வளர்கிறது!

கடைசியில் கை ஓய்ந்தவனாய் துச்சாதனன் உட்கார்ந்து விட்டான்.

இதற்குப் பிறகு வீமன் எழுந்தான். நீதி நியாயங்களையெல்லாம் ஒதுக்கிவிட்டு எப்போதோ எழுந்திருக்க வேண்டியவன் அண்ணன் மனம் நோகக் கூடாதே என்று இதுவரை பொறுத்திருந்தவன், இப்போது எழுந்தான். கண்கள் சிவக்க, உதடுகள் துடிக்க, உடலெங்கும் நெருப்பாய் எரிய வீமன் உரத்த குரலில் ஒரு சபதம் செய்தான்.

''திரௌபதிக்கு இழிவு செய்த இந்தப் பாவி துச்சாதனனின் மார்பைக் கிழித்து இரத்தத்தை உறிஞ்சிக் குடித்த பிறகுதான் நான் என் கைகளால் நீர் எடுத்து உண்பேன்! இது சத்தியம்!''

''கெட்டவர்களாகிய துரியோதனாதியருக்கு உடந்தையாக இருந்து இந்தச் சபையிலே பாஞ்சாலிக்குப் பழுது சொன்ன கர்ணனைப் போரிலே நான் கொல்வேன். என் காண்டீபத்தின் மேல் ஆணை!'' என்று அர்ச்சுனன் வெஞ்சினம் கூறினான்.

அவிழ்ந்து கலைந்த கூந்தலோடு கண்ணீரும் கம்பலையுமாக நின்ற திரௌபதி ''என்னை இந்த அரசர்கள் மத்தியில் அவமானம் செய்த பாவி துச்சாதனன், அவனுடைய அண்ணன் துரியோதனன் இருவரும் போர்க்களத்திலே நெஞ்சு பிளந்து இறந்து கிடக்கும் போது அவர்கள்

இருவரின் இரத்தத்தையும் கலந்து என் கூந்தலில் பூசிய பிறகுதான் இந்தக் கூந்தலை முடிப்பேன். அது வரை இன்று அவிழ்ந்த கூந்தலை முடிக்கமாட்டேன். சத்தியம். கண்ணன் மீது ஆணை!'' என்று பெருங் குரலில் சத்தியம் செய்தாள்.

அந்த மண்டபத்திலிருந்த பெரியோர்கள் எல்லோரும் ஏதோ கேடு வரப் போவதை உணர்ந்து நெஞ்சு பதறினார்கள்.

★

நடந்த நிகழ்வுகள் திருதராட்டிரனுக்கு மிகுந்த கவலையையும், பயத்தையும் உண்டாக்கின. ஏதோ பெரிய குல நாசம் நடக்கப் போவதாக அவனது உள்ளுணர்வு சொல்லிற்று. திருதராட்டிரன் தனது புத்திரர்கள் மீதுள்ள விருப்பத்தால், தவறான வழிகளில் இழுபட்டாலும் அறவழி தவறக் கூடாதென்ற அறிவும் உள்ளவன்.

அவன் திரௌபதியைச் சமாதானம் செய்ய விரும்பி அவளை அழைத்து, ''அன்புக்குரிய என் மருமகளே, ஏதோ கெட்ட காலம் இப்படியெல்லாம் நடக்கக் கூடாதவை நடந்து விட்டன. எல்லாவற்றையும் மறந்து விடு. உனக்கு நான் என்ன செய்ய வேண்டுமோ கேள். அதைச் செய்து தருகிறேன்'' என்றான். அவமானத்தாற் குன்றிப் போன திரௌபதி எதுவுமே பேசவில்லை.

திருதராட்டிரன் பிறகு தருமனை அழைத்து ''தருமா என் மகனே, துரியோதனன் அறிவின்மையாலும், கெட்ட நண்பர்களின் பேச்சைக் கேட்டதாலும் இப்படிக் கொடுமைகளைச் செய்து விட்டான். நான் மிகவும் வருந்துகின்றேன். எனக்காக நீ துரியோதனனையும் மன்னித்துவிடு. சூதாட்டத்தில் இழந்ததாகச் சொல்லப்படும் உன்னுடைய நாடு, நகரங்கள் மற்றும் எல்லாச் செல்வங்களையும் நீயே பெற்றுக்கொள். இந்திரப்பிரஸ்தம் போய் எல்லாச் சிறப்புகளுடனும் வாழ்வாயாக!'' என்றான்.

திருதராட்டிரன் இப்படி எல்லாவற்றையும் திருப்பிக் கொடுத்த போதிலும், பாண்டவர்களுக்கு மனம் ஒப்பவில்லை. பலருடைய முன்னிலையிலும் தோற்று விட்டவைகளை எவ்வித தண்டனையுமின்றித் திரும்ப வாங்கிக் கொள்வதற்கு அவர்கள் மனம் கூசினார்கள்.

பிறகு, பல பெரியவர்களின் ஆலோசனைப்படி பாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் செய்வதென்றும் அதன் பின் ஓராண்டு காலம் பிறர் அறியாமல் மறைந்து வாழ்ந்து அதன் பின்

னர் நாடு திரும்ப வேண்டும் என்றும் தீர்மானமாயிற்று.

அதன் படியே பாண்டவர்களும் திரௌபதியும் காட்டு வாழ்க்கைக் கேற்ற உடையணிந்து அஸ்தனாபுரநகர் வீதிகளில் நடந்து சென்றார்கள். குதிரைகளிலும், தேர்களிலும் படை பட்டாளஞ் சூழ ஊர்வலம் செல்ல வேண்டியவர்கள் இப்படிக் கால் நடையாக எளிய கோலத்தில் தலை குனிந்து செல்வதை நகரத்து மக்கள் மிகுந்த கவலையுடன் பார்த்தார்கள்.

## 19. பாசுபதம்

பாண்டவர்களும் திரௌபதியும் காட்டுக்குப் போய் அங்கே வாழத் தொடங்கியதும், அவர்களுடைய நண்பர்களாயிருந்த பல மன்னர்களும் முனிவர்களும் அவர்களைப் போய்ச் சந்தித்து ஆறுதல் வார்த்தை கூறினார்கள்.

''இந்த அநியாயத்தை எதிர்த்து முறியடிக்க வேண்டும். நீங்கள் கௌரவர்களுடன் போருக்கு எழுவதானால் நாங்கள் உங்களுக்கு உதவ இப்பொழுதே தயார்!'' என்று பல மன்னர்கள் மனம் நெகிழ்ந்து கூறினார்கள்.

துவாரகையிலிருந்து கண்ணனும் வந்தான். பாண்டவர்களுக்குக் கொடுமை நடந்த நேரத்தில் தான் சாலவ மன்னனுடன் போரிட்டுக் கொண்டிருந்ததால் அஸ்தனாபுரம் வரமுடியாமல் போயிற்றென்றும், போர் நடக்காதிருந்தால், திருதராட்டிரன் அழைக்காவிட்டாலும் கூடத் தான் அங்கே வந்து பாண்டவர்களுக்கு உதவியிருப்பேனென்றும் கண்ணன் சொன்னான்.

திரௌபதி கண்களிலிருந்து நீர் சொரியக் கண்ணனைப் பார்த்து 'கண்ணபெருமானே, மன்னாதி மன்னர்களும், வீராதி வீரர்களுமான பாண்டவர்களுக்கு மனைவியான நான், அஸ்தனாபுரத்தில் ஆண் மக்கள் நிறைந்திருந்த சபைக்கு இழுத்துச் செல்லப்பட்டு, நாயினும் கேவலமாக நடத்தப் பட்டேன். என் மானத்தைக் காப்பாற்ற அங்கே யாரும் இல்லை. வலுமிக்க வீமசேனரின் வீர இரத்தம் வெறுந் தண்ணீராய்க் கிடந்தது. அர்ச்சுனனுடைய காண்டீபம் வெறும் புல்லாகிக் கிடந்தது. வீரர்களான நகுல சகாதேவர்களும் பெண்களைப் போல ஒதுங்கிவிட்டார்கள். யாருமற்ற அநாதையாக அந்தச் சபை

நடுவே குதறிக் கிழிக்கப்பட்டேன் ... ...'' என்று தனது நெஞ்சிலிருந்த நெருப்பைக் கொட்டினாள்.

கண்ணன் திரௌபதியின் நிலைகண்டு மிகுந்த இரக்கம் கொண்டவனாக அவளுக்கு ஆறுதல் சொன்னான்: ''திரௌபதி, கவலைப் படாதே. உனக்குத் தீங்கு செய்தவர்கள், உடலெல்லாம் இரத்தம் தோய நிலத்தில் விழுந்து மண்ணோடு மண்ணாகிப் போவார்கள். இது உறுதி. பாண்டவர்கள் நடத்தப் போகும் போரிலே அவர்களுக்கு என்னென்ன உதவி வேண்டுமோ அவற்றையெல்லாம் நான் செய்வேன். நீ மீண்டும் அரசர்க்கரசனின் மனைவியாக எல்லாரும் போற்றச் சிறப்புடன் வாழ்வாய். இது சத்தியம்! என்னை நம்பு!''

கண்ணனின் இந்த உறுதி வார்த்தைகள் திரௌபதியின் நெஞ்சிற் கிடந்த நெருப்பிலே தண்ணீரை ஊற்றின. அவள் கண்ணனுடைய பாதங்களில் விழுந்து வணங்கினாள்.

★

வீமனுக்கு மனம் ஆறவேயில்லை. தமயனுடைய சொல்லுக்குக் கட்டுப்பட்டுப் பேசாமலிருப்பதும், பிறகு அடிக்கடி தன்னுடைய கோபமான வார்த்தைகளைக் கொட்டுவதுமாக இருந்தான்.

''அண்ணா, நீங்கள் அமைதியாக இருப்பதைப் பார்க்கப் பார்க்க, எனக்கு வியப்பாக இருக்கிறது. கேவலமாகவும் இருக்கிறது. அறம் என்றும், நீதி என்றும் சொல்லிக் கொண்டு நீங்கள், இந்தக் கொடுமைகளையெல்லாம் பொறுத்துக் கொண்டிருக்கிறீர்களே, அரச குலத்தவருக்குரிய இலக்கணம் என்னவென்று நீங்கள் படித்ததில்லையா? குற்றம் செய்தவர்கள் மீது கோபம் கொள்வதும், அவர்களை ஈன இரக்கமின்றித் தண்டிப்பதும் அரசர்களுடைய கடமையன்றோ? நீங்கள் பேரரசனாக இருந்தும், அரச குல நீதியைக் கைவிட்டு, ஒரு பிராமணனைப் போல நடந்து கொள்கிறீர்கள். துரியோதனன் முதலியோர் செய்த குற்றங்களுக்கு அவர்களைத் தண்டிக்காமலிருப்பது எங்களுக்கு இழுக்காகும். அண்ணா, அநுமதி கொடுங்கள். நான் ஒருவனே அஸ்தனாபுரம் போய், அந்தக் கொடியவர்கள் எல்லாரையும் என்னுடைய கதாயுதத்தால் நொருக்கிவிட்டு வருகிறேன்!''

தருமன் சிறுநகை செய்து விட்டுப் பேசாமலிருந்தான்.

பக்கத்தில் திரௌபதி இருந்தாள். அவளுக்கும், 'உடனே பழிக்குப் பழி வாங்க வேண்டும்' என்ற கொதிப்பு நிரம்பிப் பொங்கிக்

கொண்டிருந்தது. ''அரச சபையிலே என்னுடைய கூந்தலைப் பற்றி இழுத்து என்னுடைய சேலையைக் களையத் துணிந்த அந்தப் பாவிகளைக் கொல்வதில் நீதியும் நியாயமும் குறுக்கே நிற்குமானால், அவைகளைத் தூக்கி எறிந்து விட்டு, ஓர் அரசனைப் போல நடந்து கொள்ளுங்கள்!'' என்றாள் திரௌபதி.

இவர்களுக்கு அறத்தைப் பற்றி எடுத்துச் சொல்வதில் எவ்வித பயனுமில்லை என்றுணர்ந்த தர்மன், ''போர் செய்வதென்பது நினைத்தவுடன் செய்கிற செயலல்ல. தன்வலியும் மாற்றான் வலியும் அறிந்து தக்க சமயத்தில் செய்ய வேண்டும். துரியோதனன் பக்கத்தில், சிறந்த போர்ப்பயிற்சி பெற்ற அவனுடைய தம்பியரும், மகா வீரனான கர்ணனும், எங்களுக்கெல்லாம் வில்வித்தை கற்றுத்தந்த துரோணரும், அவருடைய மகன் அசுவத்தாமனும், யாராலும் வெல்ல முடியாதவரென்று கருதப்படும் எங்கள் குலப் பெரியவர் பீஷ்மரும், இன்னும் பல நண்பர்களும் இருக்கிறார்கள். நாங்கள் படைப்பலம் எல்லாவற்றையும் இழந்து காட்டில் இருக்கிறோம். வீமா, நீயும் அருச்சுனனும் எவ்வளவுதான் பெரிய வீரர்களாக இருந்தாலும் போருக்கு இது சமயமல்ல. ... ... எந்தப் பெரிய வீரனுக்கும் நல்ல படைப்பலம் தேவை ... ... அருச்சுனனுக்கு, இன்னும் பல சக்தி வாய்ந்த அம்புகள் தேவை. தேவர்களை நோக்கித் தவமிருந்து அவைகளைப் பெறலாமென்று வியாச முனிவர் சொல்லியிருக்கிறார். மிகச் சிறந்த அம்புகளைப் பெற்று வரும்படி முதலில் அருச்சுனனை அனுப்புவோம். எதிரிகளை நிச்சயமாக அழிக்கவல்ல சிறந்த அம்புகளை அருச்சுனன் பெற்று வந்ததும் போரைப் பற்றி யோசிப்போம்'' என்றான்.

இந்த மட்டிலாவது தருமன் போர் வழிக்கு ஒத்துவந்தானே என்று கருதி எல்லாரும் இந்த யோசனையை ஏற்றுக் கொண்டார்கள்.

அருச்சுனன் சிறந்த அம்புகளைப் பெறுவதற்காகத் தவஞ் செய்யப் புறப்பட்டுச் சென்றான்.

★

அடர்ந்த காட்டுப் பாதை வழியே சென்று கொண்டிருந்தபோது வழியில் ஒரு பிராமணக் கிழவர் எதிர்ப்பட்டார். அருச்சுனனின் முன்னே நின்ற அவர், ''இளைஞனே, வில்லும் அம்பும் ஏந்தி கவசம் அணிந்து, கையிலே கத்தியும் கொண்டு இந்தக் காட்டுக்கு வந்திருக்கிறாயே, இது முனிவர்கள் வாழும் காடு. இங்கே அரச குலத்தாருக்

குரிய உந்த ஆயுதங்கள் தேவையற்றன. நீ யார்? எங்கிருந்து வருகிறாய்?'' என்று கேட்டார்.

அவர் பேச்சில் அன்பு நிறைந்திருந்தது. குரலில் உறவு கொண்டாடியது.

அருச்சுனன், தான் பாண்டவர்களில் ஒருவனாகிய அருச்சுனன் என்பதையும், தாங்கள் நாடு, நகரம் அனைத்தையும் சூதிலே தோற்றுக் காட்டுக்கு வந்திருப்பதையும் சொல்லி, சிறந்த அம்புகளைப் பெறுவதற்காகத் தேவர்களை நோக்கித் தவம் செய்யத்தான் புறப்பட்டிருப்பதாகச் சொன்னான்.

பெரியவர் அன்போடு சிரித்தார். மறுகணம் அவர் நின்ற இடத்தில் தேவர்களுக்கெல்லாம் அரசனாகிய இந்திரன் நின்றான். அவன் சொன்னான்: ''மகனே, நான் இந்திரன். உனது தந்தை. பெரிய வீரனென்று உலகம் போற்றும் எனது மகனைக் காணவும், சில வார்த்தைகள் பேசவும் விரும்பியே நான் இங்கே வந்தேன். உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள். உனக்கு ஏதாவது தர முடிந்தால் எனது மனம் மகிழ்வுறும்.''

அருச்சுனன் இந்திரனை வணங்கி ''தந்தையே, தேவர்க்கரசே, உங்கள் அன்புக்கும் நல்ல மனத்துக்கும் மிக்க நன்றி. எனக்குத் தேவையானவை, பகைவர்களை அழிக்க வல்ல சக்திவாய்ந்த அம்புகள் மட்டுமே. அவற்றைத் தாருங்கள்'' என்றான்.

இந்திரன், ''அருச்சுனா, என் மகனே! இந்த ஆயுதங்களும், போரும் உனக்கு எதற்கு? இந்த உலகத்தில் இன்பமாக வாழ்வதற்கு எத்தனை பொருள்கள் உள்ளன. அவைகளைக் கேள், தருகிறேன்'' என்றான்.

அருச்சுனனோ, ''தேவர்க்கரசே, எனக்கு வேறெதுவும் வேண்டாம். நான் வேண்டுவதெல்லாம் சக்திவாய்ந்த அம்புகளே!'' என்று மீண்டும் பிடிவாதமாகச் சொன்னான்.

''நல்லது, உனது விருப்பம் அதுவானால், உனக்கு மிகச் சிறந்த அம்புகளைத் தரக்கூடியவன் முக்கண்ணனான சிவபிரானே. நீ சிவபிரானைக் குறித்துத் தவமிருந்து அவரிடம் நீ விரும்பியதைப் பெற்றுக் கொள்!'' என்று கூறி இந்திரன் மறைந்து விட்டான்.

★

அருச்சுனனுடைய தவத்தினால் கவரப்பட்ட சிவன் உமாதேவி

யையும் கூட்டிக்கொண்டு அந்தக் காட்டுக்கு வந்தார். இருவரும் வேட்டுவ உருவில் வந்தனர். சிவனின் கையில் பினாகமும் அம்புகளும் இருந்தன.

'பினாகம்' என்பது சிவனுடைய வில்லின் பெயர்.

பெரிய வீரர்களின் வில்களுக்கு ஒவ்வொரு பெயர்கள் இருந்தன. அந்த வில்களின் பெயரால் அவர்களும் வழங்கப்பட்டனர்.

'பினாகம்' என்ற வில்லையுடைய சிவன் 'பினாகபாணி' எனப் பட்டான்.

'கோதண்டம்' என்ற வில்லை வைத்திருந்த இராமன் 'கோதண்ட இராமன்' என்றும், 'கோதண்டபாணி' என்றும் அழைக்கப்பட்டான்.

அருச்சுனன் தனது வில்லின் பெயரால் 'காண்டீபன்' என்று அழைக்கப்பட்டான். 'காண்டீபம்' என்பது அருச்சுனனுடைய வில்.

தவஞ்செய்து கொண்டிருந்த அருச்சுனனைத் தாக்கும் நோக்கத்துடன் ஒரு காட்டுப் பன்றி மிக மூர்க்கமாகப் பாய்ந்து வந்தது.

அருச்சுனன் தனது காண்டீபத்தில் ஒரு அம்பைத் தொடுத்து அந்தப் பன்றியை நோக்கி எய்தான். அதே நேரத்தில் இன்னொரு பக்கத்திலிருந்து வந்த ஓரம்பும் அந்தப் பன்றியின் மீது பாய்ந்தது!

அந்த இன்னொரு அம்பைப் பன்றியின் மீது எய்தவர் யார் என்று வியப்புடன் அருச்சுனன் எதிரே நோக்க, ஒரு வேடனும் வேடுவிச்சியும் தன்னை நோக்கி வருவதைக் கண்டான்.

''வேடனே, நான் குறிவைத்த பன்றிக்கு நீயும் அம்பு எய்திருக்கிறாயே? அப்படிச் செய்யக் கூடாதென்பது வேடுவராகிய உங்களுக்குத் தெரியாதா?'' என்று அருச்சுனன் சற்றுக் கோபத்துடன் அதட்டிக் கேட்டான்.

''வீரனே, என்னிடம் நீ நியாயம் கேட்கிறாயா? இந்தக் காடு வேடர்களாகிய எங்களுக்குரியது. மேற்குலத்தவன் போலத் தோன்றும் நீ எங்கள் காட்டுக்குள் வந்து, நான் குறிவைத்த பன்றியைக் குறி வைத்து அம்பு எய்தது மன்றி, என் மீதே குற்றமும் சொல்கிறாயா? இது என்னால் கொல்லப்பட்ட பன்றி. வீண் பேச்சின்றிப் பன்றியை என்னிடம் கொடுத்து விட்டு உன் வழியே போ!'' என்றான் வேடன்.

வேடன் தன்னை எதிர்த்துக் கடுமையான வார்த்தைகள் பேசிய

தைக் கண்டு அருச்சுனனுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று.

''எளிய வேடனே, உன் தகுதிக்கு மிஞ்சிப் பேசுகிறாய். யாருடன் பேசுகிறாய் என்பதையும் அறியாமல் பேசுகிறாய். உன் மனைவியுடன் நீ வந்திருப்பதால் இது வரை பொறுத்தேன். இனி ஒரு கணமேனும் என் முன்னே நிற்பாயானால் என் அம்புக்கு இரையாகி நீயும் வீணே இறந்து போவாய்!'' என்று கூறிய அருச்சுனன், ஓர் அம்பை எடுத்துத் தனது வில்லிலே பொருத்தினான்.

வேடன் பயந்தானில்லை. அருச்சுனன் அம்பை எடுத்ததும், அவன் அருச்சுனனைப் பார்த்துக் கேலியாகச் சிரித்து விட்டு, ''உன்னுடைய எண்ணம் அதுவானால் நானும் தயார் தான்!'' என்று வில்லையும் வளைத்து அம்பைத் தொடுத்தான்.

சண்டை மூண்டது.

இருவருடைய வில்களிலிருந்தும் அம்புகள் சீறிப் பாய்ந்தன. ஆனால் ஒருவர் விட்ட அம்புகளை மற்றவர் விட்ட அம்புகள் வெட்டி வீழ்த்தின. இருவரில் எவரும் தாக்கப்படவில்லை.

'ஒரு காட்டு வேடன் தன்னுடன் சமமாகப் போரிடுகிறானே' என்று அருச்சுனனுக்கு ஆச்சரியம் ஒரு புறம், கோபம் மறு புறம். மிக அதிகமாக அம்புகளை அவன் வேடன் மீது ஏவினான். அவற்றில் எதுவுமே வேடனைத் தீண்ட முடியவில்லை!

அம்புகள் முடிந்து விடவே, அருச்சுனன் மிகுந்த கோபத்துடன் வெறும் வில்லினால் வேடனை அடித்துத் தாக்கினான்.

வேடன் சிரித்துக் கொண்டே அருச்சுனனிடமிருந்து காண்டீபத்தை இழுத்துப் பிடுங்கித் தூர எறிந்தான்.

அருச்சுனன் இடுப்பிலிருந்த கத்தியை எடுத்து, வேடனின் தலையில் வெட்டினான்.

கத்திதான் இரண்டாக ஒடிந்து விழுந்தது!

வீரனாகிய அருச்சுனன் உயிர் பிரியும் வரை போரை நிறுத்தப் போவதில்லை. அவன் தனது கைகளால் வேடனைக் கட்டிப்பிடித்து உருட்டி மற்போர் செய்யத் தொடங்கினான். வேடனும் ஆயுதங்களைப் போட்டுவிட்டுத் தனது கைகளால் அருச்சுனனைத் தனது உடம்புடன் கட்டி இறுக்கினான்.

அருச்சுனனால் எதுவுமே செய்ய முடியவில்லை. தனது மூச்சே

நின்று விடும் போன்ற நிலையில் அவனுடைய சிந்தனையில் ஓர் ஒளி வீசிற்று!

'ஒரு சாதாரண காட்டு வேடன், உலகம் போற்றும் பெரிய வீரனாகிய என்னை இந்தக்கதிக்கு ஆளாக்கியிருப்பானா?.,. .,. சிவனே, சிவனே! என்று நினைத்த அருச்சுனனுக்குத் தன்னைக் கட்டியிருப்பவன் 'சிவனே' என்ற உண்மையை உணரக்கூடியதாயிற்று!

மறுகணமே, ''பெருமானே, நான் செய்த குற்றங்களைப் பொறுத்தருள வேண்டும்!'' என்று வேடனாக வந்த சிவனின் கால்களில் விழுந்து வேண்டினான்.

சிவனார், தனது விளையாட்டை நிறுத்திச் சிரித்து மகிழ்வு கொண்டவராய், வேறு எந்த ஆயுதத்தாலும் வெல்ல முடியாத சக்திவாய்ந்த 'பாசுபதம்' என்ற அம்பையும் அருச்சுனனுக்குக் கொடுத்து வாழ்த்தினார். பிறகு ''உனக்காக இந்திர விமானம் வருகிறது. நீ சிறிது காலம் இந்திரலோகம் போயிருந்து அந்த இன்பங்களையும் அனுபவித்துவிட்டு வா!'' என்று சொல்லி உமையுடன் மறைந்தார்.

அருச்சுனன் திரும்பிப் பார்க்கப், பக்கத்தில் இந்திரனுடைய தேரோட்டி மாதலி தேருடன் வந்து நின்றான். அருச்சுனன் மகிழ்ச்சியுடன் அந்தத் தேரிலேறி, இந்திரலோகம் போனான்.

இந்திரலோகத்தில் அருச்சுனனுக்கு எல்லாச் சிறப்புகளும் செய்யப்பட்டன. பூவுலகில் மிகச் சிறந்த வீரனாகப் புகழ் பெற்று விளங்கிய தமது மகனை இந்திரன் முறைப்படி எல்லாருக்கும் அறிமுகம் செய்து மகிழ்ந்தான். தேவருலகில் கிடைக்கக் கூடிய எல்லாச் சுகபோகங்களும் அருச்சுனனுக்கு அளிக்கப்பட்டன.

அருச்சுனனுக்கு அங்கே ஒரு துயர நிகழ்வு ஏற்பட்டது.

இந்திரனுடைய அவையில் நடனமாடுபவளும் அவனுடைய இன்பத்துணைவியருள் ஒருத்தியுமான ஊர்வசி என்பவள் அருச்சுனனுடைய புகழிலும், அழகிலும் மயங்கி, அவனுடன் காதல் கொள்ள விரும்பினாள். ஆனால் அருச்சுனனோ, அவள் தனது தந்தைக்கு உரியவளாய் இருப்பதால் தனக்குத் 'தாய்' எனத்தக்கவள் என்று கூறி அவளுடைய விருப்பத்துக்கு இசைய மறுத்துவிட்டான்.

கோபம் கொண்ட ஊர்வசி, ''ஒரு பெண்ணின் விருப்பத்துக்கு இசையாத அருச்சுனனே, நீ ஆணுமல்லாத பெண்ணுமல்லாத ஓர் அலியாகக் கடவாய்!'' என்று சாபமிட்டு விட்டாள்.

இந்த நிகழ்ச்சி இந்திரனுக்குத் தெரிய வந்ததும் அவன் பதறிப் போய் உடனே ஊர்வசியை அழைத்து அவளிட்ட சாபத்தை விலக்கிக் கொள்ளும்படி உத்தரவிட்டான்.

ஆனால், போட்ட சாபத்தை முற்றிலும் திருப்பி எடுக்க முடியாத ஊர்வசி, அதில் ஒரு மாற்றம் செய்தாள். அருச்சுனன் தான் விரும்பிய நேரம் அலியாக மாறிக் கொள்ளலாம் என்பதே அந்த மாற்றுச் சாபம்.

இந்தச் சாபம் பின்னால், பாண்டவர் ஓராண்டு காலம் மறைந்து வாழவேண்டிய நேரம் வந்தபோது அருச்சுனனுக்கு வாய்ப்பாக அமைந்தது.

## 20. துரியோதனன் அடைந்த அவமானம்

அருச்சுனன் தவம் செய்வதற்காகக் காட்டுக்குப் போய் மிக நீண்ட காலமாகி விடவே, காட்டில் தங்கி இருந்த பாண்டவர்களுக்கு மிகுந்த கவலையேற்பட்டது. எப்பொழுதும் கூட இருந்த ஒருவர், பிரிந்து சென்று விட்டால் அந்த வெறுமை மற்றவர்களை மிக அதிகமாகப் பாதிப்பது உலக வழக்கம். முக்கியமாகத் திரௌபதியினால் பிரிவைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அந்தக் கவலையை மறப்பதற்காகப் பாண்டவர்கள் திரௌபதியையும் கூட்டிக் கொண்டு பக்கத்திலுள்ள வேறு காட்டுக்குச் சென்று அங்குள்ள இயற்கைத் தோற்றங்களைக் கண்டும், முனிவர்கள் பலரைச் சந்தித்தும் தங்கள் மனங்களைச் சற்றே தேற்றிக் கொள்ள முயற்சித்தார்கள்.

அவ்விதம் ஒரு காட்டுக்குப் போய்த் தங்கியிருந்த போது, காற்றோடு அள்ளுப்பட்டு வந்த ஒரு புதிய மலர் திரௌபதிக்குக் கிடைத்தது. அந்த மலரின் அழகும் நறுமணமும் அவளை மிகவும் ஆட்கொண்டன. பக்கத்திலிருந்த வீமனிடம் அவள் அந்த மலரைக் காட்டி, "எவ்வளவு அற்புதமான மலர்! வீமசேனரே, நீங்கள் எனக்கு இதே மாதிரி இன்னும் சில மலர்களைத் தேடிப் பறித்து வந்து தருவீர்களா? உங்களால்தான் அது முடியும்!'' என்று கேட்டாள்.

அந்த அழகிய இயற்கைச் சூழலில் தங்கள் மனைவியின் இனிமையான வேண்டுகோளை நிறைவேற்றி வைப்பதில் மகிழ்வு கொண்ட

வீமன், உடனே அந்த மலர் பறந்து வந்த திக்கை நோக்கிப் பயணம் தொடங்கினான்.

காட்டு வழியே மிக நீண்டதூரம் வழிநடந்த வீமன், ஒரு மலையடி வாரத்தில் நிறைய வாழை மரங்கள் நிற்பதையும், அந்த மரங்களிடையே வழியை மறித்துக் கொண்டு ஒரு பெரிய குரங்கு படுத்து றங்கிக் கொண்டிருப்பதையும் கண்டான்.

வழக்கத்துக்கு மாறாக மிகவும் பெருத்த உடலமைப்பைக் கொண்ட அந்தக் குரங்கைக் கண்டதும், வீமன் தன்னையும் மறந்து பெரிய சத்தம் போட்டான்.

அந்தச் சத்தத்தினால் சிறிதே கண்களைத் திறந்து பார்த்த குரங்கு, "நீ யார்? சுகயீனமுற்றுப் படுத்திருந்த என்னை ஏன் எழுப்பினாய்? மனிதர்களுக்குப் பகுத்தறிவென்று ஒரு மேலான அறிவு இருப்பதாகச் சொல்வார்களே, உனக்கு அந்த அறிவு இல்லையா? அறிவுள்ள மனிதர்கள் மற்றப் பிராணிகளுக்குத் துன்பம் செய்ய மாட்டார்கள். உனக்கு நீதி ஒழுங்கு தெரியாது போலும்! சரி சரி, இந்தப் பக்கம் நீ ஏன் வந்தாய்? இது தேவலோகம் செல்லும் பாதை, நீ திரும்பிப் போய்விடு!" என்று சிறிது கோபத்துடன் சொல்லிற்று.

கேவலம் ஒரு குரங்கு தனக்குப் புத்தி சொல்ல முன் வந்ததைக் கண்டு வீமனுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று.

"நீ அதிகமாகப் பேசுகிறாய்! யாரிடத்தில் பேசுகிறாய் என்பதை அறியாமல் பேசுகிறாய். நான் அரச குலத்தவன், என் தாய் குந்திதேவி. என் தந்தை வாயு தேவன். நான் தருமனின் தம்பி, புகழ் வாய்ந்த அருச்சுனனின் அண்ணன். என் பெயர் வீமன்...... இனியும் என்னைத் தடுக்காதே வழியை விடு!" என்றான் வீமன்.

வீமனின் பேச்சைக் கேட்டு, சற்று நிமிர்ந்து பார்த்த குரங்கு, சிரித்து விட்டு "நல்லது, நான் கிழக்குரங்கு, சுகயீனமாகவும் இருக்கிறேன். என்னால் எழுந்திருக்க முடியவில்லை. நீ என்னைத் தாண்டிக் கொண்டு போ!" என்றது.

"பிராணிகளைத் தாண்டிக் கொண்டு போகக் கூடாதென்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இல்லாவிட்டால் அநுமான் கடலைத் தாண்டியது போல உன்னையும் இந்த மலையையும், ஒரே பாய்ச்சலில் தாண்டிச் சென்றிருப்பேன்!" என்றான் வீமன்.

"ஓ! அப்படியா? அனுமான் கடலைத்தாண்டினானா? அது என்ன கதை?" என்று வியப்போடு கேட்பது போல அந்தக் குரங்கு சிரித்துக் கொண்டே கேட்டது.

"இராமனுடைய தேவி சீதையைத் தேடுவதற்காக அநுமார் பெரிய கடலை ஒரே பாய்ச்சலில் கடந்து சென்றார். அந்த அநுமான் எனக்கு அண்ணனாவார். பலத்திலும் எனக்குச் சமமானவர். இனியும் என்னுடைய சொல்லைக் கேட்டு எழுந்து வழிவிடாமல் இருப்பாயேல் உன்னை எமலோகத்துக்கே அனுப்பி விடுவேன்!" என்றான் வீமன்.

"ஓ! அத்தகைய வீரனா நீங்கள்? கோபம் கொள்ளாதீர்கள். என்னால் எழுந்திருக்க முடியவில்லை. தயவு செய்து வழியின் குறுக்கே கிடக்கும் என்னுடைய வாலைத்தூக்கி மறு புறம் போட்டு விட்டு நீங்கள் தயக்கமின்றிப் போகலாம்!" என்று குரங்கு சிரித்துக் கொண்டே சொல்லிற்று.

குரங்கின் பேச்சு வீமனுக்கு மேலும் மேலும் கோபத்தை உண்டாக்கிற்று. 'சரி, இந்தக் குரங்கின் வாலைப் பிடித்து இழுத்து இதைத் தூர வீசி எறிவேன்' என்று நினைத்தவனாக வீமன் அந்தக் குரங்கின் வாலைப் பிடித்துத் தூக்கப் போனான்.

'அடேயப்பா! இது வாலா அல்லது நிலத்தோடு வேரூன்றி விட்ட வேறு ஏதேனும் ஒன்றா!'

வீமனால் அந்த வாலை அசைக்கவும் முடியவில்லை.

வியப்படைந்த வீமன், 'வேரூன்றிய பெரிய மரங்களைக் கூட ஒரு கணத்தில் இழுத்தெடுப்பேனே. நான் இதைச் சும்மா விடுவதா'? என்று நினைத்தவனாய்த் தனது முழுப்பலத்தையும் சேர்த்து இருகைகளாலும் அந்த வாலைப் பிடித்து இழுத்தான். அவனுடைய நரம்புகள் புடைத்து விழிகள் பிதுங்கியதுதான் மிச்சம். வால் அசையவேயில்லை!

வீமனுடைய உள்ளத்தில் திடீரென்று ஓரொளி தட்டிற்று. 'இது சாதாரண வாலல்ல. இந்த வாலுக்குரிய இந்தக் குரங்கும் சாதாரண குரங்கல்ல. மனித சக்திக்கு மிஞ்சிய ஏதோ ஒரு சக்தி இதில் இருக்கிறது' என்று நினைத்தவனாய் வாலைத்தூக்கும் முயற்சியைக் கைவிட்டெழுந்து, குரங்கைப் பார்த்து மிக்க மரியாதையுடன் வணக்கம் செலுத்தினான். பிறகு "மதிப்புக்குரியவரே, நான் ஏதாவது தவறு செய்தால் மன்னிக்க வேண்டும். நான் யாரென்பதை முன்னரே சொல்

லிவிட்டேன். நீங்கள் யாரென்பதையும் நான் அறியலாமா?'' என்று பணிவாகக் கேட்டான்.

குரங்கு சிரித்துக் கொண்டே எழுந்தது. பிறகு வீமனின் பக்கத்தே வந்து மிகுந்த அன்புடன் அவனுடைய தோளின் மீது கையை வைத்து ''என் அருமைத் தம்பியே, வீமா! நானும் வாயுவின் மகனே, அதனால் உனக்கு அண்ணனாவேன். என் பெயர் அநுமான்!'' என்றது.

வியப்பினாலும் மகிழ்ச்சியினாலும் பேசவாயெழாத வீமன், 'அண்ணா, அண்ணா' என்று அநுமனைக் கட்டியணைத்து மகிழ்ந்தான். பிறகு ''அண்ணா, இன்று எனக்குப் பொன்னான நாள், உங்களைக் காணும் பெரும் பேறு இன்று பெற்றேன்!'' என்றான்.

வீமன் தங்களுடைய கதைகளையெல்லாம் சொல்லி, கூடியவிரைவில் பெரிய போர் ஒன்றைத் தாங்கள் எதிர் பார்த்திருப்பதாகவும் சொன்னான்.

அநுமான், ''தம்பி, போரைப் பற்றிக் கவலைப் படாதே! உங்களுக்கு வெற்றி நிச்சயம். போர்க்களத்தில் நீ சிம்மநாதம் செய்யும் போதெல்லாம் உன்னுடைய குரலோடு நானும் சேர்ந்திருப்பேன். அருச்சுனனுடைய தேரில் பறக்கும் கொடியிலே நான் இருப்பேன். நம்பிக்கையோடும், உற்சாகத்தோடும் இருப்பாயாக .. ... இப்போது நீ தேடி வந்த மலர்கள் அதோ பக்கத்திலேயே இருக்கின்றன. உனக்குத் தேவையான அளவு மலர்களைப் பறித்துக் கொண்டு போ'' என்று கூறி அநுமான் வீமனுக்கு மலர்கள் இருக்கும் இடத்தைக் காட்டினான்.

மலர்கள் கிடைத்ததை விட தன் உடன் பிறப்பான ஒப்பற்ற அநுமனைக் கண்ட மகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் வீமன் திரும்பி நடந்தான்.

★

அஸ்தனாபுரத்தில், திருதராட்டிரன் கவலை நீங்காமலிருந்தான். அவனுடைய கவலையெல்லாம் தன்னுடைய பிள்ளைகளின் எதிர்காலம் பற்றியதே. ''பாண்டவர்களின் காட்டு வாழ்க்கையும், ஓராண்டு மறைந்த வாழ்க்கையும் முடிந்தவுடன் திரும்பி வருவார்களே! வந்து சும்மா இருப்பார்களா? பெரிய அரக்கனைப் போன்ற வீமனும், காண்டீபத்தினால் உலகையே அழித்து விடவல்ல அருச்சுனனும் எனது பிள்ளைகளோடு போர் தொடங்கினால் என்னவா

கும்?'' என்று பலவாறாக நினைத்துத் திருதராட்டிரன் கவலைப் பட்டுக் கொண்டேயிருந்தான்.

ஆனால், துரியோதனனும், கர்ணனும், சகுனியும் மிகுந்த மகிழ்ச்சியோடு இருந்தார்கள். ''பாண்டவர்களுடைய அளப்பரிய செல்வம் முழுவதும் எங்களை வந்தடைந்து விட்டது. அவர்களையும் காட்டுக்குத் துரத்தி விட்டோம்! இதை விட வேறென்ன வேண்டும்?'' என்று அவர்கள் மிகவும் மகிழ்ந்து கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

பேராசைக்காரனுக்குத் திருப்தி என்பதே ஏற்படுவதில்லை. பெரிய செல்வங்களெல்லாவற்றையும் பெற்று விட்ட பிறகும் கூட, துரியோதனனின் மனத்தில் ஒரு குறை இருந்தது.

''மாமா, இவ்வளவு செல்வங்களையும் ஆளுவது பெரிதல்ல, அந்தப் பாண்டவர்களும், திரௌபதியும் காட்டிலேயிருந்து துன்பங்கள் படுவதை என் கண்களால் பார்க்க வேண்டும். அப்போதுதான் எனக்கு மனநிறைவு ஏற்படும்'' என்றான் துரியோதனன்.

சகுனி சிரித்து விட்டு, ''உண்மைதான். உன்னுடைய ஆசை நியாயமானதே. கவலைப்படாதே. அதை நிறைவேற்றுவதற்கு வசதியிருக்கிறது. பாண்டவர்கள் இப்போது துவைத வனத்துக்குப் பக்கத்திலேதான் இருக்கிறார்கள். துவைத வனத்தில் எங்கள் இடைச்சேரிகளும் பசு மந்தைகளும் இருக்கின்றன. அவைகளைப் போய்ப் பார்த்து வருவதாக உன் தந்தையிடம் கூறிவிட்டு நாங்கள் அங்கே போகலாம். அங்கிருந்து பாண்டவர்களின் துன்ப வாழ்க்கையை நாங்கள் பார்த்து மகிழலாம்!'' என்று சகுனி புத்தி சொன்னான்.

அதன்படியே, மூவரும் திருதராட்டிரனிடம் சென்று தாங்கள் துவைத வனத்திலுள்ள பசு மந்தைகளைப் பார்த்து வரப்போவதாகச் சொல்லி அநுமதி பெற்றுக் கொண்டு துணைக்கு வேண்டிய ஆட்களையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார்கள்.

இடைச்சேரிக்குப் போய்ப் பசுக்களையெல்லாம் பார்த்துக் கணக்கெடுத்துக் கொண்டு, அதன் பின் இடையர்களின் கலை நிகழ்ச்சிகளையும் கண்டு களித்து விட்டுப் பாண்டவர்கள் தங்கியிருந்த பக்கமாகப் போனார்கள்.

வழியில் ஒரு குளம் இருந்தது. அந்தக் குளத்தருகே சித்திரசேனன் என்ற கந்தருவ அரசன் தனது கூட்டத்தினருடன் வந்து ஓய்வுக்காகத் தங்கியிருந்தான். துரியோதனனுடைய ஆட்கள் அந்தப்

பக்கம் வருவதைக் கண்ட கந்தருவக் காவலாளிகள் ''நீங்கள் இந்தப் பக்கம் வரக் கூடாது. அருகில் தங்கவும் கூடாது. போய் விடுங்கள்'' என்று கடுமையாக எச்சரித்தார்கள். துரியோதனனுடைய ஆட்கள் அவனிடம் போய், பக்கத்துக் குளக்கரையில் வேறு யாரோ ஒரு அரசன் வந்து தங்கியிருப்பதாகவும், தங்களை விரட்டுவதாகவும் முறையிட்டார்கள்.

துரியோதனன், ''நான் பேரரசன். என்னை விடக்கூடிய அரசன் யார்? நீங்கள் வேண்டிய வீரர்களைக் கூட்டிக்கொண்டுபோய், அவர்களை விரட்டிக் கலைத்துவிட்டு, எங்களுடைய கூடாரங்களை அங்கே அமையுங்கள்!'' என்று உத்தரவிட்டான்.

துரியோதனனுடைய வீரர்கள் போய்க் கந்தர்வ வீரர்களை அடித்துக் கலைத்தார்கள். உடனே கந்தர்வனுடைய பெரிய படையொன்று வந்து துரியோதனனுடைய வீரர்களை நாசம் செய்தது.

இதை அறிந்த துரியோதனனும், கர்ணனும், சகுனியும் தங்களுடைய படைவீரர்களை அழைத்துக்கொண்டு ஆயுதங்களுடன் அங்கே போனார்கள்.

பெரிய சண்டை நடந்தது.

கந்தர்வனாகிய சித்திரசேனனுடைய மாய அம்புகளினால் துரியோதனன் படை நிலை குலைந்தது. கர்ணன் அந்த இடத்தை விட்டே பின் வாங்கி ஓடும்படியாயிற்று.

சித்திரசேனன், போர்க் களத்தில் ஓடாமல் நின்ற துரியோதனனைப் பிடித்துத் தன்னுடைய தேரில் கயிற்றால் கட்டிவைத்தான். மீந்திருந்த படைவீரர்களையும் சிறைப்படுத்தினான்.

ஓடிப்போன துரியோதனின் வீரர்கள் சிலர் பாண்டவர்கள் தங்கியிருந்த குடிசைக்குப் போய், அவர்களிடம் நடந்ததைச் சொன்னார்கள்.

''அப்படியா!'' என்று கேட்டு வீமனும், அருச்சுனனும் சிரித்தார்கள்.

தருமன் சொன்னான்; ''நீங்கள் சிரித்து மகிழ்வது சரியல்ல. எப்படியிருந்தாலும் அவர்கள் நமது குலத்தவர்கள். இனத்தவர்கள். அன்றியும், ஒருவனுக்குத் துன்பம் நேரும் போது நாங்களும் உதவி செய்யாமல், அவன் துன்பப்படுவதைப் பார்த்து மகிழ்ச்சியடைவது மிகக் கீழான செயலாகும். நீங்கள் உடனே போய் துரியோதனனை விடுவித்து வாருங்கள்!''

அண்ணனின் சொல்லுக்குக் கட்டுப்பட்டவர்களாய் வீமனும், அருச்சுனனும் சித்திரசேனனுடன் சண்டைக்குப் போனார்கள்.

பாண்டவர்களைக் கண்ட சித்திரசேனன், ''இந்தக் கெட்டவர்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்கவே இப்படிச் செய்தேன். நீங்கள் அவர்களுக்காக வந்திருப்பதால், அவர்களை விடுதலை செய்கிறேன்'' என்று கூறித் துரியோதனனுடைய கட்டுகளை அவிழ்த்து விட்டு ஓடித்தப்பும்படி சொன்னான்.

துரியோதனன் திரும்பி வரும் வழியில் கர்ணனைக் கண்டான். மிகுந்த அவமானமும், துயரமும் வாட்டத் துரியோதனன் ''நண்பனே, நான் இப்படி உயிர்தப்பி வந்ததிலும் பார்க்கச் சித்திரசேனனாற் கொல்லப்பட்டிருந்தால் நன்றாயிருந்திருக்கும்!'' என்றான்.

கர்ணன் எவ்வளவோ சமாதானம் சொல்லிய போதும், அவமானத்தினாற் குன்றிப் போன துரியோதனன், ''இந்த முகத்துடன் நான் அரண்மனைக்கு வரமாட்டேன். நான் இங்கிருந்தே உயிரை விடுவேன்!'' என்று உறுதியுடன் கூறி அங்கேயே நின்று விட்டான்.

துரியோதனனுடைய பிடிவாதத்தைக் கண்டு, அவன் தம்பி துச்சாதனன் தமையனின் காலைப் பிடித்துக் கெஞ்சி, அரண்மனைக்கு வரும்படி வேண்டினான். மற்றத் தம்பிமாரும் அழத் தொடங்கினார்கள்.

கர்ணன் சொன்னான்; ''இது என்ன கோலம்? அழுது புலம்புவதில் என்ன நன்மையைக் காணப் போகிறீர்கள்? அவமானம் நேர்ந்துவிட்டதற்காகக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் அதனால் எதிரிகளுக்குத்தான் நன்மையுண்டாகும். பாண்டவர்களைப் பாருங்கள். எவ்வளவு அவமானப்பட்ட பிறகும் அவர்கள் கலங்காமல் இருக்கிறார்கள்!''

சகுனி சொன்னான்: ''துரியோதனா, கர்ணன் சொல்வதைக் கவனத்திற் கொள். பெரிய செல்வமெல்லாம் உனக்காகக் காத்திருக்க எல்லாவற்றையும் விட்டுவிட்டு நீ உயிரை விடப்போகிறேன் என்று சொல்லுகிறாயே! நடந்து போனவைகளுக்காக நீ வருந்துவதாக இருந்தால், இப்பொழுதே நீ பாண்டவர்களுடன் சமாதானம் செய்து கொண்டு அவர்களுடைய நாட்டைத் திருப்பிக் கொடுத்து விட்டு நிம்மதியாக இருக்கலாம்: அதை விரும்புகிறாயா?''

இதைக் கேட்டதும் துரியோதனன் பழைய மனநிலைக்கு வந்

தான். ''நீங்கள் சொல்வது உண்மைதான். நான் பாண்டவர்களை வெற்றி கொள்வேன்'' என்று வெறி பிடித்தவன் போல உரத்த குரலிற் சொன்னான்.

''உன்னுடைய எண்ணம் நிறைவேறும். போர் தொடங்கியதும் அருச்சுனனை நான் கொல்வேன்; இது சத்தியம்!'' என்று கர்ணன் உறுதி கூறினான்.

இதைக் கேட்டுத் துரியோதனனும் கவலை மறந்தவனாய், எல்லோரையும் கூட்டிக் கொண்டு அஸ்தனாபுரம் போய்ச் சேர்ந்தான்.

## 21. நச்சு நீர்க் குளம்

பாண்டவர்கள் அப்போது தங்கியிருந்த காட்டில் ஒரு முனிவரின் குடிசை இருந்தது. அவருடைய குடிசையிலிருந்த தீ கடையும் கோலை ஒரு மான் தனது கொம்பினால் தள்ள, அந்தக் கோல் மானின் கொம்பில் சிக்கிக் கொண்டது. மான் கட்டையைக் கொம்பில் சுமந்து கொண்டு ஓடிற்று. அந்தக் காலத்தில் காட்டில் வாழ்ந்தவர்களுக்குத் தீக்கடைகோல் மிக முக்கியமான ஒரு பொருள்.

தீக்கடைகோலுடன் மான் ஓடுவதைக் கண்ட முனிவர் 'ஐயோ. ஐயோ!' என்று குழறிக் கத்தினார்.

அந்தச் சத்தங் கேட்டுப் பாண்டவர்கள் ஓடி வந்தார்கள். நடந்த நிகழ்வை முனிவர் சொன்னதும் பாண்டவர்கள் அந்த மானைத் துரத்திக் கொண்டு போனார்கள்.

இராமாயணத்தில் வந்த மானைப் போல இதுவும் ஒரு மாய மான்.

அந்த மான் பாண்டவர்களை மிக நீண்ட தூரம் ஓட வைத்துக் களைக்கச் செய்த பின் எங்கோ மறைந்து விட்டது.

களைத்துப்போன பாண்டவர்கள், ஒரு பெரிய மரத்தடியில் உட்கார்ந்தார்கள். தண்ணீர்விடாய் அவர்களை மிகவும் வாட்டிற்று.

தருமன் தனது பக்கத்தேயிருந்த நகுலனைப் பார்த்து ''இந்த மரத்திலேறி எங்காவது நீர் நிலை தெரிகிறதா என்று பார். தெரிந்தால் அங்கே போய் எல்லோருக்கும் தண்ணீர் எடுத்துக் கொண்டு வா!'' என்றான்.

நகுலன் மரத்தில் ஏறிப்பார்த்தான். சற்றுத் தூரத்தில் ஒரு குளம் இருப்பது தெரிந்தது. உடனே மரத்திலிருந்து இறங்கித், தான்போய்த் தண்ணீர் கொண்டு வருவதாகச் சொல்லிவிட்டுப் போனான்.

அவன் எதிர் பார்த்தபடி அங்கே ஒரு குளத்தில் தண்ணீர் இருந்தது. நகுலன் மகிழ்ச்சியுடன், தானும் குடித்துவிட்டு, இலைகளில் தொன்னை செய்து அதில் தண்ணீர் எடுத்துக் கொண்டு போகலாமென்று நினைத்துக் கொண்டு குளத்தில் இறங்கினான்.

அப்போது எங்கிருந்தோ ஒரு மாயக்குரல் கேட்டது. ''நில்; இது என்னுடைய குளம். நான் கேட்கும் வினாக்களுக்கு விடை கூறிவிட்டு, அதன் பின் தண்ணீரில் இறங்கு.''

நகுலன் திடுக்கிட்டு ஒரு கணம் நின்றான் . குரல் எங்கிருந்து வந்ததென்று தெரியவில்லை.

அது அசரீரியின் குரல்.

தாகத்தினால் நா வரண்டு போன நகுலன், முதலில் தண்ணீரைக் குடிப்போமென்று கருதிக் குளத்தில் இறங்கிக் கைகளால் நீரை அள்ளிக் குடித்தான். குடித்து விட்டுக் கரையேறிய நகுலனுக்கு மயக்கம் ஏற்பட்டது. அவன் குடித்த நீர் நச்சுநீர். குளக்கரையிலேயே அவன் மயக்கத்தினால் விழுந்தான்.

நகுலனைக் காணவில்லை என்று பாண்டவர்கள் கலங்கினார்கள். அவனைத் தேடிக்கொண்டு சகாதேவன் குளக்கரைக்கு வந்தான். அவனுக்கும் அசரீரியான எச்சரிக்கை கிடைத்தது. அவனும் அதிக தாகத்தினால் முதலில் தண்ணீர் குடிப்போமென்று நீரை அள்ளிக் குடித்தான்.

அவனும் மயங்கி விழுந்தான்.

நகுல சகாதேவர்களைத் தேடிக் கொண்டு அருச்சுனன் புறப்பட்டான். அவனையும் அசரீரி எச்சரித்தது.

அருச்சுனன் கோபத்துடன் வில்லை வளைத்து அதில் அம்பைத் தொடுத்து சத்தம் வந்த பக்கமாக ஏவினான்.

அசரீரி சிரித்தது, ''அருச்சுனா! நான் சரீரமில்லாதவன். 'அசரீரி'. உன்னுடைய அம்புகள் என்னை ஒன்றும் செய்யமாட்டா. நீ தண்ணீர் குடிக்க விரும்பினால் என்னுடைய வினாக்களுக்கு விடை கூறி

விட்டுப் போ. அல்லது உன் தம்பிகளைப் போல நீயும் வீணாக மாண்டு போவாய்!'' என்றது.

தாகத்தினால் நா வரண்டு போன அருச்சுனனும் தம்பிமாரைப் போலவே முதலில் தாகத்தை தீர்த்துக் கொண்டு, பிறகு இதனுடன் பேசலாம் என்று நினைத்தவனாய் தண்ணீரைக் குடித்தான்.

அருச்சுனனும் நச்சுநீருக்குப் பலியானான்.

அடுத்து வீமன் வந்து அசரீரியின் எச்சரிக்கையைப் புறக்கணித்து விட்டு, தண்ணீர் குடித்து மயங்கி விழுந்தான்.

கடைசியாகத் தருமன் மிகுந்த கவலை கொண்டவனாய்த் தம்பியரைத் தேடிக் கொண்டு வந்தான்.

குளக்கரையில் தனது தம்பிமார்கள் எல்லாரும் விழுந்து கிடப்பதைக் கண்டு திடுக்கிட்ட தருமனும், தாங்க முடியாத தாகத்தினால் முதலில் தண்ணீரைக் குடிக்க எண்ணிக் குளத்தில் இறங்கினான்.

தருமன் தண்ணீரைக் குடிக்க முன்னரே அசரீரியின் குரல் கேட்டது.

''தருமனே, உனது தம்பிமார்கள் என் பேச்சைக் கவனியாமல் தண்ணீரைக் குடித்து அழிந்து போனார்கள். நீயும் அப்படிச் செய்யாமல் என்னுடைய வினாக்களுக்கு விடை கூறிவிட்டுத் தண்ணீரைக் குடி!''

தருமனும் சற்றே மனத்தை அடக்கி ''சரி உன்னுடைய வினாக்களைக் கேள்!'' என்றான்.

''மனிதனுக்குத் துணை எது?'' என்று அசரீரி கேட்டது.

''மனிதனது மன உறுதியே மனிதனுக்குத் துணை'' என்று விடையளித்தான் தருமன்.

''எந்த அறிவு நூலைப் படித்து மனிதன் சிறந்த அறிஞன் ஆகிறான்?''

''நூல்களைப் படிப்பது மட்டுமல்ல, சான்றோர்களுடன் சேர்ந்து பழகுவதனாலுமே ஒரு மனிதன் சிறந்த அறிஞன் ஆகிறான்!''

''பூமியிலும் பார்க்கப் பெருமையுடையது எது?

''மக்களைத் தன் கர்ப்பத்தில் தாங்கும் தாய்!''

''விண்வெளியைக் காட்டிலும் உயர்ந்தது எது?''

''தந்தை''

''காற்றைவிட வேகம் கொண்டது எது?''

''மனம்''

''சிறு புல்லிலும் அற்பமானது எது?''

''கவலை''

''பிற நாடுகளுக்கு பயணம் செய்கிறவனுக்கு நல்ல துணை எது?''

''அவன் கற்ற கல்வி''

''இல்வாழ்வோனுக்கு நல்ல துணை யார்?

''மனைவி''

''துன்பமற்ற வாழ்க்கை யாருக்குக் கிடைக்கும்?''

''நல்லொழுக்கமுள்ளவனுக்குக் கிடைக்கும்.''

''எதை நீக்கினால், மனிதன் எல்லாருடைய அன்பையும் பெறுவான்?''

''நான் என்ற ஆணவத்தை நீக்கினவன் எல்லாருடைய அன்புக்கும் உரியவனாவான்!''

''எதை விட்டால் துயரம் இல்லை?''

''கோபத்தை நீக்கியவனுக்குத் துயரம் இல்லை''

''எதை நீக்கினால் செல்வந்தன் ஆவான்?''

''ஆசையை நீக்கியவன் செல்வந்தன் ஆவான், போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து''

''சிறந்த மனிதனாவது குலத்தினாலா? ஒழுக்கத்தினாலா? படிப்பினாலா?''

''உயர்ந்த குடும்பத்தில் பிறந்தாலும், நல்ல நூல்களைக் கற்றிருந்தாலும் ஒருவன் சிறந்த மனிதனாக முடியாது. ஒழுக்கத்தில் சிறந்தவனே சிறந்த மனிதனாவான்.''

''இந்த உலகில் மிக வியப்புக்குரியது எது?''

''நாள் தோறும் உயிர்கள் இறந்து போவதைக் கண்டும் கண்டும், மனிதன் தான் ஏதோ நெடுங்காலம் வாழப் போகிறவனைப் போலச் செயலாற்றிக் கொண்டிருப்பது!''

இப்படிப் பல வினாக்கள்.

எல்லா வினாக்களுக்கும் தருமன் மிக அமைதியாக நல்ல விடைகளைக் கூறினான்.

முடிவில் அசரீரி, ''தருமனே, மிக நன்றாக விடைகளைக் கூறினாய். மாண்டு கிடக்கும் உன் தம்பியருள் யாராவது ஒருவனை நான் உயிர்ப்பித்துத் தர முடியும். உனக்கு விருப்பமானவரின் பெயரைச் சொல், உயிர் பெற்று எழுவான்'' என்றது.

தருமன் ஒரு கணம் சிந்தித்தான். பிறகு ''நகுலன் எழுந்து வரட்டும்'' என்றான்.

இதுவரை மறைந்திருந்து குரல் கொடுத்த அசரீரி தருமன் முன் தோன்றிற்று. அது வேறு யாரும் இல்லை. அறக்கடவுள் என்று போற்றப்படும் இயமனே.

இயமன், தருமனை அன்போடும் மகிழ்ச்சியோடும் நோக்கி, ''மகனே, இன்னும் ஓர் ஐயம் எனக்குண்டு. உன்னுடைய தம்பியரில் மிகச் சிறந்த வீரர்களான வீமனையும் அருச்சுனனையும் விட்டு நீ நகுலனைக் கேட்ட காரணம் என்ன?'' என்று கேட்டான்.

அறக்கடவுளைத் தருமன் வணங்கி, ''என்னுடைய தாய் குந்திக்குக் கடமை செய்ய நான் ஒருவன் இருக்கிறேன். எனது சிற்றன்னையான மாதுரிக்குக் கடமை செய்ய அவளுடைய மகன்களுள் ஒருவர் உயிருடன் இருப்பதே நியாயம் அல்லவா?'' என்றான்.

இந்தப் பதிலைக் கேட்டு இயமன் மிகவும் மகிழ்ந்து போனான்.

''அறநெறி தவறாத என் அருமை மகனே, உனக்கு ஒரு நாளும் குறைவு வராது. உன் தம்பியர்கள் எல்லாருமே உயிர் பெற்று வருவார்கள்'' என்று வாழ்த்தி விட்டு இயமன் மறைந்து விட்டான்.

# 22. கீசகன் மறைவு

சூதாட்டப்போர் நடந்து பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்து விட்டன. பாண்டவர்கள் காட்டில் வாழ வேண்டிய காலமும் முடிந்தது. இனி ஓராண்டு காலம் யாரும் அறியாமல் மறைந்து வாழ வேண்டும்.

பாண்டவர்கள் தனியாகக் கூடி ஆலோசித்து விராட மன்னனுடைய மத்சய நாட்டில் போய் மறைந்து வாழ்வதெனத் தீர்மானித்தார்கள். பிறர் அறியாமல் மறைந்து வாழ்ந்தாலும் தாங்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரியாமல் எல்லாரும் ஒரே இடத்திலேயே இருக்க வேண்டும் என்றும் அவர்கள் விரும்பினார்கள்.

எல்லா வகையிலும் விராட மன்னனுடைய அரண்மனையே தாங்கள் மறைந்து வாழ்வதற்கு ஏற்ற இடமென்று கருதி அங்கே போய், தாங்கள் பாண்டவர்களுடைய அரண்மனையில் வேலை செய்தவர்களென்றும், அவர்கள் நாடு துறந்து போனபின், பல ஆண்டுகளாகத் தக்க இடங்கிடைக்காமல் திரிவதாகவும் சொல்லி வேலை கேட்பதென்று தீர்மானித்தார்கள்.

அரசர்க்கரசராக விளங்கியவர்கள், இப்போது பணியாட்களாக மாற வேண்டிய காலம் வந்திருக்கிறது.

தருமன், விராடமன்னனிடம் போய், தான் அரசர்க்கரசனான தர்மபுத்திரனிடம், அவருடைய ஆலோசகராகவும், பொழுது போக்குகளில் உதவியாளராகவும் இருந்ததாகச் சொல்லி தன்னுடைய பெயர் 'கங்கன்' என்றும் கூறி வேலை கேட்டான்.

தரும புத்திரரிடம் வேலையில் இருந்தவர் என்றதாலும் அவருடைய அகத்தின் அழகு முகத்தில் ஒளி வீசியதாலும் விராடமன்னன் தருமனைத் தன்னுடைய உதவியாளனாக அமர்த்திக் கொண்டான்.

வீமன், தான் தர்மபுத்திரனுடைய அரண்மனையில் சமையற்காரனாக இருந்ததாகவும், அரசவைக்கு வரும் மல்யுத்த வீரர்களுடன் போரிட்டு அரசனை மகிழ்விப்பவனென்றும் கூறி விராடனுடைய சமையற் கட்டில் வேலைக்குச் சேர்ந்து கொண்டான்.

அருச்சுனனுக்கு ஊர்வசி கொடுத்த சாபம் இப்போது கைகொடுத்தது. அவன் அலியாக மாறி, பெண்ணுருக் கொண்டு 'பிருகன்னளை' என்ற பெயருடன், தான் பாண்டவர்களுடைய அந்தப்புரப் பெண்களுக்கு அழகூட்டும் பணியில் இருந்ததாகவும், இளம் பெண்களுக்கு நாட்டியம், இசை முதலியவைகளையும் கற்றுக் கொடுத்ததாகவும் கூறி அந்தப் புரத்தில் வேலைக்கமர்ந்தான்.

வில்லும் அம்பும் தாங்கும் கைகளில் வெண்சங்கினாலான அழகிய வளையல்களை அணிந்து, தலைமயிரைப் பின்னி விட்டுக் கொண்டு, சேலை அணிந்து அருச்சுனன் அழகிய பெண்மணி போலவே

யாரும் சந்தேகப்படாமல் விராடனுடைய அந்தப்புரத்தில் மறைந்து வாழத் தொடங்கினான்.

நகுலன் அரண்மனைக் குதிரை லாயத்தில் அவைகளைப் பழக்கி, மேற்பார்வை செய்பவனாகவும்: சகாதேவன் மாட்டுப் பண்ணையிலும் வேலைக்குச் சேர்ந்து கொண்டார்கள்.

திரௌபதி, தான் பாண்டவர்களுடைய அரண்மனையில் திரௌபதியின் தோழியாக இருந்ததாகச் சொல்லி 'சைரந்திரி' என்ற பெயரில் விராடனுடைய மனைவி சுதேஷ்ணையிடம் வேலைக்கமர்ந்தாள்.

பாண்டவர்களும் திரௌபதியும் இடையூறு எதுவுமின்றி விராடனுடைய அரண்மனையில் மறைந்து வாழ்ந்து கொண்டிருக்கையில் திரௌபதிக்கு மட்டும் ஒரு இடையூறு வந்து முளைத்தது.

விராட மன்னனின் மனைவியான சுதேஷ்ணைக்கு ஒரு தம்பி இருந்தான். 'கீசகன்' என்று பெயர். அவன் பெரிய பலசாலி. போர் வீரன். தனது மைத்துனனுக்காகப் போர்கள் செய்து வெற்றி கண்டவன். அதனால் மத்சய நாட்டின் படைத்தலைவனாகவும் ஆக்கப்பட்டான். உண்மையில் விராட மன்னன் ஒரு பொம்மையைப் போல இருக்க, கீசகனே அரசை நடத்துவதாக மக்கள் பேசிக்கொண்டார்கள். அந்த அளவுக்குக் கீசகனின் செல்வாக்கு மத்சய நாட்டில் பரவியிருந்தது.

இந்தக் கீசகன் தனது சகோதரியின் அந்தப்புரம் போனபோது, சைரந்திரியாக அங்கே இருந்த திரௌபதியைக் கண்டான். அவளுடைய அழகில் மயங்கினான். தோழிப்பெண்தானே. தன் விருப்பத்துக்கு உடனே உடன்படுவாள் என்று நம்பினான்.

ஆனால் கீசகனின் கெட்ட நோக்கத்தை அறிந்த திரௌபதி, அவனை விட்டு விலகி, விலகிப் போகலானாள்.

ஒரு நாள் கீசகன், திரௌபதியைத் தனியே வழிமறித்துத் தன்னுடைய ஆசையை நேரடியாக வெளியிட்டான். திரௌபதி பயமும் பதற்றமும் கொண்டவளாக, ''ஐயா, என் மீது ஆசை கொள்ள வேண்டாம். என்னை மணம் முடித்த கந்தர்வர்கள் இருக்கிறார்கள். எனக்கு ஏதும் தீங்கு நேர்ந்தால் தீங்கு செய்தவர்களை அவர்கள் சும்மா விடமாட்டார்கள்'' என்று பாதி உண்மையும் பாதி பொய்யுமாக அவனிடம் கூறி விட்டு விலகிச் சென்று விட்டாள்.

ஆனாலும் கீசகன் அவளிடம் கொண்ட ஆசையை விடவில்லை. அடிக்கடி அவளுக்குத் தொந்தரவு கொடுத்து வந்தான். பொறுக்க முடியாத திரௌபதி கடைசியில் ஒரு நாளிரவு யாருக்கும் தெரியாமல் வீமன் படுத்திருந்த இடத்திற்குச் சென்று நடந்தவற்றையெல்லாம் முறையிட்டாள்.

வீமனும் திரௌபதியுமாக யோசித்து, கீசகனுக்கு முடிவு கட்ட ஒரு திட்டம் வகுத்தார்கள்.

மறு நாள் கீசகன் திரௌபதியைச் சந்தித்த போது, அவள் கீசகனுக்கு இணங்குவாள் போல நடித்து, ''நீங்கள் என் மீது இவ்வளவு காதல் கொண்டிருப்பதைக் கண்டு என் மனமும் கரைந்து போகிறது. ஆனால் எனக்குக் காவலாக உள்ள கந்தர்வர்களைப் பற்றி நினைத்தே நான் மிகவும் பயப்படுகிறேன் ...... நீங்கள் இன்றிரவு யாருக்கும் தெரியாமல் நடனசாலைக்கு வாருங்கள். அங்கே நான் உங்களுக்காகக் காத்திருப்பேன்'' என்று சொன்னாள்.

கீசகன் மிகுந்த மகிழ்ச்சியடைந்து ''ஆசைக்குரியவளே, நீ அஞ்ச வேண்டாம். எவர் ஒருவருமே அறியாமல், ஊர் உறங்கிய பிறகு நான் நடனசாலைக்கு வருவேன்'' என்றான்.

அன்றிரவு, செய்து கொண்ட ஏற்பாட்டின் படி, கீசகன் நடனசாலைக்குப் போனான். அங்கிருந்த ஒரு கட்டிலில், போர்த்து மூடிக் கொண்டு ஓர் உருவம் படுத்திருந்தது.

திரௌபதிதான் படுத்திருக்கிறாள் என்று எண்ணிய கீசகன் கிட்டப் போய் அந்த உருவத்தின் மீது கையை வைத்தான்.

போர்வையை உதறி விட்டு வீமன் எழுந்தான்!

மிகுந்த பலம் கொண்டவனான வீமனுக்கு ஏற்பட்ட ஆத்திரம், அவன் உடலில் மேலும் வலுவை உண்டாக்கிற்று.

வீமன் கீசகனை மோசமாகத் தாக்கிக் கொன்றான்!

அலுவல் முடிந்ததும் வீமன் யாருமறியாமல் தன்னுடைய இடத்திற்குச் சென்று படுத்து விட்டான்.

திரௌபதி பக்கத்தில் தூங்கிக் கொண்டிருந்தவர்களை எழுப்பி கீசகன் தன்னைக் கெடுக்க முற்பட்டதாகவும், தனக்குக் காவலாகவுள்ள கந்தர்வர்கள் வந்து அவனைக் கொன்று விட்டதாகவும் கதை கட்டி விட்டாள்.

இதன் பிறகு எல்லாரும் திரௌபதியை சாதாரண தோழிப் பெண்ணாகக் கருதாமல் சற்று மரியாதையுடன் பழகினார்கள். அவளுடைய கோபத்துக்காளானால், தங்களுக்கும் கந்தர்வர்களால் துன்பம் நேரிடக் கூடுமென்று அச்சமும் கொண்டார்கள்.

சுதேஷ்ணைக்குத் தன் தம்பி இறந்த கவலை ஒரு பக்கம். 'இவளால்தானே அவன் இறந்தான்!' என்று திரௌபதி மீது கோபமும் வெறுப்பும் மறுபுறம் உண்டாயிற்று. அதை வெளிப்படையாகச் சொல்லவும் அச்சம்.

''சைரந்திரி, நீ பெரிய இடத்துப் பெண். உன்னைக் கொண்டு பணிவிடை செய்விப்பது எனக்குத் தகாது. இந்த வேலையை விட்டு விட்டு, நீ வேறு நாட்டுக்குப் போய் விடு'' என்றாள் சுதேஷ்ணை.

பாண்டவர்களுடைய மறைவு வாழ்க்கை முடிவடைய இன்னும் ஒரு மாத காலமே அப்போது இருந்தது. அதை மனங்கொண்ட திரௌபதி, ''இன்னும் முப்பது நாட்கள் பொறுத்துக் கொள்ளுங்கள். அதன் பிறகு எனது கந்தர்வர்கள் என்னை அழைத்துக் கொண்டு போய் விடுவார்கள். அவர்களைப் பற்றி நீங்கள் எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை. உங்களுக்கு வேண்டிய உதவிகளை அவர்கள் செய்து தருவார்கள்'' என்றாள்.

வேறு வழியின்றி சுதேஷ்ணையும் சம்மதித்துக் கொண்டாள்.

## 23. போருக்குப் புறப்பட்ட இளவரசன்

பாண்டவர்களுடைய காட்டு வாழ்க்கை முடிந்தது. அவர்கள் மறைந்து வாழத் தொடங்கியதும், துரியோதனன் தனது உளவாளிகளைப் பல நாடுகளுக்கும் அனுப்பி அவர்களைக் கண்டு பிடிக்க முயற்சிகள் செய்தான். அப்படிக் கண்டு பிடித்து விட்டால் மீண்டும் அவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் காட்டு வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும்.

ஆனால், பல நாடுகளுக்கும் சென்று வந்த உளவாளிகள், ''வேந்தே, நாங்கள் எல்லா நாடுகளிலும் தேடிப் பார்த்து விட்டோம். ஓரிடத்திலும் பாண்டவர்கள் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் இறந்து போயிருக்கலாம்'' என்றார்கள்.

இந்தச் சமயத்திலேதான், மத்சய நாட்டில் விராடனுடைய

அரண்மனையில் பெரிய வீரனான கீசகனை யாரோ ஒரு கந்தர்வன் கொன்று விட்டான் என்ற செய்தி அஸ்தனாபுரத்துக்கு வந்தது.

பெரிய வீரனாகிய கீசகனை வெல்லக் கூடியவன் யாராயிருக்கும் என்ற ஐயம் எழுந்தது. வீமனைப் போன்ற ஒரு பலசாலியே கீசகனைக் கொன்றிருக்க முடியும் என்ற ஊகமும் எழுந்தது.

துரியோதனன் தனது அமைச்சரவையை அவசரமாகக் கூட்டி இது பற்றி ஆராய்ந்தான்.

கீசகனை வீமன்தான் கொன்றிருக்க வேண்டும். விராடனுடைய நாட்டில் பாண்டவர்கள் மறைந்து வாழ்கிறார்கள் என்பதைப் பெரிதும் நம்பலாம்'' என்ற கருத்தையே பலரும் சொன்னார்கள்.

''இது தக்கவேளை. விராடன் எப்போதுமே என்னுடன் உறவு கொள்வதில்லை. என்னை வெறுப்பவனாகவே இருந்திருக்கிறான். கீசகனும் இல்லாததால் விராடனுக்கு ஒரு பாடம் படிப்பிக்க இதுவே நல்லவேளை. மத்சய நாட்டின் மீது படையெடுத்துச் செல்வோம். பாண்டவர்கள் அங்கேயிருந்தால் நிச்சயமாக அவர்கள் விராடனுடைய உதவிச்கு வருவார்கள். அவர்களை நாங்கள் கண்டுவிட்டால், திரும்பவும் பன்னிரண்டு ஆண்டுகள் காட்டுக்கு அனுப்பி விடலாம்!'' என்றான் துரியோதனன்.

போருக்கு திட்டங்கள் வகுக்கப்பட்டன.

துரியோதனனுடைய நண்பனும், விராடனுடைய பகைவனுமான சுசர்மன் என்ற மன்னன், தான் படைகளுடன் சென்று விராடனைத் தாக்குவதாகச் சொன்னான்.

மத்சய நாட்டின் தென்பகுதிக்குச் சென்று அங்குள்ள பசுக் கூட்டங்களை சுசர்மன் பிடித்து வரவேண்டுமென்றும், விராடனுடைய படைகள் அப்போது தென்பகுதிக்குச் செல்லுமாதலால், அந்த வேளையில் துரியோதனன் தனது படைகளுடன் வடபகுதிக்குச் சென்று தாக்குவதென்றும் ஏற்பாடாயிற்று.

அந்தக் காலத்தில் பசுக் கூட்டங்களைக் கவர்ந்து செல்வதென்பது ஒரு முக்கியமான நிகழ்ச்சி. பசுக்கள் நாட்டின் பெரிய செல்வமாகக் கருதப்பட்டன.

தீர்மானம் செய்தபடி சுசர்மன் தன்னுடைய படையுடன் மத்சய நாட்டின் தென்புறமாகச் சென்று அங்கிருந்த தோட்டங்களை நாச

மாக்கிப் பசுக் கூட்டங்களையும் கவர்ந்து சென்றான்.

இடையர்கள் ஓடிப்போய் விராடமன்னனிடம் சொன்னார்கள். விராடனுக்குக் கவலையுண்டாயிற்று. 'இந்தச் சமயத்தில் கீசகன் இல்லையே! நான் என்ன செய்வேன்?' என்று கலங்கினான்.

விராடனுடன் துணையாக, 'கங்கன்' என்ற பெயரோடு இருந்த தருமன், விராடனுடைய நிலைமைக்காக வருந்தி உதவி செய்ய விரும்பினான். அவன் சொன்னான். ''அரசனே, கலங்கவேண்டாம். நான் இப்போது துறவியாக இருந்த போதிலும் முன்பு நல்ல ஆயுதப்பயிற்சி பெற்றிருக்கிறேன். தருமபுத்திரனுடைய அரசவையிலிருந்த போது பல போர்களிலும் பங்கு பற்றிய பட்டறிவு எனக்குண்டு. நான் ஆயுதமேந்தி, தேரேறிச் சென்று உங்கள் பகைவர்களை அழித்துப் பசுக்கூட்டங்களை மீட்டு வருவேன். நான் தருமபுத்திர மன்னருடன் இருந்த காலத்தில் உங்கள் சமையற்காரனாக இருக்கும் வல்லனும், குதிரைக்காரனாக இருக்கும் தாமக்கிரந்தியும், மாடுகளைப் பார்த்து வரும் தந்திரி பாலனும் அங்கே இருந்தார்கள். அவர்களும் போர்ப் பயிற்சி பெற்றவர்கள் என்பதை நான் அறிவேன். அவர்களையும் என்னுடன் அனுப்புங்கள். நாங்கள் படைகளுடன் சென்று பகைவரை வென்று வருகிறோம். உத்தரவிடுங்கள்!''

கங்கனின் பேச்சு விராடனுக்கு மிகுந்த மன ஆறுதலைத் தந்தது. அவர் கேட்ட படியே அவர்கள் போருக்குச் செல்ல வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் அவன் செய்து கொடுத்துத் தானும் அவர்களுடன் புறப்பட்டுச் சென்றான்.

அருச்சுனனைத் தவிர மற்றப் பாண்டவர்கள் அனைவரும் விராடனுடன் சேர்ந்து போர்க்களம் சென்றார்கள்.

வீரர்களான பாண்டவர்கள் சுசர்மனை மிக எளிதில் தோற்கடித்துப் பசுக் கூட்டங்களையும் மீட்டுக் கொண்டு நகருக்குத் திரும்பினார்கள்.

அவர்கள் அரண்மனைக்கு வந்து சேருமுன் வேறொரு புதிய செய்தி வடபுறத்திலிருந்து அரண்மனைக்கு வந்தது. வடபுறத்திலிருந்த பெரிய பசுக் கூட்டத்தை துரியோதனன் பெரிய படையுடன் வந்து கவர்ந்து செல்கிறானாம்!

அரண்மனையில் மன்னன் இல்லை. வடக்கிலிருந்து வந்த இடையர் தலைவன், அரசனின் குமாரனான உத்தரனிடம் முறையிட்டான்.

''இளவரசே! அரசர் இல்லாத வேளையில் நீங்கள்தான் வந்து எங்கள் பசுக்களை மீட்டுத் தர வேண்டும்'' என்று இடையர் தலைவன் அரசவையிலிருந்த உத்தரனிடம் கூறினான்.

இதைக் கேட்டதும் இளைஞனான உத்தரனுக்குப் பெருமையாக இருந்தது. தன்னையும் ஒரு வீரனாக மக்கள் மதிக்கிறார்கள் என்ற நினைப்புத் தோன்றவே உத்தரன் மகிழ்ச்சியுடன், ''நான் தயார்! இப்போதே புறப்பட்டுச் சென்று அந்தப் பகைவர்களை அடக்கி வருவேன். என்னுடைய தேரைச் செலுத்துவதற்கு ஒரு நல்ல தேரோட்டி வேண்டுமே?'' என்றான்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த திரௌபதி ''எங்கள் அந்தப்புரத்தில் இளவரசிக்கு நடனம் பயிற்றும் பிருகந்நளை, முன்பு இந்திரப் பிரஸ்தத்தில் இருந்த போது அருச்சுனனுக்கே தேரோட்டியிருக்கிறாள். அவரிடம் வில்வித்தை கூடப் பயின்றிருக்கிறாள். நான் நன்றாக அறிவேன்!'' என்று மிகுந்த ஆவலுடன் கூறினாள்.

உத்தரன் சரியென்று பிருகந்நளையை அழைத்துத் தேரை ஓட்டும்படி கூறினான். பெண்வேடத்திலிருந்த அருச்சுனனும் மிகுந்த உற்சாகத்துடன் மிகத் திறமையாகத் தேரை ஓட்டிச் சென்றான்.

குதிரைகள் மிக வேகமாகச் சென்றன. துரியோதனனுடைய பெரிய படை கண்ணுக்குத் தென்பட்டது. மிகப் பெரிய படை. அதைக் கண்டதும் உத்தரனுக்கு நெஞ்சு படபடத்தது. புறப்பட்டிருந்தபோது இருந்த உற்சாகம் போன இடம் தெரியாமல் மறைந்து போயிற்று,

''பிருகந்நளையே, தேரை நிறுத்து. எங்கள் முன்னே தெரிவது மிகப் பெரிய படை. அங்கே துரியோதனன் மட்டுமன்றி, பெரும் வீரர்களான கர்ணன், பீஷ்மர், துரோணர் முதலியவர்களும் நிச்சயம் இருப்பார்கள். உலகப் புகழ் வாய்ந்த அந்த வீரர்களுடன் என்னைப் போன்ற ஒரு சிறுவன் போருக்குப் போய் நிற்பது மடைத்தனம். என்னிடமோ சிறுபடை கூட இல்லை. இருந்த படைகள் அனைத்தையும் எனது தந்தை கூட்டிக் கொண்டு தென் திசைக்குச் சென்று விட்டார். பிருகந்நளை, தேரைத் திருப்பு! நான் அரண்மனைக்குத் திரும்பிப் போய்ச் சேருவதுதான் புத்திசாலித்தனம்'' என்றான் உத்தரன்.

பிருகன்னளையாக இருந்து தேரோட்டிய அருச்சுனன் சிரித்தான். பிறகு, ''அரச குமாரனே, அரண்மனையில் பெரிய வீரம் பேசிவிட்டு, என்னையும் அழைத்துக் கொண்டு போர் செய்ய வந்தீர்கள், இப்

போது படையைக் கண்டதுமே பயந்து நடுங்கித் திரும்பிப் போவதாகச் சொல்லுகிறீர்கள். பசுக் கூட்டத்தை மீட்காமல் வெறுங்கையுடன் அரண்மனைக்குத் திரும்பிச் சென்றால், அங்குள்ள பெண்கள் கூட உங்களை இகழ்ந்து கேலி செய்வார்கள் ... பயப்படாதீர்கள், மன உறுதியுடன் போரைத் தொடங்குங்கள்!'' என்று கூறிக் கொண்டே அருச்சுனன் தேரை நிறுத்தாமல் படைமுகத்தை நோக்கி ஓட்டிச் சென்றான்.

உத்தரன், 'ஐயோ, ஐயோ' என்று கூக்குரலிட்டு, நான் என் தாய்க்கு அருமை மகன். நான் அநியாயமாகச் செத்துப்போனால் என் தாய் எப்படி வருந்துவாள்! யார் எப்படிக் கேலி செய்தாலும் பரவாயில்லை. நான் அரண்மனைக்குப் போகத்தான் வேண்டும்'' என்று சொல்லி, அருச்சுனன் தேரை நிறுத்தான் என்பதை உணர்ந்து, தேரில் இருந்து நிலத்தில் குதித்து ஓடத் தொடங்கினான்.

## 24. அருச்சுனன் வெளிப்பட்டான்

அருச்சுனன் தேரை நிறுத்தி விட்டு, தானும் நிலத்தில் குதித்து உத்தரனைத் துரத்திச் சென்று பிடித்தான். ''இளவரசனே, ஓட வேண்டாம். நீங்கள் சண்டை செய்ய வேண்டாம். தேரிலிருந்து குதிரைகளை மட்டும் பிடித்துக் கொள்ளுங்கள். நானே அவர்களுடன் சண்டைசெய்து, பசுக்கூட்டங்களையும் மீட்டுத் தருவேன். சந்தேகம் வேண்டாம். இது சத்தியம்!'' என்று கூறிய அருச்சுனன், உத்தரனை வலுக்கட்டாயமாக இழுத்து வந்து தேரிலேற்றி அவனுடைய கையிற் குதிரைகளின் கடிவாளக் கயிறுகளையும் கொடுத்தான். பிறகு ''உத்தரனே, சுடலைப் பக்கமாக உள்ள பெரிய வன்னிமரப் பக்கமாகத் தேரைக் கொண்டுபோ!'' என்றான்.

அந்த வன்னிமரத்தருகே தேர் சென்றதும், அருச்சுனன் தேரை நிறுத்தச் சொல்லி, ''உத்தரா, இந்தத் தேரில் இருக்கும் ஆயுதங்கள் எனக்குப் போதா, இந்த வன்னி மரத்தில் பாண்டவர்களுடைய சிறந்த ஆயுதங்கள் கட்டித் தொங்கவிடப் பட்டிருக்கின்றன. நீ போய் அவற்றை எடுத்து வா!'' என்றான்.

பயத்தினால் மனம் பேதலித்திருந்த உத்தரன் அருச்சுனனுடைய பேச்சுக்குக் கட்டுப்பட்டு, அவன் சொன்னபடியே வன்னிமரத்திலிருந்த ஆயுத மூட்டையை இறக்கிக் கொண்டு வந்தான்.

தோலினால் மூடப்பட்டிருந்த அந்த மூட்டையை ,அவிழ்த்ததும், அதற்குள் மிகச் சிறந்த பாண்டவர்களின் ஆயுதங்கள் இருப்பதை உத்தரன் கண்டான்.

அதிர்ச்சியும், மகிழ்ச்சியும் நிரம்பிய உத்தரன், அந்த ஆயுதங்களைத் தொட்டுப் பார்த்து மிகுந்த வியப்படைந்தான்.

"பிருகன்னளையே, இவை புகழ் பெற்ற பாண்டவர்களின் ஆயுதங்கள் என்று சொல்கிறாயே, அவர்கள் எல்லாவற்றையும் இழந்து, காட்டுக்குப் போனார்களல்லவா? இப்போது எங்கே இருக்கிறார்கள்? அவர்களைப் பற்றி உனக்குத் தெரியுமா? மகாவீரனாகிய அருச்சுனனுடைய திறமைகளைப் பற்றி நான் கதை கதையாக கேட்டிருக்கிறேன். இதோ இந்த வில் காண்டீபம்தானா? என்று பக்தி பரவசத்தோடு கேட்டான்.

அருச்சுனன் சிரித்து விட்டு, தங்களைப் பற்றிய உண்மை அனைத்தையும் உத்தரனுக்குச் சொன்னான்.

அருச்சுனன் சொன்னவற்றையெல்லாம் கேட்ட உத்தரன், திகைப்பும், மகிழ்ச்சியும் ஒருவித பயமும் தன்னை ஆட்கொள்ள, ஒரு கணம் விக்கித்து நின்றான். 'புகழ் பெற்ற பெருவீரனான அருச்சுனனுடனா நான் பேசிக் கொண்டிருக்கிறேன்!' என்று தடுமாறினான். பிறகு, அருச்சுனனைக் கைகூப்பி வணங்கி, "வீராதிவீரா, எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. உங்களிடம் நான் ஏதும் தவறாக நடந்திருந்தால் தயை கூர்ந்து என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று வேண்டினான்.

"உத்தரா, மனம் கலங்காதே. நீயும் உன்னுடைய தகப்பனாரும் எங்களுக்கு மிகுந்த உதவியே செய்திருக்கிறீர்கள். உங்கள் குடும்பத்துக்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். நல்லது, இவைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்க இது நேரமல்ல. தேரேறிக் குதிரைகளை வழி நடத்து. நீண்ட காலத்துக்குப் பிறகு என்னுடைய காண்டீபத்துக்கு வேலை வந்திருக்கிறது" என்று சொல்லிவிட்டுத் தேரிலேறிக் கைகளில் அணிந்திருந்த வளையல்களைக் கழற்றிப் போட்டு விட்டு, தோலுறைகளை அணிந்து காண்டீபத்தை எடுத்தான்.

உத்தரன் மிகுந்த நம்பிக்கையுடனும், உற்சாகத்துடனும் படைமுகம் நோக்கித் தேரைச் செலுத்தத் தொடங்கினான்.

அருச்சுனன் காண்டீபத்தை வளைத்து நாணேற்றி மூன்று முறை

இழுத்து விட்டான். காண்டீபத்தின் ஓசை கம்பீரமாக அந்தப் பக்க மெங்கும் ஒலித்தது.

துரியோதனன் முதலியோரும் காண்டீபத்தின் சிறப்பான ஒலி யைக் கேட்டு, 'இது காண்டீபந்தான். வருபவன் அருச்சுனன்தான்!'' என்று ஐயம் தெளிந்தார்கள்.

பீஷ்மர், துரோணர், கிருபர், துரியோதனன், கர்ணன், அசுவத் தாமன் ஆகிய ஆறு பெரும் வீரர்களும் பெரிய போரொன்றுக்குத் தயாராக நின்றார்கள். ''அருச்சுனனை வெல்வது மிகக் கடினம். நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து சரியாக அணிவகுத்து அவனைத் தாக்க வேண்டும்'' என்று துரோணர் சொன்னார்.

''அருச்சுனனைப் புகழ்ந்து பேசுவதே ஆசிரியருக்கு வழக்கமாகி விட்டது. அருச்சுனன் என்ன, பரசுராமரே வந்தாலும், நான் தனித்து நின்று போராடி வெல்வேன். நீங்கள் எல்லாரும் பசுக் கூட்டங்களை ஓட்டிக்கொண்டு அஸ்தனாபுரம் போங்கள். நான் அருச்சுனனை வென்று எனது சபதத்தை இன்றைக்கே நிறைவேற்றி வருவேன்!'' என்று கர்ணன் வீரம் பேசினான்.

கிருபாச்சாரியார், ''பெரிய மடைத்தனம். வாயினால் வீரம் பேசி னால் வெற்றி வந்து விடாது. நாம் எல்லோரும் சேர்ந்தே அருச்சு னனை வெல்ல வேண்டும்!'' என்றார்.

கர்ணன் கோபத்துடன், ''பெரியவர்களுக்கு அருச்சுனன் என் றாலே நடுக்கம் ஏற்படுகிறது. துரியோதனனின் உணவை உண்டு வாழ்ந்து விட்டு, அதற்கு நன்றியில்லாமல் பேசுகிறீர்கள். வேதம் ஓது வதற்குத்தான் நீங்கள் தகுதி. போர்க்களத்தில் உங்களுக்கு என்ன வேலை? திரும்பிப் போய் அரண்மனையில் சுகமாக இருங்கள். நான் தனியாக நின்று இந்த அருச்சுனனை வென்று வருவேன்!'' என்றான்.

கர்ணன் இப்படிப் பிராமண சாதியைக் குறித்துக் கேலியாகப் பேசியதும், தனது தந்தையாராகிய துரோணரையும், மாமனாகிய கிருபரையும் மரியாதைக் குறைவாகப் பேசியதையும் கேட்ட அசுவத் தாமனுக்குப் பொறுக்கவில்லை. அவன் மிகுந்த சீற்றத்துடன் சொன்னான்.

''கர்ணா, பெரியவர்களுடன் பேசும் போது மரியாதையாகப் பேசு. சாதியைப்பற்றியெல்லாம் ஏன் வீணாகப் பேசுகிறாய்? நாங்கள் அரச குலத்தவர்களல்லர். பிராமணர்கள்தான். வேதம் ஓதிச் சாத்தி

ரங்கள் படிக்கிறவர்கள்தான். நீங்கள் என்ன வீரச் செயல் புரிந்து அரசகுலத்தின் பெருமையைக் காட்டியிருக்கிறீர்கள்? சூதாட்டத்திலே வென்று அரசைக் கைப்பற்றியது வீரமல்ல. வெறும் வாய்ப் பேச்சால் வீரியம் பேசாதே. நெருப்பு மௌனமாகவே எல்லாவற்றையும் எரிக்கிறது. உலக மக்களையெல்லாம் தாங்கிக் கொண்டிருக்கும் பூமி, தன்னைப் பற்றிப் புகழ்ந்து பேசிக் கொண்டிருக்கவில்லை. நீங்கள் திரௌபதியை அரசவைக்கு இழுத்து வந்து அவமானம் செய்தீர்களே, அவளை எந்தப் போரிலே நீங்கள் வென்றீர்கள்? இங்கே அருச்சுனன் காண்டீபம் ஏந்திப் போருக்கு வந்திருக்கிறான். சூதாட்டக் காய்களை உருட்டி அவனை 'நீங்கள் வெல்ல முடியாது!''

பேச்சு முற்றி விரோதம் வளர்வதைக் கண்ட பீஷ்மர் தலையிட்டார்.

''குற்றம் குறை பேசிக்கொண்டிருப்பதற்கு இது நேரமல்ல. கர்ணா, பெரியவர்களைக் குறைவாகப் பேசக் கூடாது. பிராமண குலப் பெரியவர்களே, அசுவத்தாமரே, நீங்கள் கர்ணனை மன்னித்து விடுங்கள். அருச்சுனன் மீதுள்ள கோபத்தினால் அவன் உங்களைக் குறை கூறி விட்டான். பாண்டவர்கள் மறைந்து வாழ வேண்டிய காலம் நேற்றுடன் முடிந்து விட்டது. எனவேதான், அருச்சுனன் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு போருக்கு வந்து விட்டான். நாங்களும் அவனுடன் போர் செய்வதை விட வேறு வழியில்லை! ... ... துரியோதனா, ஆனாலும் இப்போது ஒரு கடைசி வாய்ப்புக்கு இடமிருக்கிறது. நீ விரும்பினால் பாண்டவர்களிடம் அவர்களுடைய நாட்டைக் கொடுத்துச் சமாதானம் செய்து கொள்ளலாம்'' என்றார்.

''சமாதானமா? நான் ஒரு சிற்றூரைக் கூடப் பாண்டவர்களுக்குக் கொடுக்க மாட்டேன். போர் நடக்கட்டும்!'' என்றான் துரியோதனன்.

அதன் பின் படைத்தலைவராக விளங்கிய துரோணர் கட்டளைகளிட்டார். அதன்படி படையில் நாலில் ஒரு பகுதியினரைத் துரியோதனன் தனக்குக் காவலாகக் கொண்டு, பத்திரமாக அரண்மனை போய்ச் சேர வேண்டும். இன்னொரு நாலில் ஒரு பங்கினர், பசுக்களை அத்தினாபுரம் நோக்கிக் கொண்டு செல்ல வேண்டும் — பசுக்களைப் பறி கொடுத்தால் தோல்வி கண்டவர்களாவோம். மீதியாக உள்ளவர்கள் அருச்சுனனிடம் எதிர்த்துப் போரிடுவோம்!'' என்றார் துரோணர்.

பெரிய படையிலிருந்து, துரியோதனனுடைய தேரும், பசுக்கூட்டமும் பின்னால் மறைந்து விட்டதை அருச்சுனன் கவனித்தான். உடனே தனது தேரைத் துரியோதனன் செல்லக் கூடிய பின்பக்கமாகச் செலுத்தும்படி உத்தரனுக்குச் சொன்னான். குதிரைகள் பாய்ந்து சென்றன. போகும்போது பீஷ்மர், துரோணர் ஆகியோரின் காலடிகளில் இரண்டு அம்புகளை எய்து அருச்சுனன் அவர்களுக்கு வணக்கம் கூறி அப்பாற் சென்றான்.

முதலில் பசுக் கூட்டம் போய்க் கொண்டிருந்த இடத்தை அடைந்த அருச்சுனன், அங்கிருந்த படைகளை துரத்தியடித்து, பசுக்களை மீட்டு இடையர்களைப் பார்த்து "இவைகளை உங்கள் இடைச்சேரிக்குக் கொண்டு செல்லுங்கள்!" என்றான். இடையர்களும் பெரு மகிழ்வுடன் பசுக் கூட்டங்களைத் திருப்பி ஓட்டிச் சென்றார்கள்.

பசுக்கூட்டங்களை மீட்ட பின்னர், துரியோதனனுடைய தேரும், ஒரு படையணியும் தூரத்தில் செல்வதை அருச்சுனன் கண்டான். உடனே தேரை அந்தப்பக்கம் செலுத்தும்படி உத்தரனுக்குச் சொன்னான்.

அருச்சுனனுடைய தேர் துரியோதனனை நோக்கிச் செல்வதைக் கண்ட, பீஷ்மர், துரோணர், கர்ணன், அசுவத்தாமன் ஆகிய எல்லோரும் அருச்சுனனைத் தொடர்ந்து சென்று அவனை வழி மறித்துத் தாக்கினார்கள்.

காண்டீபத்துக்கு நிறைய வேலை இருந்தது!

அருச்சுனனுடன் போர் புரிய முடியாமல் எல்லோரும் பின் வாங்கி அத்தினாபுரம் நோக்கி ஓடிவிட்டார்கள்!

அருச்சுனன் உத்தரனைப் பார்த்து, "உத்தரா, தேரைத் திருப்பு, வந்த வேலை முடிந்து விட்டது. நாம் ஆயுதங்களை எடுத்த வன்னி மரத்தடிக்குப் போவோம்" என்றான்.

ஆயுதங்களைப் பழையபடி வன்னி மரத்தில் வைத்த அருச்சுனன், மீண்டும் பெண் வேடம் தாங்கி, தேரோட்டியாய் அமர்ந்தான். உத்தரனைத் தேர் ஆசனத்தில் அமரச் சொன்னான். "உத்தரா, நீ வெற்றி வீரனாக நகரத்துக்குள் செல்கிறாய்!" என்று அருச்சுனன் கூறியதைக் கேட்ட உத்தரன், கூச்சத்துடனும் மனம் நிறைந்த மகிழ்ச்சியுடனும் காணப்பட்டான்.

# 25. தேவகுமாரன்

நாட்டின் தென் பகுதியில் சுசர்மனைத் தோற்கடித்து விட்டு வந்த விராடராசன், தனது குமாரன் உத்தரன் வடபகுதிக்குப் போர் செய்யப் போயிருப்பதை அறிந்து திகைப்பும் பெருங்கவலையும் அடைந்திருந்தான்.

''உத்தரன் சிறு பையன், போதிய போர்ப் பயிற்சி இல்லாதவன். பெரிய படைத் துணையுமில்லாமல் பிருகந்நளை என்ற அலியை நம்பிப் போயிருக்கிறானே! எதிரிகளோ பெரும் பலம் வாய்ந்த கௌரவப் படையினராயிற்றே!'' என்று கூறி விராடன் கலங்கினான்.

பக்கத்திலிருந்த கங்கர் (தருமர்) ''அரசே, கவலைப்பட வேண்டாம். பிருகந்நளை உதவியாகப் போயிருக்கிறபடியால், அரசகுமாரர் நிச்சயம் வெற்றியோடு வருவார். பாண்டவர்களோடு இருந்த காலத்தில் பிருகந்நளையைப் பற்றி நான் நன்கு அறிவேன். அருச்சுனனோடு துணையாகப் போய் அவள் பல போர்களை வென்று கொடுத்திருக்கிறாள்!'' என்றார்.

கங்கர் ஏதோ தனக்கு ஆறுதல் கூறுகிறாரென்று விராடன் கருதினானே தவிர, அவர் சொல்வதைச் சிறிதும் நம்பவில்லை. 'உத்தரன் போர்க்களத்திலே கொல்லப்பட்டான்' என்ற செய்தியே வருமென்று அவன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தான்.

தூதர்கள் ஓடி வந்தார்கள்.

விராடமன்னனின் உள்ளம் நடுங்கிற்று.

''வெற்றி! வெற்றி! அரசகுமாரர் பகைவர்களை வென்று, பசுக் கூட்டங்களை மீட்டு வருகிறார்!'' என்று தூதர்கள் சொன்ன போது முதலில் விராடனுக்குத் தன் காதுகளை நம்ப முடியவில்லை. மீண்டும் மீண்டும் கேட்டு உறுதி செய்து கொண்டதும் அவன் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தான். உற்சாகம் கரை புரண்டோட, பக்கத்தில் நின்றவர்களுக்கெல்லாம் பரிசுகளை அள்ளிக் கொடுத்தான். ''அரசகுமாரன் வரும் வீதிகளை அலங்கரியுங்கள். பெருவிழா எடுங்கள்!'' என்று மக்களுக்கு உத்தரவிட்டான்.

கங்கரைத் கட்டித் தழுவினான் விராடன். ''கங்கரே, தெற்கே நான் சுசர்மனை வென்றது பெரிய செயலல்ல. வடக்கில் மிகப்

பெரிய கௌரவப் படையை என் மகன் வென்றிருக்கிறானே, அது தான் உண்மையான வெற்றி! என் மகன்! என் மகன்! அவன் உலகம் முழுவதும் போற்றும் வீராதி வீரனாகி விட்டானே! எனக்கு இதை விட மகிழ்ச்சி வேறில்லை!'' என்றான்.

''நான்தான் முன்பே சொன்னேனே, பிருகந்நளை உதவியாகப் போயிருக்கும்போது அரச குமாரர் நிச்சயம் வெற்றி பெறுவாரென்று! அவள் சாதாரண அலியல்ல!'' என்றார் கங்கர்.

விராடன் ஒரு கணம் முகம் சுழித்துக் கங்கரைப் பார்த்தான். பிறகு, ''சரி, சரி. என்னால் மகிழ்ச்சியைத் தாங்க முடியவில்லை. உத்தரன் வந்து சேரும் வரையும் சூதாட்டம் போடலாம்!'' என்றான்.

சூதாட்டப் பலகை போடப்பட்டது. விராடனும் கங்கரும் எதிர் எதிரேயிருந்து ஆடத் தொடங்கினார்கள். விராடனால் ஆட்டத்தில் கவனம் செலுத்த முடியவில்லை. அவனுடைய எண்ணமெல்லாம் வெற்றி வீரனான தனது மகன்மேலிருந்தது.

''கங்கரே, என்னால் நம்பமுடியவில்லையே. கௌரவப் படையில் துரோணர், பீஷ்மர், கர்ணன், துரியோதனன் முதலிய வீராதி வீரர்களெல்லாம் இருந்திருப்பார்களே. அவர்களையெல்லாம் உத்தரன் வென்று விட்டானே!'' என்றான் விராடன்.

'நான்தான் சொன்னேனே. பிருகந்நளை துணைக்குப் போயிருக்கும் போதே உத்தரனின் வெற்றி நிச்சயமாகி விட்டது' என்றார் கங்கர்.

''சீ!'' என்று சீறினான் விராடன். ''கங்கரே, நானும் கவனித்துக் கொண்டே வருகிறேன். உமக்கு உத்தரனின் வெற்றி பெரிதாகத் தெரியவில்லை. பிருகந்நளை என்ற அலியைப் பற்றியே புகழ்ந்து பேசிக் கொண்டிருக்கிறீர்! உமக்கு நன்றியுமில்லை, நேர்மையுமில்லை. யாரிடம் எதைப் பேசவேண்டுமென்ற நாகரிகமும் தெரியவில்லை!... ...''

கங்கர் ஏதோ பதில் சொல்வதற்காக வாயைத் திறக்க, அதைப் பொறாத விராடன், கையிலிருந்த சூதாட்டக்காயைக் கங்கரின் முகத்தில் வீசி எறிந்தான்.

அந்தக் கட்டை கங்கரின் முகத்திற் பட்டுக் காயத்தை உண்டாக்கிற்று. இரத்தம் பெருக்கெடுத்தது.

பக்கத்தில் நின்ற சைரந்திரி என்ற திரௌபதி பதறிப் போய்

ஓடி வந்து தனது சேலைத்தலைப்பினால் தருமரின் காயத்தைத் துடைத்தாள்.

அந்தச் சமயத்தில் வாசலில் மக்கள் ஒலி கேட்டது. வாயில் காப்போர் ஓடிவந்து "அரசகுமாரர் வந்துவிட்டார்!" என்று அறிவித்தார்கள்.

எல்லாவற்றையும் மறந்தவனாய் விராடன் பெரு மகிழ்வுடன் மகனை எதிர் கொள்ள எழுந்தான்.

இதற்கிடையில் கங்கர் தமது பக்கத்தில் நின்ற காவலனிடம், "அரசகுமாரனை மட்டும் வரச் சொல். பிருகந்நளை இப்போது வரவேண்டாம் என்று சொல்!" என்று சொல்லி அனுப்பினார். அருச்சுனன் இப்போது வந்தால் தனது நெற்றிக் காயத்தைக் காண்பானென்றும், அதன் காரணத்தை அறிந்தநும் அதனால் பெரும் விபரீதம் ஏற்படும் என்றும் கருதியே அவர் அவ்விதம் சொல்லியனுப்பினார்.

உள்ளே வந்த உத்தரன் தந்தையை வணங்கி விட்டு, கங்கரையும் வணங்குவதற்காக அவர் பக்கம் போனான். கங்கருடைய நெற்றிக் காயத்தையும், அதிலிருந்து இரத்தம் கசிவதையும் கண்ட உத்தரன் கங்கரே தருமன் என்பதை அறிந்திருந்ததால்—மிகவும் பதறிப் போனான்.

"என்ன இது! இவருடைய நெற்றியில் புதிய காயம் ஏற்பட்டு இரத்தம் கசிகிறதே, இது எப்படி வந்தது?" என்று தந்தையிடம் கேட்டான்.

விராடன் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல், "மகனே, உனது வெற்றியைக் கேள்விப் பட்டு நான் புகழ்ந்து மகிழ்ந்த நேரத்தில் இந்தப் பிராமணர், உனக்குத் தேரோட்டியாக வந்த அலியைப் பற்றியே புகழ்ந்து கொண்டிருந்தார். எனக்குப் பொறுக்க முடியவில்லை. கையிலிருந்த தாயக் கட்டையை வீசி எறிந்தேன். அது இவருடைய நெற்றியில் பட்டுக் காயத்தை உண்டாக்கி விட்டது! உன் மீது கொண்ட பொறாமையினாலோ, என்னவோ, தரம் பார்க்காமல் பேசிய இவருக்கு இதை ஒரு தகுந்த தண்டனையாகவே நினைக்கிறேன்" என்றான்.

"ஐயையோ, பெரிய தவறு செய்து விட்டீர்கள் தந்தையே! உங்கள் சார்பாக நான் இவரிடம் மன்னிப்பு வேண்டுகிறேன்" என்றான் உத்தரன்.

ஒரு சாதாரண பிராமண அறிஞருக்காகத் தனது மகன் இப்படிப் பதறுவதைக் கண்ட விராடராசன், வியப்பும் திகைப்பும் அடைந்தானாயினும், வெற்றி வீரனாக வந்திருக்கும் தனது மகனின் மனம் நோகக் கூடாதே என்று கருதி, தானும் கங்கரிடம் மன்னிப்பு வேண்டினான். பிறகு உத்தரனை நோக்கி, உன்னை என் மகனாகப் பெற்றதற்காகப் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். பெரிய வீரர்களைக் கொண்ட கௌரவப்படையை நீ எப்படித் தோற்கடித்தாய்? விபரமாகச் சொல். அதைக் கேட்பதை விட மகிழ்ச்சி தரும் செயல் எனக்கு உலகில் வேறு எதுவுமேயில்லை. சொல் மகனே!'' என்றான்.

உத்தரன், ''தந்தையே, வீணாகப் பெருமை கொள்ளாதீர்கள். கௌரவப்படையை வென்று பசுக்களை மீட்டது நானல்ல. ஒரு தேவ குமாரன் அங்கே வந்தான். எனக்காக அவனே போரிட்டு வெற்றியை ஈட்டித் தந்தான்'' என்றான்.

விராடனுடைய மகிழ்ச்சியெல்லாம் ஒரு கணத்தில் தண்ணீர் ஊற்றிய நெருப்புக் கட்டை போல அவிந்து போயிற்று. ஆயினும் அதைப் பெரிதாக வெளிக் காட்டிக் கொள்ளாமல் ''அப்படியா? யார் அந்த தேவகுமாரன்? அவனை அழைத்து வா. நான் உடனே அவனைப் பார்க்க வேண்டும். அத்தகைய வீரமும், எங்கள் மேல் அன்பும் கொண்ட அந்த வீரனுக்கு உனது தங்கையைத் திருமணம் செய்து வைப்போம்!'' என்றான்.

''அந்தத் தேவகுமாரன் இப்போது இங்கில்லை. போர் முடிந்ததும் அவன் மறைந்து விட்டான். ஒருவேளை நாளைய தினம் அவன் வரக்கூடும். வந்தால் உங்களிடம் அழைத்து வருகிறேன்'' என்றான் உத்தரன். அருச்சுனன் தேவேந்திரனின் மகனாதலால் 'தேவகுமாரன்' என்று குறிப்பிட்டதில் தவறில்லை.

## 24. முதல் தூதன்

மறு நாள் விராடனுடைய அரச மண்டபத்தில் பாண்டவர்கள் ஐவரும் திரௌபதியும் தமது மாறுவேடத்தை நீக்கி, தங்களுடைய சொந்தப் பெயர்களுடன் வெளிப்பட்டார்கள்!

புகழ் பெற்ற பஞ்சபாண்டவர்கள் ஓராண்டு காலம் தனது அரண்மனை ஊழியர்களாக இருந்ததை நினைக்க விராடனுக்குப் பெருமை

யாக இருந்தது. தனது மகளைத் திருமணம் செய்து கொள்ளும்படி அவன் அருச்சுனனிடம் கேட்டுக்கொண்டான். ஆனால் அருச்சுனன் ஏற்றுக் கொள்ளவில்லை. ''உத்தரைக்கு நாட்டியமும், இசையும் கற்றுக் கொடுத்த ஆசிரியனாக நான் ஒராண்டு காலம் இருந்திருக்கிறேன். அவள் எனது மாணவி. மாணவியானவள் மகளுக்குச் சமானமல்லவா!'' என்றான்.

ஆனாலும் தன்னுடைய மகனான அபிமன்யு என்ற இளைஞனுக்கு உத்தரையைத் திருமணம் செய்து வைத்தான். எப்படியோ பாண்டவர்களின் நெருக்கமான உறவு கிடைத்து விட்டது குறித்து விராட மன்னன் மிகுந்த மகிழ்வடைந்தான்.

பாண்டவர்கள் விராடனுடைய அரண்மனையை விட்டு நீங்கி, அவனுடைய நாட்டிலேயே இன்னொரு நகராகிய 'உபப்பிலாவியம்' என்ற இடத்திற்குச் சென்று அங்கே வெளிப்படையாக வாழத் தொடங்கினார்கள்.

'இனி என்ன செய்வது?' என்பதைப் பற்றிக் கலந்து பேசுவதற்காக, பாண்டவர்கள் தங்களுக்கு நெருங்கிய நண்பர்களாக இருந்த அரசர்களையெல்லாம் உபப்பிலாவிய நகருக்கு வந்து கருத்துக் கூறும்படி தூதர்களை அனுப்பித் தெரிவித்தார்கள்.

பாண்டவர்களுக்கு வேண்டிய மன்னர்களும் உபப்பிலாவிய நகருக்கு வந்து கூடினார்கள். கண்ணன், அவனுடைய உடன் பிறப்பான பலராமன், பாஞ்சாலியின் தந்தை துருபதன், அவனுடைய மகன் திருஷ்டத்துய்மன், சிகண்டி முதலிய உறவினர்களும், வேறு பல நட்புரிமை பூண்டவர்களும் உபப்பிலாவிய நகருக்கு வந்து சேர்ந்தார்கள்.

முதலில் அருச்சுனனுடைய மகனாகிய அபிமன்யுவுக்கும் விராட மன்னனின் மகள் உத்தரைக்கும் திருமணம் நடந்தது.

அபிமன்யு அருச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் பிறந்த மகன். சுபத்திரை கண்ணனின் சகோதரி. அருச்சுனன் அவளை எப்போது திருமணம் செய்து கொண்டானோ தெரியவில்லை. பாண்டவர்கள் இந்திரப்பிரஸ்த நகரில் இராச சூய யாகம் நடத்திப் பெரும் புகழோடு வாழ்ந்த காலத்தில் இந்தத் திருமணம் நடந்திருக்கலாம்.

அருச்சுனனுக்கு 'அல்லி' என்ற பெண்ணரசியும் மனைவியாக இருந்தாளென்று ஒரு கதையுண்டு. 'அல்லி அர்ச்சுனா' என்ற நாடகம்

பல காலம் இந்த நாடெங்கும் சிறப்பாக நடந்ததை எல்லாரும் அறிவார்கள். வியாசருடைய பெரிய பாரதத்தில் இந்த 'அல்லி' இருந்ததாகத் தெரியவில்லை. இது யாரோ கட்டி விட்ட ஒரு வாலாக இருக்க வேண்டும்.

'பவளக் கொடி அருச்சுனன்' கதையும் இத்தகையதே.

ஆனால் சுபத்ரை, அல்லி — பவளக்கொடி போன்றவள் அல்லள். அவள் பாரதக் கதையில் இருந்தவள். அவள் பெற்ற பிள்ளை அபிமன்யு பாரதயுத்தத்தில் முக்கியமான இடம் பெற்றவன்.

திருமணக் கொண்டாட்டங்கள் முடிந்த பிறகு எல்லோரும் கூடி, பாண்டவர்கள் என்ன செய்வது என்பது பற்றிக் கலந்துரையாடினர்.

கண்ணன் சொன்னான்.

''மிக்க கீழான வழியில் துரியோதனன் கூட்டத்தினர் தருமனுடன் சூதாடி அவனுடைய நாடு, நகரம், பொருள், பண்டம் அனைத்தையும் சூறையாடியதுமன்றி பன்னிரண்டு ஆண்டுகள் பாண்டவர்களைக் காட்டுக்கும் அனுப்பினார்கள். அதன் பிறகு ஓராண்டு காலம் மறைந்து வாழ வேண்டுமென்றும், விதி செய்தார்கள். பாண்டவர்கள் அந்த நிபந்தனைகளை யெல்லாம் எவ்வளவோ துன்பங்களுக்கு மத்தியில் நிறைவேற்றி, இன்று சுதந்திர மனிதர்களாக வெளிப்பட்டிருக்கிறார்கள். துரியோதனன் கூட்டத்தார் பாண்டவர்களுக்குச் செய்தது பெரிய கொடுமை என்பதை உலகறியும். ஆயினும், தகுதி வாய்ந்த ஒரு தூதனை அஸ்தனாபுரம் அனுப்பி அவன் மூலம் திருதராட்டிரனுக்கும், அங்குள்ள பெரியவர்களுக்கும் நீதியை எடுத்து விளக்கி, பாண்டவர்களிடம் சூதாட்டத்தில் பறித்த நாடு, நகரங்களை அவர்களிடமே திருப்பிக் கொடுக்கும்படி சொல்ல வேண்டும்''

''கண்ணனின் உடன் பிறப்பான பலராமனுக்குக் கண்ணன் பேசிய விதம் பிடிக்கவில்லை. அவன் நியாயம் தவறாதவன். அவன் சொன்னான்;

கண்ணன் சரியான வழியைத்தான் சொல்லியிருக்கிறான். பாண்டவர்கள் தாம் இழந்த நாட்டைச் சமாதான வழியில் பெறுவார்களேயானால், அது மிகவும் நன்றாக இருக்கும். உறவினர்களிடையே போரைத் தவிர்த்து அவர்கள் இணக்கமாக வாழ வழி பிறக்கும். ஆனால் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். யாதவ

குலத்தவராகிய எங்களுக்குத் துரியோதனன் கூட்டத்தாரும் பாண்டவர்களும் சம உரித்துள்ளவர்களே. அது எப்படி இருந்த போதிலும் நாங்கள் நியாயத்தை நோக்கி நடக்க வேண்டும். தருமன் தனது நாட்டைச் சூதாட்டம் ஆடியே இழந்தான். அதன்படி அந்த நாடு துரியோதனனுக்கே உரியது. அன்றியும் பாண்டவர்கள் காட்டு வாழ்க்கையையும், மறைமுக வாழ்க்கையையும் முடித்து வந்த பிறகு, அவர்களிடம் நாட்டைத் திருப்பிக் கொடுப்பது பற்றி அப்போது எவ்வித வாக்குறுதியும் அளிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில், நாட்டைத் திருப்பித் தரும்படி உரிமையோடு கேட்பது எந்த விதத்திலும் நியாயமானதல்ல. மிகவும் பணிந்து, சமாதானமான முறையிலேயே அந்த நாட்டைப் பாண்டவர்களிடம் திருப்பிக் கொடுக்கும்படி கேட்க வேண்டும். அப்படிச் சமாதான முறையில் தீர்வு காணக் கூடிய தூதனை அஸ்தனாபுரம் அனுப்பவேண்டும். அவன் வீரம் பேசியோ உரிமை பேசியோ, போருக்கு அடிகோலாமல் மிகப்பணிவாகவும், கெட்டித்தனமாகவும் அலுவலை முடிக்க வேண்டும்'' என்றான்.

பலராமன் இவ்விதம் பேசியது யாதவ குலத்தைச் சேர்ந்த சாத்யகி என்பவனுக்குப் பொறுக்கவில்லை. அவன் சீற்றத்தோடு எழுந்து ''பலராமரின் பேச்சு மிக நன்றாக இருக்கிறது! பாண்டவர்கள் கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக எவ்வளவோ துன்பங்களை அநுபவித்துத் தங்கள் வாக்குறுதியைக் காப்பாற்றிய பின்னரும், தங்கள் நாட்டைப் பெறுவதற்காகத் துரியோதனனிடம் இரந்து பிச்சை கேட்க வேண்டுமா? மிகப் பெரிய கொடுமைகளைச் செய்த துரியோதனன் கூட்டத்தினரை எப்போதோ அழித்தொழித்திருக்க வேண்டும். அமைதியையும், அறத்தையும் விரும்பி நிற்கும் தருமருக்காக இதுவரை பொறுத்திருந்தோம். துரியோதனனிடம் யாரும் இரக்க வேண்டியதில்லை. பாண்டவர்களுக்கு உரிமையுள்ள நிலத்தை அவர்கள் கொடுத்து மன்னிப்புக் கேட்கவில்லையானால் நானே அவர்களைப் போரில் கொன்றழிப்பேன்'' என்றான்.

சாத்யகியின் பேச்சு துருபத மன்னனுக்கு உவப்பாக இருந்தது. ''சாத்யகி சொன்னதை நானும் ஆதரிக்கிறேன். துரியோதனன் அமைதி வழிக்கு வரப்போவதில்லை. ஆனாலும் உலகத்துக்கு அது தெரியவருவதற்காக நாங்கள் ஒரு தூதனை அஸ்தனாபுரம் அனுப்புவோம். அதேசமயம் எங்களுக்கு வேண்டியவர்களோடெல்லாம் தொடர்பு கொண்டு போருக்கு வேண்டிய ஏற்பாடுகளையும் தொடங்குவோம்.

ஏனென்றால் போர் நடக்கப் போவது உறுதி. சமாதானம் வருமென்று நம்பி நாங்கள் ஏமாந்து போகக் கூடாது!'' என்றான்.

கண்ணன் ''நல்லது துருபதமன்னரே, நீங்கள் சொல்லிய விதமே செய்வோம். ஒரு நல்ல தூதனை நீங்களே நியமித்து அனுப்பி வையுங்கள். அங்கே துரோணரும், கிருபரும் உங்கள் நண்பர்கள். நீங்கள் பேரரசராக இருப்பதால் திருதராட்டிரனுக்கும், மற்றவர்களுக்கும் உங்கள் மீது நல்ல மதிப்புண்டு. நீங்கள் சொல்லி அனுப்பிய தூதன் என்றால் அவர்களெல்லாரும் மதிப்புக் கொடுப்பார்கள். தூது சாதகமாக அமையவில்லையென்றால், போருக்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தொடங்கிக் கொண்டு எங்களுக்கும் அறிவியுங்கள். இப்போது நாங்கள் அபிமன்யுவின் திருமணத்துக்கு வந்ததாக இருக்கட்டும். சமாதானப் பேச்சு நடக்கிற காலத்தை வீணாக்காமல் போருக்கு வேண்டிய முயற்சிகளையும் செய்யுங்கள்'' என்றான்.

கண்ணன் சொன்னபடியே துருபதன் தன்னுடைய அரண்மனைப் பிராமணர் ஒருவரைத் திருதராட்டிரனிடம் தூதனுப்பினான்.

## 27. ஊசி முனையளவு நிலமும் இல்லை

திருதராட்டிரன் சபையிலிருந்த பீஷ்மர் தூதன் சொல்வதைக் கேட்டு, ''நல்லது, பாண்டவர்களும் குருகுலத்தவரே, அவர்கள் நாடற்றவர்களாக அலைவது நமது குலப் பெருமைக்கு இழுக்காகும். அவர்கள் கேட்பதைப்போல் அவர்களிடம் நாட்டைக் கொடுக்காது போனால், பெரியபோர் நடப்பதைத் தடுக்க இயலாது. எல்லாவற்றையும் சரியாகச் சிந்தித்துப் பார்த்தால் அவர்கள் கேட்பதைக் கொடுத்து ஒற்றுமையாக வாழ்வதே உகந்தது'' என்று திருதராட்டிரனுக்குச் சொன்னார்.

பீஷ்மர் இவ்விதம் கூறியது அங்கேயிருந்த கர்ணனுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. அவன் மிகுந்த கோபத்துடன் எழுந்து, தூது வந்த பிராமணனைப் பார்த்து, ''தூதனே, பாண்டவர்கள் எந்த முகத்தோடு இங்கே நாடு கேட்கிறார்கள்? முறைப்படி அதைச் சூதாட்டத்தில் தருமன் தோற்று விட்டான். தோற்று இழந்து விட்ட பொருளின் மீது உரிமை பாராட்டுவது எந்த நியாயத்தில் சேர்ந்தது? இப்படி உரிமை கொண்டாட அவர்களுக்கு வெட்கமாக இல்லையா?'' என்றான்.

பீஷ்மர் ''கர்ணா, நீ குலநாசத்துக்கு வழி கோலுகிறாய்; போர் வந்தால் எப்படியிருக்கும் என்பதை நீ சிறிதும் சிந்தித்தாயில்லை!'' என்றார்.

''போரா? என்று கர்ணன் சிரித்தான். பிறகு வீராடனுடைய படையையும், துருபதனுடைய படையையும் நம்பியல்லவோ பாண்டவர்கள் போருக்குத் துணிந்திருக்கிறார்கள், அவர்களுடைய படைகளை விடப் பலமடங்கு படைபலம் எங்கள் பக்கமுண்டு. நீங்கள் போற்றிப்புகழும் அருச்சுனனுடைய தலையைச் சீவ நான் இருக்கிறேன். நீங்கள் போருக்குப் பயப்பட வேண்டாம்!'' என்றான்.

வாக்கு வாதம் வளர்வதைக் கண்ட திருதராட்டிரன், ''ஏன் வீணாக வாதம் செய்கிறீர்கள்?. பாண்டவர்களில் மூத்தவனாகிய தருமன் நியாயம் தெரிந்தவன். குருகுலத்தவர் வீணாக அழிந்து போவதை அவன் விரும்பமாட்டான். நான் அவனிடம் ஒரு தூதனை அனுப்பி, நியாயத்தை எடுத்து விளக்கி போர் நடக்காமலிருக்க வழி செய்வேன்'' என்றவன், தூதராக வந்த பிராமணரைப் பார்த்து, ''தூதரே நீங்கள் தருமனிடம் சென்று, நியாயங்களை எடுத்துக் கூறுவதற்காக எங்கள் தூதுவனாக சஞ்சயன் அங்கே வருவான்!'' என்று சொல்லுங்கள்! என்றான்.

சபை கலைந்தது!

திருதராட்டிரன் தனக்கு மிகவும் வேண்டியவனான சஞ்சயனை அழைத்து 'எப்படியாவது நயமாகப் பேசி, பாண்டவர்கள் போருக்கு வராதபடி செய்'' என்று கூறி அனுப்பிவைத்தான்.

உபப்பிலாவிய நகரத்துக்கு வந்த சஞ்சயன் தருமனை அவனுடைய சபை மண்டபத்திலேயே சந்தித்தான்.

''தரும புத்திரரே, உங்கள் பெரிய தந்தை திருதராட்டிர மன்னர் உங்களுக்குத் தனது அன்பையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கச் சொன்னார். உங்களுக்கும் துரியோதனனாதியருக்கு மிடையே போரை மூட்டி விடப் பலரும் முயன்று கொண்டிருக்கிறார்கள். அப்படி ஒரு போர் நடக்குமானால் எத்தனை உயிர்கள் அநியாயமாக இறந்துபடும்! குருகுலமே நாசமாகி விடும். அத்தகைய பெருங் கொடுமைக்கு நீங்கள் துணைபோக மாட்டீர்கள் என்று நம்புகிறேன். துரியோதனன் முதலியோர் கெட்டவர்கள் என்பதில் ஐயமில்லை. திருதராட்டிர மன்னர் உங்களுக்கு வேண்டியதைத் தருவதற்கு விரும்பினாலும், துரியோ

தனன் ஒப்புக் கொள்ளமாட்டான். கர்ணனும் சகுனியும் அவனோடு ஒத்துப் பாடுவார்கள். அவர்கள் போருக்குத் தயாராக நின்றாலும், அறம் தெரிந்தவராகிய நீங்கள் அதைத் தவிர்க்க வேண்டும். போரிலே வெற்றி பெற்றாலும் கூட அதனால் ஏற்படும் நலன்களை விட, நட்டங்களே மிக அதிகமாக இருக்கும். அதிலும் இது ஒரே குலத்தவருக்கிடையே நடக்கப் போகும் போர். அறிவாளியான நீங்கள் அதைத் தவிர்க்க வேண்டு மென்று உங்கள் பெரிய தந்தை பெரிதும் விரும்புகிறார். உங்களை நம்பியும் இருக்கிறார்'' என்று சஞ்சயன் மிகவும் நயமாகவும், தந்திரமாகவும் பேசினான்.

பக்கத்திலிருந்த அருச்சுனன், சஞ்சயனுடைய இந்தத் தந்திரமான பேச்சைக் கேட்டு மிகச் சினம் கொண்டெழுந்து கடுமையான வார்த்தைகளைப் பேசினான். ''தன்னுடைய பிள்ளைகளை அடக்க முடியாத திருதராட்டிரன், அவர்களைக் காப்பதற்காக வஞ்சகமாக உம்மைத் தூது அனுப்பியிருக்கிறார்!'' என்றான். ''போர் நடந்தே தீரும். என்னுடைய காண்டீபத்தின் முன்னால் எல்லோரும் நிலை குலைந்து அழியத்தான் போகிறார்கள்!'' என்றான்.

அந்தச் சபையில் கண்ணனும் இருந்தான். அவன் சொன்னான்;

''சஞ்சயா, எனக்குப் பாண்டவர்களும் கௌரவர்களும் சமமான உறவுக்காரர்களே. ஆனாலும் நான் பாண்டவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் பக்கம் நியாயம் இருப்பதாகவும் நான் உணர்கிறேன். எப்படியிருந்தாலும் போர் ஒன்று நடப்பதை நான் விரும்பவில்லை. பாண்டவர்களிடம் அவர்களின் நாட்டைக் கொடுத்து சமாதானமாகப் போனால் எல்லாருக்கும் நலமே. இதற்காக நானே அஸ்தனாபுரம் சென்று சமாதானப் பேச்சை நடத்த விரும்புகிறேன். சஞ்சயா நான் அங்கே வருகிறேன் என்று திருதராட்டிரனிடம் போய்ச் சொல்!''

தருமனும், ''எங்கள் பெரிய தந்தைக்கும் அங்குள்ள பெரியவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைச் சொல்வாயாக. நான் எப்போதும் நியாயமற்ற வழிக்குச் செல்லமாட்டேன். ஆனால் அதற்காகத் தீயவர்களுக்கு வளைந்து கொடுக்கவும் மாட்டேன். நான் சமாதானத்தையே விரும்புகிறேன். ஆனால் போருக்கும் தயாராகவே இருக்கிறேன். அஸ்தனாபுரத்திலுள்ள பெரியவர்களிடமெல்லாம் இதைச் சொல்வாயாக!'' என்று கூறிச் சஞ்சயனை அனுப்பி வைத்தான்.

சஞ்சயன் அஸ்தனாபுரம் சென்று உபப்பிலாவிய நகரத்தில் நடந்தவற்றையெல்லாம் திருதராட்டிரனுடைய சபையில் விபரமாகச் சொன்

னான். முக்கியமாக அருச்சுனன் மிகக் கடுமையான வார்த்தைகளால் சொன்ன பதில்களையும், காண்டீபம் பழிவாங்கத் துடித்துக் கொண்டிருப்பதையும் சொன்னான். கடைசியில் கண்ணன் பாண்டவர்களுக்காக நியாயம் பேசியதையும், அவர்களுக்காகத் தூது வர இருப்பதையும் சொன்னான்.

சஞ்சயன் சொன்னவற்றைக் கேட்ட பிறகு, பீஷ்மர் மீண்டும் துரியோதனனுக்குப் புத்தி சொல்லிப் பார்த்தார். "துரியோதனா, கண்ணனும் பாண்டவர்கள் பக்கம் நிற்பதை நீ மிகுந்த கவனத்துக் கெடுத்துக் கொள்ள வேண்டும். கர்ணனுடைய பகட்டுப் பேச்சை நம்பி ஏமாந்து போகாதே! அருச்சுனனுடன் போர் புரியத் தக்கவர் யார் இருக்கிறார்கள்? கந்தர்வன் உன்னைச் சிறை செய்த போது இந்தக் கர்ணன் என்ன செய்து கொண்டிருந்தான்? அருச்சுனனுடைய காண்டீபம்தானே உன்னைக் காப்பாற்றியது? விராடனுடைய பசுக் கூட்டத்தை அருச்சுனன் மீட்டுச் சென்ற போது இந்த வாய்ப் பேச்சு வீரன் கர்ணன் ஏன் ஓடி மறைந்தான்? துரியோதனா, நன்றாகச் சிந்தித்துப்பார். வீணாக அழிந்து போகாதே!" என்றார்.

திருதராட்டிரனுக்கு நெஞ்சுக்குள் பயம் குடி கொள்ளத் தொடங்கிற்று.

"எமது குலத்தலைவரான பீஷ்மர் சொல்வது சரியானதே. போர் வேண்டாம். அதனால் எவ்வளவு அழிவுகள் நேருமென்பதைக் கணக்கிட முடியாது. அறிவும் அநுபவமும் உள்ளவர்கள் சொல்வது போலச் சமாதானமாக இதைத் தீர்த்துக் கொள்வதே நல்லது" என்றான் திருதராட்டிரன்.

துரியோதனன், "தந்தையே நீங்கள் அஞ்ச வேண்டாம். போரிலே எங்களைப் பாண்டவர்கள் வெல்ல முடியாது. என்னுடைய உளவாளிகள் அவர்களுடைய நிலைமையை அறிந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் பக்கத்தில் எல்லாமாக ஏழு அக்குரோணி படைகளே உண்டு. எங்கள் பக்கத்தில் பதினொரு அக்குரோணி படைபலம் தயாராக இருக்கிறது. இந்தப் பதினொரு அக்குரோணி படையை அவர்களால் வெல்ல முடியாது. நீங்கள் அஞ்ச வேண்டாம். கர்ணன், பீஷ்மர், துரோணர், கிருபர், அசுவத்தாமன் முதலிய பெரிய வீரர்களெல்லாம் எங்கள் பக்கத்திலேயே இருக்கிறார்கள். பாண்டவர்கள் உங்களிடம் இரந்து கேட்கவில்லை. 'போரா, சமாதானமா?' என்று முறைப்போடு கேட்கிறார்கள். அவர்களுக்கு ஊசி முனையளவு நிலத்தைக் கூட நான்

கொடுக்கமாட்டேன்!'' என்று கூறிவிட்டு சபையை விட்டு எழுந்து போய்விட்டான்.

அவ்வளவில் சபையும் கலைந்தது.

★

'அக்குரோணி' என்பது ஒரு கணக்கு.

ஒரு தேர், ஒரு யானை, மூன்று குதிரை, ஐந்து காலாட்கள் என்பன ஒரு தொகுதி. இவ்விதம் 21870 தேர்களைக் கொண்டது ஒரு அக்குரோணி.

இதன் படி இரு பக்கத்துப் படைபலம் வருமாறு:

| | துரியோதனன் (11) | தருமன் (7) |
|---|---|---|
| தேர்: | 260570 | 153090 |
| யானை: | 260570 | 153090 |
| குதிரை: | 731710 | 459270 |
| காலாள்: | 2102850 | 765480 |

இற்றைக்குச் சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பும் படைகளின் அளவை இப்படிக் கணக்கிட்டு வகுத்து வைத்திருந்திருக்கிறார்கள்.

## 28. கண்ணன் தூது

பாண்டவர்களின் தூதனாகக் கண்ணன் அஸ்தனாபுரம் புறப்பட்டான். அவன் புறப்படு முன் திரௌபதி அவன் முன்னால் வந்து, தனது விரித்த கூந்தலைக் காட்டி, ''கண்ணபெருமானே, முடியாமல் கிடக்கும் என்னுடைய இந்தக் கூந்தலை நினைவில் வைத்திருங்கள்!' என்று தன்னுடைய விருப்பத்தை வெளிப்படுத்தினாள். ''இந்த விரித்த கூந்தலைப் பார்த்துக் கொண்டே எனக்குச் செய்யப்பட்ட கொடுமைகளைப் பதின்மூன்று ஆண்டுகளாக நெஞ்சிலே அடக்கி வைத்திருக்கிறேன். கண்ணா, இனியும் எனக்குத் தாங்க முடியாது!'' என்றாள் திரௌபதி, கண்ணன் தூது செல்வதனால் ஒரு வேளை சமாதானம் ஏற்பட்டு விடுமோ என்று அவள் அஞ்சினாள். 'சமாதானம் ஏற்பட்டுவிட்டால் யுத்தம் நடவாது. துரியோதனனும் துச்சாதனனும் கொல்லப்பட மாட்டார்கள். என்னுடைய சபதம் நிறை

வேறாது. விரித்த கூந்தலை முடிக்க இயலாது' என்பது அவளுடைய கவலை.

''கவலைப்பட வேண்டாம் திரௌபதி, திருதராட்டிரனுடைய பிள்ளைகள் என்னுடைய சொல்லைக் கேட்கப் போவதில்லை. யுத்தம் நடக்கும். உன்னுடைய சபதம் நிச்சயமாக நிறைவேறும். கவலைப் படாமலிரு'' என்று திரௌபதிக்கு ஆறுதல் கூறிவிட்டுக் கண்ணன் புறப்பட்டான்.

அஸ்தனாபுரத்தில் கண்ணனுக்குப் பெரிய வரவேற்புபசாரம் நடந்தது. தூதனாக வரும் கண்ணனுக்கு என்னென்ன பரிசுகள் கொடுக்கலாம், எதைக் கொடுத்து அவனை வசப்படுத்தலாம் என்றெல்லாம் திருதராட்டிரன் ஆலோசனை நடத்தினான்.

எந்த விதமான பரிசுகளைக் கொடுத்தாலும் கண்ணனை உங்கள் வசப்படுத்த இயலாது. அவன் பாண்டவர்கள் பக்கமேயிருப்பான் — நியாயத்தின் பக்கமேயிருப்பான்!'' என்று விதுரன் உண்மையை எடுத்துக் கூறினான்.

இந்தக் காலத்தைப் போலவே, அந்தக் காலத்திலும் தூதர்களுக்குப் பரிசுகள் வழங்கியும், மகிழ்வித்தும் தம்வசப்படுத்தும் வழக்கம் இருந்திருக்கிறது போலும்!

எல்லாரும் கூடியிருந்த சபையிலே கண்ணன் தான் தூது வந்த நோக்கத்தைத் திருதராட்டிரனிடம் எடுத்துக் கூறினான்.

''அரசனே, நடக்கக் கூடாதனவெல்லாம் நடந்து விட்டன, அவைகளைப் பற்றியெல்லாம் இனிப் பேசிக் கொண்டிருப்பதனால் எவ்வித பயனுமில்லை. பாண்டவர்கள் நடந்தவைகளை மறந்து விட்டு, இனி மேலாவது சமாதானமாக வாழ்வதையே விரும்புகிறார்கள். துரியோதனனாதியர் போல அவர்களும் உங்களுக்குப் புத்திரர்களே. நியாயமாக அவர்களுக்குச் சேர வேண்டிய நாட்டைக் கொடுத்து அவர்களை உங்களுடன் சேர்த்துக் கொள்ளுங்கள். அப்படிச் செய்வதனால், உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், இந்த நாட்டுக்கும் நன்மையே உண்டாகும். நீங்கள் சமாதானமாகப் போக விரும்பாவிட்டால், பாண்டவர்கள் போருக்குத் தயாராகவே இருக்கிறார்கள்!'' என்று கண்ணன் சொன்னான்.

கண்ணனுடைய வார்த்தைகளில் உள்ள உண்மையை உணர்ந்தவனாகத் திருதராட்டிரன், ''கண்ணபிரானே, நீங்கள் சொல்வதே

எனது விருப்பமும். அப்படி ஒரு அமைதி நிலை ஏற்பட்டால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன். ஆனால், எனது மகன் துரியோதனன் அதற்கு முற்றிலும் மாறாக இருக்கிறானே! அவனை வழிப்படுத்த என்னால் இயலவில்லை. கண்ணபிரானே, நீங்களே அவனுக்குப் புத்தி சொல்லிப்பாருங்கள்!'' என்று தனது இயலாமையை வெளியிட்டான்.

துரியோதனனும் அந்தச் சபையிலிருந்தான். கண்ணன் அவனிடம் பல விதமான நியாயங்களையும் எடுத்துச் சொல்லிப் பாண்டவர்களுக்குச் சொந்தமான நாட்டை அவர்களிடம் கொடுத்துச் சமாதானமாகப் போகும்படி சொன்னான்.

கண்ணனுடைய கவர்ச்சியான பேச்சு எதுவும் துரியோதனனைச் சிறிதும் அசைக்கவில்லை. பீஷ்மர், கிருபர், துரோணர், விதுரன் முதலிய பெரியவர்களும் அவனுக்குப் புத்தி சொல்லிப் பார்த்தார்கள்.

'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா' என்று ஒரு பழமொழியுண்டு. ஏதாவது ஒரு கருத்தைச் சிந்தித்துச் சிந்தித்து அதுவே சரியானதென்று நெஞ்சில் உறுதி கொண்டவர்களும் தாம் பிடித்த பிடியை விடுவதில்லை.

துரியோதனன் சொன்னான்: ''என் தந்தை உட்பட எல்லோரும் என்மீது குற்றம் சுமத்துகிறீர்கள். நான் என்ன குற்றம் செய்தேன்? நான் சிறுவனாக இருந்த போது எனக்கு உரித்தான நாட்டைப் பிரித்து, பாண்டவர்களுக்கு ஒரு பகுதியைக் கொடுத்தீர்கள். அந்தச் சிறுவயதில், பெரியோர்களின் தீர்மானத்தை எதிர்த்து நிற்க என்னால் முடியாமல் போய்விட்டது. என் மீது உள்ள குற்றம் அது ஒன்றுதான். பாண்டவர்கள் சூதாட்டப் போரிலே தங்களுடைய செல்வத்தையும் தோற்றுத் தங்களையும் தோற்றார்கள். அது என்னுடைய குற்றமா? அடிமைகள் தமது ஆண்டானுக்கு முன்னால் மார்பிலே துணி அணியக் கூடாது என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். எமக்கு அடிமைகளாகி விட்டிருந்த பாண்டவர்களினதும் திரௌபதியினதும் மேலாடைகளைக் களைந்து எங்கள் உரிமையை நிலை நாட்ட முயன்றது குற்றமா?

''அடிமைகளாகி விட்டவர்களையும், அடிமைகளாகக் கருதாமல் பெரியவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, பன்னிரண்டு ஆண்டுகள் காட்டு வாழ்க்கையும் ஓராண்டு மறைவு வாழ்க்கையும் வாழ்ந்த பின்

அவர்கள் அந்தத் தளையிலிருந்து நீங்கிக் கொள்ளலாம் என்று ஒப்புக் கொண்டேன்! அது குற்றமா?

''அப்படி ஒரு தண்டனையை அவர்கள் பட்டறிந்த பின், அவர்கள் சூது போரிலே தோற்று விட்ட நாட்டையும், செல்வங்களையும் திருப்பித் தருவேனென்று நான் வாக்களித்தேனா?

''ஒரு போரிலே — அது சூதாட்டப் போராயினும் — தோற்று விட்ட நாட்டைத் திருப்பித் தரும்படி அவர்கள் வாதாடுவதும், நீங்களெல்லாம் அவர்களுக்காக நியாயம் பேசுவதும் சரியான செயல் தானா? அவர்கள் ஆளணி சேர்த்துக் கொண்டு என் மீது போர் தொடுத்து என்னையும் என்னைச் சேர்ந்தவர்களையும் அழிப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதற்கு நீங்களும் துணை போவதன்றி என் மீதே குற்றமுஞ் சொல்கிறீர்கள். நீங்கள் யார் என்ன சொன்னாலுஞ் சரி, இந்த நாட்டில் பாண்டவர்களுக்கு ஓர் ஊசி குத்தும் நிலம் கூடக் கொடுக்கமாட்டேன்!'' என்று அவன் தனது நெஞ்சிற் கிடந்த ஆத்திரத்தைச் சொற்களிலே வெளியிட்டான்.

சிறிது நேரம் மௌனம் நிலவிற்று.

கண்ணன் ஏதோ சொல்வதற்குத் தொடங்கினான். அதற்குள் துச்சாதனன் எழுந்து, ''அண்ணா, எங்களைக் கொன்று தொலைக்க ஆசைப்படுகிறவர்களுக்கு இவர்களும் துணை போகிறார்கள். இவர்களுடன் என்ன பேச்சு? வாருங்கள், இந்த இடத்தில் இருக்க வேண்டாம்!'' என்று கூறித் துரியோதனனை அழைத்துக் கொண்டு சபையை விட்டு வெளியேறினான்.

அவ்வளவில் சபையும் கலைந்தது.

# 29. கர்ணனின் கண்ணியம்

கண்ணன் அத்தினாபுரத்தை விட்டு நீங்குமுன், பாண்டவர்களின் தாயாகிய குந்திதேவியைப் போய் பார்த்து ஆறுதல் வார்த்தைகள் சொல்லி விட்டுப் போனான்.

கண்ணன் கூறியவற்றிலிருந்து இனிப் போர் நடப்பது நிச்சயமாகி விட்டதைக் குந்தி தெரிந்து கொண்டாள்.

குந்தியின் மனம் பெருங் கலக்கமடைந்தது. ''துரியோதனன்

பக்கத்தில் சிறந்த வீரர்களான பீஷ்மர், துரோணர், ஆகியவர்களோடு கர்ணனும் இருக்கிறானே! இந்தப் பெரிய வீரர்களோடு போரிட்டு என்னுடைய பிள்ளைகள் மடிந்து போவார்களோ? என்று அவள் கவலைப்பட்டாள். மேலும் சிந்தித்ததில், பீஷ்மர் ஒரு போதும் தனது பிள்ளைகளின் உயிருக்குத் தீங்கு செய்யமாட்டாரென்றும், துரோணர் தமது மாணவர்களாகிய பாண்டவர்களிடம் நிச்சயம் இரக்கம் காட்டுவாரென்றும், ஆனால் கர்ணன்? கர்ணன் சிறந்த வில்லாளியாயிற்றே! அன்றியும் பாண்டவர்களிடம் முக்கியமாக அருச்சுனனிடம் மிகுந்த பகைமை பாராட்டுபவன், அவனால் தனது பிள்ளைகளுக்கு நிச்சயமாக ஆபத்து உண்டாகுமென்று குந்தி கருதினாள்.

கர்ணனைத் தடுப்பதற்கு என்ன செய்வதென்று பலவாறு சிந்தித்த குந்தி கடைசியில், கர்ணனுடைய பிறப்பின் இரகசியத்தை அவனுக்கு எடுத்துச் சொல்லி, பாண்டவர்கள் அவனுடைய தம்பிமார்கள் என்பதை அவனுக்கு வெளிப் படுத்த இதுவே தக்க தருணமெனத் துணிந்தாள்.

இரவிரவாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்த குந்தி, பொழுது விடிந்ததும் சிறிதும் தாமதியாமல் கர்ணனைத் தேடிக் கொண்டு சென்றாள்.

கர்ணன் தனது காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சூரிய வணக்கம் செய்து கொண்டிருந்தான். வணக்கம் முடிந்து பார்த்தவன் தன் எதிரே குந்திதேவி நிற்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தவனாய் அவள் காலைத் தொட்டு வணங்கி, ''மதிப்புக்குரிய பாண்டவர்களின் தாயே! இந்த அதிகாலை வேளையில் என்னைத் தேடிவரக் காரணம் என்ன? ஒரு வார்த்தை சொல்லி அனுப்பியிருந்தால் நான் ஓடோடி வந்திருப்பேனே!'' என்று பணிவோடு கூறினான்.

தனது மூத்த மகனைக் கண்ட உள்ளக் கிளர்ச்சியினால் ஒரு கணம் தான் வந்த நோக்கத்தை யெல்லாம் மறந்து, அவனைத் தன் மனத்தினால் அணைத்து, உச்சி மோந்து, மெய்மறந்து நின்றாள் குந்தி. பிறகு கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டு, ''உன்னிடம் ஒரு முக்கியமான விடயம் தனிமையில் சொல்ல வேண்டும். அதற்காகவே வந்திருக்கிறேன்!'' என்றாள்.

''சொல்லுங்கள் அம்மா! என்னால் உங்களுக்கு ஏதும் செய்ய முடியுமானால் மிக மகிழ்ச்சியோடு செய்வேன்! என்றான் கர்ணன்.

''கர்ணா, என் மகனே! உன்னைப் பற்றிய ஓர் உண்மையை நான் சொல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது. நீயும் மற்றவர்களும் நினைத்துக் கொண்டது போல, நீ ஒரு தேரோட்டியின் மகனல்ல. நீ ஒரு மதிப்பு மிக்க அரசகுமாரன். மகனே, கர்ணா, நீ நான் பெற்ற பிள்ளை! உலகம் முழுவதையும் வாழ்விக்கும் சூரியபகவான் அருளால் பிறந்தவன் நீ. பாண்டவர்கள் உனது உடன் பிறப்புக்கள். கர்ணா, இதை நன்றாக மனதில் கொள்ளுவாயாக. கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கு மிடையே மிகப் பெரிய போர் ஒன்று நடக்கப் போவதாக அறிந்தேன். இந்தப் போர் மிகக் கொடுமையானது. மகனே, இந்தக் கொடிய போரிலே உடன் பிறப்புக்களாகிய எனது பிள்ளைகள் ஒருவரை ஒருவர் தாக்கி அழியப் போவதை நினைத்தே என்னுடைய நெஞ்சு கலங்குகிறது .....'' என்று சற்றே நிறுத்தினாள்.

சிறிது உணர்ச்சி வசப்பட்டவனான கர்ணன் சொன்னான்; ''தாயே, நீங்கள் சொன்ன உண்மைகள் ஒரு புறம் மகிழ்ச்சியையும் இன்னொரு புறம் துன்பத்தையும் தருகின்றன. அம்மா, சும்மா மனம் கலங்குவதனால் என்ன பயன்? நாங்கள் நியாயத்தின் வழி நடப்போம். நடக்கப் போகும் நிகழ்வுகளை யாராலும் மாற்றியமைக்க முடியாது என்பது உங்களுக்குத் தெரியாதா? விதியை வெல்ல மனிதர்களால் முடியுமா?'' என்றான்.

''முடியாதுதான் மகனே. ஆனாலும் உன்னுடைய தம்பிமார்களை நீயே எதிர்த்துப் போரிடுவது — அதை நினைத்தாலே நெஞ்சு பதறுகிறது. என் முதல் மகனே! நீயும் உன் தம்பிமாருடன் சேர்ந்து விடு. பாண்டவர்கள் நடந்த எல்லாவற்றையும் மறந்து, உன்னை மனதார வரவேற்று, தங்கள் மூத்த அண்ணனாகவும், தலைவனாகவும் ஏற்றுக் கொள்ளுவார்கள். தருமன் உன்னைப் பணிந்து, உன்னையே அரசனாக்குவான் ..... மகனே, நல்லதோ, கெட்டதோ உடன் பிறந்தவர்கள் அவைகளை ஒன்றாக அனுபவித்தால் மனதுக்கு ஆறுதல் உண்டாகும். உங்களைப் பெற்ற தாயாகிய நானும் மனதில் அமைதி கொள்வேன்'' என்று இரப்பது போல வேண்டினாள் குந்தி.

கர்ணன் ஒன்றும் பேசாமல் சிறிது சிந்தனையில் ஆழ்ந்தான்.

''உன் தம்பிகளுடன் சேர்ந்து விடுவதாகச் சொல் மகனே! அதைக் கேட்டால் என் நெஞ்சில் நிம்மதி ஏற்படும்!''

''அம்மா, காலம் கடந்து விட்டது! மிகவும் கடந்து விட்டது!

என்னைப் பெற்ற தாயே என்னைக் கைவிட்ட நிலையில் தேரோட்டியின் மகன் என்று என்னை எல்லோரும் பழித்து நின்ற காலத்தில், என்னை ஆதரித்து வாழ்வு கொடுத்தவன் துரியோதனன், தாயினும் மேலாகப் பரிந்து தன்னுடைய உயிர் போல என்னைப் பாராட்டி நட்புக் கொண்டிருக்கும் துரியோதனனுக்கு, நான் செய்நன்றி கொல்வேனாகில், அம்மா! ஒரு புழுவிலும் கடையவனாகிப் போய் விடுவேன்! அந்தப் பாவத்தைத் தீர்ப்பதற்கு எனக்கு ஆயிரம் தாய்மார்களும் ஆயிரம் உடன் பிறப்புக்களும் இருந்தால் கூட உதவ முடியாது! தாயே, என்னுடைய இந்த உடம்பும் ஏன் உயிரும் கூட துரியோதனுக்கே சொந்தமானது. நான் பாண்டவர்களுடன் சேருவதென்பது நடக்கக் கூடியதல்ல வேறு எதையாவது கேளுங்கள்!'' என்று கர்ணன் மிகுந்த உணர்ச்சி வசப்பட்டவனாய்க் கூறினான்.

கர்ணனின் உறுதியை மாற்ற முடியாது என்பதை அறிந்த குந்தி ''மகனே, உனது விருப்பம் அப்படியானால் நான் என்ன செய்ய முடியும்? ஆனால் நீ எனக்கு ஒரு வரம் தருவாயா?'' என்றாள்.

''சொல்லுங்கள் தாயே, என்னால் முடிந்ததை நிச்சயம் செய்வேன்!''

''வரப்போகும் போரிலே, உன்னுடைய உடன் பிறப்பான பாண்டவர்களுடன் நீ நிச்சயம் மோத நேரிடும். 'அப்படி நேரும் போது அவர்களைக் கொல்லமாட்டேன்' என்று எனக்கு ஒரு வரம் தா மகனே!''

''நல்லதம்மா, ஆனால் ஒரு சிறு திருத்தம். அருச்சுனன் என்னைக் கொல்வதாகச் சூளுரைத்திருக்கிறான். அவனைக் கொல்வதாக நானும் வாக்குறுதி செய்திருக்கிறேன். எனவே அருச்சுனனைத் தவிர உங்கள் பிள்ளைகள் வேறு எவரையும் நான் கொல்லமாட்டேன்! ஆனால் நடக்க விருக்கும் போரிலே அருச்சுனனோ அல்லது நானோ இறப்பது நிச்சயம், அதைத் தடுக்க முடியாது. அம்மா எப்படி நடந்தாலும் உனக்கு ஐந்து புதல்வர்கள் இருப்பார்கள்!— என்னைப் பெற்ற தாய்க்கு நான் செய்யக் கூடியது இவ்வளவு தானம்மா! 'எல்லாம் விதிப்படி நடக்கும்' என்ற கொள்கையில் நம்பிக்கை வைத்து நிம்மதியாகப் போய் வாருங்கள் தாயே!'' என்று கூறிக் கர்ணன விடை பெற்றான்.

கடமை உணர்வுக்கு மாறாகச், சொந்த பந்த உணர்வுகளைக்

காட்டி, வெற்றி பெற முடியாத குந்தி கவலை தீராத நெஞ்சுடன் திரும்பினாள்.

## 30. போர் வந்து விட்டது

கண்ணன் உபப்பிலாவிய நகரத்துக்குத் திரும்பி வந்து அஸ்தினாபுரத்தில் நடந்தவற்றைப் பாண்டவர்களுக்கு விபரமாக எடுத்துச் சொன்னான்.

"தருமரே, ஒரே இனத்தவர்களுக்கிடையே போர் நடக்க வேண்டாமென்பதற்காகவும் இந்த நாட்டுக்குப் பெரிய அழிவு ஏற்படக் கூடாது என்பதற்காகவும், என்னால் இயன்றளவு பேசிப் பார்த்து விட்டேன். சமாதானத்துக்கான வழி இறுக அடைத்துக் கொண்டிருக்கிறது. இனியும் பொறுத்துக் கொண்டிருந்தால் 'பாண்டவர்கள் கோழைகள்' என்ற பெயர்தான் உலகில் மிஞ்சும். எனவே இனி உடனடியாகப் போருக்கான ஆயத்தங்களை விரைவு படுத்துங்கள்!" என்றான் கண்ணன்.

தருமனுக்கு ஏமாற்றமும் கவலையும் ஏற்பட்டது. திரௌபதியும் வீமனும், அருச்சுனனும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

'போர் வந்து விட்டது! போர் வந்து விட்டது!' என்ற உணர்வு எல்லோருடைய உள்ளங்களையும் தாக்கிற்று. வீரர்கள் மிகுந்த உற்சாகத்தோடு காணப்பட்டார்கள். பொது மக்கள் மனத்தில் ஒருவித கலக்கம் குடிகொண்டது. போர் வந்து விட்டால் அது அரசர்களையும், படைவீரர்களையும் மட்டுமல்ல; சாதாரண பொது மக்களையும் பாதிக்கவே செய்கிறது!

போருக்கான ஆயத்தங்களை இரு பகுதியினரும் நிறைவு செய்து கொண்டார்கள்.

பாண்டவர்கள் பக்கத்துக்குப் படைத் தலைவனாக திருஷ்டத்துய்மன் நியமிக்கப்பட்டான். இவன் திரௌபதியின் உடன் பிறந்தவன்.

கௌரவர்கள் பக்கத்தில் பீஷ்மரே தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். பெரிய வீரனான கர்ணனையே தலைமைக்கு நியமிக்கும்படி பீஷ்மர் முதலில் சொன்னார். ஆனால் கர்ணன் பெருந்தன்மையோடு அதை மறுத்துவிட்டான். "பீஷ்மரே தகுதியானவர், அவரே படைத் தலைமையை வகிக்கட்டும். போரின் போது அவருக்கு

ஏதாவது நேர்ந்து விட்டால் அதன் பிறகு நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்வேன்'' என்று கர்ணன் சொல்லிவிட்டான்.

'குருசேத்திரம்' என்ற இடத்தில் இருபக்கத்துப் படையினரும் அணி வகுத்து நின்றார்கள்.

அந்தக் காலத்தில் போர் என்பது, மக்கள் வாழிடத்துக்கு வெளியே ஒரு பரந்த வெளியில்தான் நடக்கும். போருக்கென்று பல விதி முறைகள் உள்ளன. படை முகத்திலும் தன்னோடு ஒத்த வீர னோடேயே மற்றவன் சண்டையிடுவான்.

படைகளில் தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட் படை என நால்வகைப் படைகளிருந்தன.

தேர்களில் தலைவர்களே யிருப்பார்கள். யானைகளையும், குதிரை களையும் போருக்காகப் பயிற்றுவித்து வைத்திருப்பார்கள், யானைப் படையும் குதிரைப்படையும் மிக முக்கியமானவை.

வில்லும், வேலும், வாளுமே முக்கியமான படைக் கலங்கள். எதி ரியின் தாக்குதலிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகக் கேடயமும் வைத்திருப்பார்கள்.

போர் நடக்கும் விதத்தையும் இரண்டு விதமாகக் குறிப்பிட்டார் கள். ஒன்று 'துவந்த யுத்தம்' என்பது. இதுவே ஒழுங்கு விதிகட்கு உட்பட்டுச் செய்யும் சண்டை. மற்றது 'கங்குல யுத்தம்' எனப்பட் டது. ஒழுங்கு முறை தவறி யார் யாருடன் மோதுவதென்றில்லாமல் கண்டபடி அகப்பட்டவர்களை வெட்டிக் குத்திக் கொல்வதே கங்குல யுத்தம்.

பாரதப் போரில் முதல் நாளில் ஒழுங்கான துவந்த யுத்தமே நடைபெற்றது.

அருச்சுனனுக்குத் தேரோட்டியாகக் கண்ணனே அமர்ந்தான். இதைப் பற்றி ஒரு கதை உண்டு. போர் தொடங்கு முன் கண்ண னைத் தம் பக்கம் சேர்க்க வேண்டி அருச்சுனனும் துரியோதனனும் ஒரே நாளில் ஒரே நேரத்தில் கண்ணனின் வசிப்பிடம் சென்றார்கள். படுக்கையில் நித்திரையாக இருந்த கண்ணன் நித்திரை கலைந்து எழும்பியதும் தனது கால்மாட்டில் காத்திருந்த அருச்சுனனையே முத லில் பார்த்ததாகவும் அதனால் முதலில் அவன் விருப்பத்தைக் கேட்க அருச்சுனன், நடக்கவிருக்கும் போரில் கண்ணன் தங்கள் பக்

கத்துக்கு வரவேண்டு மென்று கேட்டதாகவும் அதற்கு கண்ணன், ''நான் போரில் நேரடியாகப் பங்கு கொள்ள மாட்டேன். அப்படிப் போரிட தனி ஒருவனாகிய எனது உதவி தேவையா அல்லது சிறந்த வீரர்களான பல்லாயிரக்கணக்கான யாதவர்களின் படையணி தேவையா? — இரண்டில் உனக்கு எது தேவையோ அதைத் தரு வேன்'' என்றானாம். அருச்சுனன் சிறிதும் தாமதியாமல் ''நீங்கள் தனியொருவனாகவேனும் எங்கள் பக்கத்தில் இருக்க வேண்டும், அதுவே எங்களுக்குப் போதும்'' என்றானாம். கண்ணன் துரியோத னனைக் கேட்க அவன், ''உங்கள் படையணியைத் தந்துதவுங்கள்!'' என்று கேட்டு அவனுதவியைப் பெற்றுக்கொண்டு திரும்பினானாம்.

நேரடியாக ஆயுதமேந்திப் போர் புரியாத கண்ணன், அருச்சுன னின் தேரோட்டியாகப் பணிபுரிந்தான். அருச்சுனனுக்கு அதுவே பல மாயிற்று. அருச்சுனனின் பலமே பாண்டவர்களின் பலம்.

முதல் நாள் போரின் போது அருச்சுனனுடைய தேரைக் கண்ணன் நடத்தி வந்து போர் முனையில் நிறுத்திய போது, தனக்கு எதிரணி யில் தனது குலப் பெரியவர்களான பீஷ்மர் முதலானவர்களும் குரு வான துரோணரும், மற்றும் பல வணக்கத்துக்குரிய பெரியவர்களும், உறவினர்களும் இருப்பதைக் கண்டு அருச்சுனன் போர் செய்யத் தயங் கினானென்றும் அப்போது கண்ணன், அருச்சுனனுக்கு நீண்ட ஒரு 'உபதேசம்' செய்து அவனுடைய மனத்தை மாற்றினானென்றும் கூறப்படுகிறது. அந்த உபதேசந்தான் புகழ் பெற்ற 'பகவத் கீதை' என்ற நூலாகப் போற்றப்படுகிறது.

பாரதக் கதையை வியாசர் எழுதிய பிறகு அதற்குள் நிறைய இடைச் செருகல்கள் புகுந்துள்ளன வென்றும் அப்படிப் புகுந்த ஒரு இடைச் செருகலே 'பகவத்கீதை' என்பதும் சிலருடைய கருத்து.

''கடமையைச் செய், பலனை எதிர் பாராதே'' என்பதே கீதை யின் முக்கிய குறிப்பு. ''அருச்சுனா, போர் செய்ய வேண்டியது இன்று உனது கடமை. அதைச் செய். அதனால் ஏற்படும் பலன்களைப் பற்றிக் கவலைப்பட்டுத் தளர்ச்சியடையாதே!'' என்றான் கண்ணன்.

முதல் நாள் போரிலே கௌரவர்களின் படைத் தலைவராகிய பீஷ்மர் மிகத் திறமையாகப் படைகளைக் கொண்டு நடத்தி உலகமே புகழ்ந்து பாராட்டிய தமது போர்த் திறமையையும் வெளிப் படுத்தினார்.

முதல் நாள் போரில் கௌரவர்களின் பக்கமே வெற்றி நின்றது. துரியோதனன் முதலியோர் மிகுந்த மகிழ்ச்சிபடைந்தார்கள். தருமன் மிகுந்த கவலையிலாழ்ந்தான். கண்ணன் அவனைத் தேற்றி ஆறுதல் கூறினான்.

இரண்டாம் நாள் பீஷ்மருடன் அருச்சுனன் மிக மூர்க்கமாக மோதினான். இருவருடைய விற்களிலிருந்தும் பற்பல விதமான அம்புகள் சீறிப் பாய்ந்தன. புகழ் பெற்ற இரு வில் வீரர்களின் போரைக் கண்டு களிக்க வானில் தேவர்களெல்லாங் கூடி நின்றதாக வியாசர் எழுதியிருக்கிறார்.

இந்த உலகில் மிக முக்கியமான சண்டைகளோ அல்லது வேறு ஏதும் முக்கியமான நிகழ்ச்சிகளோ நடந்தால் இந்தத் தேவர்கள் வேடிக்கை பார்க்க வானில் கூடிவிடுவார்களென்று எல்லாப் புராணங்களும் சொல்வது வழக்கம். தங்களுக்கு விருப்பமான ஒரு நிகழ்ச்சி நடந்து விட்டால் வானிலிருந்து பூமாரி பொழிந்து வாழ்த்துவார்களாம்.

இரண்டாம் நாள் பாரதப் போரின் போது பீஷ்மரோடு அருச்சுனன் ஒரு பக்கத்தில் பெரும் போர் நடத்திக் கொண்டிருக்க, இன்னொரு பக்கத்தில் துரோணரோடு திருஷ்டத்துய்மன் போராடிக் கொண்டிருந்தான். இப்படியே பற்பல வீரர்களும் தத்தமக்குச் சமமான வீரர்களுடன் மோதிக் கொண்டிருந்தார்கள்.

இப்படியே முதல் ஒன்பது நாட்களும் கடும் போர் நடந்தது. தினமும் காலையில் இரு பக்கத்துப் படைத் தலைவர்களும் தமது படைகளைத் தகுந்த வியூகத்தில் அமைத்து இன்று இன்ன மாதிரிப் போரிடுவதென்று தீர்மானித்துப் போரைத் தொடங்குவார்கள். பொழுது சாய்ந்ததும் போரை நிறுத்திக் கொண்டு தத்தமது பாசறைக்குத் திரும்பி ஓய்வெடுப்பார்கள்.

முதல் ஒன்பது நாட்களும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் எதுவும் நடக்கவில்லை.

அன்று கௌரவர்களின் படைத் தலைவராக நின்ற பீஷ்மரை அருச்சுனன் எதிர் கொண்டு போர் செய்தான். அருச்சுனனுடைய தேரில் சிகண்டி ஏறிக்கொண்டு தானே பீஷ்மரைக் கொல்லப் போவதாக வில்லை எடுத்தான்.

இந்தச் சிகண்டி யாரென்று வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

'உன்னுடைய அடுத்த பிறவியில் உன்னால் பீஷ்மருக்கு மரண முண்டாகும்' என்று சிவனார் வரமளித்ததும், காலத்தை வீணாக்காமல் உடனேயே நெருப்பில் குதித்து அந்தப் பிறவியை முடித்துக் கொண்டு அடுத்த பிறவியை எடுத்த விடாக்கண்டிதான் சிகண்டி. அவள் பெண்ணாகப் பிறந்து ஆண் தன்மை பெற்றவள். அதனால் 'அலி' என்றும், 'பேடி' என்றும், பின் தள்ளப்பட்டவள். இந்த அவமானங்களெல்லாம் அவளுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. இந்தப் பிறவியிலேனும் பீஷ்மரைக் கொல்வதே அவளுடைய ஒரே கருத்தாக இருந்தது.

சிகண்டியைத் தனது தேரில் ஏற்றிக் கொண்டு பீஷ்மருக்கு எதிராக அம்புகளைச் செலுத்தும் படி அனுமதித்த அருச்சுனனின் வீரம் இந்த இடத்தில் கறைபடிகிறதென்றே சொல்லலாம். ஏனெனில், பேடியாகிய சிகண்டியை எதிர்த்துப் பீஷ்மர் போர் செய்யமாட்டாரென்பது எல்லாருக்கும் போல அருச்சுனனுக்கும் நன்கு தெரிந்தேயிருந்தது.

சிகண்டியின் அம்புகள் பீஷ்மரின் உடலில் பல பாகங்களிலும் தாக்கின. ஆயினும் அவர் அவைகளைப் பொறுத்துக் கொண்டு, தனது வில்லை வளைக்காமலேயே இருந்தார்.

சிகண்டியால் பீஷ்மரைத் தாக்க முடிந்ததே தவிர அவரை முடிக்க இயலாமலிருப்பதை அருச்சுனன் சொற்ப நேரத்தில் கண்டு கொண்டான். அவரை வீழ்த்தா விட்டால், அவர் நமது படை முழுவதையும் அழித்துவிடக் கூடுமென்றும் அவன் அஞ்சினான். பீஷ்மர் வில்லை எடுக்காமல் இருக்கும் இதுவே நல்ல சமயமென்று அருச்சுனன் காண்டீபத்தை வளைத்து மளமள வென்று பல அம்புகளை எய்து பீஷ்மரைக் கடுமையாகத் தாக்கினான். சிகண்டியின் அம்புகளே தம்மைத் தாக்குவதாகப் பீஷ்மர் முதலில் நினைத்தார். சற்று நேரத்தின் பின்னரே அம்புகளின் தன்மையை அறிந்து, அருச்சுனனுடைய அம்புகளே என்று தெரிந்து கொண்டார். அது அவர் மனதுக்குச் சற்றே ஆறுதலாகவும் இருந்தது. கேவலம் ஒரு பேடியினால் தாக்கப்பட்டு மரணிப்பதை விட வீரனாகிய அருச்சுனனுடைய அம்புகளுக்கு இரையாவதே மேல் என்று அவர் கருதினார்.

இதற்குள் அருச்சுனனுடைய அம்புகள் பீஷ்மரின் உடல் முழுவதும் பரவலாகக் குத்தி நின்றன.

அந்த நிலையிலும் ஒரு ஈட்டியை எடுத்து அதை அருச்சுனன் மேல்

வேகமாக வீசி எறிந்தார் பீஷ்மர். அருச்சுனன் அந்த ஈட்டியைத் தனது அம்புகளால் துண்டு துண்டாக வெட்டி வீழ்த்தி விட்டு, மேலும் மேலும் பீஷ்மர் மீது அம்புகளை எய்து தாக்கினான்.

## 31. பீஷ்மர் வீழ்ந்தார்

அருச்சுனனின் அம்புகளால் மிக மோசமாகத் தாக்கப்பட்ட பீஷ்மரால் நிலை கொள்ள முடியவில்லை. அப்படியே தேரிலிருந்து நிலத்தில் விழுந்தார்.

'பீஷ்மர் வீழ்ந்தார்!' என்ற செய்தி போர்க்களம் முழுவதும் பரவிற்று. உடனே இரு தரப்பினரும் போரை நிறுத்தி விட்டுப் பீஷ்மரைப் பார்க்க ஓடி வந்தார்கள்.

பீஷ்மர் நிலத்தில் வீழ்ந்த போதும் அவரது உடல் மண்ணைத் தொடவில்லை. உடம்பெங்கும் அருக்சுனனின் அம்புகள் குத்தி நின்றதால் அந்த அம்புகளே நிலத்தில் குத்தி நின்றன. அவற்றின் மேல் பீஷ்மரின் உடல் கிடந்தது. தலையில் பிடரியில் அம்புகள் தைக்காததால் பீஷ்மரின் தலை மட்டும் தாங்குவதற்கு ஆதரவின்றித் தொங்கிக் கொண்டிருந்தது. யாரோ ஓடிப்போய் சில தலையணைகளைக் கொண்டு வந்து அவரது தலையின் கீழ் அடுக்கி அதைத் தாங்கும்படி செய்தார்கள். ஆனால் பீஷ்மரோ அந்தத் தலையணை ஏற்றதாக இல்லையென்று அவற்றை எடுக்கும்படி கூறிவிட்டு, அருச்சுனனைப் பார்த்து, "அருச்சுனா, நீயே எனக்குத் தலையணையையும் அமைத்துத் தா!" என்றார். அவருடைய குறிப்பறிந்த அருச்சுனன் காண்டீபத்தில் சில அம்புகளைத் தொடுத்து எய்தான். அவை அவரின் தலைக்குக் கீழே நிலத்தில் குத்தி நின்று அவருடைய தலை தொங்காமல் ஆதரவு செய்தான்! பீஷ்மரும் திருப்தியடைந்தார்.

பீஷ்மர் மீண்டும் அன்போடு அருச்சுனனைப் பார்த்து, "அருச்சுனா, தாகமாயிருக்கிறது. குடிப்பதற்குத் தண்ணீர் வேண்டும்" என்றார். அருச்சுனன் உடனே வில்லில் அம்பைத் தொடுத்துப் பீஷ்மரின் வலது பக்கமாக அதை நிலத்துள் செலுத்தினான். சிறிது நேரத்தில் அம்பு சென்ற வழியே நிலத்துள்ளிருந்து நல்ல தண்ணீர் ஊற்றாகக் கிளம்பி உயரச் சென்று பீஷ்மரின் வாயில் விழுந்தது. அவருடைய அன்னையாகிய கங்காதேவியே தனது மகனின் கடைசி

நேரத் தாகத்தைக் தீர்க்க வந்து சேர்ந்தாளென்று வியாசர் வருணிப்பது மிக உருக்கமாக இருக்கிறது.

பீஷ்மர் தம்மைச் சுற்றி நின்றவர்களைப் பார்த்து, "நான் உயிரை விடுவதற்கு இது ஏற்ற காலமல்ல உத்தராயண காலத்திலேயே நான் உயிரை விடவேண்டும். அது வரையும் இப்படியே நான் கிடப்பேன். உத்தராயண காலம் வந்ததும் அப்போது உயிருடன் இருப்பவர்கள் என்னை வந்து பார்க்கலாம்" என்றார்.

அதன் பிறகு பீஷ்மரை அந்த இடத்திலேயே விட்டு விட்டு, எல்லோரும் கலைந்து சென்றார்கள்.

பீஷ்மர் போரைத் தலைமை வகித்து நடத்தும் வரையும் கர்ணன் போரில் கலந்து கொள்ளாமல் விலகியிருந்தான். போர் தொடங்கு முன் நடந்த ஓர் ஆலோசனைக் கூட்டத்தில், கர்ணன் பீஷ்மரைப் பார்த்து "பெரியவரே, எவ்வித காரணமுமின்றி எந்தக் காலத்திலும் என்னை மதிக்காமல் நடந்திருக்கிறீர்கள். ஏனோ என் மீது உங்களுக்கு வெறுப்பு விளைந்திருக்கிறது. நீங்கள் போரைத் தலைமை வகித்து நடத்துங்கள். நீங்கள் போரை நடத்தும் வரை நான் போரில் கலந்து கொள்ளமாட்டேன். பாண்டவர்களை வென்று, துரியோதனனுக்கு வெற்றியை ஈட்டிக் கொடுப்பீர்களேயானால், அந்தக் கணமே இந்த அரச வாழ்வைத் துறந்து காட்டுக்குப் போய் விடுவேன். அப்படியின்றி, போரிலே நீங்கள் வீழ்ந்து விட்டால், நான் பாண்டவர்களோடு போரிட்டுத் துரியோதனனுக்கு வெற்றியை வாங்கிக் கொடுப்பேன்!" என்று கூறியிருந்தான்.

அதன்படியே பீஷ்மர் படைத் தலைவராக இருந்து போர் நடத்திய பத்து நாட்களும் கர்ணன் போரில் கலந்து கொள்ளவில்லை.

பீஷ்மர் வீழ்ந்துவிட்டார் என்பதை அறிந்ததும், அவனும் பீஷ்மரைப் பார்க்கப் போய், அவரை வணங்கித் தன்னை மன்னித்து வாழ்த்தும்படி பணிந்து வேண்டினான். அவரும் எல்லாவற்றையும் மறந்து, "கர்ணா, உன்மீது எனக்கு எவ்வித வெறுப்பும் இல்லை. நீ குந்தியின் புத்திரன். பாண்டவர்களில் மூத்தவன். அவர்கள் மீது நீ எப்போதும் விரோதம் பாராட்டி வந்ததைக் கண்டே நான் உன்மீது வெறுப்புக் காட்டியதுண்டு. உன்னுடைய சிறந்த வீரத்தையும், கொடையையும் நட்பாடலையும் நான் மிகவும் மகிழ்வுடன் நினைந்து வியந்திருக்கிறேன். உன்னுடைய கடமையை நீ செய்

நடப்பது நடக்கும். அறமே வெல்லும்'' என்று பீஷ்மர் கர்ணனுக்குச் சொன்னார்.

கர்ணன் போரில் கலந்து கொள்ளப் போகிறான் என்ற செய்தி துரியோதனனுக்கு மட்டுமன்றி, கௌரவ படையினர் அனைவருக்குமே மிகுந்த மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் அளித்தது.

துரியோதனனும் கர்ணனும் சேர்ந்து அடுத்த படைத் தலைவராக யாரை நியமிக்கலாமென்று யோசித்து, துரோணரே அதற்குத் தகுதியானவரென்று தீர்மானித்தார்கள். துரியோதனன் துரோணரிடம் சென்று, மிகுந்த பணிவுடன் அவரை மிகவும் புகழ்ந்து தங்கள் தீர்மானத்தைச் சொல்லி, இனி அவரே தலைமை வகித்து இந்தப் போரை வென்று தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டான்.

பதினொராம் நாள் துரோணரே படைகளை மிகச் சிறந்த முறையில் அணிவகுத்து போரைத் தொடங்கினார். அன்று தொடக்கம் அடுத்த ஐந்து நாட்களும் துரோணரின் தலைமையிலேயே போர் நடந்தது.

துரோணர் தலைமை தாங்கிய அடுத்த நாளே துரியோதனன் ஒரு புதிய யோசனையைத் துரோணரிடம் சொன்னான்.

''படைத்தலைவரே, நீங்கள் தலைமை வகித்து நடத்தும் இந்தப் போரிலே ஒரு முக்கியமான செயலைச் செய்து தர வேண்டும். தரும புத்திரனை உயிரோடு நீங்கள் பிடித்து எங்களிடம் ஒப்படைக்க வேண்டும். இந்தச் செயலைச் செய்து முடிப்பீர்களானால் இந்தப் போரும் உடனே ஒரு முடிவுக்கு வரும். பாண்டவர்களை நாங்கள் வெற்றி கொள்வதற்குச் சமமாக எல்லாம் நல்லபடியாக முடியும்'' என்றான்.

இதைக் கேட்டுத் துரோணர் மிகவும் மகிழ்ந்து போனார். ''துரியோதனா, உன்னுடைய நல்ல மனதைப் பாராட்டுகிறேன். தனது பகைவரைக் கொல்ல வேண்டுமென்றுதான் பொதுவாக எல்லோரும் நினைப்பார்கள். பகைமைக்கு மேலாக உன்னுடைய இன உணர்வும் அமைதி மனப்பான்மையும் மேலோங்கி நிற்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். மிக நல்ல யோசனை, தருமனை உயிருடன் பிடிப்பதன் மூலம் ஒரே குலத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்கள் போரில் மடிவதைத் தடுத்து விடலாம். அப்படியே செய்வோம். உனது விருப்பப்படி நான் தருமனை உயிரோடு பிடித்து உன்னிடம் ஒப்படைக்கிறேன்!''

அன்றைய போரில் துரோணர் தாம் துரியோதனனுக்குக் கொடுத்த வாக்கை மனம் கொண்டவராக, அதி உக்கிரமாகப் போர் செய்து கொண்டு, தமது தேரைத் தருமர் இருந்த பக்கமாகச் செலுத்தினார்.

அவர் சென்ற வேகத்தையும், அவருடைய வில்லிலிருந்து அம்புகள் மழைபோலப் பொழிந்ததையும் பார்த்தவர்கள் 'இன்று தருமர் பிடிபட்டார்' என்றே நினைத்தார்கள்.

துரோணரின் அம்புகள் தருமரைச் சுற்றிப் பாய்ந்தன. தருமருடைய வில்லையும் துரோணர் உடைத்துத் துண்டாக்கினார். இச்சமயத்தில் திருஷ்டத்துய்மன் தருமருடைய உதவிக்கு வந்து துரோணர் மீது அம்புகளைத் தொடுத்தான். அவனால் சொற்ப நேரம் கூடத் துரோணரை எதிர் கொள்ள முடியவில்லை.

தருமர் ஆபத்தில் அகப்பட்டிருப்பதை அறிந்த அருச்சுனன் எங்கிருந்தோ மிக வேகமாக வந்தான். கண்ணனால் செலுத்தப்பட்ட சிறந்த குதிரைகள் அருச்சுனனுடைய தேரை மிக வேகமாகக் கொண்டு வந்து துரோணருக்கு முன்னே நிறுத்தின. காண்டீபத்திலிருந்து கொடிய பாம்புகள் போல அம்புகள் துரோணரை நோக்கிப் பாய்ந்தன. துரோணரால் அருச்சுனனுடைய தாக்குதலை எதிர்த்து நிற்க முடியவில்லை. அவர் மெதுவாகப் பின் வாங்கினார். ஆயினும் மனதுக்குள் தனது மாணவனின் அற்புதமான வில்லாட்சியைக் கண்டு பூரித்துப்போனார்.

துரோணர் பின் வாங்கிச் செல்லப் பகலவனும் மேற்குத் திசையில் மறைந்தான். அன்றைய போர் அவ்வளவில் முடிவடைந்தது.

★

துரியோதனனுக்குப் பெரிய ஏமாற்றம்! துரோணர் எப்படியும் தருமரைப் பிடித்துக் கொண்டு வந்து விடுவாரென்றும், அதன் பிறகு தனக்கே வெற்றி கிடைக்குமென்றும் அவன் மனக்கோட்டை கட்டியிருந்தான். அந்தக் கோட்டை இடிந்து வீழ்ந்ததை அவனால் பொறுக்க முடியவில்லை.

''குருவே, உங்களை நான் மிகவும் நம்பியிருந்தேன். எல்லோருக்கும் வில்வித்தை கற்பித்த நீங்களே உங்கள் வாக்கைக் காப்பாற்ற முடியாமல் திரும்பி வந்ததை என்னால் நம்பவே முடியவில்லை. பாண்டவர்களிடம் இன்னமும் நீங்கள் பரிவு காட்டுகிறீர்கள் போலி

ருக்கிறது!'' என்று துரியோதனன் ஏமாற்றத்தினால் ஏற்பட்ட சினத்தோடு சொன்னான்.

துரியோதனன் தம்மீது ஐயம் கொள்வதை உணர்ந்த துரோணருக்கு மிகுந்த சினம் ஏற்பட்டது. ''அரசனே, பாண்டவர்களிடம் அவர்களின் நல்ல குணங்களுக்காக நான் பரிவு கொண்டிருப்பதை மறுக்கமாட்டேன். ஆனால் உனக்குச் செய்ய வேண்டிய கடமையை நான் நன்கு உணர்ந்திருக்கிறேன். பாண்டவர்களோடு நான் போரிடுகிறேனென்றால் நான் எனது கடமையைச் செய்கிறேன் என்பதே பொருள். உனக்கு வாக்களித்தபடி தருமனை உயிருடன் பிடிப்பதற்காக நான் என்னால் இயன்ற வரையும் முயன்றேன். ஆனால் துரியோதனா, நான் எவ்வளவு முயன்றாலும் அருச்சுனன் அங்கே குறுக்கிடும் போது என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அருச்சுனனுடைய குறுக்கீட்டை நீ தடை செய்வாயானால் நான் நிச்சயமாகத் தருமனைப் பிடித்து வந்து உன் முன்னால் நிறுத்துவேன்!'' என்றார் துரோணர்.

துரோணர் மனதாரச் சொன்ன உண்மையைத் துரியோதனன் உணர்ந்தவனாய், ''குருவே, நான் நாளைய தினமே அதற்கு ஏற்பாடு செய்கிறேன்'' என்று கூறி விட்டுப் போனான்.

## 32. பகதத்தனின் யானை

**து**ரியோதனன் உடனடியாகவே தனது நண்பர்களான அரசர்களுடன் கூடி இது பற்றி ஆலோசித்தான்.

துரியோதனனின் நண்பர்களில் குறிப்பிடத் தக்கவனான 'திரிகர்த்தம்' என்ற நாட்டின் அரசன் சுசர்மன், தான் அருச்சுனனுடன் போர் செய்து துரோணர் இருக்கும் பக்கம் அவன் திரும்ப முடியாதபடி செய்வதாகச் சொன்னான். பெரிய வீரனான சுசர்மனின் வார்த்தையில் நம்பிக்கை கொண்ட துரியோதனனுக்கு மகிழ்ச்சியுண்டாயிற்று.

சுசர்மன் தனது உடன் பிறந்தவர்களையும் கூட்டி ஆலோசித்தான். 'அருச்சுனனைப் போருக்கிழுத்து, அவன் துரோணர் பக்கம் போக முடியாமல் செய்வது, அப்படிச் செய்யாமல் களத்திலிருந்து உயிரோடு திரும்பி வருவதில்லை, என்று அவர்கள் 'சம்சப்தக' விரதம் பூண்டார்கள்.

'சம்சப்தக' விரதம் பூண்டவர்கள் ஒரு தற்கொலைப் படைக்குச் சமமானவர்கள். தாங்கள் எடுத்துக் கொண்ட செயலை முடிப்பது; அப்படியில்லையேல் அந்த முயற்சியில் தமது உயிரை விடுவது என்பதே அந்த விரதத்தின் கொள்கை.

பாரதப் போரில் பன்னிரண்டாவது நாள் மிகக் கடுமையான சண்டை நடந்தது. 'இன்று தருமனைப் பிடிப்போம்' என்று துரியோதனன் மிகுந்த நம்பிக்கையோடிருந்தான்.

போர்க்களத்தில் புகுந்த சுசர்மனும் அவனுடைய உடன் பிறந்தோரும் 'அருச்சுனா! அருச்சுனா!' என்று கூவி அவனைப் போருக்கழைத்தார்கள்.

அப்போது அருச்சுனன் தருமனின் பக்கத்தில் நின்றான். "அண்ணா, 'சம்சப்தக' விரதம் பூண்டவர்கள் என்னுடைய பெயர் சொல்லிப் போருக்குக் கூப்பிடுகிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களுக்குக் காவலாக இங்கே நான் நின்று கொண்டிருப்பது அவமானம். நான் போய் அவர்களை அழித்து விட்டு வருகிறேன். விடை கொடுங்கள்!" என்றான்.

போர்க்களத்தில் எதிரிகள் என்னென்ன திட்டங்கள் போடுகிறார்கள் என்பதை அறிந்து சொல்ல அந்தக் காலத்திலும் உளவாளிகள் இருந்திருக்கிறார்கள். கடந்த இரவில் துரியோதனன் போட்ட திட்டம் உடனேயே பாண்டவருக்குத் தெரிய வந்து விட்டது.

"அருச்சுனா, துரோணர் என்னைப் பிடிப்பதற்காகப் போட்டிருக்கும் திட்டத்தை நீ அறிவாய்தானே? நீ இல்லாவிட்டால் அவருடைய நோக்கம் நிறைவேறிவிடும். இந்தப் போரே அவர்களுக்கு வெற்றி போல் ஆகி விடும்!" என்றார் தருமர்.

"நீங்கள் கவலைப்பட வேண்டாம். உங்களைக் காப்பதற்குத் திருஷ்டத்துய்மனும், சத்தியஜித்தும், இன்னும் பல வீரர்களும் இருக்கிறார்கள். அவர்கள் உயிருடன் இருக்கும்வரை துரோணர் உங்களை நெருங்க இயலாது. பகைவன் பெயர் சொல்லிப் போருக்கு அழைக்கும் போது நான் எதிர் கொள்ளாமலிருந்தால், என்னுடைய மானம் போகும். அதை விட உயிரையே விட்டு விடலாம். நான் அவர்களை அழித்து விட்டு விரைவில் வருவேன்!"

உயிருக்குயிரான அண்ணனை விடவும் அவனுக்குத் தனது மானமே பெரிதாகத் தோன்றிற்று.

சுசர்மனையும் அவனுடைய உடன் பிறப்புக்களையும் மிக விரைவில் அழித்து விட்டுத் திரும்பி வருவதாகச் சொன்ன அருச்சுனனால் அப்படிச் செய்ய முடியவில்லை.

தற்கொலை விரதம் பூண்ட சுசர்மன் மிகக் கடுமையாக அருச்சுனனைத் தாக்கினான். அருச்சுனன் மிக நீண்ட நேரத்தை அங்கே கழிக்க வேண்டியிருந்தது.

அருச்சுனன் சுசர்மனால் தடுக்கப்பட்டிருப்பதைக் கண்ட துரோணர் இதுவே சமயமென்று தமது தேரைத் தருமர் இருந்த இடம் நோக்கி வேகமாகச் செலுத்திச் சென்றார். வழியில் தம்மை எதிர்கொண்ட படைகளைத் தமது அம்புகளினால் வெட்டிச் சரித்து விட்டுத் தருமனை நோக்கி அவர் முன்னேறினார்.

துரோணர் வருவதைக் கண்ட தருமர், திருஷ்டத்துய்மனைப் பார்த்து ''துரோணர் என்னைப் பிடிப்பதற்கென்றே வேகமாக வருகிறார். எல்லோரும் ஆயத்தமாக இருங்கள்'' என்றார்.

திருஷ்டத்துய்மன் துரோணர் வரும் வரை காத்திராமல், தானே அவரை வழி மறிக்க முன் நோக்கிச் சென்றான். திருஷ்டத்துய்மன் வருவதைக் கண்ட துரோணருக்கு ஒரு கணம் இதயம் வேகமாக அடித்துக் கொண்டது. துருபதன் தன்னைக் கொல்வதற்கென்றே யாகம் செய்து திருஷ்டத்துய்மனைப் பெற்றெடுத்தான் என்ற நினைவு துரோணருக்கு அப்போது ஏற்பட்டதே அவருடைய பதற்றத்துக்குக் காரணமாயிருந்தது. மறுகணம் துரோணர் தம் மனத்தை நிலை செய்து கொண்டு, அம்புகளை மழை போலப் பொழிந்து, திருஷ்டத்துய்மனை ஒரு புறம் ஒதுக்கி விட்டு முன்னேறிச் சென்றார்.

விராடனின் ஒரு மகனான சதானிகன் துரோணரை வழி மறித்தான். ஒரே அம்பினால் அவனுடைய தலையை அறுத்து வீழ்த்தினார் துரோணர். கேதமன் என்ற அரசனும் துரோணரை எதிர்த்து மாண்டு விழுந்தான். துருபதன் மகனான பாஞ்சாலன் என்பவனும் துரோணருடைய அம்புக்கு இரையானான்.

துரோணர் தருமரை நெருங்கி வந்து விட்டார். இந்தச் சமயத்தில் வீமன், நகுலன், சாத்யகி, சுதாமன்யு, சாக்திரதர்மன், உத்தமௌசசு, துருபதன், விராடன், சிகண்டி, திருஷ்டகேது முதலிய எல்லா வீரர்களுமே ஓடி வந்து துரோணரைத் தடுத்துத் தருமரைக் காப்பாற்ற முனைந்தார்கள்.

துரோணர் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டுத் திக்கு முக்காடினார்.

துரோணரின் நிலை கண்ட துரியோதனனும், கர்ணனும் பெரிய தேர் யானைப் படையுடன் துரோணருக்கு உதவியாக அங்கே வந்தார்கள்.

மிகக் கடுமையான போர் நடந்தது.

வீமன் ஒரு தேரின் மீது நின்று யானைப் படையைத் தனது அம்புகளினால் தாக்கினான். யானையின் உடம்பில் எந்தெந்த இடங்களில் தாக்கினால் அது தாங்க முடியாமல் பின்வாங்கும் அல்லது இறந்து படுமென்பதை வீமன் நன்றாய் அறிந்தவனாதலால், அவனுடைய அம்புகளினால் தாக்கப்பட்ட யானைகள் மிகுந்த துன்பத்துடன் பின்வாங்கி ஓடத் தொடங்கின. அப்போது அவைகளின் காலடியிலும் துதிக்கைகளின் மோதலிலும் அகப்பட்டுப் பெருந்தொகையான கௌரவ வீரர்கள் உயிரிழந்தார்கள். துரியோதனனுடைய படை நிலை குலைந்து பின் வாங்கிற்று. இதைக் கண்ட பகதத்தன் என்ற பெரிய வீரன் 'சுப்ரதீகம்' என்ற தனது புகழ்பெற்ற யானை மீது ஏறி வீமனைத் தாக்கத் தொடங்கினான். மிகவும் முதிய கிழவனாக பகதத்தன் இந்த வயதிலும் தனது யானையின் துணை கொண்டு வீரமாகப் போராடினான்.

பகதத்தனுடைய யானை, வீமனுடைய தேரின் மீது மூர்க்கத்தனமாகப் பாய்ந்து, தேர்க் குதிரைகளைக் கொன்று தேரையும் அடித்துப் புரட்டி விட்டது. வீமன் தேரிலிருந்து குதித்து யானையின் கால்களுக்கிடையில் புகுந்து அதனுடைய நொய்ந்த பகுதிகளைத் தன்னுடைய கைகளினாலேயே குத்தித் துன்புறுத்தினான். வீமனுடைய அடிகளைத் தாங்க முடியாத யானை தனது துதிக்கையினால் வீமனைப் பிடிக்க முயன்றும் இயலாமையால் வலி பொறுக்க முடியாமல் சக்கரம் போலச் சுழன்று நின்றது. வீமனும் வெளியே வர முடியாமல் யானையின் கீழ் நின்றே அதைத் தாக்கிக் கொண்டிருந்தான்.

இந்தச் சமயத்தில் பாண்டவர்கள் பக்கத்து அரசன் ஒருவன் தன்னுடைய யானையைச் சுப்ரதீகத்தின் மேல் ஏவினான். சுப்ரதீகம் வீமனைப் பிடிக்கும் முயற்சியைக் கைவிட்டு, தன்னை எதிர்த்த யானையைத் தாக்கிற்று. இதுதான் சமயமென்று வீமன் சுப்ரதீகத்தின் கீழிருந்து வெளிப்பட்டு ஓடி ஒரு தேரின் மீது ஏறிக் கொண்டான்.

சுப்ரதீகம் தன்னை எதிர்த்த யானையை அடித்துக் கொன்று விட்டு, மிகுந்த சினத்துடன் ஓலமிட்டுக் கொண்டே பாண்டவர்களின் படையைத் தாக்கத் தொடங்கிற்று.

இன்னொரு பக்கத்தில் சுசர்மனுடன் போரிட்டுக் கொண்டு நின்ற அருச்சுனனுக்கு யானையின் பேரொலி கேட்டது. ''கண்ணா, பகதத்த னுடைய யானையின் மூர்க்கமான ஒலி கேட்கிறது. அது பொல்லாத யானை. அதைக் கொல்லாது விட்டால் பகதத்தன் எமது படையை அழித்து விடுவான். தேரை அந்தப் பக்கமாகச் செலுத்துங்கள். நான் உடனே அங்கே போக வேண்டும்'' என்றான்.

கண்ணன் தேரைத் திருப்பினான். அருச்சுனனுடன் போரிட்டுக் கொண்டிருந்த சுசர்மனும் அவனுடைய உடன் பிறப்புக்களும் ''அருச் சுனா, நில்! நில்!'' என்று வழிமறித்துத் தாக்கினார்கள், அருச்சுனன் சில அம்புகளை எய்து அவர்களை விலக்கி, ''உங்களைப் பிறகு வந்து சந்திக்கிறேன்'' என்று கூறி விட்டுப் பகதத்தனுடைய யானை நின்ற பக்கமாகச் சென்றான். களத்தில் தன் வழியில் நின்றவர்களையெல் லாம் அழித்துக் கொண்டு அருச்சுனன் பகதத்தனை நெருங்கினான். பகதத்தன் தனது யானை மீது இருந்து கொண்டே அருச்சுனன் மீது அம்புகளைச் செலுத்தினான். அவைகளை வெட்டி வீழ்த்திவிட்டு அருச்சுனன் மேலும் பல அம்புகளை எய்யவே, பகதத்தன் தனது யானையை அருச்சுனன் தேர் மீது ஏவினான். சுப்பிரதீகம் மூர்க் கமாக மலையொன்று மோத வருவது போல வருவதைக் கண்டதும் அருச்சுனன் ஒரு சக்தி வாய்ந்த அம்பை எடுத்து அதன் தலையின் முன் பக்கத்தில் எய்தான். அந்த அம்பு நாகபாம்பொன்று புற்றுக்குள் நுழைவது போல யானையின் தலையுள் புகுந்து உள்ளே சென்றது' என்று வியாசர் சொல்லியிருக்கிறார்.

அருச்சுனனுடைய அம்பினால் மூளை குழம்பிய சுப்பிரதீகம் முன் கால்களை மடித்துத் தனது பெரிய தந்தங்கள் நிலத்திலே குத்த நிலை குலைந்து சரிந்து விழுந்தது.

அதே வேளை அருச்சுனன் பகதத்தன் மேல் ஓர் அம்பை எய்யவும் அது அவனுடைய உயிரைக் குடித்து விட்டது!

தருமரைப் பிடிக்க வேண்டுமென்ற துரோணரின் எண்ணம் கை கூடாமல் பன்னிரண்டாவது நாள் போரும் முடிவுற்றது.

# 33. அபிமன்யு மரணம்

பாரதப் போரின் பதின் மூன்றாவது நாளும் முதல் நாளைய தொடர்ச்சியாகவே நடந்தது.

பகதத்தனும் அவனுடைய யானையும் மாண்டு போனதால், அருச்சுனன் சுசர்மனையும் அவனுடைய உடன் பிறந்தவர்களையும் மீண்டும் எதிர் கொண்டான். கடும் போர் நடைபெறலாயிற்று.

மறு பக்கத்தில் துரோணர் தமது நோக்கத்தில் கருத்தாக இருந்தார். அவர் விட்டாலும் துரியோதனன் அவரை ஓயவிடவில்லை. அன்று காலையிலும் 'அருச்சுனன் குறுக்கிடாவிட்டால் தாம் தருமனைப் பிடித்துத் தருவதாக'த் துரோணர் துரியோதனனுக்கு வாக்களித்திருந்தார்.

துரோணர் தமது படையணியை மிக நல்ல வலுவான முறையில் அணிவகுத்து அமைத்துத் தருமன் மீதான தாக்குதலைத் தொடங்கினார்.

வீமன், சாத்யகி, திருஷ்டத்துய்மன், துருபதன் முதலான பல வீரர்கள் துரோணரை எதிர்த்து நின்ற போதும் துரோணர் வகுத்த படையணியை உடைக்க முடியவில்லை.

தருமர், அருச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் பிறந்தவனான இளம் வீரன் அபிமன்யுவை அழைத்து ''தம்பி, துரோணருடைய அணியை எவராலும் உடைக்க முடியவில்லை. உன்னால் அது முடியும்!'' என்றார்.

''ஓம், என்னால் இந்த அணியை உடைத்து உள்ளே செல்ல முடியும். அந்த வழிவகைகளைக் கற்றிருக்கிறேன். ஆனால், அதற்குள்ளிருந்து மீண்டு வரும் வழி முறையை நான் இன்னும் கற்கவில்லை'' என்றான் அபிமன்யு.

''அதனாலென்ன? நீ எதுவித அச்சமுமின்றி வியூகத்தை உடைத்து உள்ளே நுழை. நாங்கள் எல்லோரும் அந்த வழியே உனக்குத் துணையாக நிற்போம். ஒரு முறை நீ அணிவகுப்பை உடைத்து விட்டால் போதும். மிகச் சுலபமாகத் துரோணரின் படையை நிலை குலையச் செய்து விடலாம்!'' என்றார் தருமர்.

கோங்கு மரத்தைச் சின்னமாகக் கொண்ட கொடி பறக்கும்

தனது தேரிலே அபிமன்யு துரோணரின் படையணியை நோக்கிச் சென்றான். பாண்டவப் படை வீரர்களும் அவன் பின்பாகச் சென்றார்கள்.

அபிமன்யு, தான் சொன்னபடியே வெகு விரைவில் துரோணரின் படையை ஓர் இடத்தில் உடைத்து உள்ளே புகுந்து விட்டான். கௌரவப் படை நிலை குலைந்து தடுமாறித் தவித்தது.

அபிமன்யுவின் வில்லாண்மையைக் கண்டு துரோணர் மனதுக்குள் பாராட்டிக் கொண்டார்.

துரியோதனனோ பெருஞ் சினங்கொண்டு, தானே முன் வந்து அபிமன்யுவைத் தாக்கத் தொடங்கினான். ஆனால் அபிமன்யுவின் வில் வீச்சின் முன்னால் முகம் கொடுக்க முடியாமல் திணறிப் போனான். அதைப் பார்த்த துரோணர் பதறிப் போய் பல வீரர்களை அழைத்து உடனே போய் அரசனுக்கு உதவும்படி ஏவினார். அவர்கள் அனைவரும் உடனே துரியோதனனைச் சூழ்ந்து கொண்டு ஒரு மாதிரி அவனைக் காப்பாற்றி விடுவித்துக் கொண்டு சென்றார்கள். ''என்கையால் துரியோதனனைக் கொல்லும் வாய்ப்புக் கிடைத்தது என்று மகிழ்ந்தேன், கைக்கெட்டியது வாய்க் கெட்டாமல் போய் விட்டதே!'' என்று அபிமன்யு கவலை கொண்டான்.

துரியோதனன் பின் வாங்கிய பிறகு கர்ணன் வந்தான். அவனும் கடுமையாகத் தாக்கப்பட்டுப் பின் வாங்கினான். அதன் பிறகு அசுவத்தாமன், கிருபர், சல்லியன் முதலிய பெரிய வீரர்கள் பலரும் அபிமன்யுவுடன் மோதிக் களைத்துப் போனார்கள்.

'அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கிறது!' என்று போர்க்களத்திலிருந்த அனைவரும் அபிமன்யுவின் திறனை மனதுக்குள் போற்றிப் புகழ்ந்தார்கள்.

கடைசியில் துச்சாதனன் கடுஞ் சினத்துடன் வந்து எதிர்த்தான். அபிமன்யுவின் தாக்குதலினால் அவனும் தேர்த்தட்டிலேயே மூர்ச்சையாகி விழுந்தான். அவனுடைய தேரும் புறங்காட்டி ஓடிற்று.

★

அபிமன்யு படையணியைச் சரியான வழியில் உடைத்துக் கொண்டு உள்ளே சென்ற போது அவ்வழியே பாண்டவர்களின் படை வீரர்களும் உள்ளே புக முயன்றார்கள்.

ஆனால் அதே சமயம் சிந்து நாட்டு அரசனான ஜயத்ரதன் என்பவன் மிக வேகமாகத் தனது படையுடன் உடைபட்ட அணியின் பக்கமாக வந்து மிகக் கடுமையாகப் போரிட்டான். அதே சமயத்தில் கலைந்து போன படையணியும் மனத்திடம் கொண்டு ஒன்று கூடிற்று. உடைந்த படையணி மீண்டும் மூடிக்கொண்டது! பாண்டவப் படை வீரர் யாரும் உள்ளே செல்ல முடியவில்லை. அபிமன்யு தனித்து நின்றே போரிட்டான்.

துச்சாதனன் மயங்கி விழுந்ததும், கர்ணன் மீண்டும் வந்து அபிமன்யுவைத் தாக்கினான். அதே நேரத்தில் போர் ஒழுங்கு விதிகளை மீறிப் பல வீரர்களும் அபிமன்யுவைச் சூழ நின்று ஒரே நேரத்தில் தாக்கினார்கள்.

துரியோதனன், கர்ணனின் பக்கத்தே சென்று "இவனுடைய கவசத்தை உடைக்க முடியாது. நீ பின் புறமாகச் சென்று இவனுடைய தேர்க் குதிரைகளின் கடிவாளத்தை அறுத்து விட்டுப் பின் புறமிருந்தே தாக்கு" என்றான்.

கர்ணனும் அவ்விதம் பின்புறம் சென்று தனது அம்புகளினால் குதிரைகளின் கடிவாளத்தை அறுத்து, தேரோட்டியையும் கொன்றான். கர்ணனுடைய இன்னொரு அம்பு அபிமன்யுவின் வில்லையும் ஒடித்தது.

அபிமன்யு நிலத்தில் குதித்து வாளை எடுத்துப் போரிட்டான். பல வீரர்களின் தலைகள் அபிமன்யுவின் வாளுக்கு இரையாகின. துரோணர் ஒரு அம்பை எய்து அபிமன்யுவின் வாளை ஒடித்தார். இன்னொரு அம்பினால் அவனுடைய கேடயத்தையும் உடைத்தார்.

அந்தச் சமயம் துச்சாதனனுடைய மகன் ஒரு கதாயுதத்தினால் அபிமன்யுவைத் தாக்கினான். எத்தனையோ பெரிய வீரர்களுடன் தனித்து நின்று போரிட்டுக் களைத்துப் போயிருந்த அபிமன்யு நிலத்தில் விழுந்தான். துச்சாதனனின் மகன் இதுதான் சமயமென்று அபிமன்யுவின் தலையில் கதாயுதத்தினால் ஓங்கி அடித்தான்.

அபிமன்யுவின் உயிர் பிரிந்தது!

★

சுசர்மன் முதலியோருடன் கடும் போரிட்டு அவர்களை அழித்து விட்டுத் திரும்பிய அருச்சுனனுக்கு 'அபிமன்யு இறந்தான்' என்ற துயரச் செய்தி காத்திருந்தது.

அவனால் தாங்க முடியவில்லை. அழுதழுது புலம்பினான். கண்ணனும் தருமனும் அவனுக்கு ஆறுதல் கூறினார்கள்.

நடந்த நிகழ்வுகள் எல்லாவற்றையும் விபரமாகக் கேட்ட அருச்சுனன், ''அபிமன்யு உடைத்த அணிவகுப்பை ஜயத்ரதன் மீண்டும் மூடிவிட்டபடியால்தானே என் மகன் துணையெதுவுமின்றி அநியாயமாக மாண்டு போனான்! — அதற்குக் காரணமான ஜயத்ரதனை நாளைய தினம் பொழுது சாயுமுன் கொல்வேன். அவனைப் பாதுகாப்பதற்காக யார் யார் வருவார்களோ அவர்களையும் கொல்வேன். இது உறுதி!'' என்று அடங்காச் சினத்துடன் சபதம் செய்தான்.

மறு நாள் போர் நடவடிக்கை மிக முக்கிய மானவையாகக் கவனிக்கப்பட்டன.

அபிமன்யுவின் இறப்புக்குக் காரணமான ஜயத்ரதனை அன்று பொழுது சாய்வதற்குள் கொல்லப்போவதாக அருச்சுனன் சபதமிட்ட செய்தி கௌரவப் படையினருக்குத் தெரிந்து விட்டது.

'இந்தச் சபதத்தை நிறைவேற்ற விடாமல் தடுத்து விட்டால் அருச்சுனன் அவமானம் தாங்காமல் உயிரை விடுவான்' என்று எதிர்பார்த்த துரியோதனன், தனது படைத் தலைவராகிய துரோணரிடம் சென்று எப்படியாவது ஜயத்ரதனை அருச்சுனன் அணுக முடியாதபடி செய்து விட வேண்டும் என்று கேட்டுக் கொண்டான்.

துரோணரும் அப்படியே தமது படையை மூன்று பகுதியாக அணிவகுத்து நிறுத்தினார். கடைசி அணியில் ஜயத்ரதன் மிகுந்த பாதுகாப்பாக நிறுத்தப்பட்டான். அருச்சுனன் ஜயத்ரதனிடம் வருவதானால், மிகவும் பலம் வாய்ந்த முதல் இரு அணி வகுப்புக்களையும் உடைத்துக் கொண்டே மூன்றாவது அணிக்கு வந்து சேர வேண்டும். அதற்கிடையில் பொழுது சாய்ந்து விடும். தோல்வியினால் அருச்சுனன் தனது உயிரை மாய்த்துக் கொள்வது உறுதி என்றே கௌரவர்கள் நம்பினார்கள்.

அருச்சுனன் மிகுந்த நம்பிக்கையுடன் காண்டீபத்தை ஏந்திப் புறப்பட்டான். முதல் அணியிலேயே நின்ற துரோணருடைய அம்புகள் அருச்சுனனை எதிர் கொண்டன.

துரோணருடைய வில்லிலிருந்து அம்புகள் சீறிப் பாய்ந்து வந்தன.

அருச்சுனன் அவை எல்லாவற்றையும் தனது அம்புகளினால் தடுத்து விட்டுத், துரோணரை நோக்கி மேலும் அம்புகளைச் செலுத்தினான்.

துரோணரும் விடுவதாக இல்லை. தேரைச் செலுத்திக் கொண்டிருந்த கண்ணன் அருச்சுனனைப் பார்த்து, ''அருச்சுனா, துரோணரோடு போரிட்டுக் கொண்டிருந்தாயானால், இன்று முழுவதும் அவர் உன்னோடு போர் புரிந்து கொண்டேயிருப்பார். உன்னுடைய சபதத்தை நினைவு கொள். துரோணரோடு போர் புரிய இது நேரமல்ல. இவரை ஒதுக்கி விட்டு உள்ளே போய் விட வேண்டும்!'' என்றான். அருச்சுனனும் சரியென்று, துரோணருடைய அம்புகளைத் தடுத்துக் கொண்டே, தேரை உள்ளே செலுத்தும்படி கண்ணனுக்குச் சொன்னான்.

தம்முடன் போர் புரியாமல் அருச்சுனன் உள்ளே போவதைக் கண்ட துரோணர், ''அருச்சுனா, என்னுடன் போரை முடிக்காமல் எங்கே போகிறாய்? வீரனுக்கு இது அழகல்ல! நில்'' என்றார்.

''குருவே, உங்களுடன் போரிடுவதற்கு இனிமேல் நிறைய வாய்ப்புகளுண்டு. இப்போது நான் ஜயத்திரதனிடம் போக வேண்டும். விடை கொடுங்கள்!'' என்று கூறிக் கொண்டே அருச்சுனன் போய்விட்டான்.

எதிர்ப்பட்ட பல அரண்களையும் வென்று புறந்தள்ளியும், சிலருடைய உயிரை மாய்த்தும் கொண்டு, அருச்சுனன் மிக வேகமாக முன்னேறிச் சென்றான்.

அருச்சுனன் இப்படி முன்னேறுவதைக் கண்டதும் துரியோதனனுக்கு மிகுந்த கவலையுண்டாயிற்று. அவன் துரோணரிடம் ஓடிப் போனான். ''படைத்தலைவரே, அருச்சுனன் போகும் வேகத்தைப் பார்த்தால் அவன் எப்படியும் வெகு விரைவில் ஜயத்திரதனைக் கொன்று தனது சபதத்தை நிறைவேற்றி விடுவான் போலிருக்கிறது. உங்களைத் தாண்டி வர எப்படி விட்டீர்கள்? எங்கள் எண்ணமெல்லாம் பாழாகி விடும் போலிருக்கிறதே! நீங்கள் உடனே அங்கே போய் ஜயத்திரதனை அருச்சுனன் தாக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்றான்.

''துரியோதனா, ஆத்திரத்தினால் புத்தியை இழந்து விடாதே! நான் தேடிக்கொண்டிருந்த நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அருச்சுனன் இன்று மாலைவரை திரும்பமாட்டான். நான் உனக்கு வாக்களித்தபடி தருமனைப் பிடிக்க இதுவே நல்ல சமயம். நீ துணிவுடன்

போய் அருச்சுனனை எதிர்த்து மடக்கு. இதோ நான் உனக்கு ஒரு அருமையான கவசம் தருகிறேன். இதை அணிந்து கொண்டாயானால் அருச்சுனனுடைய அம்புகள் உன்னைத் துன்பம் செய்ய மாட்டா. அச்சமின்றிப் போய் அவனுடன் போரிடு!'' என்று சொல்லி ஒரு கவசத்தை அவனுக்கு அணிவித்து அனுப்பி வைத்தார்.

துரியோதனனும் விரைந்து அருச்சுனன் இருக்கும் இடம் நோக்கிச் சென்றான்.

துரியோதனன் சென்றதும், துரோணர், தருமர் இருக்கும் பக்கமாக விரைந்து போகத் தொடங்கினார். தருமருக்குப் பாதுகாப்பாக நின்ற சாத்யகியும், வீமனும், திருஷ்டத்துய்மனும் மற்றும் பல வீரர்களும் துரியோதனனின் முன்னேற்றத்தைத் தடுத்துப் போரிட்டார்கள்.

## 34. ஒரு கொடிய நிகழ்ச்சி

இப்படி இங்கே கடுஞ் சண்டை நடந்து கொண்டிருக்கையில், தருமருக்கு அருச்சுனனைப் பற்றிய கவலை எழுந்தது. 'அருச்சுனனும் கண்ணனும் பெரிய போர்க்களத்தினூடே தனியாகச் சென்றார்களே, அவர்களுக்கு ஏதும் ஆபத்து நேர்ந்திருக்குமோ' என்று கவலையுற்ற தருமர் உடனே சாத்யகியைக் கூப்பிட்டு, ''சாத்யகி, அருச்சுனன் தனியாக ஜயத்ரதனைத் தேடிக் கொண்டு ஆயிரக்கணக்கான போர் வீரர்கள் நடுவே சென்றிருக்கிறான். கண்ணபிரான் தேரை ஓட்டிச் சென்ற போதிலும், அருச்சுனனுக்கு ஏதும் துன்பம் நேர்ந்திருக்குமோ என்று என் மனம் அஞ்சுகிறது. நீ உடனே அருச்சுனன் இருக்குமிடத்துக்கு விரைந்து சென்று அவனுக்கு உதவியாக இரு!'' என்று சொன்னான்.

யது குல வீரனான சாத்யகி தருமரை விட்டுப் போக முதலில் தயங்கினான். அருச்சுனன் போன போது வீமனையும், சாத்யகியையும், திருஷ்டத்துய்மனையும் தருமரைப் பாதுகாக்கும்படி சொல்லிவிட்டே போயிருந்தான்.

சாத்யகியின் தயக்கத்தைக் கண்ட வீமனும், திருஷ்டத்துய்மனும் தாங்கள் தருமரைப் பாதுகாப்பதாக உறுதி கூறியதன் பேரில், சாத்யகி அருச்சுனன் நிற்குமிடம் விரைந்து சென்றான்.

இங்கே துரோணரை எதிர்த்து வீமனும், திருஷ்டத்துய்மனும்

வேறு சில வீரர்களும் கடும்போர் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

சாத்யகி போய் நெடுநேரமாகி விட்டதால் தருமருக்கு மீண்டும் கவலை தோன்றிவிட்டது. அவர் வீமனை அழைத்து, ''தம்பி, அருச்சுனனுக்குத் துணையாகப் போய் நிற்கும்படி சாத்யகியை அனுப்பினேன். சாத்யகி போயும் நெடுநேரமாயிற்று. அருச்சுனனுடைய காண்டீபத்தின் ஓசையும் கேட்கவில்லை. இன்று அருச்சுனனைக் கடுமையாக எதிர்ப்பதற்கென்று அங்கே பல வீரர்களைத் துரியோதனன் நிறுத்திபிருப்பானென்பது நிச்சயம். அருச்சுனனோ இன்று பொழுது சாயு முன் ஜயத்ரதனைக் கொல்வதாகச் சபதஞ் செய்து சென்றிருக்கிறான். சபதத்தை முடிக்கா விட்டால் அருச்சுனன் அவமானம் தாங்காமல் உயிர் துறப்பான். துரியோதனனுக்கு இது தெரியும். இதனால் அருச்சுனன் மீது தன்னுடைய முழுப்பலத்தையும் அவன் ஏவி விட்டிருப்பான் என்பதில் சந்தேகமில்லை. வீமா, இந்தச் சந்தர்ப்பத்தில் அருச்சுனனுக்கு நல்ல உதவி வேண்டும். சாத்யகி மட்டும் போதாது. நீயும் உடனே புறப்பட்டு அருச்சுனன் இருக்கும் இடத்தைச் சென்றடைவாயாக!'' என்றார்.

''அண்ணா, நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் இங்கே துரோணர் உங்களை உயிருடன் பிடிப்பதற்கென்றே போரிட்டுக் கொண்டிருக்கிறார். உங்களை விட்டு நான் எப்படிப் போவேன்?'' என்றான்.

பக்கத்தில் நின்ற திருஷ்டத்துய்மன் ''வீமனே, உங்கள் தமையனைப் பற்றிக் கவலை கொள்ள வேண்டாம். என்னைக் கொல்லாமல் ஆரும் தருமருக்குக் கிட்டவும் வர இயலாது. என்னோடு இன்னும் பல சிறந்த வீரர்களும் இங்கே இருக்கிறார்கள். ஆனபடியால் நீங்கள் கவலையின்றி அருச்சுனனுக்கு உதவப்போவதே புத்திசாலித்தனமாகும்!'' என்றான்.

தருமரும் வீமனைப் போகும்படி மேலும் மேலும் வற்புறுத்தவே வீமன் புறப்பட்டுப் போனான்.

போரிட்டுக் கொண்டிருந்த துரோணரைத் தாக்காமலே, வீமன் உள் நுழைய முயன்றான். ஆனால் துரோணருடைய அம்புகள் அவனை வழிமறித்தன. ''வீமா, எங்கே போகிறாய்? என்னை வெற்றி கொள்ளாமல் நீ உள்ளே நுழைய முடியாது!'' என்றார் துரோணர்.

துரோணருடைய செயலும், பேச்சும் வீமனுக்கு மிகுந்த சினத்தை உண்டாக்கின.

''ஓ, பிராமணரே, உம்முடன் நான் போர் தொடுக்காமல் என் வழியே போய்க் கொண்டிருக்கிறேன். போர் தொடுக்காதவன் மீது அம்பை ஏவுவது எந்த அறத்தில் சேர்ந்தது? ஒரு காலத்தில் நீர் எங்களுக்குக் குருவாகவும், பெரியவராகவும் இருந்தீர். நாங்களும் உமது சொல்லைத் தட்டாமல் நடந்தோம். ஆனால் இன்றோ நீர் எங்களுடைய கடும் எதிரியாகி விட்டீர்! இனியும் உமக்கு நாங்கள் பணிவு காட்ட இயலாது!'' என்று கூறி வீமன் தனது கதையைச் சுழற்றிக் கொண்டு துரோணரின் தேரின் பக்கமாகச் சென்று அவருடைய தேர்க் குதிரைகளையும், தேரையும் அடித்து நொருக்கினான். துரோணர் வேறொரு தேரிலேறி மீண்டும் வில்லை வளைத்தார். வீமன் அந்தத் தேரையும் சிதறடித்து விட்டுப், போர்க் களத்தின் உள்ளே நுழைந்து அருச்சுனன் இருந்த பக்கமாகத் தனது தேரைச் செலுத்திச் சென்றான்.

அருச்சுனன் நின்ற இடத்துக்குச் சற்றே அண்மையில் வீமனுடைய தேர் சென்றதும், கர்ணனுடைய தேர் குறுக்கே வந்து வீமனைத் தடுத்தது. ''ஏ பெருந்தீனிக்காரனே! காட்டுமிராண்டி! எங்கே போகிறாய்? என்னை வெல்லாமல் நீ மேலே செல்ல இயலாது!'' என்று கூறிய கர்ணன் வீமன் மீது அம்புகளைத் தொடுத்தான்.

வீமன் மற்போரிலும், கதாயுதத்தால் அடித்துப் போரிடுவதிலும் மிகச் சிறந்தவனென்று போற்றப்பட்டாலும், வில்லாண்மையிலும் குறைந்தவனல்லன். கர்ணன் ஏவிய அம்புகளை அவன் தனது அம்புகளால் தடுத்து வீழ்த்தியதுமன்றி, மேலும் பல அம்புகளைக் கர்ணன் மீது ஏவித் தாக்கினான்.

இருவருக்குமிடையே நீண்ட நேரமாகக் கடும் போர் நடந்தது. வில்லாண்மையில் மிகவும் தேர்ச்சி பெற்ற கர்ணனோடு வீமனால் நின்று பிடிக்க முடியவில்லை. அவன் நன்றாகக் களைத்துப் போனான்.

இந்தச் சமயத்தில் மேலும் சில கொடிய அம்புகளை ஏவி, வீமனின் உயிரை வாங்கி விடுவது கர்ணனுக்கு இலகுவாகவே இருந்தது. ஆனால், தான் குந்திதேவிக்குக் கொடுத்த வாக்குக் கர்ணனின் நினைவில் வந்தது. ''உன்னுடைய பிள்ளைகளில் அருச்சுனனைத் தவிர வேறு யாரையும் நான் கொல்லமாட்டேன்!''

கர்ணனும், வீமனும் கடுஞ்சண்டையிடுவதை அருச்சுனனின் தேரைச் செலுத்திக் கொண்டிருந்த கண்ணன் கவனித்துக் கொண்டி

ருந்தான். வீமன் களைத்துப் போனதையும் கர்ணனுடைய அடுத்த அம்பு அவனுடைய உயிரைக் குடித்து விடக் கூடுமென்பதையும் கவனித்த கண்ணன், தன் பின்னால் நின்ற அருச்சுனனை நோக்கி, "அதோ, வீமனுடைய உயிருக்குப் பெரிய ஆபத்து வந்திருக்கிறது. உடனடியாகக் கர்ணனுடைய வில்லை உடைத்து விடு!" என்றான்.

திரும்பி வீமன் நின்ற இடத்தைப் பார்த்த அருச்சுனன், உடனே காண்டீபத்தை வளைத்துக் கர்ணன் மீது சில அம்புகளை வேகமாக வீசினான்.

வீமனைக் கொல்லக் கூடாதென்று தீர்மானித்து விட்ட கர்ணன், அருச்சுனனுடைய அம்புகள் தன்னைத் தாக்குவதைக் கண்டதும் போர்க்களத்தை விட்டுப் பின் வாங்கினான்.

வீமன் அருச்சுனனின் பக்கத்தே போய் நின்று சிங்கம் போலப் பெரிய கர்ச்சனை செய்தான். அந்தக் கர்ச்சனை நெடுந்தூரத்துக்கப்பாலிருந்த தருமனின் காதுகளில் கேட்டது. வீமன் அருச்சுனனைப் போய்ச் சேர்ந்து விட்டான் என்பதையும், அருச்சுனன் ஆபத்தின்றி இருக்கின்றானென்பதையும் அந்தக் கர்ச்சனை மூலம் தெரிந்து கொண்ட தருமன் மன ஆறுதலடைந்தான்.

வீமனுக்கு முன்னால், தருமனால் அனுப்பப்பட்ட சாத்யகி அருச்சுனன் நின்ற இடத்துக்குப் பக்கமாகச் சென்றபோது பூரிசிரவசு என்ற மாவீரன் சாத்யகியைத் தேடிக் கொண்டு "நில்! நில்!" என்று ஓடி வந்தான்.

இந்தப் பூரிசிரவசு என்பவனின் தந்தையும், சாத்யகியின் பேரனும் பெரும் போரிட்டு விரோதிகளானார்கள். அது குடும்ப விரோதமாகவே மாறியிருந்தது.

சாத்யகியைக் கண்ட பூரிசிரவசு குடும்ப விரோதத்தை மனதிற்கொண்டு, சாத்யகியைக் கொன்றழிக்க இதுவே சமயமென்று சீறிக் கொண்டு வந்தான்!

சாத்யகியும் மிகப் பெரிய வீரன். அவன் தங்களுக்குத் துணையாகப் போரிட வந்ததையும் பாண்டவர்கள் பெரிய பலமாகக் கருதினார்கள்.

மிகக் கடுமையாக நடந்த போரிலே இருவருடைய வில்களும் ஒடிந்தன. இருவரின் தேர்களும் முறிந்து சரிந்தன.

ஆனாலும் போர் நின்று விடவில்லை. இருவரும் தரையில் குதித்து வாள்களை உருவிக் கொண்டு போரிட்டார்கள்.

ஒரு சமயத்தில் சாத்யகி கால் இடறி தரையில் விழ, பூரிசிரவசு அவனுடைய மார்பின் மீது காலை ஊன்றி அமுக்கிக் கொண்டு, அவனுடைய தலையைத் துண்டாடுவதற்காக வாளை ஓங்கினான்!

சற்றுந்தூரத்தில் தேரைச் செலுத்தியபடியே இவர்களுடைய சண்டையையும் அவதானித்துக் கொண்டிருந்த கண்ணன், பரபரப்புடன், "அருச்சுனா, அருச்சுனா! சாத்யகியின் நிலையைப் பார், பார்!" என்றான்.

அருச்சுனன் பார்த்தான். 'தன் மீது போர் தொடுக்காத பூசிரவசுவின் மீது அம்பைத் தொடுக்கலாமா?' என்று ஒரு கணம் தயங்கினான். கண்ணனின் குரல் மீண்டும் கேட்டது. "அருச்சுனா, யோசிப்பதற்கு இது நேரமில்லை. சாத்யகி அநியாயமாக இறப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. அவன் உங்களுக்குத் துணையாக வந்தவன் என்பதை மறந்து விடாதே!"

அருச்சுனனுடைய கூரிய அம்பு பாய்ந்து சென்று பூரிசிரவசு வாளைத் தூக்கி உயர்த்திய கையை அறுத்து வீழ்த்திற்று. பிடித்திருந்த வாளுடன் அந்தக் கை நிலத்தில் விழுந்து துடித்தது!

பூரிசிரவசு அம்பு வந்த திக்கை நிமிர்ந்து பார்த்தான்.

"ஓ, அருச்சுனா! இதுதானா போர் நீதி? உன்னுடன் போர் செய்ய நான் வந்தேனா? உன்னை நான் கவனிக்கக்கூட இல்லாத நேரத்தில் நீ என்மீது அம்பை எய்து என் கையை அறுத்தாயே, உன்னுடைய வீரம் இவ்வளவுதானா? அரச குலத்துக்கே நீ அவமானச் சின்னமாகி விட்டாயே? ஓ, நீயல்ல; உனது தேரை ஓட்டிக் கொண்டிருக்கும் கண்ணன்தான் உன் புத்தியைக் கெடுத்து விட்டான். அவனுக்கு அரசநீதி எப்படித் தெரியும்? இடைக்குலத்தவன்தானே?" என்று கேவலமாகப் பேசினான்.

"பூரிசிரவசு! ஆத்திரத்தினால் வாய்க்கு வந்தபடி பேசாதே! எனக்கு நீ போர் நீதியைப் பற்றிச் சொல்லித் தரப்போகிறாயா? கீழே விழுந்து விட்ட சாத்யகியைக் காலால் மிதித்து அவன் தலையை வெட்ட வாளை ஓங்கியதுதானா போர் நீதி? — அல்லது, சிறுவனாகிய என் மகன் அபிமன்யுவை எல்லாருமாகச் சூழ்ந்து நின்று,

எதுவித ஒழுங்கு முறையுமில்லாமல் கொன்றழித்தீர்களே, அது வா போர் நீதி?'' என்று அருச்சுனன் மிகுந்த கோபமாகவே பதில் சொன்னான்.

பூரிசிரவசு கையை இழந்ததனால் ஏற்பட்ட உடல் வாதைகளையும், தோல்வியால் ஏற்பட்ட மனவாதையையும் தாங்கமாட்டாதவனாய் அந்த இடத்திலேயே அம்புகளைப் பரப்பி அவற்றின் மீது உட்கார்ந்து தியானத்தில் ஆழ்ந்தான்.

அந்த நேரம் மிக மோசமான ஒரு நிகழ்வு நடந்தது. களைத்துப்போய் மயக்க நிலையில் அதுவரை நிலத்தில் கிடந்த சாத்யகி, சற்றே மயக்கம் தெளிந்து எழுந்து பார்த்தான்.

எதிரே தன்னைக் கொல்ல வந்த பூரிசிரவசு உட்கார்ந்திருப்பதைச் கண்டான்.

உடனே தனது வாளை எடுத்துக் கொண்டு பூரிசிரவசுவின் பக்கம் ஓடினான்.

'ஓ! ஓ!' என்று சூழ நின்றவர்கள் அங்கலாய்த்தார்கள்.

அருச்சுனன் கூட, ''சாத்யகி! நில், நில். வேண்டாம்!'' என்று குரல் கொடுத்தான்.

சாத்யகியின் காதுகளுக்கு அவை ஒன்றும் கேட்கவில்லை.

அவன் கண்களில் பூரிசிரவசு உட்கார்ந்திருப்பதே தெரிந்தது.

மனக்கண்களில், கீழே நிலத்தில் விழுந்து கிடந்த தன் மீது காலை வைத்து அமுக்கிக் கொண்டு, தன்னை வெட்டுவதற்காக வாளை ஓங்கி நிற்கும் பூரிசிரவசு தெரிந்தான்.

தியானத்திலிருந்த பூரிசிரவசுவின் கழுத்தைச் சாத்யகின் வாள் சீவிற்று. அவன் தலை உருண்டு நிலத்தில் விழுந்தது!

பாரதக் கதையில் நடந்த பல கொடிய நிகழ்வுகளில் இதுவும் முக்கியமான ஒன்று.

இப்படிப் பல சம்பவங்களில் கண்ணன் நீதி நியாயங்கள் என்று பார்த்ததில்லை. துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனஞ் செய்வதையே பெரிதாகக் கருதினான்.

# 35. தருமனும் பொய் சொன்னான்

சூரியன் உச்சியைத் தாண்டி வெகுநேரமாயிற்று. 'இன்னும் சிறிது நேரத்தில் சூரியன் மறைந்து விடுவான். அது வரையும் எங்கள் முழுப் பலத்தையும் திரட்டி ஜயத்ரதனைக் காக்க வேண்டும். சூரியன் மறையும் வரை ஜயத்ரதனைக் காப்பாற்றி விட்டால், பிறகு அருச்சுனன் அவமானத்தாலே இறப்பது நிச்சயம். அருச்சுனன் இறந்து விட்டால், எமக்கு வெற்றி நிச்சயமாகி விடும்.'' என்று தனது படைத் தலைவரிடம் கூறிய துரியோதனன், அருச்சுனனுக் கெதிராகக் கடுஞ் சண்டையை மூட்டி விட்டான்.

அதே நேரம் —

சூரியனின் ஒளி மங்கிற்று. இருள் வந்தது.

''வெற்றி! வெற்றி!'' என்று கௌரவர்கள் கூத்தாடினார்கள்.

சண்டையை நிறுத்தி அனைவரும் ஓடிவந்து அருச்சுனனை வேடிக்கை பார்த்தார்கள்.

அருச்சுனன் நிலை குலைவது கண்ட கண்ணன், ''அருச்சுனா, கலங்காதே. இந்த இருள் என்னால் செயற்கையாக உண்டாக்கப் பட்டது. சொற்ப வேளையில் மீண்டும் சூரியன் தெரிவான். நீ காண்டீபத்தை வளைப்பாயாக!'' என்றான்.

அருச்சுனன் காண்டீபத்தை வளைத்து ஒரு சக்தி வாய்ந்த அம்பைத் தொடுத்து ஜயத்ரதன் மீது ஏவினான்.

ஜயத்ரதன் தலை தரையில் உருண்டது!

மேற்கே சூரியன் தெரிந்தான்.

அன்று பாரதப் போரின் பதினான்காவது நாள்.

போர் சூடு பிறந்து விட்டபடியால் அன்றைய தினம் இரவிலும் போரை நடத்துவதற்குத் தீர்மானித்தார்கள்.

இரண்டு பக்கங்களிலும் ஆயிரக்கணக்கான தீவட்டிகள் ஏற்றப் பட்டன.

*

அரக்கு மாளிகையிலிருந்து உயிர்தப்பிக் காட்டுவழியாகப் பாண்டவர்கள் சென்ற போது இடும்பி என்ற அசுரகுலப் பெண்ணை வீமன் சந்தித்து அவளைத் திருமணம் செய்திருந்தான். அவளுக்கு அப்போது

பிறந்த பிள்ளையின் பெயர் கடோத்கசன். கடோத்கசன் இப்போது வாலிபனாக வளர்ந்திருந்தான். பாரதப்போர் மூண்டதை அறிந்து அவனும் தனது அசுரகுல வீரர்களுடன் பாண்டவர்களுக்குத் துணையாக வந்திருந்தான்.

அன்றிரவு தீவட்டி வெளிச்சத்தில் கர்ணனை எதிர்த்துக் கடோத்கசனும், அவனுடைய வீரார்களும் போர் புரிந்நார்கள். அசுரர்கள் தந்திரங்கள் செய்வதில் வல்லவர்கள். கடோத்கசன் அன்று கர்ணனை மிகவும் களைப்படையச் செய்து விட்டான். சினம் மேலிட்ட கர்ணன் தன்னிடமிருந்த மிகச்சிறந்த அம்பை எடுத்து அதைக் கடோத்கசனின் மீது எய்து அவனைக் கொன்று விட்டான். அருச்சுனனைக் கொல்வதற்கென்று அந்த அம்பைக் கர்ணன் நெடு நாட்களாகப் பத்திரப்படுத்தி வைத்திருந்தான். கடோத்கசனின் தாக்குதலால் சினம் கொண்டு அந்த அம்பை இப்போது கடோத்கசனின் மீது செலவிட்டு விட்டான்.

துரோணரின் மிகக்கடுமையான அம்பு வீச்சுக்கள் பாண்டவப் படையை மிக மோசமாகத் தாக்கிக்கொண்டிருந்தன. பாண்டவர் படை நிலை குலைந்து தடுமாறிக் கொண்டிருந்தது. இது கண்ணனுக்குப் பெருங்கவலையை உண்டாக்கிற்று. இப்படியே போனால் மிக விரைவில் பாண்டவர் படை அழிந்து விடுமென்று கருதிய கண்ணன் இது குறித்துப் பாண்டவர்களுடன் கலந்தாலோசித்தான்.

''வேறு வழியில்லை. 'எப்படியும்' துரோணரைக் கொன்றுவிட வேண்டும். இல்லையேல் சகலரும் அழிந்து விடுவீர்கள்!'' என்று கண்ணன் எச்சரித்தான்.

மாபெரும் வீரனான துரோணரை வென்றழிப்பது இலகுவில் முடியக்கூடிய செயலாகப் பாண்டவர்களுக்குத் தோன்றவில்லை ''கண்ணா, நீங்களே ஏதாவது வழி சொல்லுங்கள்!'' என்று அவர்கள் கண்ணனை வேண்டினார்கள்.

கண்ணன் சொன்னான்: ''துரோணருடன் சண்டையிட்டு வெல்வதென்பது இயலாத செயல். துரோணரின் மனவலியைக் குறைத்து அவர் துவண்டு போயிருக்கும் நேரத்தில் அவரைக் கொல்ல ,வேண்டும். அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. துரோணர் தமது ஒரே மகனான அசுவத்தாமன் மீது மிகுந்த அன்பு கொண்டவர். அசுவத்தாமனுக்குக் கெடுதி ஏற்பட்டதென்று அறிந்தால் அவர் நிச்சயமாகத் துவண்டு

போவார். யாராவது நம்பிக்கைக்கு உரிய ஒருவர் "அசுவத்தாமன் இறந்தான்" என்று துரோணரின் காதுகளில் விழும்படி சொல்ல வேண்டும்! அதைக் கேட்டதும் துரோணர் தமது மன வலிமையை இழந்து துவண்டு போவார். மிக இலகுவாக அவரைக் கொன்று விடலாம்!"

இந்தப் படுமோசமான சூழ்ச்சியைக் கேட்ட பாண்டவர்கள் மிகுந்த மனவேதனையும் பதற்றமும் அடைந்தார்கள்.

"இது நியாயமற்றது" என்றான் அருச்சுனன்

"சரியான பேடித்தனமும் கூட" என்றான் வீமன்.

நகுல சகாதேவர்களுக்கும் இது ஒப்பத்தக்கதாகப் படவில்லை.

ஆனால், நெடுநேரம் யோசித்த தருமன் "கண்ணா, தவறான வழிதான். ஆனால் இந்தத் தவறான செயலைச் செய்யும் பாவத்தை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்!" என்றான்.

அறத்தின் சின்னமாகக் காணப்பட்ட தருமன் இந்த முடிவுக்கு வந்தது ஆராயத்தக்கது.

'அறவழியில் தவறாத பெரியோர்களும் தம்மைச் சேர்ந்தோருக்குப் பெருந் துன்பம் ஏற்படும் போது, அதை நீக்குவதற்காகச் சில வேளைகளில் அறநெறியிலிருந்து விலகி விடுவார்கள், என்ற ஓர் உண்மையை இது போதிக்கின்றது.

இந்தச் சூழ்ச்சியை முற்றிலும் மறுத்து ஒதுக்குவானென்று நினைத்த தருமனே, தான் செய்வதாக ஒப்புக் கொண்டதும் மற்றைய பாண்டவர்களுக்கு வேறு வழியில்லை. அவர்களும் அதை ஏற்றுக் கொண்டு செயல்படத் துணிந்தனர்.

இந்தச் சூழ்ச்சிச் செயலாக்கத்தில் இன்னொரு பெரிய கொடுமை நடந்தது. யாருமே அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. பாரதக் கதையை எழுதிய வியாசரோ வேறு எவரோ கூட இந்த அநியாயத்தைப் பெரிதாக எடுத்துக் கூறவில்லை.

'அசுவத்தாமன் இறந்தான்' என்று தருமர், துரோணர் கேட்கும்படி சொல்ல வேண்டும்.

தருமர் அப்படிப் 'பச்சைப் பொய்' சொல்வதை விரும்பாத வீமன் ஒரு வேலை செய்தான். பாண்டவர்களுடைய யானைப் படையில்

'அசுவத்தாமன் என்ற பெயர் கொண்ட ஒரு பெரிய யானை இருந்தது. வீமன் தன்னுடைய கதாயுதத்தை எடுத்துக் கொண்டு போய் 'அசுவத்தாமன்' என்ற அந்த ஒன்றுமறியாத அப்பாவி யானையை அடித்துக் கொன்றான்.

தருமன் 'பச்சைப் பொய்' சொல்லாமல் இருப்பதற்காக 'அசுவத்தாமன்' என்ற யானை படுகொலை செய்யப்பட்டது!

அதன் பிறகு தருமன் 'உண்மை' யை உரக்கக் கூவினான்: "அசுவத்தாமன் இறந்தான்!" கடைசியில் மெல்லிய குரலில் 'என்றயானை' என்பதையும் சேர்த்துக் கொண்டான்.

தருமன் பொய் பேசி விட்டான்!

மிகக் கடுமையாகப் போரிட்டுக் கொண்டிருந்த துரோணரின் செவிகளில்,

"அசுவத்தாமன் இறந்தான்!" என்ற சொற்கள் விஷம் போல் விழுந்தன.

துரோணரின் கைகள் சோர்ந்தன. அவர் கையிலிருந்த வில்லும் அம்பும் தேர்த் தட்டில் விழுந்தன. பாதி உயிர் அவரைவிட்டுப் போய் விட்டது போலிருந்தது. தேர்த்தட்டில் அவர் அப்படியே உட்கார்ந்து விட்டார்.

இந்தச் சமயத்தில் திருஷ்டத்துய்மன் ஓடோடிச் சென்று தனது வாளினால் துரோணரின் தலையை வெட்டி வீழ்த்திவிட்டான்!

'இப்படியெல்லாம் செய்தா பாண்டவர்கள் பாரதப் போரை வென்றெடுத்தார்கள்!' என்று நினைக்கும் போது ஒரு அருவருப்புத் தோன்றுகிறது.

## 36. வஞ்சனைகளினால் வென்ற போர்

துரோரணருடைய மறைவுக்குப் பிறகு கர்ணனைப் படைத் தலைவனாக நியமித்தார்கள்.

அருச்சுனன் கர்ணனோடு பொருதான். அருச்சுனனுக்குத் துணையாக வீமனும் சென்றான். இதைக் கண்ட துரியோதனனின் தம்பி துச்சாதனன் வீமனை எதிர்த்து நின்று அம்புகளை ஏவினான். அம்பு

கள் வந்த திக்கைப் பார்த்த வீமன், "வாடா, துச்சாதனா! உன்னை மறந்திருந்தேன். வா!, என்னுடைய சபதத்தை நிறைவேற்றக் காலம் வந்து விட்டது!" என்று கூறிக் கதாயுதத்தைத் தூக்கிக் கொண்டு தேரை விட்டு இறங்கி துச்சாதனனுடைய தேரை நோக்கிச் சென்றான்.

சொற்ப நேரத்தில் துச்சாதனனுடைய தேர் உடைந்து விழுந்தது. நிலத்துக்கு வந்த துச்சாதனனை வீமன் தனது கதையினால் அடி அடி யென்று அடித்தான். துச்சாதனன் நிலத்தில் மயங்கி விழுந்தான்.

அன்றொருநாள் இந்தத் துச்சாதனன் சபை நடுவே திரௌபதியின் துகிலை உரிந்ததும், அவள் கதறியதும் வீமனின் மனக் கண் முன்னே தோன்றின. வெறிபிடித்தவனைப் போல அவன் துச்சாதனனின் நெஞ்சிலே காலை ஊன்றி அவனுடைய ஒரு கையைத் திருகி முறித்து எறிந்தான். 'குபீர்' என்று பாய்ந்த இரத்தத்தைத் தன்வாயை வைத்து உறிஞ்சிக் குடித்தான், ஒரு கொடிய மிருகத்தைப் போல;

துரியோதனனுடைய மற்றத் தம்பிமார்கள் அனைவரையும் ஏற் கெனவே நடந்த போர்களில் வீமன் கொன்று முடித்திருந்தான். வீம னுடைய ஒரு சபதம் இப்படிப் பயங்கரமாக நிறைவேறிற்று.

அருச்சுனனுக்கும் கர்ணனுக்கு மிடையே பெரும் போர் நடந்தது.

அருச்சுனனைக் கொல்வதற்கென்றே வைத்திருந்த ஒரு சக்தி வாய்ந்த அம்பைக் கர்ணன் முன்பே கடோத்கஜன் மீது எய்து விட்டான்.

பரசுராமரிடம் கற்ற இன்னொரு முக்கியமான அம்பைச் செலுத் தும் முறையையும் பரசுராமரின் சாபத்தினால் மறந்து விட்டான்.

இந்த நிலையிலும் ஒரு கொடிய அம்பை எடுத்து கர்ணன் அருச் சுனனுடைய தலையைக் குறி வைத்து ஏவினான். அது விஷம் கக்கி வரும் கொடிய பாம்பு போல அருச்சுனனை நோக்கிச் சீறி வந்தது.

அருச்சுனனுடைய தேரைச் செலுத்திக் கொண்டிருந்த கண்ணன், சரியான சமயத்தில் தேரைச் சற்றே பதிவாகச் செலுத்தினான். கர் ணனுடைய அம்பு அருச்சுனனுடைய முடியின் மீது பட்டு அதைத் தூக்கி வீசி விட்டுச் சென்றது.

அருச்சுனன் மேலும் சில அம்புகளை ஏவி கர்ணனைத் துன்புறுத் தினான். இச்சமயத்தில் கர்ணனுடைய தேரின் ஒருபக்கச் சில்லுகள்

நிலத்துள் அமுங்கிச் சிக்கிக் கொண்டன. கர்ணன் அருச்சுனனை நோக்கி, ''அருச்சுனா, நில், என்னுடைய தேரின் ஒரு பக்கத்துச் சில்லுகள் புதைந்துவிட்டன. அவற்றை எடுக்கும் வரையும் அம்பு தொடுக்காதே. போரிலே நீதி தவறாதவன் என்ற உனது புகழைக் கெடுத்துக் கொள்ளாதே!'' என்று கூறி விட்டுத் தேரிலிருந்து கீழே குதித்து தேரின் சில்லுகளைத் தூக்கிவிட முயன்றான். அது இலகுவில் எழும்புவதாகத் தெரியவில்லை.

இந்தச் சமயத்தில் கண்ணன் அருச்சுனனை நோக்கி ''அருச்சுனா, போர்க்களத்தில் நீதி பற்றிப் பேசுவதற்கு இவனுக்கு என்ன தகுதி இருக்கிறது ......? இது தக்க சமயம். உடனே ஒரு சரியான அம்பினால் கர்ணனின் தலையைத் துண்டித்து விடு!'' என்றான்.

அருச்சுனனுடைய காண்டீபத்திலிருந்து புறப்பட்ட அம்பு அவனுடைய மூத்த தமையனின் தலையைத் துண்டித்து விழுத்தி விட்டது;

கண்ணன் இங்கேயும் களங்கப் பட்டான்.

கர்ணனும் கொல்லப்பட்டதை அறிந்ததும் துரியோதனன் பெரும் துயரத்தில் ஆழ்ந்தான்.

துரியோதனன் பக்கத்தில் இன்னும் உயிரோடிருந்த ஒரே ஒரு பெரியவரான கிருபர் துரியோதனனிடம் வந்து, ''அரசனே, உனது கவலையை உணருகிறேன். அரச அதிகாரத்தில் ஏற்பட்ட பேராசையினால் இந்தக் கொடிய துன்பம் நேர்ந்திருக்கிறதை உணர்ந்து கொள். இனியாவது அந்த ஆசையை விட்டு விட்டு பாண்டவர்களோடு சமாதானம் செய்து கொண்டு சுகமாக வாழ்வாயாக!'' என்றார்.

துரியோதனன் மிகுந்த வெறுப்போடு கிருபரைப் பார்த்தான். ''என்ன பேச்சுப் பேசுகிறீர்கள்? என்னுடைய நண்பர்கள் எல்லாரையுமே போரில் பறிகொடுத்து விட்டு, இனி நான் மட்டும் சுகவாழ்க்கையைத் தேடுவதா? இதைவிட ஒரு மனிதன் செய்யக் கூடிய கேவலமான செய்கை வேறு என்ன இருக்கிறது?'' என்று சொன்ன துரியோதனன் தானே படைத்தலைமையை ஏற்றுப் போரை நடத்தினான்.

சண்டை தொடங்கி விட்டதைக் கண்ட தருமன் இப்போது தானும் மிக மூர்க்கமாகப் போரைத் தொடங்கினான். தருமனை

எதிர்த்துப் போரிட்ட பெரிய வீரனான சல்லியன் கொல்லப்பட்டான்.

சகுனியும் சகாதேவனும் போரிட்டார்கள். சகுனி சகாதேவனின் அம்புக்கு இரையானான்.

கௌரவப் படையில் எல்லாருமே இறந்துவிட்டார்கள். துரியோதனன் தனிமரமாக நின்றான்.

என்ன செய்வதென்று தெரியாமல் கையிலிருந்த கதாயுதத்துடன் துரியோதனன், கால்போன போக்கில் போர்க்களத்தைவிட்டு நீங்கி வெளியே சென்றான். வழியில் ஒரு சிறு குளத்தைக் கண்டான். தண்ணீரைக் கண்டதும் அதில் இறங்கினால் தன்னுடைய கொதிப்பு அடங்குமா என்ற நினைப்பில் அதில் இறங்கி நீருக்குள் வெகுநேரம் நின்றான்.

போர்க்களத்தில் துரியோதனனைக் காணாத பாண்டவர்கள் அவனைத் தேடிக் கொண்டு அந்தக் குளக்கரைக்கு வந்தார்கள்.

''துரியோதனா, குலத்தையே அழித்து விட்டு நீ இந்தத் தண்ணீரிலே ஒளிந்து கொள்ளப் பார்க்கிறாயா? வெளியே வா!'' என்று தருமன் கூவினான்.

''நான் ஒளிந்து கொள்வதற்காக இங்கே வரவில்லை. உடலின் வெப்பத்தைப் போக்குவதற்காகவே இந்த நீரில் இறங்கியிருக்கிறேன். இந்த உயிரின் மீது ஆசை இருந்தாலல்லவா நான் ஒளிக்க வேண்டும்? எனக்கு இப்போது அந்த ஆசை இல்லை. அரச பதவியிலும் ஆசை போய் விட்டது. தருமனே, நீயே எல்லா நாட்டையும் ஆண்டு அனுபவித்துக் கொள். உனக்கு இனிக் கவலையில்லை!'' என்றான் துரியோதனன்.

அறவாளி என்று போற்றப்பட்ட தருமன் கூட இந்தச் சந்தர்ப்பத்தில் பழிவாங்கும் மிருகம் போல நடந்து கொண்டான்.

''துரியோதனா, ஊசி குத்தும் நிலம்கூடத் தரமாட்டேன் என்று சொன்ன நீயா, இப்போது முழு நாட்டையும் எங்களுக்குத் தருகிறாய்! நீ செய்த கொடுமைகளை எங்களால் மறக்கவே முடியாது. உன்னைக் கொன்றால்தான் மனம் ஆறும். பேடியைப் போலத் தண்ணீரில் ஒளித்திராமல் வெளியே வா!'' என்று தருமன் மிகச்சின்னத்தனமாகப் பேசினான்.

தருமனுடைய சொற்களினால் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்ட துரியோதனன், குளத்திலிருந்து வெளியே வந்து, ''நான் தனி ஒருவனாக நிற்கிறேன். உங்களில் யாராவது ஒருவன் என்னுடன் போரிட வாருங்கள்!'' என்று கதாயுதத்தைத் தூக்கினான்.

வீமனுக்கும் துரியோதனனுக்குமிடையே இறுதிப் போர் நடந்தது. களைத்துப் போயிருந்த நிலையிலும் துரியோதனன் மிகுந்த வீறுடன் போரிட்டான். அவனுடைய கதாயுதத்தின் கடுமையான அடிகள் பலமுறை வீமனைத் தாக்கின.

இந்தச் சமயத்தில் கண்ணன் ஒரு வஞ்சனை செய்தான். பக்கத்தில் நிற்பவருக்குச் சொல்வது போல, வீமனுக்குக் கேட்கும்படி ''வீமன் ஒரு சபதஞ் செய்திருக்கிறான். துரியோதனனுடைய தொடையைப் பிளந்து அவனைக் கொல்வதாக! அப்படியே செய்யப்போகிறான் பாருங்கள்!'' என்றான் கண்ணன்.

கண்ணனுடைய வஞ்ச எண்ணம் பலித்தது. வீமன் துரியோதனனுடைய தொடையிலே கதையினால் மிக வேகமாக அடித்தான்!

துரியோதனன் துவண்டு விழுந்தான்! விழுந்தவனுடைய தலை மீது வீமன் இரக்கமின்றித் தன் காலினால் உதைத்தான்!

இந்தக் கேவலமான செயலைக் கண்டு அங்கே நின்ற பலரும் 'சீ, சீ' என்று மனதுக்குள் காறி உமிழ்ந்தார்கள்.

கண்ணன் பாண்டவர்களைப் பார்த்து ''துரியோதனனுடைய கதையும் முடிந்தது. இனி இங்கே என்ன வேலை? புறப்படுங்கள் போகலாம்,'' என்றான்.

கால் முறிந்து மரணத்தறுவாயில் கிடந்த துரியோதனன் அடங்காச்சினத்துடன், ''கண்ணா, நீதியான முறையில் இங்கே சண்டை நடைபெறவில்லை. கதாயுதத்தினால் தொப்புளுக்குக் கீழே அடிக்கக் கூடாதென்பது போர்முறை. ஆனால் நீயோ என் துடையில் அடிக்கும்படி வீமனுக்குச் சொல்லிக் கொடுத்தாய்! என்னை மட்டுமல்ல, பீஷ்மரையும், துரோணரையும், கர்ணனையும் கூட உனது வஞ்சகத்தினாலே கொல்வித்தாய்! கண்ணா, உன்னை எல்லாரும் தெய்வப்பிறவி என்று போற்றுகின்றார்கள். நீ வஞ்சனைகளினால் நிரம்பப் பெற்றவன். நான் செய்த தவறுகளுக்கு நான் அனுபவித்துவிட்டேன். நீ

செய்த தவறுகளுக்கு நீயும் நிச்சயமாக அனுபவிப்பாய்!'' என்றான்.

அவ்வளவில் பாண்டவர்களும், கண்ணனும் அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டார்கள். போகும் வழியில் தருமன், ''கண்ணா, துரியோதனன் சொன்னதில் உண்மை இருப்பது போலவே எனக்குப்படுகிறது. வஞ்சனையினாலேயே நாங்கள் கௌரவர்களை வென்றிருப்பது போற் தெரிகிறது'' என்றான்.

கண்ணன் சிரித்துக் கொண்டே, ''வஞ்சனையில்லாமல் நீங்கள் கௌரவர்களை வென்றிருக்கவே முடியாது!'' என்றான்.

''பாரதக் கதையை எழுதிய வியாசராலேயே கண்ணனுடைய வஞ்சனையைப் பொறுக்க முடியவில்லை. அதனால்தான் அவர் நேரடியாகக் கண்ணனை நிந்திக்காமல் துரியோதனன் வாக்காகக் கண்ணனை இகழ்ந்திருக்கிறார்'' என்று 'வியாசர் விருந்து' என்ற பெயரில் எழுதிய ராஜாஜி குறிப்பிட்டிருக்கிறார்.

எழுத்தாளர்களுக்கு இருக்க வேண்டிய நேர்மை வியாசருக்கும் இருந்திருக்கிறது.

★

துரோணருடைய மகன் அசுவத்தாமன் தனது தந்தையைப் பாண்டவர்கள் வஞ்சித்துக் கொன்று விட்டதை அறிந்து கொதித்துக் கொண்டிருந்தான். என்னசெய்வது என்று அவன் துடித்துக் கொண்டிருந்தபோது, நகருக்கு வெளியே அவன் தங்கியிருந்த ஆலமரத்துக்கு ஒரு கூகை வந்தது. பகலிலே காக்கைகளினால் கொத்தித் துன்புறுத்படும் அந்தக் கூகை, அந்த இரவிலே ஆலமரத்திலிருந்த காகங்களையெல்லாம் கொத்திக் கொல்லத் தொடங்கிற்று.

இந்த நிகழ்வு அசுவத்தாமனுக்கு ஒரு வழியைப் புலப்படுத்திற்று. பாண்டவர்களைக் கொல்வதற்கும் அவர்கள் நித்திரை செய்யும் இரவு நேரமே சிறந்த நேரம் என்று அவன் கருதினான். 'தூங்கிக் கொண்டிருப்பவர்களைக் கொல்வது தவறாயிற்றே' என்று கற்றவனாகிய அவன் சிந்திக்க வில்லை. சினம் கல்வியறிவை மறைத்து விட்டது.

அசுவத்தாமன் உடனே துரியோதனன் விழுந்துகிடந்த இடத்துக்குப் போனான். ''துரியோதனா, எங்களுக்குத் தீராத கொடுமைகளைச் செய்த பாண்டவர்களை நான் இன்றிரவே பழிவாங்குவேன்!''

என்று அவனுக்கு உறுதி கூறிவிட்டு தன் தந்தையைக் கொன்ற திருஷ் டத்துய்மனும் அவனுடைய உடன் பிறப்புக்களான பாஞ்சால நாட்டு இளவரசர்களும் படுத்திருந்த பாசறைக்குச் சென்றான். படுத்து நித் திரையிலிருந்த அவர்கள் அனைவரையும் வாளினால் வெட்டிக் கொன் றான். அதே பாசறையில் திரௌபதியின் மக்களாகிய இளம் பாண் டவர்களும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அந்தச் சிறுவர்களையும் அசுவத்தாமன் இரக்கமின்றி வெட்டிக் கொன்றான்! அதன்பின் துரி யோதனன் கிடந்த இடத்துக்குப் போய் ''துரியோதனா, துரியோதனா! பாஞ்சாலர்களையும், பாண்டவர்களுடைய பிள்ளைகளையும் கொன்று விட்டேன்! இனி உன்மனம் அமைதி கொள்ளட்டும்!'' என்றான்.

''அப்படியா, அசுவத்தாமரே, பீஷ்மரும் உமது தந்தையும் கர்ணனும் கூட எனக்குச் செய்ய முடியாததை நீர் எனக்குச் செய்து விட்டீர். இனி நான் நிம்மதியாக உயிரை விடுவேன்'' என்று கூறிய துரியோதனன் உயிர் துறந்தான்.

★

பாரதக் கதையில் எதிர்க்கட்சித் தலைவனாக விளங்கிய துரியோ னனின் மறைவோடு, கதையின் உச்சக் கட்டம் நிறைவடைகிறது.

இவ்வளவில் நானும் கதையை நிறுத்திக்கொள்கிறேன்.



ஈழத்தின் மூத்த எழுத்தாளராகிய வரதர் அவர்கள்
தமது இளமைப் பருவத்திலேயே
எழுத்துலகுக்கு அறிமுகமானவர்.

இவர் நல்ல சிறுகதைகள் பலற்றை எழுதியுள்ளார்.
'கயமை மயக்கம்' என்ற சிறுகதைத் தொகுதி
இவருடைய சிறுகதைகளின் உயர்ந்த தரத்தினை
எடுத்துக் காட்டுகிறது.

நாற்பதுகளில் ஆரம்பித்த 'மறுமலர்ச்சி' யைத்
தொடர்ந்து பல சஞ்சிகைகளை
வெளியிட்டதுடன்,
அவற்றின் ஆசிரியராகவும் விளங்கியுள்ளார்.

இவரை ஆசிரியராகக் கொண்டு 'அறிவுக்களஞ்சியம்'
இப்போதும் வெளிவந்து கொண்டிருக்கிறது.

வரதர் வெளியீடு என்ற நிறுவனத்தை அமைத்து
அதன் மூலம் பல நூல்களை வெளியிட்டு வருகின்றார்.

1994 ஆம் ஆண்டு இலங்கைக் கம்பன் கழகம்
இவருக்கு 'மூதறிஞர்' விருதை
வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

'பாரதக் கதை' என்னும் இந்த நூல் வரதரின்
அனுபவம் என்ற கடலிலிருந்து
கிடைத்திருக்கும் நல் முத்து.
சிறியோர் முதல் பெரியோர் வரை
மிக விரும்பி வாசிக்கக் கூடியது.
ஆற்றொழுக்குப் போன்ற இவரது
அழகிய வசனநடை எவரையும் கவரக்கூடியது.

ச. பாலசுந்தரம், பீ. ஏ. (சிறப்பு)